[illegible]

JL
ZUM, N TOTA.
P07.39.1-3
228656



பாதுகாப்பற்ற
உடலுறவு,
ஊசிகளைப் பகிர்தல்,
பரிசோதிக்கப்படாத
இரத்தம் மூலம்

கொசுக் கடியால்,
உணவைப் பகிர்வதால்,
கட்டிப் பிடிப்பதால், ஒரே
கழிவறையைப்
பயன்படுத்துவதால்



மேலும் எச்.ஐ.வி / எய்ட்ஸ் பற்றிய ஆலோசனை மற்றும் பரிசோதனைக்கு
அனைத்து அரசு மருத்துவமனைகளிலுள்ள அணுகவும்.



417, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை 600 008
தொலைபேசி 044-28190467, 044-28190891 தொலைநகல் 28190466 மின்னஞ்சல் tansacs@tn.nic.in இணையம் www.tansacs.org



# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
ஆனி – ஆடி ஜூலை 2007
மலர் : 39 இதழ் : 1

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

மு. ஸ்ரீநாகேஷ்
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (பொறுப்பு)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

எஸ்.பி.எழிலழகன்
ஆர்.சேகர்

உதவி ஆசிரியர்கள்

க.இராஜராஜேஸ்வரி
இரா.சுரேஷ்
வீ.இரா.நவநீதகிருஷ்ணகுமார்
இரா.இளவரசி

நிருபர்கள்

கோ.சண்முகம்
மாய குமரேசன்

இதழ் உதவியாளர்கள்

தி.பெரியார் சாக்ரடீசு
ஜெ.ஜெயசிம்ஹன்

புகைப்படக்காரர்

வி.ராதாகிருஷ்ணன்

கணினி வடிவமைப்பு

அ.மதன்
ஆர்.பாலாஜி
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

சென்னை – தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்று ளெல்லாந் தலை**

இருப்போர் இல்லாதோர் என்றில்லாமல். கிடைத்ததைப் பகிர்ந்துகொண்டு. எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலைக் கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


- கல்வியிலே கருத்துள்ளவர்களாக்க உடல் வளர்ச்சிக்காக 3 முட்டைகள் வழங்குகிறோம் - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ........ 2
- தமிழ்நாடு முழுவதும் ரூ.160 கோடி செலவில் பத்தாயிரம் மின்மாற்றிகளை அரசு அமைக்கிறது - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு ........ 7
- 2007-2008ஆம் ஆண்டில் வழங்க 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடிவு ........ 13
- 13 மாத ஆட்சியில் ரூ.9.710 கோடி மதிப்பில் 10 தொழில் ஒப்பந்தங்கள் - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ........ 14
- **தொழில் வளர்ச்சியில் தமிழகம்**
  - ஒரகடத்தில். ரூ.225 கோடி மதிப்பீட்டில் 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் உயர் தொழில்நுட்ப மின்னணு வன்பொருள் தயாரிப்புக்கான புதிய மையம் ........ 17
  - செங்கல்பட்டு அருகே ரூ.1.373 கோடியில் எதிர்கால எரிசக்தி மண்டலம் - 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு ........ 19
  - பெரம்பலூர் மாவட்டத்தில். ரூ.1.500 கோடியில் பல்பொருள் உற்பத்தித் தொழில் மையம் ........ 20
  - தூத்துக்குடி - நெல்லை மாவட்டங்களில் 4.000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் டைட்டானியம் டை-ஆக்சைடு தொழிற்சாலை ........ 21
  - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் செய்தி ........ 22
  - புத்தபிரானின் புரட்சிகரமான கருத்துக்களை உயிர்ப்பித்து உலவவிடுவோம்! - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வாழ்த்துச் செய்தி ........ 24
- **உள்ளாட்சித்துறையின் வளர்ச்சிகள்**

  **மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புகள்**
  - ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்சம் நிதியுதவி ........ 27
  - மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய சென்னையில் ரூ.5 கோடியில் விற்பனை மையம் ........ 29
  - ஓராண்டில் ரூ.280 கோடியில் தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் நிறைவேற்றம் ........ 32
  - தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஓராண்டில் ரூ.280 கோடியில் 3.548 பணிகள் நிறைவேற்றம் ........ 35
  - சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் வாரிசுதாரருக்கு 15 ஆண்டுகளுக்குப் பிறகு பணி நியமன ஆணைகள் ........ 46
  - சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திட ஆணை ........ 47
- சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்கள் பயன்பாட்டிற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி ........ 49
- செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள். அரசின் திட்டங்களை மக்களுக்கு நல்லமுறையில் எடுத்துச் செல்லவேண்டும் ........ 50
- சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வெளிவட்டச் சாலை திட்டம் ........ 51
- மாவட்ட வளர்ச்சிப் பணிகள் மற்றும் செய்திகள் ........ 61
- சமூக நீதி காத்த சான்றோர் - இரட்டைமலை சீனிவாசன் ........ 72


அட்டைப் பட விளக்கம்

*முதலாம் பக்க அட்டை :* நான்காவது கட்ட இலவச நிலம் வழங்கும் விழா (17.6.2007)
*நான்காம் பக்க அட்டை :* மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுடன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் (*புதுதில்லி* - 4.7.2007)



# கல்வியிலே கருத்துள்ளவர்களாக்க உடல் வளர்ச்சிக்காக 3 முட்டைகள் வழங்குகிறோம்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உரை

சென்னை சிந்தாதரிப்பேட்டை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் – கல்வி வளர்ச்சி நாளான 15.7.2007 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாரம் 3 முறை முட்டை வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:–

இன்று இளைஞர்களுக்கு எழுச்சியூட்டக் கூடிய – அவர்களுடைய அறிவுக்கு வளர்ச்சியூட்டக் கூடிய – ஒரு நாளாக இந்த நாள் அமைந்திருக்கின்றது. இங்கே பெருந்தகை நம்முடைய சட்டப்பேரவையின் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் அவர்கள் எடுத்துரைத்ததைப் போல, தன்னலம் மறந்து தாயகத்திற்காக பல தியாகங்களைச்

228656





செய்து, வாழ்ந்து, மறைந்த, ஆனால் நம்முடைய நெஞ்சங்களில் எல்லாம் மறையாமல் நிழலாடிக் கொண்டிருக்கின்ற பெருந்தலைவர் காமராஜருடைய பிறந்த நாள் இந்த நாள் என்பதை எண்ணும்போது, இந்த நாளில் இந்த நாட்டை ஆளுகிற அரசு, அந்தப் பெருந்தலைவரின் நினைவாக என்ன செய்கிறது என்ற கேள்விக்கு அளிக்கப்பட்ட பதில் தான் சத்துணவுத் திட்டத்தை மேலும் வலுவுள்ளதாக, மேலும் மேலும் ஊட்டச் சத்து மிகுந்ததாக ஆக்குவது என்று முடிவு செய்து, அப்படி முடிவுக்கு விரிவுரையாக தொடக்கத்திலே சத்துணவோடு சிறார்க்கு ஒரு முட்டை வழங்குவதென்றும், அதற்குப் பிறகு கடந்த காலத்தில் இரண்டு முட்டைகள் வாரம் ஒன்றுக்கு வழங்குவதென்றும் தீர்மானித்து – கடந்த ஆண்டு அறிவித்தேன். இனி வாரம் மூன்று முறை சிறார்க்கு சத்துணவோடு முட்டைகள் வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற ஓர் அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

**உங்களால் உருவாக்கப்பட்ட அரசு**

முட்டை வழங்குவதாகச் சொல்லி விட்டு, வழங்கப்பட்ட முட்டையை நிறுத்துகின்ற அரசாக இந்த அரசு இல்லாமல், ஒரு முட்டை இரண்டு முட்டை, இரண்டு முட்டைக்கு மூன்று முட்டை வழங்குகிறோம் என்று வழங்கிக் காட்டுகின்ற அரசு தான் உங்களால் உருவாக்கப்பட்ட, அமர்த்தப்பட்ட தி.மு.கழக அரசாகும்.

வாக்குறுதிகள் அளித்திருக்கிறோம், ஒரு முட்டை அல்ல. ஒரு கோடி முட்டை கூட வழங்குவோம் என்று வாக்குறுதிகளை வழங்கி விடலாம். ஆனால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது மிக மிக சிரமம். ஏனென்றால் சிலபேர், சில அரசியல் கட்சிகள் வாக்குறுதிகளை சுலபமாக வழங்குவார்கள். எப்படி சுலபம் என்றால், நிறைவேற்றவா போகிறோம் என்ற நம்பிக்கையோடு வாக்குறுதிகளை வழங்குவார்கள்.



இன்னும் சில பேர் வாக்குறுதிகளை வழங்கும் போது, வெற்றி பெறவா போகிறோம். நாம் வாக்குறுதி வழங்கினால் நிறைவேற்றுவதற்கு என்று அந்த எண்ணத்தோடு வாக்குறுதிகளை வழங்குவார்கள். ஆனால் தி.மு.க.வைப் பொறுத்தவரையில் நாங்கள் உருவாக்கிய கூட்டணி மீது எங்களுக்கே நம்பிக்கை நிறைய உண்டு. இந்தக் கூட்டணி தமிழகத்திலே வெற்றி பெறாவிட்டால், வேறு எந்தக் கூட்டணி வெற்றி பெறும் என்ற அந்த மனத் தெம்போடுதான் நான் இந்த வாக்குறுதியை தேர்தல் அறிக்கை மூலமாக வழங்கினேன்.

முட்டைகள் மூன்று வழங்கப்படும் என்றும் அறிவித்தேன். முதலிலே இரண்டு முட்டைகள் வழங்கப்படும் வெற்றி பெற்றால் என்று அறிவித்தேன். வெற்றி பெற்றவுடன் வாக்குறுதியை நிறைவேற்றினேன். இரண்டு முட்டைகள் வழங்கப்பட்டது. இப்போது மூன்று முட்டைகள் வழங்கப்படும் என்று கூறியதற்குக் காரணம் – நீங்கள் கேட்பீர்கள் – அப்போது தான் தேர்தல் வாக்குறுதி வழங்கினீர், இப்போது எதற்காக வாக்குறுதி வழங்கினாய் என்று கேட்பீர்கள் – உங்களால் அமைக்கப்பட்ட அரசு தொடர்ந்து நல்ல முறையிலே நீடித்து ஆட்சி நடத்தும் என்ற அந்த நம்பிக்கையில்தான் மூன்று முட்டைகள் வழங்கப்படுமென்று அறிவித்தேன். தொடர்ந்து இந்த ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த மூன்றாவது முட்டையும் இன்றைக்கு வழங்கப்படுகிறது.

**மனநிறைவோடு நினைக்கின்ற நாள்**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களை இந்த நாளில் நினைக்கப்படுவதற்கு என்ன காரணம்? பெருந்தலைவரை திராவிட முன்னேற்றக் கழகம் நினைப்பதற்கும் நம்முடைய நண்பர் சுதர்சனம் அவர்கள் இருக்கின்ற காங்கிரஸ் இயக்கம் நினைப்பதற்கும் வேறுபாடு உண்டு. அவர் காங்கிரஸ் கட்சியின் தலைவர். நமக்கும் தமிழகத்தின் பெருந்தலைவர்களில் ஒருவர். அந்த வகையில் அவர் கட்சிச் சார்பற்ற முறையிலே ஒரு பெருந்தலைவர். நம்முடைய சுதர்சனம் போன்றவர்களுக்கு காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் அவர்கள்



நினைப்பதிலே அர்த்தம் இருக்கிறது. ஆனால் நாம் அவரைக் கொண்டாடுவதும், அவருடைய பிறந்த நாளைப் போற்றுவதும் என்ன அதிலே ஒரு கருத்து, உணர்வு இருக்கிறதென்றால், இப்படிப்பட்ட தலைவர்களைக் கொண்டாடுகின்ற அந்தப் பண்பு – இப்படிப்பட்ட தலைவர்களுக்கு புகழ் சேர்க்கின்ற அந்தப் பண்பு – எல்லா கட்சிகளுக்கும் வந்துவிடாது. அண்ணா போன்ற பெரியவர்களால், அண்ணா போன்ற பெருந்தன்மையாளர்களால் வளர்க்கப்பட்ட தி.மு.கழகம் போன்ற கட்சிகளுக்குத்தான் அப்படிப்பட்ட பண்பு வர முடியும். நாம் இன்றைக்கும் – அவர்கள் இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்களாயிற்றே, இவர்கள் தேசிய காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிற்றே, என்று பிரித்துப் பார்ப்பதில்லை. யாராக இருந்தாலும் அவர்கள் நம்முடைய நாட்டவர்கள், நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், நம்முடைய தமிழ் இனத்தவர்கள். அவர்கள் தலைவர்களாக உயர்ந்தால், அவர்கள் மதிப்பும் மரியாதையும் மக்களிடம் பெற்றால், அந்த மதிப்பும் மரியாதையும் நமக்கும் உண்டு, நம்மையும் சேரும், அப்படிப்பட்டவர்களை நாம், அவர்களுடைய மாண்பினை மேலும் மேலும் உயர்த்துகின்ற வகையிலே மன நிறைவோடு நினைக்கின்ற நாளாக இந்நாள் இருக்க வேண்டுமென்று கருதித்தான் இந்த நாளை காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்று கொண்டாடுகிறோம்.

**கல்வியிலே கருத்துள்ளவர்களாக்கும் பணி**

அதிலே கூட எனக்கு என்ன சந்தேகம் வந்தது என்றால், நம்முடைய சுதர்சனம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதைச் சட்டமாகவே ஆக்கிவிட்டார் என்று குறிப்பிட்டார். ஏன் சட்டமாக ஆக்கப்பட்டது என்றால், காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாள் என்று சட்டமாக ஆக்கப்படாவிட்டால், முன்பு இதை கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டு, தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி வாய்ப்பை இழந்து வேறொரு ஆட்சி வந்த போது உங்களுக்கு தெரியும் – நான் அந்த ஆட்சியின் பெயரையெல்லாம் இப்போது சொல்லி – நல்ல நேரத்தில் என்னுடைய மனதைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அந்த ஆட்சி காமராஜருடைய பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அறிவித்த அந்த அறிவிப்பை செயல்படுத்தவில்லை. செயல்படுத்தாதது மாத்திரமல்ல, சத்துணவுத் திட்டத்தில் முட்டை வழங்க வேண்டும் என்று வழங்கப்பட்ட அந்தக் காரியத்தையும் அந்த ஆட்சி நிறுத்தி விட்டது. அதற்குப் பிறகு மீண்டும் தமிழ்நாட்டு மக்கள் தி.மு.கழக ஆட்சியை இந்தக் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு உருவாக்கி அவையிலே உட்கார வைத்த பிறகு இன்றைக்கு நாங்கள் மூன்று முட்டைகள் வழங்குகின்ற விழாவினை நடத்துகிறோம் என்றால், அதற்குக் காரணம் சிறார், இளைஞர்கள், சிறுமிகள் இவர்கள் எல்லாம் கல்வி கற்று, கல்வி கற்கின்ற பள்ளிகளுக்குச் செல்கிற அந்த ஊக்கத்தைப் பெற்று, அந்த ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் வீட்டிலே சத்துணவு கிடைக்காது, இருந்தாலும் பள்ளிக்குச் சென்றால் அங்கே சத்துணவு கிடைக்கும் என்கிற அந்த ஆர்வத்தை அவர்களுக்குத் தூண்டி, அவர்களைக் கல்வியிலே கருத்துள்ளவர் களாக ஆக்குகின்ற ஒன்று இதற்கான குறிக்கோள்.

இரண்டாவது ஏன் முட்டை வழங்க வேண்டும்? சில பிள்ளைகளுக்கு பள்ளியிலே அவர்கள் படிக்கும் படிப்புகளில் முட்டை கிடைக்கின்றது. அந்த முட்டை இல்லாமல் இது உள்ளபடியே சாப்பிடுகிற முட்டையாக வழங்குவதற்குக் காரணம், கல்வி கற்றிட மூளை வளர்ச்சி மட்டும் போதாது, உடல் வளர்ச்சியும் தேவை. "ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்று மிக எளிய முறையில் பாரதி பாடினான். ஏன் குழந்தையைப் பார்த்து அப்படிச் சொன்னான் என்றால், அப்படி ஓடி

> “ஒரு அரசு கல்விக்கு இத்தகைய ஊக்கங்களை அளிக்கும்போது பெற்றோர்கள், உற்றார், உறவினர், தங்களுடைய குழந்தைகளை கல்விப் பயிற்சிக்கு அனுப்பி தவறாமல், அந்தக் குழந்தை கல்வியும் பெறவேண்டும் என்கின்ற அந்த உத்வேகத்தை உருவாக்க வேண்டும்.”

விளையாடினால்தான் அதன் இளம் எலும்புகள் வளரும். அதனுடைய உடல் கட்டுமஸ்தான நிலையில் இருக்கும். அது எதிர்காலத்திலே நல்ல உடல் அமைப்போடு, உலகத்தோடு போட்டி போடுகின்ற பல விளையாட்டுப் போட்டிகளில் அவர்கள் ஈடுபட முடியும். அந்தப் பெருமை இன்றைக்கு இந்தியாவிலே, குறிப்பாக தமிழ்நாட்டிலே உள்ளவர்களுக்கு பெருமை, பெரும்பாலும் கிடைப்பதில்லை, எப்போதாவது அத்தி பூத்தது போலத்தான் நாம் ஏதோ சில பதக்கங்களை விளையாட்டுப் போட்டிகளில் நம்முடைய உடல் பயிற்சியிலே உள்ள அந்த ஆர்வத்தைக் காட்டுகின்ற வகையிலே பெற முடிகின்றது.

**பள்ளிக்குத் தவறாமல் அனுப்புங்கள்**

இங்கே ஒருவர் இருவர் தங்கப்பதக்கங்களைப் பெற்றாலே அதை வைத்துக் கொண்டு கூத்தாடுகின்ற அளவுக்கு நம்முடைய நாட்டிலே, குறிப்பாக தமிழகத்திலே உடல் பயிற்சியிலே அதிக கவனம் செலுத்தாத நிலைமைதான் நம்முடைய பிள்ளைகளுக்கு, பிள்ளைகளை வளர்க்கின்ற பெற்றோர்களுக்கு இருக்கின்றது. அதனால்தான் முட்டை சத்தான உணவு, அந்தச் சத்துணவை குழந்தைகள் பாச்சிடுகின்ற காரணத்தால் அவர்கள் உடற்கட்டு வலுவானதாக அமைகின்றது. அந்த உடற்கட்டு நம்முடைய வீட்டுப் பிள்ளைகளுக்குத் தேவை என்ற முறையில் இந்த முட்டையைப் பயன்படுத்த வேண்டும், அதற்காகத்தான் ஒரு முட்டையை இரண்டு முட்டையாக ஆக்கி, இன்று மூன்று முட்டை என்று இப்போது ஆக்கியிருக்கிறோம்.

ஒருவேளை அடுத்த ஆண்டு நான்கு முட்டையாக இருக்குமா என்று தயவுசெய்து யாரும் கருத வேண்டாம். அளவுக்கு மீறினால் அந்த முட்டையும் உடம்புக்குக் கெடுதி என்பதால், இந்த மூன்று முட்டையோடு நிச்சயமாக நிறுத்தப்படும்.

அரிச்சுவடியில் படித்ததை தம்பி தங்கம் தென்னரசு இங்கே விரிவாகச் சொன்னார். அ, ஆ எழுத்துக்களில் கடைசியாகப் பார்த்தால் மூன்று முட்டைகள் ஃ போட்டு – இது ஆயுத எழுத்து – எனவே இந்த ஆயுத எழுத்தோடு இந்த முட்டை எழுத்துக்களை நாம் நிறுத்திக் கொள்கிறோம். அடுத்த ஆண்டு நான்கு முட்டை, ஐந்து முட்டை என்பதெல்லாம் குழந்தைகளின் சாப்பாட்டிற்கு அல்ல, நம்முடைய துரைமுருகன் போன்றவர்களின் சாப்பாட்டிற்கு வேண்டுமானால் அவைகள் இருக்கலாமே தவிர, குழந்தைகளின் சாப்பாட்டிற்கு அவைகள் கிடையாது என்பதைச் சொல்லி – காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும், ஒரு அரசு கல்விக்கு இத்தகைய ஊக்கங்களை அளிக்கும் போது பெற்றோர்கள், உற்றார் உறவினர், தங்களுடைய குழந்தைகளை கல்விப் பயிற்சிக்கு அனுப்பி தவறாமல், அந்தக் குழந்தை கல்வியும் பெற வேண்டும், உடல் அறிவும், உடல் நலமும் பெற வேண்டும் என்கின்ற அந்த உத்வேகத்தை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அப்போது தான் காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று நாம் கொண்டாடுவதற்கு அர்த்தம் – நாடு வளர, சமுதாயம் வளர, இளந்தலைமுறை வளர இந்த நாள் பெரிதும் உதவுமாக என்று கூறி, இங்கே உங்களையெல்லாம் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டமைக்காக மகிழ்ச்சியும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

* * *





# தமிழ்நாடு முழுவதும் ரூ.160 கோடி செலவில் பத்தாயிரம் மின்மாற்றிகளை அரசு அமைக்கிறது

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அறிவிப்பு

மின் வாரிய வளர்ச்சிக்காக நாளும் தேய்ந்து அதன் புகழை நிலை நாட்டுகின்ற மின் வாரிய அலுவலர்களே, தொழிலாள உடன்பிறப்புகளே, இந்த வாரியத்தின் பொன் விழா நிகழ்ச்சியில் உங்கள் அனைவரையும் சந்திப்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன், பெருமை யடைகின்றேன். நான் ஐந்து முறை முதலமைச்சர் பொறுப்பை யேற்றாலும், பொறுப்பேற்கின்ற ஒவ்வொரு முறையும் எப்படியாவது ஒரு விழா, அது வெள்ளி விழாவாகவோ அல்லது பொன்விழாவாகவோ வந்து விடுகிறது. எனவே நான் விழா முதல்வராகவே ஆகிவிட்டேன். விழா முதல்வர் என்று ஆகியிருக்கின்றேன்.






இந்த இனிய நிகழ்ச்சியில் பாராட்டுகள், பதக்கங்கள் பெற்றவர்களையெல்லாம் உங்களோடு சேர்ந்து நானும் உற்சாகப்படுத்தி வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே நம்முடைய அருமை நண்பர் ஆற்காட்டார் உரையாற்றும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். இந்த வாரியத்தின் தொடக்கக் கால வளர்ச்சிக்கு இந்த வாரியம் வளர்ந்தோங்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கியவர் – திருமிகு காலஞ்சென்ற அப்பாதுரையார் என்று குறிப்பிட்டார். அப்பாதுரையார் அவர்கள் இன்று இல்லாவிட்டாலும், அவர் ஆற்றிய பணி என்றைக்கும் பாராட்டப் படக்கூடியது என்பதற்கு அடையாளமாகத்தான் அவருடைய திருமகனாருக்கு இங்கே பரிசளிப்பும், பட்டாடையும் அணிவிக்கப்பட்ட காட்சியை நீங்கள் கண்டீர்கள். எனவே நாம் ஒய்வுபெற்று விட்டோம், அல்லது வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு விட்டோம், இனி இந்த நிறுவனத்திற்கு என்ன பணி ஆற்ற வேண்டுமென்று இல்லாமல், நாம் உருவாக்கிய நிறுவனத்தை, நாம் வளர்த்த நிறுவனத்தை, நாம் முன்னேற்றப் பாதையிலே கொண்டு சென்ற நிறுவனத்தை ஒட்டிக் கொண்டு கடைசி வரையிலே அந்த நிறுவனத்தின் நல்வாழ்வுக்காக வளத்திற்காகப் பாடுபட்டால், நான் இல்லாவிட்டாலும் நம்முடைய சந்ததியினர் பாராட்டப்படுவார்கள், நம்முடைய வழித்தோன்றல்கள் பாராட்டப்படுவார்கள் என்பதற்கு அடையாளமாகத் தான் இங்கே மறைந்த அப்பாதுரையார் அவர்களுடைய மைந்தருக்கு பாராட்டும், பரிசளிப்பும் வழங்கப்பட்டது என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

## என் முகம் மலர்ந்தது

இதை இந்த வாரியத்திலே மாத்திரமல்ல, எந்தவொரு அமைப்பிலே பணியாற்றுகின்ற பொறுப்பிலே இருக்கின்ற அத்தனை பேரும் உணரவேண்டிய, உள்ளத்திலே பதியவைக்க வேண்டிய ஒரு பேருண்மையாகும். என்னைப் பொறுத்தவரையிலே இங்கே வந்து பதக்கங்கள் பெற்றவர்கள், தங்கத்தாலான பதக்கங்களைப் பெற்றவர்கள், அருமையான பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றவர்கள், பட்டாடைகளைப் பெற்றவர்கள் எல்லாம் ஏறத்தாழ இருபது பேரை நான் மிக நன்றாக நெருங்கி அறிவேன். காரணம் நானே பொறுப்பிலே ஐந்து முறை இருந்து விட்ட காரணத்தால், அவர்கள் எல்லாம் எனக்கு மிகவும் பழக்கமானவர்கள். அவர்கள் மின் வாரியத்தின் தலைவர்களாக மாத்திரமல்ல, இந்த அரசினுடைய பல்வேறு அங்கங்களில் சிறப்போடு செயல்பட்டவர்கள். அதனால்தான் அவர்களைக் காணும்போதெல்லாம் என்னை அறியாமல் என் முகம் மலர்ந்தது. அவர்களையறியாமல் அவர்களும் புன்னகை புரிந்தார்கள். நான் அவர்களின் நலன் விசாரித்தேன். அவர்கள் என் நலனை விசாரித்தார்கள்.

## நாட்டு நன்மைக்காக செய்த காரியங்கள்

காரணம் இரண்டு பேரும் நாட்டு மக்கள் நலனிலே அக்கறை உள்ளவர்களாக இருந்த காரணத்தால் நலன் விசாரிக்கத் தோன்றியது. அது இயல்பானதும்கூட அப்படிப்பட்ட ஒரு நல்ல



எண்ணத்தோடு இந்த அருமையான வாரியத்தை நம்முடைய தொழிலாளத் தோழர்களும், அலுவலக நண்பர்களும் பணியாற்றுகின்ற பாட்டாளிகளும், நிபுணத்துவம் வாய்ந்தவர்களும், வித்தகர்களும், விஞ்ஞானிகளும் இயக்கி வருகின்ற இந்த அருமையான முயற்சிக்கு ஊக்கச் சக்தியாக, உந்து சக்தியாக விளங்குபவர், நம்முடைய மின்துறை அமைச்சர் அருமை நண்பர் ஆற்காட்டார் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் மின்சாரம் என்றால், அதன் சாரமே அவர்தான். அவர் தன்னுடைய வாழ்க்கையை அரசியலிலே ஆரம்பித்த வாழ்க்கையை சட்டமன்றத்திலேயே அவர் என்னோடு அறிஞர் அண்ணா காலத்திலே சட்டப்பேரவையிலே உறுப்பினராக இருந்த அந்தக் காலத்திலேயிருந்த அவர் மின்சார வாரியத்திலும் தொடர்பு உடையவர் என்பதை நான் அறிவேன்.

மின்சார வாரியத்திலே என்ன நடக்கிறது என்பதையெல்லாம் நான் சட்டசபையிலே பேசுவதற்கு பல நேரங்களில் எனக்கு உதவிப் புரிந்தவரும் கூட, நம்முடைய ஆற்காட்டார் அவர்கள் என்பதைச் சொன்னால், ஏதோ தவறுதலாக நீங்கள் கருதிக் கொள்ளக்கூடாது, நாட்டு நன்மைக்காகச் செய்த அந்தக் காரியங்கள் , அன்றைக்கு சட்டமன்றத்திலே எடுத்துச் சொல்லப்பட்டு, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அமைச்சர்களே கூட நான் எடுத்துச் சொன்ன குற்றச்சாட்டுகள், நான் சுட்டிக்காட்டிய குறிப்புகள், புகார்கள் எல்லாம் உண்மைதான் என்பதை ஒத்துக்கொண்டு, அதற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு குழுவைக் கூட அவர்கள் பெருந்தலைவர் காமராஜருடைய காலத்திலே நியமித்தார் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



மின்சாரத் துறை இன்றைக்கு இந்த அளவு வளர்ந்திருப்பதற்குக் காரணம் நான் என்று – முதலமைச்சரை பெருமைப்படுத்த வேண்டுமென்ற ஒரு கடமைக்காக மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆனால் மின்சாரத் துறை அமைச்சருக்கு என்னை விட அதிகப் பொறுப்பு இந்தத் துறையிலே உண்டு. அவருக்கு மாத்திரமல்ல – என்னோடு இருக்கின்ற சக அமைச்சர்கள் அத்தனை பேரும், இன்றைக்கு வைத்திருக்கின்ற அத்தனை பொறுப்புக்களையும், அத்தனை இலாகாக்களையும் அவரவர்கள் உயர்த்தினால் தான், அந்த உயர்வெல்லாம் சேர்ந்து எனக்கு உயர்வளிக்கும். இந்த ஆட்சிக்கு உயர்வளிக்கும் என்பதை நான் உணராதவன் அல்ல. அப்படிப்பட்ட உயர்வளிக்கின்ற உன்னதமான இடத்தில் நம்முடைய ஆற்காடு வீராசாமி அவர்கள் மின் துறை அமைச்சராக இருந்து பணி புரிந்து வருகிறார்.

**பத்தாயிரம் மின்மாற்றிகள்**

இங்கே தொகுப்புரையாற்றிய அம்மையார் சொன்னதைப் போல Finger Dip என்பார்களே, அதைப் போல புள்ளி விவரங்களையெல்லாம் விரல் நுனியிலே வைத்திருப்பவர் அவர். நாம் கேட்கிற நேரத்தில் – காதிலே மாத்திரம் சரியாக விழுந்தால் உண்மையிலேயே சரியான விவரங்களை நமக்குச் சொல்லக் கூடியவர் அவர். சட்டமன்றம் நடக்கும்போது நீங்கள் வந்து பார்த்தால் உங்களுக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் திருக்குறள் சொல்லி முடித்தவுடன் கேள்வி நேரம் தான் முதலிலே ஆரம்பமாகும். முதல் கேள்வியை எடுத்துக் கொண்டால், அநேகமாக அந்த முதல் கேள்வி மின் துறையைப் பற்றியதாகத்தான் இருக்கும்.

ஒவ்வொரு ஊரையும் குறிப்பிட்டு, அந்த ஊரிலே விளக்கு எரியவில்லை, மின் தடங்கல் என்று யாராவது ஒரு உறுப்பினர் கேட்டால், அப்போதெல்லாம் அவர்களுக்கு மின்சாரத்துறை அமைச்சர் அளிக்கின்ற பதில், பத்தாயிரம் டிரான்ஸ்பார்மர்கள் விரைவிலே வரவிருக்கின்றன. வந்தவுடன் உங்கள் தொல்லை யெல்லாம் தீரும், கவலைப்படாதீர்கள் என்று சொல்வார். நான் கூட எப்போது வரப்போகிறது என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அது பற்றி அறிவிப்பதற்கு ஒரு பொன்னான நாள், பொன் விழா நாள் தான் என்று கருதியோ என்னவோ, 160 கோடி ரூபாய் செலவில், பத்தாயிரம் மின் மாற்றிகள், டிரான்ஸ்பார்மர்கள் அமைத்திட அரசு ஏற்பாடு செய்துள்ளது என்பதை இன்றைக்கு இந்த விழாவில் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன். தமிழகம் முழுவதும் இதுவரை அமைக்கப்பட்டுள்ள புதிய மின் மாற்றிகள் இன்று தொடங்கி வைக்கப்படுகின்றன என்ற செய்தியையும் செவிக்கினியதாக மாத்திரமல்ல, சிந்தைக் கினியதாகவும் உங்கள்பால் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழா நினைவாக இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள், ஒய்வூதியம் பெறுவோர், குடும்ப ஒய்வூதியம் பெறுவோர் அனைவருக்கும் தலா 1,000 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**ரொக்கப் பரிசு – ஊக்க ஊதிய உயர்வு**

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு மின்வாரியத்தில் தற்போது பணியாற்றும் 72,723 தொழிலாளர்களும், 46,035 ஒய்வூதியதாரர்களும் 27,055 குடும்ப ஒய்வூதியதாரர்களும் – ஆகமொத்தம் 1 இலட்சத்து 45 ஆயிரத்து 813 தொழிலாளர்களுக்கு தலா 1,000 ரூபாய் வீதம் மொத்தம் 14 கோடியே 58 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு இந்த விழா அடையாளமாக அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழா நினைவாக இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள், பகுதிநேர தொழிலாளர்கள் அனைவருக்கும் தலா 500 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 21,401 ஒப்பந்தத் தொழிலாளர்களும், 5,646 பகுதி நேரத் தொழிலாளர்களும் – ஆகமொத்தம் 27,047 தொழிலாளர்களுக்கு தலா 500 ரூபாய் வீதம் 1 கோடியே 35 இலட்சத்து 23 ஆயிரத்து 500 ரூபாய் ரொக்கப் பரிசாக அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்வாரியப் பொன்விழா நினைவாக இவ்வாரியத்தில் தற்போது பணியாற்றும் தொழிலாளர்கள் அனைவருக்கும் சிறப்புப் பரிசாக ஒரு ஊக்க ஊதிய உயர்வு (Incentive Increment) வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 72,723 தொழிலாளர்கள் பயன்பெறுகிறார்கள்.

இந்த சிறப்பு ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்படுவதன் காரணமாக, தமிழ்நாடு மின் வாரியத்திற்கு, ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 29 கோடியே 87 இலட்ச ரூபாய் கூடுதல் செலவாகும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒய்வுபெற்ற மின்சார ஊழியர்களின் கோரிக்கைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் மின்சார ஊழியர்களுக்கு சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் செய்யும்போது கவனிக்கப்படும் என்ற உறுதியையும், இந்த விழாவிலே நான் அளிக்கின்றேன். ஆகவே நல்ல அறிவிப்புகளாக இந்த விழாவிலே உங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் மின்சாரத் துறை அமைச்சரிடத்திலே பேசி, அவரும் அதிகாரிகளிடத்திலே கலந்துரையாடி, இந்த அறிவிப்புகளை இந்தப் பொன் விழா நினைவாக வெளியிட்டிருக்கிறேன்.

நீங்கள் இந்த அறிவிப்புக்களை அகமகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கின்றீர்கள். வரவேற்றதின் அடையாளமாக ஊரெல்லாம் ஒழுங்காக விளக்கெரிய வேண்டும். ஒரு நாள் கூட தடங்கல் ஏற்படக்கூடாது என்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு இந்த அளவில் விடைபெறுகிறேன்.

---

சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில்,
2–7–2007 அன்று நடைபெற்ற
தமிழ்நாடு மின்சார வாரிய பொன்விழாவில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை.





# பொன்விழா காணும் தமிழ்நாடு மின்சார வாரியம்

**1957** முதல் 2007 வரை கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழகத்தை ஆற்றல் மிக்கதாகச் செய்து சமூகம், பொருளாதாரம், விவசாயம், தொழில்துறை, உற்பத்தி மற்றும் சேவைப்பகுதிகளிலும் முன்னேற்றி தமிழகத்தை இந்தியாவிலேயே மிகவும் வளர்ச்சி அடைந்த மாநிலமாக ஆக்கியுள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டுகளில் அடைந்துள்ள வளர்ச்சி

- நுகர்வோர் எண்ணிக்கை 4.30 இலட்சத்திலிருந்து 185.82 இலட்சமாக உயர்வு.
- நிறுவுதிறன் 256 மெகாவாட்டில் இருந்து 10.098 மெகாவாட்டாக உயர்வு.
- துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை 89 லிருந்து 1,148 ஆக உயர்வு.
- விநியோக மின் மாற்றிகள் 3,773 லிருந்து 1,73,503 ஆக உயர்வு.
- கூடுதல் உயர் அழுத்த மற்றும் உயர் அழுத்த மின் பாதைகளின் நீளம் 11,479 கி.மீ.ல் இருந்து 1,54,068 கி.மீ. ஆக உயர்வு.
- குறைந்த மின் அழுத்த பாதையின் நீளம் 13,055 கி.மீ.லிருந்து 5,01,807 கி.மீ. ஆக உயர்வு.
- மின்இணைப்பு பெற்ற நகரங்கள், கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை 1,813ல் இருந்து 63,177 ஆக உயர்வு.
- விவசாயத்திற்கான நீர் இறைப்பு இணைப்புகளின் எண்ணிக்கை 33,440லிருந்து 18,01,972 ஆக உயர்வு.
- தனிநபர் நுகர்வு 21 யூனிட்களிலிருந்து 960 யூனிட்களாக உயர்வு.
- உச்சத்தேவை 172 மெகாவாட்டில் இருந்து 8,803 மெகாவாட்டாக உயர்வு.

மொத்த மின் உற்பத்தி 1,053 மில்லியன் யூனிட்களிலிருந்து 63,038 மில்லியன் யூனிட்டுகளாக அதிகரிப்பு.



### இந்தியாவில் முதலிடம்

தமிழ்நாடு மின்சார வாரியம் எரிசக்தித் துறையில் மிகச் சிறப்பாக பயனளித்து சேவைபுரியும் நிறுவனங்களில் ஒன்றாகும்.

அதன் வருவாய் திரட்டும் திறன் 99 சதவிகிதம் ஆகும்.

மின்கடத்தல் மற்றும் விநியோக இழப்பு தற்போது 18 சதவிகிதம் மட்டுமே.

காற்றாலைகளின் அதிகபட்ச திறன் 3,456 மெகாவாட், அதாவது தமிழ்நாடு மின்சார வாரியம் இந்தத் துறையில் இந்தியாவிலேயே முதலிடத்தையும் உலகத்திலேயே நான்காவது இடத்தையும் பெற்றுள்ளது.

மின்சாரத் திருட்டு நிகழ்வு மிகவும் குறைவு.

அனல்மின் நிலையங்களின் மின் சுமை காரணி (Plant load factor) மிகவும் உயர்வாக உள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம்.

அதிக உயரமுள்ள புனல் மின் உற்பத்தி நிலையம் – பைக்காரா நீர் மின் நிலையம்.

தொடர்கட்ட வகையைச் சேர்ந்த மலைப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உற்பத்தி நிலையம் – குந்தா மின் திட்டம்.

காவேரி நதிக்கு குறுக்கே நிர்மாணிக்கப் பட்டுள்ள தொடர்கட்ட குறைந்த உயரமுள்ள தடுப்பணைத் திட்டங்கள்.

உச்ச நேரத் தேவைகளைச் சமாளிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காடம்பாறை நீரேற்று தேக்க நீர் மின் நிலையம்.

### செயல்படுவதில் முதலிடம்

கூடுதல் உயர் மின் அழுத்த காற்று காப்பிடப்பட்ட துணை மின் நிலையம் – சென்னை மாநகர்.

மின் விநியோக கட்டுப்பாட்டு மையம் ஸ்கடா – சென்னை மாநகர்.

கூடுதல் உயர் மின் அழுத்த 230 கே.வி அளவிலான மின் கட்டமைப்பு மற்றும் மின் சுமை அனுப்புகை மையம் – ஈரோடு.

### அறிமுகம் செய்வதில் முதலிடம்

வலுவேற்றப்பட்ட சிமெண்ட் கான்கீரிட் கம்பங்களை உயர் மற்றும் குறைந்த மின் அழுத்த பாதைகளில் பயன்படுத்துவதில் மின் சக்தி பாதை வழி தொலைபேசியை மின் கட்டமைப்பு இயக்கத்தில் பயன்படுத்துவது – கம்பியில்லா தொலைத் தொடர்பு முறையை மின் பழுது அழைப்புகளை கவனிக்க பயன்படுத்துவதில், கிராமப்பகுதிகளுக்கு மின் இணைப்புகள் வழங்குவதில், மின் பொறியாளர் களுக்கான மதிப்பு மிக்க கையேடு வெளியிடுவதில் முதலிடம் வகிக்கிறது.

□ □ □





## 2007 - 2008 ஆம் ஆண்டில் வழங்க 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்க முடிவு

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் எட்டாவது கூட்டம் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 3.7.2007 அன்று காலை 10.30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் கூடியது. இதில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் டி. சுதர்சனம் (காங்கிரஸ்), கோ.க.மணி (பா.ம.க), சி.கோவிந்தசாமி (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்) வை.சிவ.புண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி), செல்வப் பெருந்தகை (விடுதலை சிறுத்தைகள்) எச். அப்துல் பாசித், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), ஜெகன் மூர்த்தி (புரட்சிப் பாரதம்) மற்றும் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்து விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அந்த ஏற்பாட்டின்படி 24.6.2007 வரை 12 இலட்சத்து 18 ஆயிரத்து 897 தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு, அவற்றுள் 10 இலட்சத்து 16 ஆயிரத்து 940 தொலைக்காடசிப் பெட்டிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளில் பெட்டிகள் அனைத்தும் வரும் நவம்பர் இறுதிக்குள் வழங்கிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2007 – 2008 ஆம் ஆண்டுக்கு 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்வதென்றும், அதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் சர்வதேச அளவில் கோருவதென்றும், ஒப்பந்தப் புள்ளிகளை ஆகஸ்ட் மாதத்தில் வெளியிட்டு, செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவு செய்வதென்றும் 2006 – 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப குறியீடுகளையே இந்தக் கொள்முதலுக்கும் பின்பற்றுவதென்றும் இன்றையக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ★

# 13 மாத ஆட்சியில் ரூ. 9,710 கோடி மதிப்பில் 10 தொழில் ஒப்பந்தங்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

**வே**றொரு அலுவல் காரணமாக வெளியூர் செல்ல வேண்டியிருப்பதால் விரைவில் நான் என்னுடைய உரையை நிறைவு செய்துவிட்டு விடைபெற வேண்டும் என்று சிவசைலம் குடும்பத்தினரிடம் வேண்டிக் கொண்டு இருந்தேன். ஆனால் சிவசைலம் அவர்களுடைய பேச்சைக் கேட்கும்போது நேரம் போனதே தெரியவில்லை. அவர்களும் நீண்ட நேரம் உரையாற்றிவிட்டார். வயதானவர்கள் பேச ஆரம்பித்தால் சீக்கிரம் முடிக்க முடியாது. நான் சீக்கிரம் முடிப்பதற்கு காரணம் எனக்கு வயதாகவில்லை என்பதை உங்களுக்கு அறிவிப்பதற்காகத் தானே தவிர வேறல்ல.

**டிராக்டர் அன்பளிப்பு**

இந்த தொழிற்கூடத்தோடு என்று நான் சொல்ல மாட்டேன், இந்தக் குடும்பத்தோடு எனக்கு நீண்ட காலமாக நல்ல உறவும், நட்பும், தோழமையும் உண்டு. அவர்கள் இங்கே எடுத்துக்காட்டிய 1970ஆம் ஆண்டுகளில் நான் வெளிநாட்டிலே சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, இலண்டன் மாநகரத்திலே சிவசைலம் அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுது இலண்டனிலே உள்ள தொழிற்சாலையில் இருந்து பர்கூசன் டிராக்டரை எனக்குப் பரிசாக அளித்தார். நான் அந்தப் பரிசை என்னுடைய வாழ்நாள் வரையிலே மறக்க முடியாது. சில பேருடைய பரிசு காதல் பரிசாக இருக்கும், நட்புப் பரிசாக இருக்கும். அவைகளை மறக்க முடியாது என்று சொல்வதிலே அர்த்தம் இருக்கிறது.

ஆனால் இவர் அளித்த பரிசு என்னை சிக்கலிலே மாட்டிவிட்டது. பர்கூசன் டிராக்டரை நான் அன்பளிப்பாக அங்கே பெற்றவுடன், அங்கேயே நான் அறிவித்தேன். இதை நான் என் சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ளப் போவதில்லை, காரணம் எனக்கு டிராக்டரை வைத்து நிலத்தை உழுகின்ற அளவிற்கு நிலம் இல்லை. எனவே இதை நான் முதலமைச்சர் என்கிற முறையில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற கோவை விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு அன்பளிப்பாக தருகிறேன் என்று அங்கேயே அறிவித்தேன்.

அது பத்திரிகைகளில் எல்லாம் வெளிவந்து நான் அறிவித்தவாறு அது அன்பளிப்பாக அனுப்பி வைக்கப்பட்டது, இலண்டனில் இருந்து அவர்களே அதை முன் நின்று அனுப்பி வைத்தார்கள். ஆனால் அப்பொழுது கப்பல் தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தின் காரணமாக கப்பல்கள் ஆங்காங்கு புறப்படாமல் நின்றதால் அந்த டிராக்டர் சென்னைக்கு வந்து சேரவில்லை, சென்னைக்கு






வராத காரணத்தால் அது சில நாட்களுக்கு கோவைக்கும் அனுப்பப்படவில்லை. அதற்கிடையே என்மீது தரப்பட்ட புகார் ஒன்றில் பர்கூசன் டிராக்டர் சிவசைலம் கொடுத்ததை நான் என்னுடைய சொந்த நிலத்திற்கு அனுப்பி பயன்படுத்திக் கொண்டேன் என்று புகார் கொடுத்தார்கள்.

அந்தப் புகாரிலிருந்து அன்றைக்கு சாட்சியமாக இருந்து என்னைக் காப்பாற்றிய பெருமை நம்முடைய சிவசைலம் அவர்களுக்கு உண்டு என்பதை நன்றியுணர்வோடு இப்போழுது நான் சொல்லிக் கொள்கிறேன். அந்த டிராக்டரை என்னுடைய சொந்த நிலத்திற்குப் பயன்படுத்துகிறேன் என்றெல்லாம் சொன்னார்கள். எப்படி பயன்படுத்த முடியும் என்று நம்முடைய வழக்கறிஞர்கள் கேட்ட பொழுது அது சென்னைக்கு வந்து சென்னையில் இருந்து திருவாரூருக்குக் கொண்டு செல்லப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள்.

ஏறத்தாழ ஒரு 300 மைல் அதைக் கொண்டு போனார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். போகும் வழியிலே எங்கெங்கே எந்தெந்த பெட்ரோல் பங்குகளில் அதற்கு பெட்ரோல் பிடித்தார்கள், என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு நம்முடைய சிவசைலம் அவர்கள்தான் ஏதோ தன்னுடைய சகோதரனுக்கு ஏற்பட்ட ஒரு அவமானத்தை கழுவுவதற்கு இன்னொரு சகோதரர் எவ்வளவு உரிமையோடு பாடுபடுவாரோ அந்த அளவிற்கு உரிமையோடு பாடுபட்டு அந்த சாட்சியங்களையெல்லாம் எடுத்துக் கொடுத்து அந்த கமிஷன் விசாரணையில் இருந்து அந்தப் புகாரில் இருந்து என்னை விடுவித்த பெருமைக்குரியவர் என்னுடைய நண்பர் சிவசைலம் ஆவார்கள்.

அவர்கள் இன்றைக்கு இந்தத் தொழிற்சாலையின் மூன்றாவது பிரிவினுடைய திறப்பு விழாவை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இது "மூன்றாவது" ஏற்படுகின்ற காலம். அந்த வகையில் மூன்றாவது பிரிவை அவர்கள் இன்றைக்குத் தொடங்கி இருக்கிறார்கள், இதை மூன்றாவது பிரிவு என்றும் சொல்லலாம். அவர்கள் தொழிற்சாலையிலே மூன்றாவது அணியென்றும் குறிப்பிடலாம். இந்த மூன்றாவது அணியும் அவருக்குப் பிணியாக இல்லாமல் அணியாகவே இருந்து அவருடைய ஆரோக்கியத்தை வளர்ப்பது மாத்திரமல்ல, அவரது தொழிலுக்கு நல்ல வளர்ச்சியையும் தரும் என்று நான் நம்புகிறேன்.

1971–ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. அப்படி தொடங்கப்பட்ட டிராக்டர் தொழிலுக்குப் பின்னர், இந்த டாபே பாட்டரி தொழிற்சாலை 1993ஆம் ஆண்டு 18 தொழிலாளர்களோடு தொடங்கப்பட்டது. அப்போது 3,000 பாட்டரிகளை தொடக்கத்திலே உற்பத்தி செய்தது.

பின்னர் இது மேலும் மேலும் உயர்ந்துவரும் பாட்டரிகளின் தேவைகளைக் கணக்கிலே கொண்டு, டாபே பவர் சோர்ஸ் நிறுவனத்தின் இரண்டாவது தொழிற்கூடம் 2000–ஆம் ஆண்டில், கழக அரசு இருந்த அந்தக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. இரண்டாவது தொழிற்கூடம் 2000ஆம் ஆண்டில் அப்போதும் கழக அரசு இருந்த அந்தக் காலத்திலேதான் மறைமலை நகரிலே இரண்டாவது தொழிற்கூடமும் தொடங்கப் பட்டது. அப்பொழுது நான்கு சக்கர வாகனங் களுக்கான பாட்டரிகளை உற்பத்தி செய்கிற அளவுக்கு இந்தத் தொழிற்கூடம் வளர்ந்தது.

மாதம் ஒன்றுக்கு 3.5 இலட்சம் பாட்டரிகள் உற்பத்தி செய்கிற அளவுக்கு இந்த தொழிற் கூடம் உயர்ந்திருக்கிறது. இதுவரையிலே 2 கோடி (20 மில்லியன்) பாட்டரிகளை உற்பத்தி செய்து மகத்தான சாதனையை இந்த நிறுவனம்







படைத்திருக்கிறது என்பதை எண்ணும்போது நான் இதை வாழ்த்துவதற்கு கடமைப் பட்டிருக்கின்றேன்.

பொதுவாக கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் தமிழகத்திலே வளர்ந்த தொழில் வளர்ச்சிக்கும் இந்த பதிமூன்று மாத காலத்தில் கழக ஆட்சியிலே வளர்ந்துள்ள தொழில் வளர்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டை இந்த நிகழ்ச்சியிலே உணர்த்தினால் பல தொழில் அதிபர்கள், தொழில்துறை நண்பர்கள் குழுமியிருக்கின்ற இந்த இடத்திலே அது பயனுள்ளதாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். நான் விளம்பரத்திற்காக இதைச் சொல்லவில்லை. எப்பொழுதுமே விளம்பரம் தொழிலை வளர்க்கும். தொழிலை வளர்ப்பது என்றால் என்னுடைய சொந்தத் தொழிலை அல்ல. இது நாட்டிற்கு, பொருளாதாரத்திற்குத் தேவையான தொழில் வளர்ச்சியை உருவாக்குவதற்காக இதைச் சொல்கின்றேன்.

2001 லிருந்து 2006 வரையில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் ஐந்தே ஐந்து தொழில் ஒப்பந்தங்கள் 2,220 கோடி ரூபாய் முதலீட்டில் நிறைவேற்றப்பட்டன. ஆனால் இந்த பதிமூன்று மாத கால கழக ஆட்சியில் பத்து தொழில் ஒப்பந்தங்கள் 9ஆயிரத்து 710 கோடி ரூபாய் முதலீட்டிலே தொடங்கப் பட்டிருக்கிறது என்பதை நான் சிவசைலம் போன்றவர்களுக்கு நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கு தொழிலை எந்த அளவிற்கு இந்த அரசு வளர்ந்துக் கொண்டிருக்கிறது, பெருக்கியிருக்கிறது என்பதற்கு மகிழ்ச்சி அடைவார்கள் என்ற எண்ணத்தோடு இதை நான் தெரிவிக்கின்றேன்.

இந்தத் தொழில் வளர்ச்சி நம்முடைய நாட்டில் மறைமலை நகரிலே மாத்திரம் அல்ல, சென்னைக்கு அருகிலே உள்ள இடங்களிலே மாத்திரமல்ல, இன்னும் உட்புற கிராமங்களிலே, உள்மாவட்டங்களில், வட்டங்களில், கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி மிக வேண்டும் என்ற ஆசை, எண்ணம் நம்முடைய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆட்சியிலே தொடர்ந்து இந்தத் தொழில் வளர்ச்சி கிராமங்களிலும், மாவட்டங்களிலும், தாலுகாக்களிலும் பரப்புவதற்கு இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த நல்ல விழாவிலே தெரிவித்து நம்முடைய சிவசைலம் அவர்களுடைய முயற்சிகள் மேலும் மேலும் வெல்க வெல்க என்று என்னுடைய வாழ்த்துக்களை வழங்கி அவரும் உடல்நலம் பெற்று தொழிலாளர்களையும் வளமாக அவர் வளர்த்திட வேண்டும், அவர்களுடைய ஊக்கத்திற்கு, உழைப்புக்கு ஆதரவு தந்திட வேண்டும் என்பதை நான் இங்கே அறிவித்து இந்தத் தொழிற்சாலைக்கு என்னை அழைத்து சிறப்பித்தமைக்காக என்னுடைய நன்றியை அவருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் தெரிவித்து இந்த அளவில் விடைபெற்றுக் கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள்
சென்னை, மறைமலைநகரில் 'டாபே'
நிறுவனத்தின் தொழிற் பிரிவை 6.7.2007
அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரை

* * *



ஒரகடத்தில், **ரூ.225 கோடி** மதிப்பீட்டில்

# 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு

## வழங்கும்

## உயர் தொழில்நுட்ப மின்னணு வன்பொருள் தயாரிப்புக்கான புதிய மையம்



அமெரிக்காவில் சான்ஜோஸ் என்னும் இடத்தைத் தலைமை இடமாகக் கொண்டு சான்மினா எஸ்.சி.ஐ. கார்ப்பரேஷன் நிறுவனம் எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள் தயாரிப்புப் பணிகளில் ஒரு முன்னணி நிறுவனமாகும். சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனம் ஆண்டுக்கு 11 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு வருவாய் ஈட்டி 2006 ஆம் ஆண்டில் உலகின் மிகச் சிறந்த 500 நிறுவனங்களில் 198–ஆவது தகுதி பெற்றுள்ளது. உலகின் 19 நாடுகளில் அமைந்துள்ள இந்நிறுவனத்தின் 80 தொழிற் சாலைகளில் ஏறத்தாழ 51 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இந்த சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனம், ஒரகடம் உயர் தொழில்நுட்ப மையத்தில் 225 கோடி ரூபாய் முதலீட்டில், 100 ஏக்கர் பரப்பில் தனது புதிய உற்பத்திப் பிரிவைத் தொடங்க உள்ளது. இத்திட்ட முதலீடு 315 கோடி ரூபாயாக உயருமென எதிர்பார்க்கப் படுகிறது. சான்மினா எஸ்.சி.ஐ. நிறுவனத்தின் உதிரிபாக உற்பத்தி யாளர்கள் தங்களுடைய தொழிற் சாலைகளை தமிழகத்தில் நிறுவுவார்கள்



என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், 4,000 தொழிலாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பையும், 6,000 தொழிலாளர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் வழங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒரகடத்தில் உள்ள சிப்காட் தொழில் வளர்ச்சி மையத்தில் ஒரகடம் உயர் தொழில்நுட்ப மையம் அமைக்கப்படும் என 8.5.2007 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார். இந்த மையம் சென்னைக்கு அருகில் அமையும் இரண்டாவது மின்னணு வன்பொருள் வளர்ச்சி மையமாகும். மைய அரசு இதற்குரிய முறையான ஒப்புதலை அண்மையில் வழங்கியுள்ளது. சிப்காட் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள திருப்பெரும்புதூர் உயர்தொழில்நுட்ப மையத்தில் ஏற்கெனவே பல மின்னணு வன்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் தங்கள் உற்பத்திப் பிரிவுகளை அமைக்கத் தொடங்கியுள்ளன.

இத்தொழிற்சாலை அமைவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 19.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. தமிழக அரசின் சார்பில் தொழில் துறைச் செயலாளர் திரு. சக்திகாந்ததாஸ் இ.ஆ.ப., அமெரிக்காவின் சான்மினா எஸ்.சி.ஐ. கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கான உலகளாவிய செயலாக்கப் பணிகளின் தலைவர் திரு. ஹாரி பிள்ளை ஆகியோர் இவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். இந்த நிகழ்வின்போது அமெரிக்காவில் உள்ள சான்மினா எஸ்.சி.ஐ.நிறுவனத்தின் முதுநிலை நிருவாக அதிகாரிகளாகிய நிருவாகத் துணைத் தலைவர் திரு. சி.டி.சுவா, அதன் தொழில் வணிக இயக்குநர் திரு. மைக்கேல் கோவாக்ஸ், சான்மினா எஸ்.சி.ஐ., இந்தியா நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் திரு. குமரன் சுப்ரமணியன், அதன் தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர் திரு. ஆர்.எஸ். வெங்கட்டராமன் ஆகியோரும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கே.ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் டாக்டர் சி.சந்திரமௌலி, இ.ஆ.ப. ஆகியோரும் உடனிருந்தனர். ■



# செங்கல்பட்டு அருகே ரூ.1,373 கோடியில் எதிர்கால எரிசக்தி மண்டலம்

## 15 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசுக்கும் எம்.பி.பி.எல். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே 14.7.2007 அன்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பொருட்களை தயாரிப்பதற்கான பிரிவுகளுடன் தொழில் மையம் ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது, மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் உடனிருந்தார்.

மும்பையைச் சேர்ந்த கமலா நிறுவன குழு மற்றும் எம்.பி.பி.எல்.நிறுவனத்தால் இணைந்து எதிர்கால எரிசக்தி மண்டலம் (Future Energy Zone) என்ற பெயருடைய தொழில் மையம் நிறுவப்படும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் முன்னோடியான திட்டங்களை எம்.பி.பி.எல். நிறுவனம் செயல்படுத்தியிருக்கிறது. கட்டுமானம், மின்னணு மற்றும் ஜவுளி போன்ற துறைகளில் கமலா குழு குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்துள்ளது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி பொருள் பரிசோதனை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்கான வசதிகளை இத்தொழில்நுட்பப் பூங்கா கொண்டிருக்கும். உயிரி கொதிகலன்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பொருட்களை தயாரிக்கும் அலகுகள், உயிரி எரிவாயு உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டைஜஸ்டர்கள், சிறப்பு எரிவாயு என்ஜின்கள், சூரிய வெப்ப தகடு பொருட்கள், கார்பன் எரிசக்தி பேட்டரிகள், உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு இயந்திரங்கள் முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிற்பிரிவுகளுக்கு இத்தொழிற்பூங்கா இடமளிக்கும். இத்தொழில் மையத்திற்கான உட்கட்டமைப்பில் ரூபாய் 900 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படவுள்ளது.

473 கோடி ரூபாய் முதலீட்டில் உயர் அறிவுசார் சொத்துடனும் தொழில் நுட்பத்துடனும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பொருட்களைத் தயாரிப்பதற்காக பல்வேறு கூட்டு நிறுவனங்களை எதிர்கால எரிசக்தி மண்டலம் ஏற்படுத்தும்.

ஆக, இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மொத்த முதலீடு ரூபாய் 1,373 கோடி ஆகும். எதிர்கால எரிசக்தி மண்டலம் சுமார் 5,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 10,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் 215 எக்டேர் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2008ஆம் ஆண்டு முடிவில் இத்தொழில் மையத்தின் முதற்பகுதி நிறுவப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அரசின் சார்பில், தொழில் துறைச் செயலாளர் திரு. சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., மற்றும் எம்.பி.பி.எல். நிறுவனத்தின் தலைவர் திரு. எஸ். கிருஷ்ன், கமலா குரூப்பின் தலைவர் திரு. ஆர்.பி. லாட், இயக்குநர், திரு.ரமேஷ் கோவானி, திரு.எம்.எச். சானே, திரு.என்.கே. சாஸ்திரி ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானபோது உடனிருந்தனர். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மைய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தித் துறைச் செயலாளர் திரு.வி. சுப்பிரமணியன், இ.ஆ.ப., திரு.ஆர்.சதபதி,இ.ஆ.ப., திரு. கு. ஞானதேசிகன்,இ.ஆ.ப., திரு. இளங்கோவன், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.



# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. 1,500 கோடியில் பல்பொருள் உற்பத்தித் தொழில் மையம்

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் அங்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் தொழில் மையம் அமைக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006–2007 ஆம் ஆண்டிற்கான தொழில்துறை மானியக் கோரிக்கையின்பொழுது அறிவித்தார்கள். மத்திய அரசு இத்திட்டத்திற்குக் கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தைக் கூட்டுத் துறையில் செயல்படுத்த டிட்கோ நிறுவனம் உலகளாவிய போட்டிமுறை மூலம் ஐதராபாத்தைச் சேர்ந்த திருவாளர்கள் ஜி.வி.கே. குழுமத்தைத் தேர்வு செய்துள்ளது. இக்குழுமம், இந்தியாவில் பல்வகைக் கட்டமைப்புகள் சார்ந்த துறைகளில் சாலைகள், மின் உற்பத்தி நிலையங்கள் போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

இத்திட்டத்திற்காக நிலம் வாங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், தனி மின்சார நிலையம் அமைத்தல், பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற வகைகளில் ஏறத்தாழ 1,500 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் பத்தாண்டுகளுக்குள் இவ்வளாகத்தில் அமையவுள்ள தொழிற்சாலைகளால் ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்படுமென மதிப்பிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால், ஏறத்தாழ 50 ஆயிரம் பேருக்கும் மேலாக வேலைவாய்ப்புகள் கிடைக்கும். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 6 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் ஏற்படும். இத்திட்டத்தின் காரணமாக பெரம்பலூர், கடலூர், விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் வேலைவாய்ப்புகள் பெருகி, பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

2009–ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படவுள்ள இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 6.7.2007 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் டிட்கோ நிறுவனத்தின் சார்பில் அதன் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு.க. இராமசுந்தரம்,இ.ஆ.ப., ஜி.வி.கே. குழுமத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. ஜி.வி. கிருஷ்ணா ரெட்டி ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்ச்சியின்பொழுது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, தொழில் துறைச் செயலாளர் திரு. சக்தி காந்ததாஸ், இ.ஆ.ப., ஜி.வி.கே. குழுமத்தின் துணைத் தலைவர் திரு.சஞ்சய் ரெட்டி, நிருவாக இயக்குநர் திரு.சாம் பூபால் ஆகியோர் உடனிருந்தனர்.

✶



# தூத்துக்குடி - நெல்லை மாவட்டங்களில் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் டைட்டானியம் டை - ஆக்சைடு தொழிற்சாலை

டாடா ஸ்டீல் நிறுவனம் தமிழ்நாட்டின் தென்பகுதியில் உள்ள பின்தங்கிய மாவட்டங்களான தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் டைட்டானியம் டை – ஆக்சைடு (Titanium Di-oxide) தொழிற்சாலையை 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் அமைத்திட திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் சுரங்கப் பணி மற்றும் அதன் மூலம் கனிமங்களைப் பிரித்து எடுத்தல், சிந்தடிக் ரூட்டைல் (Synthetic Rutile) தயாரித்தல், உச்ச அளவில் மதிப்புக் கூட்டப்பட்ட டைட்டானியம் டை –ஆக்சைடு சாயப் பொருள் தயாரித்தல் முதலியவற்றை மேற்கொள்ளும். இத்திட்டம் ஏறத்தாழ 1,000 பேருக்கு நேரடியாகவும், 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் வழங்கும்; மேலும், வேளாண் அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த மறுசீரமைத்தல் பணி மூலம் ஏறத்தாழ10,000 பேருக்குத் தொடர் வாழ்க்கை வசதிகள் கிடைக்கவும் வழிவகுக்கும்.



டாடா ஸ்டீல் நிறுவனம், இத்திட்டத்திற்காக நிலம் வழங்கியோரின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கும்; மற்றும் அக்குடும்பத்திலுள்ளவர்கள் வேலைவாய்ப்பு களைப் பெறத்தக்க வகையில் அவர்களுக்குத் தகுந்த பயிற்சிகளையும் அளிக்கும். மேலும், டாடா ஸ்டீல் நிறுவனம் சுரங்கப் பணி முடிக்கப்பட்ட நிலங்களில் பணப் பயிர்களைப் பயிர்செய்யும் அளவிற்கு அவற்றைச் சீரமைத்து மேம்படுத்தி, அதன் மூலம் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்குத் தொடர் வாழ்க்கை வசதிகளும், வேலைவாய்ப்புகளும் கிடைக்க உதவும். டாடா ஸ்டீல் நிறுவனம் தங்களது டைட்டானியம் டை–ஆக்சைடு திட்டத்திற்காகக் கடல் நீரை நன்னீராக்கும் தொழிற்சாலை மற்றும் மின்தொழிற்சாலை ஆகியவற்றையும் நிறுவும்.

இத்திட்டம் மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்படுவதால் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும். மேலும், இத்திட்டம் இப்பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உதவும். தமிழக அரசு இத்திட்டத்திற்குத் தேவைப்படும் உதவிகளையும், சலுகைகளையும் அளிக்கும்.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 28.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்த ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச் செயலாளர், திரு.சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., டாடா ஸ்டீல் நிறுவனத்தின் சார்பில் அதன் நிருவாக இயக்குநர் திரு. பி. முத்துராமன் ஆகியோர் கையொப்ப மிட்டனர். இந்நிகழ்வின்போது, டாடா குழுமத்தின் தலைவர் திரு. ரத்தன் என். டாடா, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கே. ஞானதேசிகன், இ.ஆ.ப., புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் மற்றும் ஆணையர் திரு இ. தசரதன், இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர். ■



## மாண்புமிகு
# தமிழக முதலமைச்சர்
## அவர்களின்
# குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள் செய்தி

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

– என்றார் அய்யன் திருவள்ளுவர்.

எண், எழுத்து எனும் இரு கண்களையும் இழந்து கல்வி கற்கும் வயதில் குழந்தைத் தொழிலாளர்களாகச் சிறுவர்களும், சிறுமியர்களும் வேலைகளில் ஈடுபடுவதும், ஈடுபடுத்தப்படுவதும் கொடுமையாகும். இக்கொடுமையைக் களைந்திட ஆண்டுதோறும் ஜூன் திங்கள் 12 ஆம் நாள் "குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு நாள்" என உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகிறது.

தமிழகக் குழந்தைகள் அனைவரும் கல்விபெற வீதிதோறும் பள்ளிகள் அமைக்கப்பட்டு, இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவசப் பாடநூல்கள், முட்டையுடன் இலவசச் சத்துணவு, இலவச மருத்துவப் பரிசோதனைகள், இலவசப் பேருந்து பயணச் சலுகைகள், ஊக்க உதவித் தொகைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றன. இவற்றின் பயனாகப் பள்ளி செல்லாக் குழந்தைகள் எண்ணிக்கையும், குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கையும் தமிழகத்தில் பெரிதும் குறைந்துவிட்டன. எனினும், இது முற்றிலும் தடுக்கப்பட்டாக வேண்டும்: மனமாற்றமே இதற்கு மாமருந்தாகும்.



பெற்றோர் தொழில் புரிவது பெருமை, குழந்தைகள் தொழில் புரிவது சிறுமை; குழந்தைகள் வீட்டிற்கும், நாட்டிற்கும் செல்வங்கள் என ஒவ்வொரு பெற்றோரும் மனதளவில் உணர்ந்திட வேண்டும்; தங்கள் குழந்தைகளைத் தவறாமல் பள்ளிக்கு அனுப்பிட வேண்டும்.

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துதல் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம்; எனவே, குழந்தைகளை வேலைக்கு அமர்த்தமாட்டோம் எனத் தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மனதால் உணர்ந்து, உறுதியுடன் கடைப்பிடித்திட வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்தவரை குழந்தைகள் தொழில்களில் ஈடுபடும் போக்கைத் தடுப்பதில் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. இதில் பெற்றோர்கள், தொழில் உரிமையாளர்கள், அரசு அலுவலர்கள், அரசு சாரா நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழிற் சங்கங்கள் பொதுமக்கள் எனப் பலரும் மனமுவந்து அரசுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தைகள் அனைவரும்
கல்வி இன்பம் காணச் செய்வோம்!
குழந்தைத் தொழிலாளர் இல்லா மாநிலம்
தமிழகம் எனப்புகழ் குவிப்போம்!

❖ ❖ ❖



புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்த 2550ஆம் ஆண்டு கொண்டாட்ட நிறைவு விழா – 30.6.2007 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. விழாவுக்கு வருகைதந்த பெருமக்களையும், சான்றோர்களையும் வரவேற்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் உரையாற்றினார். வழக்குரைஞர் திருமதி. அ.அருள்மொழி, கவிக்கோ அப்துல் ரகுமான், பேராசிரியர் பெரியார் தாசன், இ.கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு.தா.பாண்டியன், முனைவர் ஔவை நடராஜன், சட்டமன்ற உறுப்பினர் திரு.கோ.க.மணி, சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.சுதர்சனம், நீதியரசர் பி.ஆர்.கோகுலகிருஷ்ணன் ஆகியோரும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி ஆகியோரும் சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையேற்றார்.

# திருவள்ளுவர் சிந்தனையும் புத்தரின் சிந்தனையும் ஒன்றுதான்







# புத்தபிரானின் புரட்சிகரமான கருத்துக்களை உயிர்ப்பித்து உலவவிடுவோம்!

30.6.2007 அன்று நடைபெற்ற
புத்தர் மகாபரி நிர்வாணம் அடைந்த 2550ஆம்
ஆண்டு நிறைவு கொண்டாட்ட விழாவிற்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்கள்
அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது :–

**து**ன்பங்கள் தொடர்வதற்கு; மனித உள்ளத்தில் ஆசைகள் படர்வதுதான் காரணம் என்பதை – ஊருக்கு உபதேசமாகக் கொள்ளாமல், செயலில் காட்டிய செம்மல் புத்தபிரான். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்தியத் திருநாட்டில் அன்பெனும் விதை நட்டு அனைத்து மக்களிடமும் சமத்துவ ஆல்பரப்பி பகுத்தறிவுப் புரட்சி செய்தவராவார். அந்தத் தருவின் விழுதுகளும், கிளைகளும் உலகில் பல நாடுகளில் பரவியுள்ள பெருமைக்குச் சொந்தக்காரர்கள் நாமென்று – ஆலின் அடிமரமாக ஆணிவேராக அவரது அறிவொளிக் கொள்கைகளை வாழ்க்கைத் தத்துவமாக அமைத்துக் கொள்வதிலே ஆறுதல் பெறுகிறோம்.

அந்த இனிய உணர்வை வெளிப்படுத்தி புத்தபிரானின் புரட்சிகரமான கருத்துக்களை உயிர்ப்பித்து உலவ விடுவதே இந்நாள் சூளுரையாக மேற்கொள்வோம்.

நமது பேராசிரியர் அழைப்பையேற்று இவ்விழாவில் கலந்து கொள்வதாக இருந்த எனக்கு; சற்றே உடல் நலிவு – அதனால் ஆர்வலர்களும், அவையோரும் பொறுத்தருள வேண்டுகிறேன்.






மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் தலைமை வகித்துப் பேசியபோது :

"ஆண்டுதோறும் நடைபெற வேண்டிய ஒருவரின் விழா, மனிதனின் வழிகாட்டியாக இருப்பவரின் ஒரு விழா, எப்போதாவது ஒருநாள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பவுத்தம் என்பது ஒரு மதம் இல்லை, மதம் என்றால் கண்டிப்பாக அதற்கு ஒரு கடவுள், மோட்சம், நரகம் வேண்டும். ஆனால் புத்தர், முதலில் கடவுளைப் பற்றி கவலைப்பட வேண்டாம், மனிதனைப் பற்றி கவலைப்படு என்று சொல்லியிருக்கிறார் என்று தந்தை பெரியாரே கூறியுள்ளார். புத்தருடைய கருத்து திராவிடத்தோடு தொடர்புடையது.

இன்றைய சூழ்நிலையில் இருப்பது போன்று மேல்ஜாதி, கீழ்ஜாதி, தீண்டாமைக் கொடுமை புத்தர் காலத்தில் இல்லை. ஆனால் அடிமட்டத்தில் அந்த எண்ணங்கள் இருந்தன. அதை எதிர்த்தவர் புத்தர்.

திருவள்ளுவர் சிந்தனையும் புத்தரின் சிந்தனையும் ஒன்றுதான். புத்தரைப் போன்று மகாமனிதனை உலகத்தில் எங்கும் கண்டதில்லை. அவரை உலகம் மறக்காது. புத்தர் உயர்ந்த உள்ளம் கொண்டவர். அவரைப் போல மனிதன் வாழ முயற்சிக்க வேண்டும்.

புத்தரின் மதம் நம்மிடம் இல்லை. கருத்து நம்மிடம் உள்ளது. புத்தர் துறவு பூண்டார் என்பது உண்மையல்ல. துறவு பூண்டார் என்பதை புத்தர் சில சூழ்நிலை காரணமாக நகரத்தைவிட்டு காட்டுப்பகுதிக்கு சென்று ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்து மக்களுக்கு அறிவுரைகளை வழங்க முற்பட்டார். தியானம் என்பது மதம் அல்ல, தியானத்திற்கு மூலமாக விளங்குபவர் புத்தர்தான்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், ஏராளமான பொதுமக்களும் புத்தபிக்குகளும் கலந்துகொண்டனர். நிறைவாக தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 10-ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்



தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசு தேர்வுத் துறை நடத்தும் 10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனை படைக்கும் மாணவ மாணவியரின் உயர் கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்கும் திட்டம் 1996ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டதாகும். அத்திட்டத்தின் கீழ், அண்மையில் வெளியிடப்பட்ட, 2007 மார்ச் திங்களில் நடைபெற்ற 10 ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு முடிவுகளின்படி, மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்றுச் சாதனைப் படைத்துள்ள 7 மாணவ, மாணவியரும் 9.6.2007 அன்று காலை தலைமைச் செயலகத்தில் தம்மைச் சந்தித்தபோது அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பாராட்டுகள் தெரிவித்து வாழ்த்துக்கள் கூறினார்.

முதலிடம் பெற்ற காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு புனிதமேரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி எஸ். அக்ஷயா, 500க்கு 490 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் முதல் இடம் பெற்றதற்கு பரிசாக 7,500/– ரூபாயும், நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி, இருதயகுளம், அமலி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி எஸ். ஜஸிமா சுலைஹா, திருவாரூர் மாவட்டம், பேரளம் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மாணவி செல்வி பி. சிவகாமசுந்தரி ஆகிய இருவரும் 500க்கு 489 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றமைக்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் 6,000 ரூபாயும், கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை, அமலா கான்வென்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி செல்வி ஆர். லம்ஷி, தூத்துக்குடி மாவட்டம், ஸ்பிக் நகர் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி ஏ. பால வித்யா, நாகை மாவட்டம், மயிலாடுதுறை திவான் பகதூர் டீ ரெங்கச்சாரியார் தேசிய மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி ஜே.ஆர்த்தி, கடலூர் மாவட்டம், கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி மாணவர் செல்வன் இ.கார்த்திகேயன் ஆகிய நால்வரும் 500க்கு 488 மதிப்பெண்கள் பெற்று, மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றமைக்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5,000 ரூபாய் எனப் பரிசுத் தொகைகள் வழங்கி, அம்மாணவ மாணவியரின் உயர்கல்விச் செலவு முழுவதையும், தமிழ்நாடு அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும், அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 10 ஆம் வகுப்புத் தேர்வுகளில் மட்டும் மாநில மாவட்ட அளவில் சாதனைகள் படைக்கும் ஏறத்தாழ 100 மாணவ, மாணவியர்கள் ஆண்டுதோறும் அரசின் செலவிலேயே படித்து முன்னேறும் அரியவாய்ப்புகள் கிடைக்கின்றன என்றும், இந்த ஆண்டில் அந்த வாய்ப்புகளைத் தங்களுக்கு வழங்கியமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் மாணவ மாணவியரும், அவர்களது பெற்றோரும் பெருமிதத்துடன் மனம் நெகிழ்ந்து நன்றி கூறினர். ✶



# ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்சம் நிதியுதவி



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 11.4.2007 அன்று சட்டமன்றக் கூட்டத் தொடரில் தமிழகத்திலுள்ள 561 பேரூராட்சிகளிலும் நான்காண்டு காலத்திற்குள் "அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்தார். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கேற்ப பணிகள் தொடங்கப்படவுள்ளன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், திட்டப் பணிகளை ஆய்வு செய்ய வருகை தந்தபோது தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சித் துறை பிரதிநிதிகளால், பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக தக்க நிதி ஒதுக்கீடு மற்றும் பணிகள் மேற்கொள்வதற்கான ஆணையினை வழங்கும்படி வேண்டிக் கொண்டதற்கிணங்க பொதுமக்களின் அத்தியாவசிய அடிப்படை வசதிகளை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் விதத்தில், "அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" உருவாக்கப்படும் என சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்துள்ளதற்கிணங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையின்படி குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளில் மக்களின் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதில் நிதிநிலை இடர்பாடுகளால் எந்தவொரு பெரிய அளவிலான அடிப்படை மற்றும் கட்டுமானப் பணிகள் எடுத்துக் கொள்ளாத நிலையினைப் போக்கிட அரசு புதிய முனைப்பாக இத்திட்டத்தினை பேரூராட்சிகளின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை அளித்து பட்டியல் தயாரிக்கப்பட்டு பணிகள் எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மக்களின் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளித்து குடிநீர் வசதி, சாலை மற்றும் பாலங்கள் அமைத்தல், தெருவிளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், சுயஉதவிக் குழுக்களுக்கு

பணிக்கூடம் அமைத்தல், அங்காடி வளாகம், சுகாதார வளாகம் அமைத்தல், படிப்பகம், பூங்கா அமைத்தல் மற்றும் உட்கட்டமைப்புப் பணிகளை செய்திட இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை மாவட்ட அளவில் முழுமையாக செயல்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரை குழு தலைவராகவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உறுப்பினர்–செயலாளராகவும், பிற துறை அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட திட்ட செயலாக்க கண்காணிப்புக் குழு அமைத்து திட்டம் செயல்படுத்தப் படும். இக்குழு இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவும், கண்காணிக்கவும், பிற திட்டங்களை ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2007–2008ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் ஒவ்வொரு ஆண்டும் 140 பேரூராட்சிகள் வீதம் பேரூராட்சிகளின் வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு குறைந்த வருமானம் உள்ள பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து தேர்வு செய்து, ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.50 இலட்சம் நிதியுதவியுடன் ஆண்டுக்கு ரூ.70 கோடி நிதியுதவியும், ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்தில் உள்ள 25 சதவிகித பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு, நான்கு ஆண்டு காலத்திற்குள் 561 பேரூராட்சிகளிலும் மொத்தமாக ரூ.280.50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு காஞ்சிபுரம் – 6, திருவள்ளூர் – 3, வேலூர் – 6, திருவண்ணாமலை – 3, தருமபுரி – 2, கிருஷ்ணகிரி – 2, சேலம் –8, நாமக்கல் –4, ஈரோடு– 14, கோயம்புத்தூர்– 13, நீலகிரி – 3, கடலூர் 4, விழுப்புரம் – 3, தஞ்சாவூர் – 6, நாகப்பட்டினம் – 2, திருவாரூர் –1, திருச்சி –4, பெரம்பலூர் – 2, புதுக்கோட்டை –2, திண்டுக்கல் – 6, கரூர் – 3, மதுரை – 3, தேனி – 5, இராமநாதபுரம் – 2, விருதுநகர் – 3, சிவகங்கை – 3, திருநெல்வேலி – 9, தூத்துக்குடி – 4, கன்னியாகுமரி – 14 ஆக மொத்தம் 140 பேரூராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

பேரூராட்சிகளில் அடிப்படை மற்றும் கட்டுமான வசதிகள், சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற தூய்மை பேணிடும் பணிகள் மற்றும் பேரூராட்சிகளில் பொதுமக்கள் தகவல் எளிதில் பெற்றிட கணினிமயமாக்கல் மற்றும் ஒருங்கிணைந்த வகையில் பேரூராட்சிகள் சமூகப் பொருளாதார வளர்ச்சி பெற்றிட, பல்வேறு வளர்ச்சித் திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுத்திட இத்திட்டம் வழிவகை செய்கிறது. ✶

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் ஆணை

### சிக்குன் குனியா - தடுப்பு நடவடிக்கை
### 3,850 களப் பணியாளர்கள் நியமனம்

கேரள மாநிலத்தில் பரவலாக ''சிக்குன் குனியா'' நோய் பரவியுள்ள நிலையில், தமிழகத்தில் அந்த நோய் வந்துவிடக்கூடாது என்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 11.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ஆகியோருடன் விவாதித்தார்.

துறையின் அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் முதல் அமைச்சர் அவர்களிடம் தமிழக அரசின் சார்பில் ''சிக்குன் குனியா'' நோய் வராமல் தடுப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்கள். மக்கள் இன்னும் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று எச்சரிக்கை செய்திடும் வகையில் தகுந்த விளம்பரங்களை உடனடியாகச் செய்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

நடவடிக்கைகளுக்குப் பிறகும், அந்த நோய் தமிழகத்திற்கு வந்து விட்டால், அப்போது உடனடியாக அந்த நோயைத் தடுத்து நிறுத்திட தேவையான மருந்துகளை முன்கூட்டியே வாங்கி தயாராக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார்.

இதன் தொடர்ச்சியாக, ''சிக்குன் குனியா'' நோய் நிரந்தரமாக தமிழகத்திற்குள் வராத அளவிற்கு தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்காக கிராமங்களில் கொசுக்களை அறவே ஒழிக்க வேண்டி 3,850 தற்காலிக களப் பணியாளர்களை நியமித்திட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இதற்கான பணிகளை நிறைவேற்றிட அரசு சார்பில் 7 கோடியே 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

✶ ✶ ✶



# மகளிர் சுயஉதவிக்குழு உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய சென்னையில் ரூ.5 கோடியில் விற்பனை மையம்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு



சென்னை மாநகராட்சி சார்பில் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு சுழல்நிதி வழங்கும் விழா சென்னை வள்ளுவர் கோட்டத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 13.06.2007 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 6,737 சுயஉதவிக் குழுவினருக்கு சுழற்சி நிதியாக தலா ரூ.1,000 வீதம் வழங்கிப் பேசுகையில், ''மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1989ஆம்



ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக சுயஉதவிக்குழுக்களை தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை நிதியத்தின் உதவியுடன் தொடங்கினார்கள். இத்திட்டம் பரந்து, விரிந்து வியக்கத்தக்க அளவில் வளர்ச்சி பெற்றுள்ளது. சென்ற ஆட்சியாளர்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களை அரசியலுக்காக, தேர்தலுக்காகப் பயன்படுத்தினார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் சுயஉதவிக்குழுவினர் சுயமாக சிந்தித்து, பொருளாதாரத்தில் உயர வழிவகை கண்டார்கள். தமிழகத்தைப் பொருத்தவரை 30.04.2006ன்படி 3 இலட்சத்து 38 ஆயிரத்து 430 சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. அதில் கிராமப்புற குழுக்கள் 2 இலட்சத்து 45 ஆயிரத்து 38 எனவும், நகர்ப்புற குழுக்கள் 93 ஆயிரத்து 392 ஆகும். மொத்தம் 54 இலட்சத்து 42 ஆயிரத்து 303 நபர்கள் குழு உறுப்பினர்களாக உள்ளனர். இதில் கிராமப்புற உறுப்பினர்கள் 39 இலட்சத்து 76 ஆயிரத்து 521 ஆகவும், நகர்ப்புற உறுப்பினர்கள் 14 இலட்சத்து 65 ஆயிரத்து 782 ஆக உள்ளனர். இவர்களின் மொத்த சேமிப்புத் தொகை ரூபாய் 1,410 கோடியே 40 இலட்சம் ஆகும்.

**சுயஉதவிக்குழு கல்வித்திட்டம்**

கழக ஆட்சி ஏற்பட்டதற்கு முன்னதாக சுயஉதவிக் குழுக்கள் சமூக நலத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தன. தலைவர் கலைஞர் அவர்கள் இக்குழுக்களை ஒருங்கிணைந்து சிறப்புடன் செயல்படுத்துவதற்காக ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுத்த ஆணையிட்டார்கள். இக்குழுக்கள் சமுதாயத்தில் உரிய அங்கீகாரம் பெறவும், அரசு அலுவலகங்கள் மற்றும் வங்கிகளை எளிதாக அணுகிப் பயன் பெறவும், அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக்குழுக்களுக்கும் அரசு செலவில் அடையாள அட்டை வழங்க முடிவெடுக்கப்பட்டு நடந்து முடிந்த



சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது. இந்த அடையாள அட்டையில் குழு உறுப்பினர்கள் பற்றிய விவரங்கள், குழுவின் சேமிப்பு, கடன் மற்றும் இதர தகவல்களும் இடம் பெறும். இப்பணிக்காக இந்த ஆண்டு 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் கல்வி ஒரு குடும்பத்திற்கே அளிக்கப்படும் கல்வி ஆகும். ஆகவே, சுய உதவிக்குழு பெண்களுக்கு அனைவருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்துடன் இணைத்து அடிப்படை கல்வி அளிக்க ஒரு முன்னோடித் திட்டத்தை முதல் கட்டமாக 1,000 ஊராட்சிகளில் இந்த ஆண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் சுயஉதவிக்குழு கல்வித் திட்டம் என்று அழைக்கப்படும். இத்திட்டத்திற்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பயிற்சித்தொகை மீண்டும் உயர்வு**

குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கம் சுய உதவிக்குழுவின் கோட்பாடுகளை அனைத்து உறுப்பினர்களும் அறிந்து கொள்வதுடன் அவர்களிடையே மறைந்துள்ள திறமையை வெளிக் கொணரவும் வாய்ப்புகள் உண்டாக்குவதாகும். கழக அரசால் பயிற்சிக்கான தொகை ரூபாய் 45 ஏற்கெனவே வழங்கப்பட்டது. இந்தத் தொகை சென்ற ஆட்சிக் காலத்தில் வெறும் ரூபாய் 7.50 என குறைத்து வழங்கப்பட்டது. 2006–2007 ஆம் ஆண்டு முதல்வர் கலைஞர் அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் பயிற்சிக்கு வருகை தரும் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித் தொகையை ரூபாய் 7.50லிருந்து ரூபாய் 45.00 ஆக மீண்டும் உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். சுய உதவிக்குழு உறுப்பினர்களின் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களிடையே ஒற்றுமையை வலுப்படுத்தவும், சுய உதவிக்குழு கூட்டமைப்பு களுக்கிடையே சமத்துவப் பொங்கல் திருநாளில் பல்வேறு குழுப்போட்டிகள் நடத்த அறிவுறுத்தப் பட்டுள்ளது. வட்டார அளவிலும், பின்னர் மாவட்ட அளவிலும் போட்டிகள் நடத்தி, வெற்றி பெறும் கூட்டமைப்புகளுக்கு ரொக்கப் பரிசுகளும், விருதுகளும் வழங்கப்படும். இதற்கு 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

**6,737 பேர்களுக்கு தலா ரூ.1000**

சென்னை மாநகராட்சி மூலம் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டதின் கீழ் இதுவரை தனி நபர் கடன் 112 நபர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 61 ஆயிரம், 1,260 நபர்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 14 இலட்சத்து 99 ஆயிரமும் குழு கடனாக 116 நபர்களுக்கு ரூபாய் 5 இலட்சத்து 65 ஆயிரமும், பயிற்சித் தொகையாக 1,225 நபர்களுக்கு ரூபாய் 22 இலட்சத்து 5 ஆயிரம் என மொத்தம் 2,713 நபர்களுக்கு சுவர்ண ஜெயந்தி திட்டத்திலிருந்து ரூபாய் 46 இலட்சத்து 30 ஆயிரத்து 209 வழங்கப்பட்டுள்ளது. இன்றைய தினம் இந்த விழாவில் சுவர்ண ஜெயந்தி நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஊக்கப் படுத்துவதற்காக 6,737 மகளிர் சுய உதவிக்கு உறுப்பினர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 67.37 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. தலைவர் கலைஞர் அவர்கள் மகளிருக்காக சொத்தில் சம பங்கு சட்ட உரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடும், மகளிருக்கு திருமண உதவித் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி உள்ளார்கள். தேர்தல் அறிக்கையில் அறிவித்த பல திட்டங்களை ஆட்சிக்கு வந்தவுடன் நிறைவேற்றி சாதனை படைத்து உள்ளது கழக அரசு. அனைவருக்கும் இலவச கலர் டி.வி. வழங்கும் திட்டம் படிப்படியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரேஷன் அட்டை உள்ள அனைவருக்கும் இலவச கலர் டி.வி. வழங்கப்படும்.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் சுய உதவிக்குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநில அளவிலான விற்பனை மையம் ரூபாய் 5 கோடி செலவில் விரைவில் அமைக்கப்பட உள்ளது". என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன், ஆணையாளர் திரு.ராஜேஷ் லக்கானி இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.

**— ச. செல்வராஜ்**
*மக்கள் தொடர்பு அலுவலர்,*
*சென்னை மாநகராட்சி*

# ஓராண்டில் ரூ.280 கோடியில் தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் நிறைவேற்றம்



தமிழ்நாடு மாநில வேலை உறுதி மன்றத்தின் இரண்டாவது கூட்டம் 11.6.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலர், நிதித்துறை செயலாளர், ஊரக வளர்ச்சித் துறைச் செயலர், ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர், பாராளுமன்ற உறப்பினர் திரு.என்.எஸ்.வி. சித்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி, திரு. சுந்தரம், ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



கடந்த 25.11.2006 அன்று நடைபெற்ற முதல் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மீதான மேல்நடவடிக்கை குறித்தும், தமிழ்நாடு மாநில வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகள், வழங்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள், திட்ட நிதி பயன்பாடு ஆகியவை குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.



கடந்த ஆட்சியில் இந்தத் திட்டத்தின் கீழ் 6 மாவட்டங்களில் சுமார் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில் 13.5.2006 க்குப் பிறகு இந்த ஓராண்டு காலத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 280 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது என்றும், மொத்தம் 3 கோடியே 45 இலட்சத்து 11 ஆயிரம் மனித வேலை நாட்கள் இந்த ஓராண்டு காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்புப் பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூபாய் 80 வழங்குவதற்கு ஏதுவாக, இத்திட்டத்திற்கென தனியான விலைப்பட்டியலை இந்த அரசு அறிவித்துள்ளது. இதனால் இத்திட்டத்தின் கீழ் தற்போது ஊதியமாக ஒரு நபருக்கு ரூபாய் 80 வீதம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார் என்றும், ஏற்கெனவே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை மாவட்டங்களோடு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு கூடுதலாக தஞ்சாவூர், கரூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்த மத்திய அரசு அனுமதித்துள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

## சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 28,700 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடனுதவி

பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் நடப்பு ஆண்டான 2007–08இல் 28,700 நபர்களுக்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி தொழில் நிறுவனம் அமைக்க தனி நபருக்கு அதிகபட்சம் ரூ.5 இலட்சம் வரையில் கடன் வழங்கப்படும். வியாபாரம் மற்றும் சேவை சார்ந்த நிறுவனம் அமைக்க தனிநபர் முன் வந்தால் அதிகபட்சமாக ரூ.2 இலட்சம் வரையிலும், கூட்டாக 5 நபர்கள் சேர்ந்து திட்ட மதிப்பீடு ரூ.10 இலட்சம் வரையிலான தொழில் வியாபார நிறுவனம் அமைக்கவும், வங்கிகள் மூலம் அதிகபட்சம் ஒரு நபருக்கு ரூ.12,500 வீதம் மானியத்துடன் கூடிய கடன் பெற்று சுயமாக தொழில் செய்யலாம். இத்திட்டத்தில் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் கடனுதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. குழு ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் வரையிலும், குழு உறுப்பினருக்கு ரூ.15,000 வரையிலும் மானியம் வழங்கப்படும். குழுமத் திட்டத் தொழில்களுக்கு தனி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

**குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சம் வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்**

கடனுதவி பெற வயது 18 முதல் 35க்குள் இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் / பழங்குடியினர், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் மற்றும் பெண்களுக்கு உச்சகட்ட வயது வரம்பு 45 ஆக தளர்த்தப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். 8 ஆம் வகுப்பிற்கு மேல் கல்வித் தகுதி உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1,00,000க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தொடர்புடைய மாவட்டத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்து வருபவராக இருத்தல் வேண்டும்.

எனவே தகுதியுள்ள நபர்கள் தக்க சான்றுகளுடன் அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட தொழில் மையத்தை அணுகி, இலவசமாக வழங்கப்படும் விண்ணப்பத்தை பெற்று பயனடையுமாறு தமிழ்நாடு அரசு தொழில் வணிகத் துறை ஆணையர் திரு.ம.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ரூ.723 கோடி செலவில் 8,200 கி.மீ. சாலைகளைப் புதுப்பிக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை



மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைப் பணிகளின் முன்னேற்றம் குறித்து 11.07.2007 அன்று மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், துறைச் செயலர் மற்றும் பொறியாளர்களுடன் ஆய்வு செய்தார். நடைபெற்று வரும் சாலைப் பணிகள் மற்றும் புதிதாக ஒப்புதல் தரப்பட்டுள்ள 6,530 கிலோமீட்டர் நீள சாலைப் பணிகளையும், 12 மேம்பாலங்கள், 175 பெரிய மற்றும் சிறிய பிற பாலங்களையும் துரிதப்படுத்தி முடிப்பதென்றும்; மேலும், நடப்பாண்டில் அரசு திட்டப் பணிகளுக்கு ஒதுக்கியுள்ள ரூ.2,653 கோடியை முழுமையாகப் பயன்படுத்தி சாலை மேம்பாட்டுப் பணிகளை முடிப்பதென்றும்;

சாலைகளைப் பராமரிக்கும் பணிகளுக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.723 கோடியைப் பயன்படுத்தி 8,200 கிலோமீட்டர் சாலைகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், தமிழகத்திலுள்ள மாநிலச் சாலைகள் அனைத்தையும் இரு வழித்தடங்களாக அகலப் படுத்துவது என்ற அரசின் கொள்கை அடிப்படையில் கடந்த ஓராண்டில் 1,518 கிலோமீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல, சுமார் 1,000 கிலோ மீட்டர் மாநிலச் சாலைகளை அகலப்படுத்தவும், 925 கிலோ மீட்டர் மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் 1,367 கிலோ மீட்டர் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்தவும், 42 புதிய பாலங்களைக் கட்டுவதற்கும், ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.729 கோடி அனுமதித்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை வழங்கினார்.

* * *

## தமிழரசில் பணியாற்றிய கவிஞர். சாமிபழனியப்பன் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்



புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மாணவரும், தமிழரசு பத்திரிகையில் ஏற்கெனவே பணியாற்றி ஓய்வுபெற்றவருமான, 82 வயதுடைய கவிஞர். சாமிபழனியப்பன், அவர்கள் இருதய கோளாறு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருவதாகவும், அவருக்குச் சிகிச்சை தொடர வேண்டி உள்ளதால், தங்கள் குடும்பத்தின் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு நிதியுதவி வழங்குமாறு அவரது துணைவியார் அரசுக்கு அளித்துள்ள கோரிக்கை விண்ணப்பித்தினை மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து, ஒரு இலட்ச ரூபாய் நிதியுதவியை, கவிஞர். சாமிபழனியப்பன் அவர்களின் மருத்துவ சிகிச்சைக்காக அவரது மனைவி திருமதி. கமலா சாமிபழனியப்பன் மற்றும் அவரது மகள் திருமதி. நாகம்மை ஆகியோரிடம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் 29.6.2007 அன்று வழங்கினார்.

* * *



# தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் ஓராண்டில் ரூ.280 கோடியில் 3,548 பணிகள் நிறைவேற்றம்

### மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்



தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களின் நிறைவேற்றத்தை கண்காணித்து ஆய்வு செய்திட அமைக்கப் பட்டுள்ள மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் இரண்டாவது கூட்டம் 15.6.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு.பெல்லார்மின், திரு.அப்பாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.கோ.க.மணி, திரு.எம்.அப்பாவு, திரு. வை. சிவபுண்ணியம், திரு. வீ. மாரிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, திரு. அலாவுதீன், இ.ஆ.ப., செயலர், நெடுஞ்சாலைத் துறை, திரு.சந்திர மௌலி, இ.ஆ.ப., செயலர் (பொறுப்பு), திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில திட்டக் குழு, திரு. நவ்நீத்,இ.ஆ.ப., சிறப்புச் செயலர், நிதித்துறை, திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., திரு. ஜதிந்திரநாத் ஸ்வய்ன், இ.ஆ.ப., திரு. தியாகராஜன், இ.ஆ.ப., திரு.முத்துசாமி,இ.ஆ.ப., திரு.சிவசங்கரன், இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கடந்த 31.12.2006 அன்று நடைபெற்ற முதலாவது கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரத்தை ஊரக வளர்ச்சித்துறை செயலர் அவர்கள் விளக்கினார். இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய வேலை உறுதித் திட்டம், பொன்விழா கிராம

சுயவேலை வாய்ப்புத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், முழு சுகாதார திட்டம் ஆகிய திட்டங்களின் நிதிப் பயன்பாடு, பணிகள் நிறைவேற்ற நிலை குறித்து தனித்தனியாக ஆய்வு செய்யப்பட்டது.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தை தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுத்துகிறது என்றும், இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வீட்டிற்கும் நிர்ணயிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை கேட்டுக் கொள்ள ஒருமனதாக இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் முந்தைய அரசால் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில் கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 5.6.2007 வரை ரூபாய் 280 கோடி செலவிடப்பட்டு 3,548 பணிகள் நிறைவேற்றப்பட்டு அதன் மூலம் கிராமப்புற பகுதிகளில் மொத்தம் 3 கோடியே 45 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப் பட்டுள்ளன என்பதும், குறைந்தபட்ச ஊதியமாக ரூபாய் 80 வழங்கிட தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கென தனியாக விலைப்பட்டியல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது இக்கூட்டத்தில் பாராட்டப்பட்டது.

திரு.கோ.க.மணி அவர்கள் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்காக மாவட்டங்களைத் தேர்வு செய்யும்போது மாநில அரசின் கருத்தினை மத்திய அரசு பெற்று தேர்வு செய்திட வேண்டும் என்றும், இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளைப் பொறுத்து கூடுதலாக பணிகளைச் சேர்த்திட அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங் களிலும் செயல்படுத்திட வேண்டும் என்று தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுவித்தார். எனினும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் சில பகுதிகளில் விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது என்பதையும் அரசு கவனத்தில் கொண்டுள்ளது என்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்திட கூடுதலாக ஏற்பாடுகள் தேவைப்படுகிறது என்றும், இதற்கென தனியாக செயல் திட்டம் வகுக்கப்பட்டு அதன்படி "சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்கள் விற்பனை விழா"க்கள் தற்போது தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சாலைப் பணிகளின் தரம் தேசிய கண்காணிப்புக் குழுவினரால் பாராட்டப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்கள் தெரிவித்தார். முழு சுகாதார இயக்கத்தின் மூலம் கட்டப்படும் தனிநபர் இல்ல கழிப்பறைகளுக்கான மதிப்பீடு தற்போது 1,500 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கழிப்பறைகள் மேலும் தரமாக கட்டப்படுவதற்கு இதனை குறைந்தபட்சம் 5,000 ரூபாயாக மாற்ற கேட்டுக் கொள்வது தொடர்பாக விவாதிக்கப் பட்டது.

பிற மாநிலங்களோடு ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் திரு.அப்பாத்துரை அவர்கள் தெரிவித்தார். பணிகளின் முன்னேற்றம் திருப்திகரமாக உள்ளது என்று ஒரு மனதாக கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அனைத்து வளர்ச்சிப் பணிகளின் நிறைவேற்றமும் முழுமையாக கண்காணிக்கப் படுவதாகவும், அளவீடுகள் செய்யப்பட்டு, புகைப்படங்கள் எடுக்கப்பட்டு திட்டப் பணிகளின் நிறைவேற்றும் உரிய முறையில் கண்காணிக்கப்படுவதாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலர் அவர்கள் தெரிவித்தார்.



# 91,576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 1,01,623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை



நிலமற்ற ஏழை விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு நான்காவது கட்டமாக இலவச நிலம் வழங்குகின்ற விழாவும், தகவல் தொழில் நுட்பப் பூங்கா அடிக்கல் நாட்டுகின்ற விழாவும் இணைந்து நடைபெறுகின்ற இந்த மகத்தான நிகழ்ச்சியிலே உங்களையெல்லாம் காணும் பெரும் வாய்ப்பு பெற்றமைக்காக மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இங்கே உரையாற்றிய நம்முடைய தோழமைக் கட்சிகளின் நண்பர்களும், தி.மு. கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும், சட்டப்பேரவை, நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்று நடைபெறுகின்ற இந்த விழாவின் சிறப்பை மாத்திரமல்ல, இந்த விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற என்னுடைய சிறப்புக்களையும், பெருமைகளையும் பலவாறு பெருக்கி உரைத்திருக்கிறார்கள். பெருக்கி உரைத்திருக்கிறார்கள் என்றால், இருப்பதை மேலும் பெருக்கி, உங்களிடத்திலே பேசியிருக்கிறார்கள் என்ற பொருளிலே தான் குறிப்பிடுகிறேன். அவை அடக்கம் என ஒன்று உண்டு. அந்த அவை அடக்கம் காரணமாக அல்ல. உண்மையிலேயே சொல்லுகின்றேன், இவ்வளவு சிறப்புக்கும் பெருமைக்கும் உரியவன் தனி ஒரு கருணாநிதி அல்ல என்பதையும், என்னுடைய வலிமை, என்னுடைய ஆற்றல், என்னுடைய திறமை, என்னுடைய வாய்மை, என்னுடைய செயல் என்று ஒன்று சிறப்புடையதாக அமையுமேயானால், அந்தச் சிறப்புக்கெல்லாம் காரணம், என்னை இங்கே பாராட்டிப் பேசியவர்கள் உள்ளிட்ட, எதிரே அமர்ந்திருக்கின்ற தமிழ்ப்பெருங்குடி மக்களாகிய நீங்கள் தான் என்பதை இத்தனை புகழுரைகளும் உங்களுடைய பாதார



> **24 ஆயிரத்து 774 பேர் ஆதிதிராவிட மக்கள் என்பது எனக்கு அகமகிழ்ச்சியை அளிக்கின்ற ஒரு செய்தியாகும். 2 ஆயிரத்து 89 பேர் மலைவாழ் பழங்குடிமக்கள், 28 ஆயிரத்து 880 பேர் பிற்படுத்தப்பட்ட மக்கள், 32 ஆயிரத்து 48 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். 3 ஆயிரத்து 785 பேர் இதர வகுப்பினர் – ஆகமொத்தம் 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த அரசு இந்த ஓராண்டு காலத்திலே நிலத்தை இலவசமாக வழங்கியிருக்கிறது.**

விந்தங்களுக்குச் சொந்தம் என்பதையும் நான் இங்கே மிகுந்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நடைபெறுகின்ற இந்த விழா – இன்றைய விழா – என்னென்ன உதவிகளை மக்களுக்கு அளிக்கின்ற விழாவாக அமைந்திருக்கின்றது என்பதை எண்ணிப் பார்த்தாலே இந்த அரசு யாரால், யாருக்காக அமைக்கப்பட்ட அரசு என்பதை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

33 கோடியே 18 இலட்ச ரூபாய் மதிப்புடைய 107 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள், 26 பொதுப்பணித் துறைக் கட்டடங்கள் 9 பள்ளிக் கட்டடங்கள், 894 ஊரக வளர்ச்சித் துறை பணிகள் உட்பட 1,141 பணிகள் நிறைவேற்றப்பட்டு அவைகள் இன்றைக்கு திறந்து வைக்கப்படுகின்றன.



427 கோடியே 8 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், தகவல் தொழில்நுட்பப் பூங்கா, 64 வீட்டுவசதி வாரியத் திட்டங்கள், 166 குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள், 37 குடிநீர் வடிகால் வாரியப் பணிகள், 5,475 ஊரக வளர்ச்சித் துறை பணிகள் உட்பட 5,831 பணிகளுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன.

9 கோடியே 81 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் ஒரு இலட்சத்து 37 ஆயிரத்து 461 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன.

ஆக மொத்தம் 470 கோடியே 7 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 44 ஆயிரத்து 433 பணிகள் இன்றைய விழா நிகழ்ச்சியின் மூலம் நெல்லை மாவட்டத்தில் செயலாக்கம் பெறுகின்றன.

இங்கே உரையாற்றிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். தி.மு. கழகம் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் திருநெல்வேலி சீமைக்கு பல பெரிய திட்டங்களை அறிவித்து நிறைவேற்றி வந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய ஆசை அல்லது அவர்களுடைய எதிர்பார்ப்பு அத்துடன் முடிந்து விடவில்லை என்பதற்கு அடையாளமாகத் தான் நாடாளுமன்ற உறுப்பினர் பேசினாலும், மாநகரத்து மேயர் பேசினாலும் ஒரு கோரிக்கையை வைத்துவிட்டுத்தான் தங்கள் பேச்சை முடித்திருக்கின்றார்கள். நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு பிர்காவை தன்னுடைய மாவட்டத்தோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். நம்முடைய மேயர் ஏ.எல்.எஸ். அவர்கள் செல்லப் பாண்டியன் சிலைக்குப் பக்கத்திலே உள்ள அந்தப் பகுதியில் ஒரு மேம்பாலத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், நம்முடைய சட்டப்பேரவைத் தலைவரிடத்திலும் பேசும்போது சொன்னார்கள். அதற்கான கோரிக்கை வைக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அது பற்றி விவாதிப்பதாக குறிப்பிட்டு விரைவிலே ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார் என்றும், பொறியாளர்கள் இந்தத் திட்டத்தைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்றும் என்னிடம் ஒரு பட்டியலைக் காண்பித்தார்கள்.

### செல்லப்பாண்டியன் பெயரில் மேம்பாலம்

18 கோடி ரூபாய் செலவில் அந்தப் பாலம் அமைப்பதற்கு தொகை வேண்டும், நிதி வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நிதியை இந்த "நிதி"யிடத்திலே எதிர்பார்க்கிறார்களா? அல்லது அரசாங்க "நிதி"யிலேயிருந்து எதிர்பார்க்கிறார்களா என்று தெரியவில்லை. யாரிடத்திலே எதிர்பார்த்தாலும் – நான் இப்போது ஐந்தாவது முறை முதலமைச்சராக இருக்கும்போது முதல் முறையாக நெல்லைக்கு வந்திருக்கின்ற நேரத்தில் இங்கே முதல் முதலாக மேயராக ஆகியிருக்கின்ற என்னுடைய அருமைத் தம்பி ஏ.எல்.சுப்பிரமணியத்தின் வேண்டுகோளை நிறைவேற்றினால் தான் நன்றாக இருக்கும், பொருத்தமாகக் கூட இருக்கும். அவர் கேட்டு பலவற்றை, பல முறை நான் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு இந்தக் கோரிக்கையையாவது நிறைவேற்றினால் அவர் மனம் சாந்தியடையும் என்று சொல்ல மாட்டேன். அவர் மனம் திருப்தியடையும் என்ற எண்ணத்தில் நான் அவருக்கும் சொல்லிக் கொள்கிறேன். நெல்லை மாவட்ட மக்களுக்கும், நெல்லை நகரத்திலே வாழுகின்ற மக்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். அந்த மேம்பாலம் நிச்சயமாக அமைக்கப்படும் அதற்கான ரூபாய் பதினெட்டு கோடியும், அரசின் சார்பில் ஒதுக்கப்படும், அது "செல்லப்பாண்டியன்" சிலைக்கு அருகிலே அமைய இருக்கின்ற மேம்பாலம் என்பதால், செல்லப்பாண்டியன் ஒரு காலத்தில் எனக்கு சபாநாயகராக இருந்தார் என்ற அந்த நினைவோடு, என்னுடைய ஐம்பதாண்டு கால சட்டமன்ற வாழ்வில் வந்துபோன சபாநாயகர்களில் அவரும் ஒருவர் என்பதால், அவர் வந்து போனவர் என்று சொல்ல மாட்டேன். அவர் எங்களுடைய சிந்தையிலே நிறைந்த சபாநாயகர் – அந்தச் செல்லப்பாண்டியனின் பெயரால், அந்த மேம்பாலம் அழைக்கப்படும் என்பதையும் – அந்தப் பாலத்திற்கு "செல்லப்பாண்டியன் மேம்பாலம்" என்ற பெயரையும் சூட்டி. அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை தம்பி மேயர் ஏ.எல்.எஸ். அவர்களுக்கு நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### ஓயாமல் உழைத்துக் கொண்டே இருப்பேன்

அதைப் போல இங்கே எழுப்பப்பட்ட கோரிக்கைகள் எதுவானாலும், அவைகளை நிறைவேற்றித் தருகின்ற கடமை இந்த அரசுக்கு உண்டு. அந்தக் கடமையை உணர்ந்த காரணத்தினால் தான் நான் நம்முடைய அருமைத் தம்பியும், காங்கிரஸ் கட்சியினுடைய வீறுகொண்ட பேச்சாளர்களிலே ஒருவருமான பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, நேற்றைக்கு டெல்லி, இன்றைக்கு நெல்லை என்ற முறையிலே என்னுடைய பயணத்தை அமைத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் – நாளைக்கு சென்னை, நாளை மறுநாள் எங்கோ என்று சொல்ல முடியாத அளவிற்கு என்னுடைய சுற்றுப் பயணத்தை நான் வகுத்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், நான் எங்கு சென்றாலும் என்ன செய்தாலும் தமிழர்களுக்காக, தமிழர்களுடைய மத்தியில் இருந்து கொண்டு, அவர்களுக்கான பணிகளை நிறைவேற்றுவேன் என்பதற்கு அடையாளமாகத் தான் இப்படிச் சுற்றிக் கொண்டிருக்கிறேன்.

நான் என்னுடைய வாழ்க்கையை குறிப்பாக பொது வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை என்னோடு இருக்கின்ற நண்பர்கள் அறிவார்கள். என்னுடைய பொதுவாழ்க்கை என்பது ஏதோ ஒரு பகிரங்கமான விளம்பர வெளிச்சத்திற்காக அமைத்துக் கொள்ளப்பட்டதல்ல. என்னை நானே அர்ப்பணித்துக் கொள்வதற்காக அமைக்கப்பட்ட வாழ்க்கைக்கு பெயர் தான், கருணாநிதியின் பொது வாழ்க்கை என்று பெயர். அந்தப் பொது வாழ்க்கையிலேயிருந்து என்னை நான் என்றைக்கும் விடுவித்துக் கொள்ள விரும்பவில்லை. ஒருவேளை இயற்கை வேண்டுமானால் என்னை பொது வாழ்க்கையிலிருந்து விடுவிக்கலாமே தவிர இந்த மக்களுடைய பற்றும், பாசமும், மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்று எடுத்துக் கொண்ட உறுதியும் என் நெஞ்சில், என் ரத்தத்தில் ஊறியிருக்கின்ற வரையில் நான் ஓயாமல் இந்த மக்களுக்காக உழைத்துக் கொண்டே தான் இருப்பேன்.

இன்றைக்கு பல உதவிகள் வழங்கப்படுகின்றன. ஏழை விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதிகளின்படி, குறைந்தபட்சம் இரண்டு ஏக்கராவிற்குக் குறையாமல், இலவசமாக நிலம் வழங்கப்படும் என்று அறிவித்த அந்த அறிவிப்பின்படி இது வரையிலே நான்கு கட்டங்களிலும் சேர்த்து, 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மொத்தம் 1 இலட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த நான்கு கட்டங்களிலும் இலவச நிலம் பெற்றவர்களில்,

24 ஆயிரத்து 774 பேர் ஆதிதிராவிட மக்கள் என்பது எனக்கு அகமகிழ்ச்சியை அளிக்கின்ற ஒரு செய்தியாகும். 2 ஆயிரத்து 89 பேர் மலைவாழ் பழங்குடிமக்கள். 28 ஆயிரத்து 880 பேர் பிற்படுத்தப்பட்ட மக்கள். 32 ஆயிரத்து 48 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள். 3 ஆயிரத்து 785 பேர் இதர வகுப்பினர் – ஆகமொத்தம் 91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த அரசு இந்த ஓராண்டு காலத்திலே நிலத்தை இலவசமாக வழங்கியிருக்கிறது என்பது அடுத்தடுத்து வழங்கப் படவிருக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டு, படிப்படியாக அந்தப் பணி நடைபெறும் என்ற உறுதியை இந்த மக்கள் கடலிலே நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.



தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெறுகின்ற விழாக்களில் நமது மத்திய, மாநில அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு நான் எப்படி இங்கே கலந்துகொண்டு இன்றைக்கு நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்குகின்றேனோ, அதுபோல தமிழகம் முழுவதும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும், சில இடங்களில் மத்திய அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு இந்த நிகழ்ச்சியிலே நிலம் வழங்குகின்ற, மற்றும் மக்களுக்கு பல உதவிகளை வழங்குகின்ற அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

### நீளும் சாதனைப் பட்டியல்

இந்தப் பணி மாதந்தோறும் நடைபெறும், அதற்கான தேதிகள் எவையெவை என்பதை நீங்கள் அறிவீர்கள். செப்டம்பர் 15 – அண்ணா பிறந்த நாள், செப்டம்பர் 17 – பெரியார் பிறந்த நாள், அக்டோபர் 2 – காந்தி அடிகள் பிறந்த நாள், ஜூலை 15 – பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் என்று இப்படிப்பட்ட நாட்களையெல்லாம் நாங்கள் புனித நாட்களாக கருதி – அதன் அடையாளமாக ஏழையெளிய மக்களுக்கு எதையெதை செய்ய வேண்டுமோ அந்த நல்ல காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கின்றது, அதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்போம், நெல்லைக்கு செய்யப்பட்டிருக்கின்ற காரியங்கள் இங்கே கருப்பசாமிபாண்டியன் அவர்களாலும், பீட்டர் அல்போன்ஸ் அவர்களாலும், ஆவுடையப்பன் அவர்களாலும், இங்கே பட்டியலிட்டுக் காட்டப்பட்டது. பட்டியல் நீளும், இந்த அரசு தொடரும் வரையில் அந்தப் பட்டியல் நீளும். அந்தப் பட்டியலை படிக்க முடியாத அளவிற்கு உங்களுக்கு நேரம் இல்லாத அளவிற்கு பெரும் பட்டியலை தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு – எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்ற மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு நாங்கள் பாடுபடுவோம், பணியாற்றுவோம். இந்தப் பணியை பழிப்போர் உண்டு, குறை கூறுவோர் உண்டு, வசைபாடுவோர் உண்டு, வசையை இசையாக எடுத்துக் கொள்ளக்கூடிய மனப்பக்குவமும் எங்களுக்கு உண்டு. யார் பழித்தாலும், யார் திட்டினாலும், யார் சபித்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் – சாபங்களையெல்லாம் வாழ்த்துக்களாக ஆக்கிக் கொள்கின்ற திறமையை எங்களை ஆளாக்கிய தலைவர்கள் எங்களுக்கு தந்திருக்கிறார்கள், அந்த உறுதியை மனதில்கொண்டு நாங்கள் பணியாற்றுவோம். அந்தப் பணிக்கு இங்கே குழுமியிருக்கின்ற பல்லாயிரக்கணக்கிலே குழுமியிருக்கின்ற திராவிடப் பெருங்குடி மக்கள், தமிழ்ப் பெருங்குடி மக்கள், உழவர் பெருங்குடி மக்கள், தொழிலாளத் தோழர்கள், பாட்டாளி மக்கள் அத்தனை பேரும் எனக்கு துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னைப் பாராட்டிப் பேசியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, உங்கள் பாராட்டுக்கு ஏற்றவாறு என்னை நான் தயாரித்துக் கொள்ள மேலும் முயற்சி செய்வேன், அதற்கான ஆயுளை எனக்கு இயற்கை அளிக்க வேண்டுமென்கின்ற விழைவுடன் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
திருநெல்வேலியில், 17.6.2007 அன்று
நடைபெற்ற 4ஆவது கட்ட
இலவச நிலம் வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை




# ஊரகக் குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும்**
**உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்**
**புதுதில்லியில், குடிநீர் – சுகாதாரம் குறித்த**
**அனைத்து மாநில அமைச்சர்கள் மாநாட்டில்**
**ஆற்றிய உரை**

மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ரகுவன்ஸ் பிரசாத் சிங் அவர்களே, குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் துறைக்கு தலைமை ஏற்றுள்ள மாநில அமைச்சர் பெருமக்களே, இந்திய அரசின் குடிநீர் வழங்கல் துறையின் அரசுச் செயலர் அவர்களே, இந்திய அரசு மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து இக்கருத்தரங்கிற்கு வருகை தந்து பங்கேற்றுள்ள அரசுச் செயலாளர்களே, அதிகாரிகளே,

சகோதர சகோதரிகளே,

மிகுந்த சிறப்பு வாய்ந்த பிரதிநிதிகள் கூடியுள்ள இந்தக் கருத்தரங்கில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. பெரும் முக்கியத்துவம் வாய்ந்த குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் ஆகிய பொருள் பற்றி எங்களுடைய கருத்துக்களை இந்தக் கருத்தரங்கில் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ள இந்திய அரசிற்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கருத்தரங்கத்தில் "நாட்டிலுள்ள ஊரகப் பகுதிகளில் அனைவருக்கும் 2012 ஆம் ஆண்டிற்குள் நீடித்த குடிநீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சுகாதார வசதியை அளித்தல்" என்பதை மையப் பொருளாக தேர்வு செய்தமைக்கு மத்திய அரசிற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் அரசாக செயல்படும் மத்திய அரசு பொதுமக்களின் நலனில் மிகுந்த கவனம் கொண்டுள்ளது. இதற்கேற்ப ஊரகப் பகுதிகளில் வாழும் அனைவருக்கும் சுகாதார வசதிகளையும், குடிநீர் விநியோகத்தையும் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த திட்டமான "பாரத் நிர்மாண்"என்ற திட்டத்தை தொடங்கி உள்ளது.

அனைவருக்கும் குடிநீர் கிடைத்திடச் செய்ய வேண்டும் என்பது பாரத் நிர்மாண் திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளதால், திட்டங்களின் நீடித்த தன்மை குறித்து நிலவுகின்ற பிரச்சினைகளைப் பற்றி நாம் தாமதமின்றி உடனடியாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற தத்துவமானது தமிழக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைத் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழக அரசின் அனைத்துத் திட்டங்களையும், சமூகநீதி என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கி உள்ளார்.

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் என்பது அனைவரும் உணர்ந்த ஒன்றே ஆகும். புகழ்வாய்ந்த தமிழ்ப்பெரும் புலவர் திருவள்ளுவர் அவர்கள்

"நீர் இன்றி ஆமையாது உலகு" என்று கூறியுள்ளார்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

என்பது சுகாதாரமான வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் தமிழ்ப் பழமொழியாகும்.

ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் குறித்து திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. குடிநீர் வழங்கலுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 1971ஆம் ஆண்டே தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் என்ற சட்டபூர்வமான அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளில் ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ள நிதியின் அளவினை வைத்தே இதற்கு மாநில அரசு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை உணரலாம். ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக மொத்தம் ரூபாய் 4,583 கோடி இக்காலக்கட்டத்தில் முதலீடு செய்யப்பட்டது.

கடந்த மே மாதம் 2006ல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்த பிறகு தமிழ்நாட்டில் 9 இலட்சத்து 34 ஆயிரம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களை உள்ளடக்கிய மொத்தம் 30 இலட்சம் நபர்கள் பயன் அடையும் வகையில் 7 ஆயிரத்து 742 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும், மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன், மேலும் 9 ஆயிரம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசு 191 கோடி ரூபாயும், தமிழ்நாடு அரசு 411 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது. ஊரகப் பகுதிகளுக்கு போதுமான அளவு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திட பெருமளவிலான முதலீடு தேவைப்படுகின்ற அதே நேரத்தில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களின் நீடித்த தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.



குடிநீர் வழங்கல் திட்டங்களைப் பொறுத்தவரை நீராதாரம் மற்றும் விநியோக அமைப்புகள் ஆகிய இரண்டு அம்சங்களின் நீடித்த தன்மை என்பது மிக முக்கியமானதாகும். இத்தகைய நிலைத்த தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 1977 ஆம் ஆண்டு முதல் நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க என நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கும் ஒரு தனித் திட்டத்தை தொடங்கியது.

இதுவரை இத்தகைய 3 ஆயிரத்து 186 நீர் சேகரிப்பு அமைப்புகள், மொத்தம் ரூபாய் 109 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என்பதை இங்கே சிறப்பாக குறிப்பிட வேண்டும். கட்டட வரைபட அனுமதி பெறுவதற்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பது சட்டப்பூர்வமான விதிமுறையாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக நகர்ப்புற பகுதிகளில் உள்ள 1 இலட்சத்து 72 ஆயிரம் அரசு கட்டடங்களிலும், 48 இலட்சத்து 11 ஆயிரம் தனியார் கட்டடங்களிலும் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள 66 இலட்சத்து 67 ஆயிரம் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் ஆதாரங்களின் தன்மை பாதிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 5 ஆயிரத்து 574 குடியிருப்புகளில் நீரினுடைய தரத்தில் குறைபாடு உள்ளதாகத் தெரியவந்தது. இவற்றில் இதுவரை 5 ஆயிரத்து 431 குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முடிவடைந்து தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

தரமான குடிநீர் கிடைக்காமல் மற்றும் போதுமான நீராதாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்கு வதற்கான மிகப் பெரிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான ஆயத்தப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார் என்பதை இந்நேரத்தில் தெரிவிப்பது மிகப் பொறுத்தமானது என கருதுகிறேன்.

## குடிநீரின் தரம் குறித்து ஆய்வு

இந்தத் திட்டத்தின் மூலம் 5 நகராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 3,163 ஊரக குடியிருப்புகளில் உள்ள 15 இலட்சத்து 64 ஆயிரம் நபர்களுக்கு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு மொத்தம் 616 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் ஊரகப் பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குகின்ற நீராதாரமாக உள்ள ஊருணிகள் எனப்படுகின்ற குளங்களில் நீடித்த நீர் வளத்தினை உறுதி செய்யும் வகையில் ஒரு

ஒருங்கிணைந்த திட்டத்தை செயல்படுத்தக் கருதியுள்ளோம்.

குடிநீர் ஆதாரங்களின் நீடித்த திறன் மற்றும் வழங்கப்படும் குடிநீரின் தரம் ஆகியவற்றை கண்காணித்திட 1,286 பரிசோதனைக் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 28 மாவட்டங்கள் மற்றும் மாநில தலைமை இடத்திலுள்ள பரிசோதனைக் கூடங்களின் மூலம் குடிநீரின் தரம் அவ்வப்போது உரிய கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது.

இந்திய நாட்டிலுள்ள குடிநீர் ஆய்வகங்களிலேயே தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள ஆய்வகமே ISO சான்றிதழ் பெற்ற முதல் ஆய்வகம் ஆகும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல கள அளவில் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்யக் கூடிய ஒரு கையடக்க ஆய்வு உபகரணத்தை குடிநீர் வாரியம் உருவாக்கியுள்ளது. இது உபயோகிப்பதற்கு எளிமையானது ஆகும். இதனை அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

முழு சுகாதார இயக்கத்தின் செயலாக்கத்தில் பொன்விழா சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த உதவியுள்ளது.

தமிழ்நாட்டில் முழு சுகாதார இயக்கம் திட்டமானது 1999–2000ஆவது ஆண்டில் 4 மாவட்டங்களில் தொடங்கப்பட்டது. அப்போது ஊரக சுகாதாரத்தை பொறுத்தவரை 15 சதவீத பகுதிகளே இத்தகைய வசதியைப் பெற்றிருந்தன. தமிழக அரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளின் விளைவாக தற்போது ஊரகப் பகுதிகளில் உள்ள 68 சதவீத தனி நபர் இல்லங்கள் கழிப்பறை வசதியைப் பெற்றுள்ளன.

2007ஆம் ஆண்டிற்குள் 100 சதவீத பள்ளிக் கூடங்கள் மற்றும் அங்கன்வாடிகளுக்கும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தி அளிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் மட்டும் 296 கிராம ஊராட்சிகள் மத்திய அரசு வழங்குகின்ற "நிர்மல் கிராம் புரஸ்கார்" என்ற தூய்மையான கிராம விருதினை மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளன. இது ஊராட்சி அமைப்புகள் முழு சுகாதார இயக்கத்தின் செயலாக்கத்தில் கொண்டுள்ள கூடுதலான ஈடுபாட்டினை காட்டுகின்றது.

இறுதியாக மத்திய அரசின் சாதகமாக ஆய்விற்கு என கீழ்க்கண்ட பரிந்துரைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

- ★ குடிநீர் ஆதாரங்களின் நீடித்த தன்மையை உறுதி செய்ய மத்திய அரசு 100 சதவீத நிதியுதவியுடன் கூடிய ஒரு புதிய திட்டத்தை தொடங்க வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியில் குறைந்தபட்சம் 30 சதவீதம் நீர் சேகரிப்புப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
- ★ பெரிய அளவிலான நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவான நிலப் பகுதிகளைக் கண்டறிவதற்கு தொலை உணர்வு மற்றும் நிலவியல் தகவல் முறை ஆகிய தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் முழு நிதி உதவியை வழங்க வேண்டும் என கோருகிறேன்.
- ★ ஏற்கெனவே முழு அளவு குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்ட குடியிருப்புகளிலும் தவிர்க்க இயலாத பல்வேறு காரணங்களால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதால் விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழான ஒதுக்கீட்டை இத்தகைய குடியிருப்புகளுக்கும் நிதியுதவி அளித்திட ஏற்ற வகையில் அதிகரிக்க வேண்டும்.

மேலும் தனிநபர் இல்ல கழிப்பறைகளுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மானியமான ரூபாய் 1,200 என்பதை குறைந்தபட்சம் 5,000 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் நிலையான தனிநபர் இல்ல கழிப்பறைகளை ஏற்படுத்த இயலும்.

நிறைவாக தமிழ்நாட்டின் சார்பாக இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு எமது மாநிலத்தின் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தற்கு இந்திய அரசிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்திய அரசின் உதவி மற்றும் ஆதரவுடன் பாரத் நிர்மாண் திட்டத்தின் அனைத்து இலக்குகளையும் உரிய காலக் கெடுவிற்குள் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

[illegible]

## துப்புரவுப் பணியாளர்கள் பணி நியமன ஆணை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்



நகராட்சி நிருவாகத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள நகராட்சிகளில் காலியாக உள்ள 192 துப்புரவு ஆய்வாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிருவாகத் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றம் நேரடி நியமனம் மூலம் நிரப்பிட அனுமதித்துள்ள 125 துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடத்திற்கான தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்யும் பணி 11.6.07 மற்றும் 12.6.07 அன்று ஆணையர், நகராட்சி நிருவாகம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் நேர்காணலுக்கு சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டு விதிமுறைப்படி தேர்வு பெற்ற 112 தகுதியான நபர்களுக்கு நேரடி பணி நியமன ஆணை 14.6.07 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் நேரடியாக வழங்கப்பட்டது.

கடந்த 1997ம் ஆண்டு திமுக ஆட்சியின்போது இப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்யப்பட்டது. அதன் பிறகு தற்போதுதான் இந்த பணியிடத்திற்கான நியமனம் மீண்டும் செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வேலைவாய்ப்பக பதிவு மூப்பு மற்றும் வகுப்புவாரி சுழற்சி முறையின் அடிப்படையில் தற்போது நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பணி நியமன ஆணை வழங்கும் இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை செயலர் திரு. க.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இணை ஆணையர் திரு. ஹிதேஷ் குமார் மக்வானா, இ.ஆ.ப., ஆகியோர் பங்கேற்றனர்.

□ □ □



# சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் வாரிசுதாரருக்கு 15 ஆண்டுகளுக்குப் பிறகு பணி நியமன ஆணைகள்

அரசுப்பணியில் பணி புரியும் போது, மரணமடைந்த ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுதல் வாரியத்தில், நிருவாகக் காரணங்களாலும், அரசின் நியமனத் தடை ஆணை நடைமுறையில் இருந்ததாலும் கடந்த 15 ஆண்டுகளாக இந்த நியமனம் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தற்பொழுது காத்திருப்போர் பட்டியலில் இருந்து முதல் கட்டமாக 1 முதல் 50 வரையில் உள்ள பட்டியல் பரிசீலிக்கப்பட்டு, அதில் 26 நபர்களுக்கு நியமன ஆணை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஆணை 7.7.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 9 நபர்களுக்கு சென்னை குடிநீர் வாரிய களப்பணியாளராக பணி நியமன வழங்கப்பட்டது. இதில் பயனடைந்தோர் 7 பேர் மகளிரும், 2 பேர் ஆண்களும் ஆவர்.

தமிழகத்தில் உள்ள 561 பேரூராட்சிகளில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் பல்வேறு திட்டங்களின் கீழ் விரைவாக நடைபெற்று வருகின்றன. இந்த பேரூராட்சிகளில் மிக முக்கியமான திட்டங்களான சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Urban Infrastructure Development scheme for Small and Medium Towns) பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாநில அளவிலான அங்கீகாரக் குழுக் கூட்டம் (State Level Sanctioning Committee) மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு இந்த திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்(UIDSSMT) பேரூராட்சிகளில் பணிகள் எடுத்துக் கொள்ள விரிவான திட்ட அறிக்கைகளை தயார் செய்யப்பட்டு மத்திய, மாநில அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளன. இதில் 45 பேரூராட்சி களுக்கு ரூ.63.24 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 45 பேரூராட்சிகளில் சாலைகள், நடைபாதைகள், மழைநீர் வடிகால்கள், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற அத்தியாவசியமான மற்றும் கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள 45 பேரூராட்சிக ளிலிருந்து முதற் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட திருக்கழுக் குன்றம், முசிறி, கோம்பை, களக்காடு, சேரன்மகாதேவி ஆகிய ஐந்து பேரூராட்சித் தலைவர்களுக்கு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நிதி ஒப்பளிப்பு சான்றிதழ்களை 7.07.2007 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

* * *



# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்

## சென்னையில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் - மேம்பாலப் பணிகளை விரைந்து முடித்திட ஆணை



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 7.7.2007அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல், பேரூராட்சிகள் குறித்து சட்டமன்றத்தில் அறிவித்த திட்டங்களை ஆய்வு செய்தார். ஆய்வுக் கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மூலம், வடசென்னையில் 3 நவீன குப்பை மாற்று நிலையங்கள் மற்றும் தென்சென்னையில் 2 குப்பைமாற்று நிலையங்கள் ரூ. 7.5 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படுகிறது. இப்பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

தங்கசாலை சந்திப்பு, பேசின்பால சாலை, காக்ரேன் பேசின் சாலை சந்திப்பு மற்றும் திருவான்மியூர் எல்.பி. சாலை, மத்திய கைலாஷ், ஐ.டி. காரிடார் சந்திப்பில் மேம்பாலப் பணிகள் உடனடியாகத் தொடங்கிட ஆணையிட்டார்.

பெரம்பூர் மேம்பாலப் பணிகள் உடனடியாக புதிய வடிவமைப்பின்படி பணிகள் உடனடியாகத் தொடங்கிடவும், வடக்கு உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பு, டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு ஆகியவற்றில் மேம்பாலப் பணிகளைத் துரிதப்படுத்தி, குறித்தக் காலத்திற் குள்ளாக முடித்திடவும் கேட்டுக் கொண்டார்.

சென்னை மாநகரத்தில், ஈ பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கை துரிதப்படுத்த வேண்டும் என்றும், குப்பைகளையும், கட்டட இடிபாடுகளையும் உடனுக்குடன் அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

அண்ணாசாலையில் அதிக வெளிச்சத்துடன் கூடிய புதிய மெட்டலைடு தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை துரிதப்படுத்திட அறிவுறுத்தினார்.

ஒவ்வொரு மண்டலத்திலும் அனைத்துப் பணியாளர்களையும் ஒருங்கிணைத்து, சாலைப் பகுதிகளை தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், பருவமழை தொடங்குவதற்கு முன்பாக மழைநீர் வடிகால் பணிகளை மேம்படுத்தி, மழைநீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ள பல்வேறு துறைகளை இணைத்து செயல்படவும் அறிவுறுத்தினார். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீஞ்சூர் அருகிலுள்ள காட்டுப்பள்ளியில் அமைந்துள்ள

100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல் நீரை குடிநீராக்கும் நிலையப் பணிகளை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் எனவும் நெம்மேலியில் 100 மில்லியன் லிட்டர் உற்பத்தித் திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் மற்றொரு நிலையம் அமைப்பதற்கான நிதியை இந்திய அரசிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் ஆணையிட்டார்.

மேலும் சென்னை மாநகர குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், தகவல் தொழில்நுட்பச் சாலையை (ஐ.டி. காரிடார்) ஒட்டியுள்ள நுகர்வோருக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகள், பெருங்குடியில் மற்றுமொரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் மற்றும் புறநகர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான பாதாளச் சாக்கடைத் திட்டம் ஆகியவை தொடர்பாகவும் ஆய்வு மேற்கொண்டார்.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பேரூராட்சிகளில் விரைவில் செயல்படுத்தப்படக்கூடிய வகையில் பணிகளை துரிதப்படுத்திட அறிவுறுத்தினார்.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகளை கண்காணிப்புக் குழுக்கள் அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தினார். ✶

# டாஸ்மாக் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி, உள்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், டாஸ்மாக் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர், "டாஸ்மாக்" நிறுவன பணியாளர் சங்கங்களுடன் அவர்களுடைய கோரிக்கைகள் குறித்து கலந்தாலோசனை நடத்தினார்கள். கலந்தாலோசனைக்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம், "டாஸ்மாக்" பணியாளர்களுக்கான சலுகைகள் குறித்து பின்வரும் பரிந்துரைகளை வழங்கியுள்ளார்கள்.

"டாஸ்மாக்" நிறுவனத்தில் பணிபுரியும் மேற்பார்வை யாளர்கள், விற்பனையாளர்கள், மதுக்கூட உதவியாளர்கள் ஆகியோருக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு ஊதியமாக முறையே ரூபாய்.3000, 2,000, 1,500 என வழங்கப்பட்டு வருகிறது. இதனை மேற்பார்வையாளருக்கு 500 ரூபாயும், விற்பனையாளருக்கு 400 ரூபாயும், மதுக்கூட உதவியாளருக்கு 300 ரூபாயும் கூடுதலாக அதிகரித்து வழங்கலாம். இதன் மூலம் 30 ஆயிரத்து 730 பணியாளர்கள் ஆண்டொன்றுக்கு 17 கோடியே 27 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பயனடைவார்கள்.

டாஸ்மாக் கடைகளின் திறந்திருக்கும் நேரத்தை காலை 8 மணி முதல் நள்ளிரவு 12 மணி முடிய என்று இருந்து வருவதைக் குறைத்து, காலை 10 மணி முதல் இரவு11 மணி முடிய என்று மாற்றியமைக்கலாம்.

பணியிலிருக்கும்போது மரணமடைந்திடும் பணியாளரின் குடும்பத்திற்கு குடும்ப நலத் திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்டு வரும் தொகையான ஒரு இலட்சம் ரூபாய் என்பது உயர்த்தப்பட்டு, இனி வருங்காலங்களில் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயாக வழங்கலாம்.

தனியார்களால் எடுத்து நடத்தப்படாத மதுக்கூடங்களில், திண்பண்டம் விற்பனை மற்றும் காலி பாட்டில்கள் சேகரிப்பதற்கு "டாஸ்மாக்" மேற்பார்வையாளர்கள் தற்போது செலுத்தி வரும் மாதக் கட்டணம், அந்தக் கடையின் விற்பனையில் 2.5 சதவிகிதத்திலிருந்து 1.5 சதவிகிதமாகக் குறைக்கலாம். இதனால் 1,600 மதுக்கூடங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் ஒவ்வொருவரும், மாதம் ஒன்றுக்குத் தோராயமாக ஆயிரம் ரூபாய் அளவுக்குப் பயனடைவார்கள்.

தற்போது காப்புத் தொகையாக மேற்பார்வையாளரிடமிருந்து 50 ஆயிரம் ரூபாயும்; விற்பனையாளரிடமிருந்து 15 ஆயிரம் ரூபாயும்; மதுக்கூட உதவியாளரிடமிருந்து 10 ஆயிரம் ரூபாயும் பெறப்பட்டுள்ளது. இந்தக் காப்புத் தொகைக்கு வட்டியளிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, இனி வருங்காலங்களில் ஆண்டொன்றுக்கு 3.5 சதவிகிதம் வட்டி வழங்கலாம். இதன் மூலம் வருடம் ஒன்றுக்கு மேற்பார்வையாளர்கள் 1,750 ரூபாயும், விற்பனையார்கள் 525 ரூபாயும், மதுக்கூட உதவியாளர்கள் 350 ரூபாயும் பெறுவார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் "டாஸ்மாக்" பணியாளர்களுக்குச் சலுகைகள் வழங்கும் இந்தப் பரிந்துரைகள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டு அறிவித்துள்ளார். இவை உடனடியாக நடைமுறைக்கு வரும். ●



சென்னை தலைமைச் செயலகத்தில்

# செய்தியாளர்கள் பயன்பாட்டிற்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி

**மா**ண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 7.5.2007 அன்று சட்டமன்றத்தில், செய்தித் துறை மானியக் கோரிக்கையின்போது, தலைமைச் செயலகத்திலுள்ள செய்தியாளர்கள் அறையில் இருக்கும் இரண்டு தொலைபேசிகளுக்கு அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி (Broadband wireless internet facilities) செய்து தரப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதன்படி 21-6-2007 அன்று மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்கள், தலைமைச் செயலகத்தில் செய்தியாளர் அறையில் அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதியினைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து.இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தார்.



செய்தியாளர்கள் அறையில் உள்ள 25671513 மற்றும் 25671514 ஆகிய தொலைபேசிகளுக்கு இந்திய அரசு நிறுவனமான பி.எஸ்.என்.எல் மூலம் அகண்ட கற்றை கம்பியில்லா வலைதள வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதற்கு மாதம் ஒன்றிற்கு ஒரு தொலைபேசிக்கு ரூ.5,000 வீதம் இரண்டு தொலைபேசிக்கு ரூ.10,000 செலுத்தப்படும். இவ்வசதி மூலம் ஒரு தொலை பேசியால் ஒரு மாதத்திற்கு 30 GB வரை வலைதள வசதியும், 54 MBPS விரைவு திறனுடன் பெறமுடியும். இரண்டு தொலைபேசிகளால் 60 GB வரை பெற முடியும். கம்பியில்லா வலைதள வசதி மூலம் ஒரே நேரத்தில் சுமார் 15/20 பத்திரிகையாளர்கள்/ புகைப்படக்காரர்கள் அவர்களுடைய மடிக் கணினி மூலம் செய்திகளை/புகைப் படங்களை நாளிதழ்களுக்கும், செய்தி நிறுவனங்களுக்கும் விரைவாக அனுப்ப முடியும். தற்பொழுது தலைமைச் செயலகத்திலிருந்து பத்திரிகை யாளர்கள் செய்திகளை தொலைபேசி வாயிலாக அளித்து வருகிறார்கள். புகைப்படங்கள் நேரிடையாக நிறுவனங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வசதியைப் பயன்படுத் துவதன் மூலம் செய்திகளும், புகைப்படங்களும் உரிய நேரத்திற்குள் விரைவாக நிறுவனங்களுக்குச் சென்றடைந்து பத்திரிகைகளில் வெளிவருவதற்கு வழி வகுக்கின்றது.

□ □ □

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

# அரசின் திட்டங்களை மக்களுக்கு நல்லமுறையில் எடுத்துச் செல்லவேண்டும்



திரு. பரிதி இளம்வழுதி
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, திண்டுக்கல், தேனி ஆகிய 9 மாவட்டங்களின் செய்தி மக்கள் தொடர்பு அதிகாரிகள் பணி ஆய்வுக் கூட்டம், திருநெல்வேலி ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் உள்ள சாரல் அரங்கில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 7.7.2007 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் பேசியதாவது :

"முதல்வர் தலைவர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு பல்வேறு நலவாழ்வு திட்டங்களை ஏழை மக்களுக்காக செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டங்களின் பயன்கள் சமுதாயத்தில் வாழ்கின்ற அடித்தள மக்களுக்கு விரைந்து கிடைக்க அரசு முனைப்புடன்செயல்பட்டு வருகிறது. குறிப்பாக 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டம், இலவச கலர் டி.வி. திட்டம், நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம், இலவச கியாஸ் அடுப்பு மற்றும் இணைப்பு திட்டம் போன்ற சிறப்பு திட்டங்கள் தகுதியான அனைத்து மக்களுக்கும் சென்று அடையும் வகையில் இதற்கான திட்டங்கள் குறித்த விவரங்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அதிகாரிகள் முழுமூச்சுடன் பணியாற்ற முன்வரவேண்டும்.

அரசுக்கும், மக்களுக்கும் மக்கள் தொடர்பு அதிகாரிகள் பாலமாக இருக்கவேண்டும். இதன் மூலம் அரசின் திட்டப் பயன்கள் முழுமையான வகையில் மக்களை சென்றடைய முடியும். பணிகளில் முழுமையாக ஈடுபட்டு அரசின் திட்டங்களை வெற்றியடையச் செய்யவேண்டும். மக்கள் தொடர்பு அதிகாரிகளின் பொறுப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுவதால், மக்கள் தொடர்பு பணியில் பிறதுறைகளுடன் இணைந்து செயல்பட்டு, அரசு திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்'' என்று கூறினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் திரு.ஆர்.அண்ணாதுரை, துணை இயக்குநர்கள் திரு.இளங்கோவன், திரு.மணிக்குமார், திரு.ஹரிக்குமார், திரு.துரை. தாமரைச்செல்வம், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள், திரு.உல.ரவீந்திரன், திரு.ஹரிராம், திரு.சாரதி, திரு.கு.தானப்பா, திரு.சரவணன், திரு.சரவணன், திரு.சுப்பிரமணியன், திரு.நடராஜன், திரு.அன்பழகன் மற்றும் உதவி மக்கள் தொடர்பு அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.





# சாலைப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வெளிவட்டச் சாலை திட்டம்



சென்னை பெருநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும், பெருநகர வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் பெருநகரின் வெளி ஓரத்தில் வெளிவட்டச் சாலை அமைக்க திட்டம் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் வளர்ச்சிப் பணிகளை குழுமத்தின் தலைவரும், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சருமான திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இச்சாலையானது வண்டலூரில் தேசிய நெடுஞ்சாலை எண். 45–ஐயும், நசரத்பேட்டையில் தேசிய நெடுஞ்சாலை எண்.4–ஐயும், நெமிலிச்சேரியில் தேசிய நெடுஞ்சாலை எண்.205–ஐயும், நல்லூரில் தேசிய நெடுஞ்சாலை எண்.5–ஐயும், மீஞ்சூர் திருவொற்றியூர் – பொன்னேரி – பொன்னேரி – பஞ்செட்டி சாலையையும் இணைக்கிறது. இச்சாலையின் நீளம் 62.3 கி.மீ. ஆகும். மேலும் இச்சாலையில் சாலை மற்றும் தொடர்வண்டிப் பாதை அமைப்பதற்கு முறையே 72 மீட்டர் அகலமும், 50 மீட்டர் அகலமும் பிற்கால அபிவிருத்திக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு உத்தேசிக்கப்பட்ட தொகை ரூ.900 கோடியாகும்.

இதுகுறித்து செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் கூறியதாவது :

"இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பணிகள் இரண்டு கட்டமாக நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை எண்.45 முதல் தேசிய நெடுஞ்சாலை எண்.205 வரை உள்ள சுமார் 29.5 கி.மீ. நீளத்திற்கு 29 கிராமங்கள் நிறைவு செய்யப்பட்டு மேற்கண்ட நிலங்கள் தற்போது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் பொறுப்பில் உள்ளது. இரண்டாம் கட்டமாக தேசிய நெடுஞ்சாலை எண்.205 முதல் திருவொற்றியூர், பொன்னேரி, பஞ்செட்டி வரையுள்ள 32.8 கி.மீ. நீளத்திலுள்ள 28 கிராமங்களில் 18 கிராமங்களில் 10.72 கி.மீ. நீளத்திற்கு நில எடுப்புப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டது. மீதமுள்ள 10 கிராமங்களில் நில எடுப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இதை விரைவுபடுத்துவதற்கான பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி முடியும்போது சென்னைப் பெருநகரின் போக்குவரத்து நெரிசலை ஓரளவிற்கு தீர்க்கப்படுவதோடு, ஒரு சிறந்த உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்து சாலையாக இது அமையும் என்றும் தெரிவித்தார்.

மேலும், இதுகுறித்து அவர் பேசும்போது வெளிவட்டச் சாலை விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு சாலை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

* * *



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை
தலைமைச் செயலகத்தில் ரிசர்வ் வங்கியின் கவர்னர் டாக்டர் ஒய்.வி.ரெட்டி அவர்கள்
சந்தித்துப் பேசினார். (11.7.2007)



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள். திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்தில்
நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில்.
இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்கள். உடன்
மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன்.
மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திருமதி. ராதிகா செல்வி ஆகியோர் உள்ளனர். (15.7.2007)





பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 105ஆவது பிறந்தநாளை முன்னிட்டு
15.7.2007 அன்று. சென்னையில் உள்ள
காமராஜர் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த காமராஜர்
திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்காடு நா.வீராசாமி.
திரு. பரிதி இளம்வழுதி. டாக்டர் திருமதி.பூங்கோதை, திருமதி.பி.கீதாஜீவன். திரு.உ. மதிவாணன்
ஆகியோரும் மற்றும் தமிழ் வளர்ச்சி. அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர்
திரு. து. இராசேந்திரன்.இ.ஆ.ப., மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்
முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப..ஆகியோரும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். (15.7.2007)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்
தலைமைச் செயலகத்தில், சென்னை மெரீனா கடற்கரை அழகுபடுத்தும் பணிகளைத்
தொடங்குவது குறித்தும், அடையாற்றின் கரையோரத்தில் நவீனமயமான பூங்கா
அமைக்கும் திட்டம் குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டார்.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்களும், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப.,
மற்றும் அரசுத்துறை செயலாளர்கள் உடன் உள்ளனர். (9.6.2007)



தியாகிகள் தினத்தை முன்னிட்டு. சென்னை காந்தி மண்டப வளாகத்திலுள்ள தியாகிகள் மண்டப முகப்பில் அமைந்துள்ள தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் ஆகியோரது சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருப்படங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு.ஆற்காடு நா.வீராசாமி, திரு.பரிதி இளம்வழுதி. திரு.கே.இராமச்சந்திரன் ஆகியோரும். பனைத்தொழிலாளர் நல வாரியத் தலைவர் திரு.குமரிஅனந்தன். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ். இ.ஆ.ப..ஆகியோரும் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.(17.7.2007)



மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு.ஆற்காடு நா.வீராசாமி அவர்கள், 7.6.2007 அன்று. சென்னை புரசைவாக்கத்தில் நவீனமயமாக்கப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் 'கற்பகம்' விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்து, வைகாசி வசந்தம் என்ற கைத்தறி கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு.என்.கே.கே.பி.ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் உள்ளார்கள்.



# கலைஞர் அரசு பதவியேற்ற 13 மாதங்களில் ரூ.12 ஆயிரம் கோடி அந்நிய முதலீடு -25,033 நபர்களுக்கு ரூ.98 கோடி கடன் தொகை பட்டுவாடா

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு பொங்கலூர் நா. பழனிச்சாமி அவர்கள் 10.7.2007 அன்று, தலைமை செயலகத்தில் சிறு தொழில் துறை தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், 2.5.2007ஆம் நாளன்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்ட சிறுதொழில் துறையின் புதிய திட்டங்கள் செயலாக்க நிலை குறித்து ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்ததாவது;

"நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்களின் முக்கிய பங்கினை செயல் படுத்துவதில் கலைஞர் தலைமையிலான அரசு சிறப்பான தொழில் கொள்கையை வகுத்து வருகிறது. இந்த தொழில் கொள்கை மாண்புமிகு முதல்வருக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றபின் செயல்படுத்தப்படும். கலைஞர் அரசு பதவியேற்ற இந்த 13 மாத காலத்தில் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளது. தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக ரூ.89 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒப்புதலுக்காக மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. 31.3.2008க்குள் தாய்கோ (TAICO) வங்கியின் கிளை அனைத்து மாவட்டங்களிலும் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, தாய்கோ வங்கி வழங்கும் கடனில் 10 சதவீதம் நுண் தொழில்களுக்கு வழங்கப்படவும், வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டவர்களின் பட்டியல் இணைய தளத்தில் வெளியிடவும், அனைத்து வங்கிகளுக்கும் பொருந்தக் கூடிய பொதுக் கடன் விநியோகப் படிவம் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மட்டும் ரூ.12 ஆயிரம் கோடி அந்நிய முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது.

தொழிலில் பின் தங்கிய பகுதிகளில் தொடங்கப்படும் சிறு தொழில்களுக்கான முதலீட்டு மானியத்தை செயல்படுத்த இந்த ஆண்டு ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டதோடு, தேவைக் கேற்ப கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ரூ.5 கோடி வரை இயந்திர தளவாட முதலீட்டில் செயல்பட்டு வரும் சிறுதொழில் நிறுவனங்கள் தொழில்நுட்ப மேம்பாட்டிற்காக பெறும் கடன்களுக்கு 3 சதவீத வட்டி மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 இலட்சத்திற்கு மிகாத அளவிற்கு வழங்கப்படும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும். தரமான மின்சாதனங்கள் மட்டுமே விற்பனை செய்வதை உறுதி செய்ய, இப்பொருட்களின் விற்பனையை மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் கண்காணிக்க அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

பிரதமரின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில், கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 25,033 நபர்களுக்கு ரூ.98.16 கோடி கடன் தொகை பட்டுவாடா

சிறுதொழில் துறையில் தொழில் தொடங்க ஆர்வமுள்ளவர்களுக்கு கருத்தரங்குகளும், கடன் மற்றும் சலுகை குறித்த விவரங்களும் தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். சிட்கோவில் உள்ள பல தொழிற்பேட்டைகளில், தொழில் தொடங்குவதாக தெரிவித்து, மனை ஒதுக்கீடு பெற்றவர்கள் நிலத்தின் விலை யேற்றத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதாகத் தெரிகிறது. ஏற்கெனவே மனை ஒதுக்கீடு பெற்று, தொழில் தொடங்காதவர்களின் மனைஒதுக்கீடு ரத்து செய்யப்படும். டான்சி நிறுவனம் மூலம் கல்வித் துறையில் ரூ.60 கோடி அளவிற்கும், வருவாய்த் துறையில் ரூ.3 கோடி அளவிற்கும் கொள்முதல் ஆணைகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்கள்.





# காமராஜரின் இளம்பருவம்

விருதுபட்டி–திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சிறு நகரமைப்பு. அதன் மையப் பகுதியில் அமைந்த தெப்பக்குளம், அந்த சிறு நகரைக் கீழ், மேல் பகுதிகளாகப் பிரித்தது. பவளக்கார வகையறா, நாட்டாண்மை வகையறா, வெள்ளைக் கண்ணு வகையறா, கீழக் கடைக்காரர் வகையறா, மேலக் கடைக்காரர் வகையறா, மேகவர்ண வகையறா முதலிய வகையறாக்களைக் கொண்ட நாடார் இன மக்களும், பிற இனமக்களும் விருதுபட்டியில் வாழ்ந்து வந்தனர். பெரும்பாலும் வியாபாரத்தில், குறிப்பாக மொத்த வியாபாரத்தில் தீவிரக் கவனம் செலுத்தி வாழ்ந்தனர்.

ஆட்சி நிருவாக வசதிக்காக, தென்னிந்தியாவின் தென் பகுதியை திருச்சி, மதுரை என்கிற இரு ஜில்லாக்களாக (மாவட்டங்களாக) வெள்ளையர் பிரித்தனர். இராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதியின் செல்வாக்கால், இராமநாதபுரம் ஜில்லா உருவானது. அப்போது விருதுபட்டி, திருநெல்வேலியிலிருந்து பிரிக்கப்பட்டு, இராமநாதபுரத்துடன் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பஞ்சாயத்துக் கிராமமாக இருந்து விருதுபட்டியுடன் அல்லம்பட்டி, கோட்டைப்பட்டி, முத்துராம்பட்டி ஆகிய ஊர்கள் இணைக்கப்பட்டு முனிசிபல் நகரசபையாக்கப்பட்டது. இன்று ‘விருதுநகர்’ என்ற பெயருடன் விருதுநகர் மாவட்டத்தின் தலைநகராமாக உள்ளது.





**“அந்தக் காலத்தில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. காமராஜ் ஃபஸ்டு ஃபாரம் (ஆறாம் வகுப்பு) மாணவன்; எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். காமராஜ் வெள்ளைக்காரன் நடை, உடை பாவனையோடு ஆங்கிலம் பேசிக்கொண்டு பள்ளி செல்வதைக் கண்டு பாட்டி மகிழ்ந்தார். ஞானம்பிள்ளை பொடிக்கடையை அடுத்த திண்ணையில் வந்தே மாதரம் ஆட்கள் பேசுவதைக் கேட்டு, காமராஜ் மகிழ்ந்தான். ”**

வியாபாரத் துறையிலும் கல்வித் துறையிலும் ஊர் வேகமாக முன்னேறியது. மகமை வளர்ச்சியால் பொதுச் சொத்துக்கள் பெருகின. ஆகவே, ஊர் பிரமுகர்கள் ‘விருதுபட்டி’ என்கிற பெயரை மாற்றம் செய்ய ஆர்வம் கொண்டு, பட்டணம் (சென்னை மாநகர்) சென்று, கவர்னரைச் சந்தித்துப் பேசி விருதுபட்டியை ‘விருதுநகர்’ என மாற்றினார்கள்.

கோயில் நிருவாகம், படிப்பு, ஊர்சொத்து பராமரிப்பு குறித்துப் பொதுவாக மகமைக் கூட்டம் நடைபெறும். விருதுபட்டி பஞ்சாயத்து போர்டு உறுப்பினரும் முத்துராம்பட்டியின் கிராம முன்சீபும் (மணியக்காரர்) பக்திமானும் சொல்வன்மை மிக்கவருமான சுலோசன நாடார் நாட்டாண்மைக்காரராக இருந்தார்.

விருதுநகரின் தெப்பக்குளத்திற்கு மேற்கே சென்றால் வரும் தெருவில்தான் (இன்றைய சுலோசன நாடார் தெரு) நாட்டாண்மைக்கார சுலோசன நாடார் வீடு, நாட்டாண்மை வகையறா சுலோசன நாடார் தங்கை பார்வதியை மேகவர்ணம் வகையறா சின்னப்ப நாடார் மணந்தார். பிள்ளைப்பேறு இல்லாத காரணத்தால், மேகவர்ணம் வகையறாவைச் சேர்ந்த குமாராசாமியைத் தம்பதியர் தத்து எடுத்துக் கொண்டார்.

**காமாட்சி – காமராஜ்**

தத்து மகன் குமாரசாமிக்குப் பார்வதியாம்மாள், தம் அண்ணன் மகள் சிவகாமியைத் திருமணம் செய்து வைத்தார். இவர்களுக்கு 1903ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் நாளன்று ஆண்மகவு பிறந்தது. பார்வதியம்மாள் தம் பேரனுக்கு, தங்கள் வழிபடு தெய்வமான அம்மன் நினைவாகக் ‘காமாட்சி’ எனப் பெயர் சூட்டினார். எல்லாரும் குழந்தையைக் ‘காமாட்சி’ என்றே கூப்பிட்டார்கள். தாயார் சிவகாமி மட்டும் ராஜா என்றே அழைத்தார். ஆகவே, தந்தை குமாரசாமி தம் மகனுக்கு குலதெய்வத்தின் பெயரையும் இணைத்துக் “காமாட்சிராஜா” என பெயர் சூட்டினார். காலப்போக்கில் காமாட்சிராஜா, ‘காமராஜ்’ என அழைக்கப்பட்டான். நான்கு ஆண்டுகளுக்குப்பின் தங்கை நாகம்மாள் பிறந்தாள்.

ஐந்து வயது முடிந்ததும் அந்தக் கால முறைப்படி, சரஸ்வதி பூஜைக்கு மறுநாள் விஜயதசமி அன்று, வேட்டி கட்டி, கோட்டு போட்டு, உறவும் சுற்றமும் சூழக் குடும்பத்தவர் திரண்டு சென்று, காமராஜை வேலாயுதம் வாத்தியார் நடத்தி வந்த (நொண்டி வாத்தியார்) திண்ணைப் பள்ளியில் சேர்ந்தனர். அங்கு அரிச்சுவடியும் ஏட்டுக் கணக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டு, கல்விக்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டது. பின்னர் காசிக்கடைத் தெருவின் முருகையா நடத்தி வந்த “ஏனாதி நாயனார் வித்தியா சாலா”வில் சேர்ந்தனர். அங்குக் காமராஜ் தமிழ் மொழியை எழுதவும், படிக்கவும் கற்றான். அடுத்த ஆண்டு விருதுபட்டியில் இருந்த ஒரே உயர்நிலைப் பள்ளியான, ‘*க்ஷத்திரிய வித்தியா சாலா*’வில் சேர்த்தனர்.

'பிடி அரிசி பள்ளி' என்ற பெயரையுடையதும் 1885ஆம் ஆண்டு 'மகமை' மூலம் தொடங்கப்பட்டதுமான இப்பள்ளி முற்றிலும் வித்தியாசமானது எனலாம். தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இப்பள்ளி ஜாதி மத வேறுபாடு இல்லாமல், அனைத்து மாணவர்களுக்கும் இலவசக் கல்வியை இன்றளவும் வழங்கி வருகிறது. 'சமுதாய மக்கள் ஒன்று சேர்ந்து செயல்பட்டால் சாதனைப் படைக்கலாம்' என்பதற்கு இப்பள்ளி சிறந்த எடுத்துக்காட்டு. இந்தப் பள்ளியில் படித்த காமராஜ்தான், தமிழ்நாட்டின் முதலமைச்சரானபோது, தமிழ்நாட்டில் பள்ளி இறுதி வகுப்புவரை இலவசக் கல்வி தரச் சட்டம் வகுத்து செயல்படுத்தியதை நினைவில் கொள்ள வேண்டும்.

**அன்புக்கு அடிபணிந்த யானை**

பிள்ளைப் பருவத்தில் காமராஜ் நிகழ்த்திய அருஞ்செயல்கள், இவன் "நெருக்கடிகளையும், சோதனைகளையும் சமாளித்துச் சாதனை படைக்கும் வலிமை கொண்டவன்" என்பதையே உணர்த்தின. ஒரு நாள் குளித்துவிட்டு வந்த கோயில் யானை, பாகனின் கட்டுக்கு அடங்காமல் மதம் கொண்டது போல் பிளிறிக் கொண்டு வீதியில் ஓடியது. இதைக் கண்ட காமராஜ், காரணத்தைப் புரிந்துக் கொண்டு விரைவாகக் கோயிலுக்கு ஓடி, சத்திய சங்கிலியைத் தேடி எடுத்துக் கொண்டு விரைவாக வந்து யானைமுன் வீசினான். உடனே யானை சாந்தமடைந்து, சங்கிலியைத் தூக்கிக் கொண்டு காமராஜைப் பின் தொடர்ந்தது. பாகன் மாரியப்பத் தேவருடன் காமராஜ் இணக்கமாக இருந்ததால், யானைக்கு வாழை முதலான பழங்களை அடிக்கடி கொடுப்பதுண்டு. இந்த உறவுதான், பாகனை மீறிச் செயல்பட்ட யானையை அடக்க உதவியது. மிருகமாக இருந்தாலும் அந்த யானை காமராஜின் அன்புக்கு அடிபணிந்து நடந்தது.

**வந்தே மாதரம்**

காமராஜின் பள்ளிப் படிப்பு ஒழுங்காகப் போய்க் கொண்டிருந்தது. திடீரென டைபாய்டு காய்ச்சல் வந்து, நாற்பது நாள் பள்ளிக்குப் போகமுடியாமல் போயிற்று. அதன்பின் காமராஜைப் பள்ளிக்குப் பாட்டி அழைத்துச் சென்று விட்டு வந்தார். அடிக்கடி திடீரென வயிற்று வலி தொல்லைதர, பள்ளிக்குச் செல்ல முடியாதநிலை ஏற்பட்டது. காலையில் பள்ளிக்குப் போகாமல் ஊர் சுற்றினாலும் மாலையில் பள்ளிக்குச் சென்று நல்ல பிள்ளையாக வீடு திரும்புவான். இரவு வேளையில் தனிப்பாடம் படிக்கச் சென்றதால் பள்ளிப் படிப்பில் தேர்ச்சி பெற்றான். ஒரு நாள் தோழர்களுடன் ஊர் சுற்றி விட்டு வரும்போது, தபாலாபீசு சுவரில் 'வந்தே மாதரம்' ஆட்கள் சுவரொட்டி ஒட்ட, அதைத் தீக்குச்சி ஆட்கள் தடுக்க, ஒருவகை ஓடிப் பிடிக்கும் விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்படி ஒட்டப்பட்ட ஒரு சுவரொட்டியின் எழுத்துக்களை "வ...ந்...தே.... மா...த...ர...ம்...." என்று கூட்டி, முதல் முறையாகக் காமராஜ் படித்தான்.

சந்தனப் பொட்டிட்டுக் குங்குமம் அணிந்த, கண் பார்வை இழந்த, கருப்பு நிற மூதாட்டி பெரியநாயகி, விருதுபட்டி ஐந்து சந்திப்பில் 'காத்தவராயன் கதை' சொல்வதுண்டு. ஒரு சமயம் மக்கள் திரண்டிருந்த போது காமராஜ் முறுக்கு, சுருட்டு, வெற்றிலை, பாக்குப் பொட்டலம், புகையிலை, மஞ்சள் கிழங்கு ஆகியவற்றைச் சேர்த்துக் கட்டிய மாலையை மூதாட்டிக்குப் போட்டான். இதைச் சிலர் கண்டித்தபோது, "பெரியம்மாவுகு விருப்பமான வற்றை நான் மாலை கட்டிப் போட்டேன்! அது தப்புண்ணா அவுங்க சொல்லட்டும்" என்றான். கண் பார்வை இல்லாத அந்த அம்மையாருக்குக் காமராஜின் எதிர்காலம் தெரிந்திருக்கிறது!. அவர் 'என்னைப் போல கருப்பு.... நெற்றியில சந்தனக் காப்பு... எங்க காமராஜா... இந்த நாட்டை ஆள்வான் ராஜா...' என்று பாடிப் பாராட்டினார்.

**ஆங்கிலம் படித்த காமராஜ்**

அந்தக் காலத்தில் நான்காம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. காமராஜ் ஃபஸ்டு ஃபார்ம் (ஆறாம் வகுப்பு) மாணவன்; எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும். காமராஜ் வெள்ளைக்காரன் நடை உடை பாவணையோடு ஆங்கிலம் பேசிக்கொண்டு பள்ளி செல்வதைக் கண்டு பாட்டி மகிழ்ந்தார். ஞானம்பிள்ளை பொடிக்கடையை அடுத்த திண்ணையில் வந்தே மாதரம் ஆட்கள் பேசுவதைக் கேட்டு, காமராஜ் மகிழ்ந்தான். மணியாச்சியில் ஆஷ்துரை சுட்டுக்கொல்லப்பட்டது. சிதம்பரம் பிள்ளை சிறையில் செக்கிழுத்தது முதலான செய்திகள் அங்கே பேசப்பட்டன. சுதந்திரப் போராட்டத்தோடு தொடர்புடைய புதிய செய்திகளைக் கேட்டறிவதில் காமராஜ் ஆர்வம் காட்டினான். சுதேசமித்திரன் நாளிதழ் உரக்கப் படிக்கப்பட்டபோது, பள்ளிக்கு மட்டம் அடித்த காமராஜின் தலையும் அங்கே தெரியும்.

1915 டிசம்பரில் பம்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாடு, தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியின் முதல் சொற்பொழிவு, காங்கிரஸ் கமிட்டி மெம்பர் தேர்தலில் போட்டியிட்டுக் காந்தி தோற்றது. எதிர்த் தரப்பைச் சார்ந்தவராயினும் திலகர் தலையிட்டுக் காந்தியின் தேர்வுக்கு வழி வகுத்தது. கோகலேயின் மரணம், சுதேசி இயக்கம் சார்ந்த புரட்சிப் பணிகள் குறித்தெல்லாம் அவர் பேசினார். அன்று மாலை அம்மன் கோயில் பொட்டலில் நடந்த பொதுக்கூட்டத்தில் பம்பாய் அண்ணாச்சி ஆவேசமாக முழங்கினார். காமராஜ் உள்ளத்திலும் சுதந்திரப் போராட்ட உணர்வு முளைவிடத் தொடங்கியது. பொதுக் கூட்டச் செய்திகளைக் கேட்பதிலும் பத்திரிகைச் செய்திகளைப் படித்தறிவதிலும் ஆர்வம் உண்டாயிற்று. அவை அவனுக்குப் புதியதோர் உலகைக் காட்டின.

– "காமராஜ் ஒரு சகாப்தம்" என்ற நூலிலிருந்து

*



## நியாயவிலைக் கடைகளில் பருப்புகள் விலையைக் குறைத்து அரசு ஆணை

பொதுமக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களின் விலையை கட்டுப்படுத்தும் நோக்குடன் 14.4.2007 முதல் குறைந்த விலையில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா ஆகிய பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், பருப்பு வகைகள், பாமாயில் போன்றவைகளின் வெளிச்சந்தை விலை குறைந்துள்ளது. தற்பொழுது நிலவும், வெளிச்சந்தை விற்பனை விலைக்கும், நியாய விலைக் கடை விற்பனை விலைக்கும் சிறிதளவே வித்தியாசம் உள்ளது. எனவே, நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவைகளின் விலையை ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தற்போதைய விற்பனை விலையான முறையே ரூ.34/– மற்றும் ரூ.40/–க்கு பதிலாக, துவரம் பருப்பு கிலோ ரூ.32/– ஆகவும், உளுத்தம் பருப்பு கிலோ ரூ.36/– ஆகவும் 21.6.2007 முதல் குறைத்து விற்கப்படும் என அரசு ஆணையிட்டுள்ளது.

*

## பொறியியல் பயிலும் 142 மாணவ மாணவியர்க்கு நிதி உதவி

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி**

பொறியியல் கல்லூரிகளில் பயிலுகின்ற ஏழை எளிய மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கக்கோரி மனு கொடுத்தனர். ஆண்டு வருமானம் ஐம்பதாயிரம் ரூபாய்க்கும் குறைவாக உள்ள குடும்பங்களில் இருந்து தொழில் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவ மாணவியர்க்கு, அவர்களுடைய படிப்பைத் தொடரவும், அவர்கள் தங்களுடைய கல்வியில் கவனம் செலுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவியாக வழங்கிட அனுமதி அளித்துள்ளார்.

2006–2007ஆம் ஆண்டில் ஒற்றைச் சாளர முறை மூலம் பொறியில் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயின்று கொண்டிருக்கும் 142 மாணவ, மாணவியர்க்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 35 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப் படுகிறது. உதவித் தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மாணவ, மாணவியர்க்கு வழங்குவார்கள்.

*

## ஒப்பந்தப்புள்ளி முறை குறித்து அரசு அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி முறை குறித்து அரசு 14.7.2007 அன்று அறிவிக்கை வெளியிட்டது, அதில்,

"அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்கள், நற்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றிற்கான கொள்முதல், வெளிப்படையான மற்றும் பாரபட்சமற்ற முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன், 1998 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தை தி.மு.க. அரசு இயற்றியது. இதனை மேலும் செம்மைப்படுத்தி, ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை யார் வேண்டுமானாலும் இணையதளம் மூலமாக பெறுவதற்கு வகைசெய்யும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையை (e-tendering) கழக அரசு இந்த ஆண்டு அறிமுகப்படுத்தியுள்ளதை அனைவரும் அறிவர். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இந்தப் புதிய நடைமுறையின்படி, தமிழ்நாடு அரசு மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும், www.tenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில், 1.7.2007 முதல் இலவசமாகக் கிடைத்திட ஆணையிடப்பட்டு, அவ்வாறே ஒப்பந்தப்புள்ளிப் படிவங்கள் கிடைத்து வருகின்றன. இவற்றை ஒப்பந்தக்காரர்கள் அனைவரும் எவ்விதத் தடையுமின்றி மேற்கண்ட இணையதள முகவரியில் இலவசமாகப் பெற்று, ஒப்பந்தப்புள்ளிகளை அளிக்கலாம். ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களைப் பெறுவதிலோ அல்லது அவற்றைப் பூர்த்தி செய்து அளிப்பதிலோ ஏதேனும் தடைகள் மற்றும் இடையூறுகள் இருப்பின், அவற்றைக் களைவதற்கும், முறையாக நடவடிக்கை மேற்கொள்வதற்கும்,

**முதலமைச்சரின் செயலாளர் (கண்காணிப்பு),**
**முதலமைச்சர் அலுவலகம்,**
**தலைமைச் செயலகம்,**
**சென்னை–600 009**

என்ற முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்," என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 2.6.2007 அன்று அமைச்சரவையின் பதினெட்டாவது கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு :

1) தமிழக அரசு ஊழியர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு நடவடிக்கை இனங்களில் ஓய்வு பெறும் நாளன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்வது தற்போது நடைமுறையில் உள்ளது. அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படும் முறையை ரத்து செய்வதென்று அமைச்சரவை முடிவு செய்தது.

2) கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2003ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையக் கொடைகள் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தத்தின் காரணமாக சமாதி, பிருந்தாவனம் ஆகியவை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு ஏதுவாக அமைந்து அதனால் விளைந்த குழப்ப நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக 2003ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையைக் கடைப்பிடிப்பதற்கேற்ப சட்டத் திருத்தம் கொண்டு வருவதென்று அமைச்சரவை தீர்மானித்தது.



## அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளில் தற்காலிகப் பணி நீக்க முறை ரத்து

## அனைத்து தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் செயல்வழிக் கற்றல் முறை விரிவாக்கம்

ஆறு முதல் பதினான்கு வயது உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான கல்வி அளிக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு அரசு செயல்பட்டு வருகின்றது. இவ்வரசு பதவி ஏற்றவுடன் தொடக்கப் பள்ளி மாணவர்களின் அடைவுத் திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து வகுப்பறை சூழல் குழந்தைகளை மையமாக வைத்து செயல்பட (Child centred) வேண்டும் என்கிற அடிப்படையில் முன் மாதிரியாக நடப்பு ஆண்டில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் பத்து பள்ளிகள் வீதம் தெரிவு செய்து அப்பள்ளிகளில் செயல்வழிக் கற்றல் முறையினை செயல்படுத்தி வருகிறது. முதன்முதலாக இத்திட்டம் சென்னையிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் கடந்த மூன்று ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டது. இப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் கற்கும் திறனில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. ஆசியர்களிடமும் செயல்பாட்டு முறைக் கல்விக்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே, இந்தக் கல்வி ஆண்டில் இத்திட்டம் தமிழகத்தில் உள்ள அனைத்து தொடக்க /நடுநிலைப் பள்ளிகளுக்கும் 1 முதல் 4 வகுப்புகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக அடுத்த ஆண்டு இறுதிக்குள், தமிழகத்தில் பயிலும் அனைத்து தொடக்கப் பள்ளி மாணவர்களும் தமிழை தடையின்றி வாசித்து எழுதுவதற்கும் அடிப்படை கணக்குகளைப் பிழையின்றி செய்து முடிப்பதற்கும் ஏற்ற திறனைப் பெறுவார்கள் என்பது திண்ணமாகும்.

செயல்வழிக் கற்றல் முறையில் மாணவர்கள் விடுப்பு எடுத்தாலும் மாணவர்கள் விட்ட இடத்தில் இருந்து தொடர்வதற்கு ஏற்ற வகையில் அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் திறமைக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு தேவைப்படும் நாட்களை எடுத்துக் கொண்டு கற்கின்ற வாய்ப்பு இம்முறையில் உள்ளது.



# ஈரோடு மாவட்டத்தில் வேளாண்சார் தொழில் வளர்ச்சி

– என். பாலையா,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.*

வேளாண் தொழில் மேம்பாட்டிற்கு அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்காக தமிழ்நாடு விவசாய தொழிலாளர் நல வாரியத்தை அரசு அமைத்துள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு ஏழை விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு அரசு பல்வேறு உதவிகளை அளித்து வருகிறது.

இதில் ஒரு அங்கமாக விளங்கும் வேளாண் சார் தொழிலுக்கும் அரசு முன்னுரிமை அளித்து கிராமப்புற பகுதிகளில் தொழில் வளர்ச்சியடைய வழிவகையினை உருவாக்கி உள்ளது. கிராமப்பகுதிகளில் வேளாண்சார் தொழிலை ஊக்கப்படுத்துவதன் மூலம் விவசாயிகள் சிறுதொழில்களில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்ட முடியும். மேலும் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், வேளாண் விளை பொருட்களை மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக தயாரித்து சந்தைப்படுத்தவும் முடியும் என்பது அரசின் சீரிய நோக்கமாகும்.

கவுந்தப்பாடி அருகே மாரப்பம் பாளையம் என்ற கிராமத்தில் அரசு நிதி உதவி மூலம் தேங்காய்தொட்டி பவுடர் தயாரிக்கும் ஸ்ரீபண்ணாரி அம்மன் என்னும் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் தேங்காய்தொட்டி பவுடர் ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்திச் சுருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப் பொருள்களில் ஒன்றாகும்.

இந்த நிறுவனம் தேங்காய் வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் மூலம் கொட்டாங்குச்சி எனப்படும் தேங்காய் தொட்டிகளை கொள்முதல் செய்கிறது. இத்தொழிற்சாலையில் இவைகளை பவுடராக்கி ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்தி சுருள் செய்வதற்காக வடமாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்திச்சுருள் உற்பத்தி செய்யும் இந்நிறுவனங்களில் இந்த பவுடருடன் ஒன்றிரண்டு மூலப்பொருட்கள் சேர்க்கப் படுகின்றன.

தேங்காய் தொட்டி பவுடர் தயாரிக்கும் இத்தொழிற்சாலையினை உருவாக்கிட அரசு மூலம் ரூ.25 இலட்சம் வங்கி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட தொழில் மையத்தின் மூலம் அரசு மானியமாக ரூ.4 இலட்சமும், அரசு மின் மானியமாக ரூ.12 இலட்சமும் வழங்கப்பட்டு உள்ளது.

இத்தொழிற்சாலையின் பங்குதாரர்களாகிய திரு.கே.பி.நந்தகுமார், திரு.என்.எஸ்.சிவராஜ், திரு.ஜி.ரகுராமன் ஆகியோரை நேரில் சந்தித்து இதன் இயக்கம் மற்றும் வளர்ச்சி குறித்து கேட்டபோது அவர்கள் தெரிவித்ததாவது :



*"வேளாண்சார் தொழிலின் மேம்பாட்டிற்கு அரசு நிதியுதவி செய்கிறதென்பதை ஈரோடு மாவட்ட தொழில் மையத்தின் வாயிலாக அறிந்தோம். தேங்காய் தொட்டி பவுடர், ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்தி சுருள் செய்யப் பயன்படுத்தப் படுகிறது என்பதை கேள்விப்பட்டு, இது வேளாண் சார் தொழிலின் கீழ் வருவதால் இத்தொழிலை ஆரம்பிக்க அரசின் நிதி உதவி கோரி விண்ணப்பித்தோம். அரசின் நிதி உதவி கிடைப்பெற்று இத்தொழிற்சாலையை நிறுவி இயக்கி வருகிறோம். இந்த பவுடர் ஊதுபத்தி, பிளைவுட் மற்றும் கொசுவர்த்தி சுருள் செய்ய பயன்படும் மூலப் பொருட்களில் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் பூந்துறை, கவுந்தப்பாடி, கோபி, காங்கேயம் ஆகிய பகுதி விவசாயிகளிடமிருந்து தேங்காய் தொட்டிகள் தேவையான இயந்திரத்தின் மூலம் பவுடராக்கப்படுகிறது. நாளொன்றிற்கு 8 டன் தேங்காய் தொட்டி, இயந்திரம் மூலம் அரைக்கப்பட்டு 7.5 டன் பவுடர் கிடைக்கிறது. இந்த வகையில் நாளொன்றிற்கு 50 கிலோ*

*கொண்ட 150 மூட்டைகள். அதாவது 7,500 கிலோ பவுடர் தயாரிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் 4,500 மூட்டைகள் அதாவது 2 இலட்சத்து 25 ஆயிரம் கிலோ பவுடர் தயாரிக்கப்படுகிறது.*

*இது இலாபகரமான தொழிலாக உள்ளது. மேலும் தொழிற்சாலைகளுக்கு நேரடியாக இடைத் தரகர்களின்றி இவைகள் விற்பனை செய்வதால் நல்ல இலாபமும் கிடைக்கிறது.*

*இதற்கு முன்னர் விவசாயத் தொழிலை செய்து வந்தோம். தண்ணீர் பற்றாகுறை, தொழிலாளர் பிரச்சினை போன்றவற்றால் விவசாயத் தொழிலில் ஈடுபட முடியவில்லை. இதனால் இந்த வேளாண் சார் தொழிலை ஆரம்பித்து நல்ல முறையில் செய்து வருகிறோம். இந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு முன்பாக மாவட்ட தொழில் மையத்தின் மூலம் கிடைக்கும் அனைத்து சலுகைகளைப் பற்றி தெரிந்து கொண்டு விண்ணப்பித்தோம். அரசு இதற்காக ரூ.4 இலட்சம் மானியமாகவும், ரூ.12 இலட்சம் மின் மானியமாகவும் வழங்கியமை பேருதவியாக உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்ற ஒருவழிக் கருத்துக் குழுக் கூட்டத்தில் ஆலோசித்தபடி, தொடர்புடைய அனைத்து துறைகளிடமிருந்து தேவையான அனைத்து உரிமங்களும் உடனடியாக கிடைக்கப்பெற்றன.*

*இத்தொழிற்சாலையில் பொருட்களை ஏற்றுதல், இறக்குதல் மற்றும் வாகனங்கள் மூலம் தேங்காய் தொட்டிகளை கொண்டு வருதல், பவுடரை சந்தைப்படுத்துதல், பவுடர் உற்பத்தி செய்தல் போன்றவற்றின் வாயிலாக நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 50 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது. இதுவரை இருந்து வந்த இந்த வேளாண்மை பொருளின் மீதான உற்பத்தி வரியினை 1.1.2007 முதல் அரசு முழு விலக்கு அளித்து தொழிலை மேலும் மேம்படுத்திட செய்தமைக்கு அரசிற்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்*'' என்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் தென்னை நார்தொழில், கயிறு தயாரிக்கும் தொழில், தேங்காய் பவுடர் தயாரிக்கும் தொழில், பால் பதப்படுத்தும் தொழில், நவீன அரிசி ஆலை, சூரியகாந்தி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கால்நடை மற்றும் கோழி தீவனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், ஏக்டிவேட்டட் கார்பன் தொழில் நிறுவனங்கள், தென்னை நார் கழிவு கட்டி தயாரிக்கும் தொழில் போன்ற 38 வேளாண் சார் தொழில் சம்பந்தப்பட்ட ஆலைகள் இயங்கி வருகின்றன. மேற்படி நிறுவனங்களுக்கு 2006–2007ல் முதலீட்டு மானியமாக ரூ.24.50 இலட்சமும், மின்மானியமாக ரூ.55 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண் சார் தொழில் மற்றும் இதர தொழில் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், சென்னிமலை ரோடு, ஈரோடு என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

---

## மழலையர் ஆசிரியர் பயிற்சியளிக்கும் போலி நிறுவனங்கள் அரசு எச்சரிக்கை

அனைத்து வகை, ஆசிரியர் கல்விக்கென, அகில இந்திய அளவில், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) என்றவொரு அமைப்பு, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இதன்படி, தமிழ்நாட்டில் எந்தவொரு, ஆசிரியர் பயிற்சி ஆனாலும், இதற்கென நியமிக்கப்பட்ட தென்மண்டல தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால், அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

இந்நிலையில் தமிழ்நாடு பிரி–பிரைமரி எஜுகேஷனல் டிரஸ்ட் (TNPET) மற்றும் தமிழ்நாடு மக்கள் கல்வி வளர்ச்சி அறக்கட்டளை (TNPEDT) என்ற அமைப்புகள் இரண்டு வருட மழலையர் பயிற்சி நடத்தி வருவதாக பத்திரிகை விளம்பரம் செய்து மாணவர் சேர்க்கை செய்து வருகிறது. மழலையர் ஆசிரியர் பயிற்சி முடித்தவர்கள் இரண்டாம் வகுப்பு வரை பள்ளிப் பணியில் அமர வாய்ப்புள்ளது என விளம்பரப்படுத்தி வருகின்றனர். இவ்வகை பயிற்சிக்கு தமிழக அரசோ, மத்திய அரசோ அனுமதி வழங்கப்படவில்லை. இவ்வகை நிறுவனங்களில் சேர்ந்து பயிலும் மாணவர்கள் அரசால் நடத்தப்படும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்நிறுவனத்தின் மூலம் பயிற்சி பெற்று நிறுவனத்தின் சான்றிதழ் பெறக்கூடிய மாணவர்கள் எவரும் அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பணிபுரிய தகுதியற்றவர்கள் ஆவர். எனவே தவறான செய்தினை வெளியிட்டு பொதுமக்களை ஏமாற்றி, மாணவர்களை சேர்த்து பணம் வசூல் செய்து வருவது மோசடி நடவடிக்கையாகும். பொதுமக்கள் மற்றும் மாணவர்களை ஏமாற்றுபவர்கள் மீது குற்றவியல் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே மாணவர்கள் எவரும் இவ்வகை போலியான விளம்பரத்தைக் கண்டு ஏமாறாமல், அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களில் சேர வேண்டாம் என அறிவிக்கப்படுகிறது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் விழிப்புடன் செயல்பட்டு, அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களில், அங்கீகாரம் பெற்ற பயிற்சி குறித்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தை தொடர்பு கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியில் சேருமாறு அறிவிக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அறிவித்துள்ளார். ■



---



# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்

– மூ.நா.கிருட்டிணசாமி
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்.*

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம் 9.3.2005 முதல் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2006–07ஆம் வருடத்திற்கு 71 சிறப்புப்பள்ளிகளுக்கு ரூ.1,83,11,400/– மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து பெறப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 63 சிறப்புப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு, இச்சிறப்புப் பள்ளிகளில் மொத்தம் 2007 சிறார்கள் பயின்று வருகிறார்கள்.

**நோக்கம் :**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஆபத்தான மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள குழந்தைத் தொழிலாளர்களை (8–14 வயது) மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் வகையில் சிறப்புப் பள்ளிகளில் சேர்த்து இரண்டு வருடங்களுக்குள் அவர்களின் வயதுக்கேற்ப தகுதி பெறச் செய்து பொதுப்பள்ளிகளில் சேர்த்து சிறார்களின் கல்வியைத் தொடரும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

**குழந்தை தொழிலாளர் ஆய்வு :**

கிருஷ்ணகிரி மாவட்டத்தை குழந்தைத் தொழிலாளர் இல்லாத மாவட்டமாக மாற்றும்பொருட்டு மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி குழந்தைத் தொழிலாளர் ஆய்வுக் குழு உருவாக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகள், தொழிலகங்கள், உணவகங்கள் மற்றும் பட்டறைகள் ஆகிய இடங்களில் 101 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுகளின் போது இதுவரை 93 சிறார்கள் மீட்கப்பட்டு சிறப்புப்பள்ளிகளிலும், பொதுப் பள்ளிகளிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், சிறார்களை பணியில் அமர்த்திய நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து மொத்தம் ரூ.1,54,000 நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

**கல்விப் பொருட்கள் :**

இச்சிறப்புப்பள்ளி சிறார்களுக்கு பாடநூல்கள், குறிப்பேடுகள், பேனா, பென்சில், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் காலணிகள் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. மேலும், யுனிசெப் மூலம் கதைப் புத்தகங்கள், கரும் பலகைகள், பென்சில்கள், உலக உருண்டைகள், வரைபடங்கள், புத்தகப்பைகள், குடிநீர் வடிகட்டும் பாத்திரம், சாப்பிடும் தட்டு, டம்ளர் ஆகியவை வழங்கப்படுகிறது.

**தொழிற்கல்விப் பயிற்சி :**



சிறப்புப் பள்ளியில் பயிலும் சிறார் களுக்கு கல்வி கற்பிப்பதுடன் பயிற்சி பெற்ற தொழிற்கல்வி பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இவற்றில் கூடை பின்னுதல், துணி தைத்தல், வண்ணப் பூச்சு, பொம்மை தயாரித்தல் மற்றும் கைவினைப் பொருட்கள் ஆகியவை கற்றுத் தரப்படுகிறது. இப்பயிற்சிக்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் திட்டத்தின் மூலமாக வழங்கப்படுகிறது.

**மதிய உணவு :**

சிறப்புப்பள்ளி சிறார்களுக்கு மதிய உணவுடன் ரொட்டி, பேரீச்சம்பழம், பொறியல், வாரத்திற்கு மூன்று நாட்கள் சுண்டல் மற்றும் 2 முட்டைகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு நாள் ஒன்றிற்கு ஒரு சிறாருக்கு ரூ.5 வீதம் அனுமதிக்கப்படுகிறது.

**ஊக்கத்தொகை :**

சிறப்புப்பள்ளியில் பயிலும் சிறார் களுக்கு மாதம் ஒன்றிற்கு ஊக்கத் தொகையாக ரூ.100 அவர்களின் அஞ்சலக/வங்கி சேமிப்புக் கணக்குகள் வாயிலாக வழங்கப்படுகிறது. இத்தொகை சிறார்கள் பொதுப்பள்ளியில் சேர்க்கப்பட்ட பிறகே வங்கி/அஞ்சலகத்திலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படும்.

**இலவச பேருந்து அனுமதி :**

சிறப்புப்பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு இலவச பேருந்து அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு 184 சிறார்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

**பயிற்சிகள் :**

பயிற்றுனர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் பயிற்றுனர்களுக்கு யுனிசெப் மூலம் அறிவியல் குறித்த சோதனைகள், எளிய முறையில் கணக்கு கற்பித்தல் ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது.

**குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தினால் அபராதம்**

குழந்தைகளை பணியில் அமர்த்தக்கூடாது என அரசு சட்டம் பிறப்பித்துள்ளது. அதன்படி, தொழிற்சாலைகள், தொழிலகங்கள், பட்டறைகள், தாபாக்கள், உணவு விடுதிகள் ஆகிய இடங்களில் குழந்தைகளை பணியில் அமர்த்தினால் 3 மாதம் சிறைவாசம் அல்லது ரூ.20,000 அபராதம் விதிக்கப்படும்.

மேலும், மத்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அக்டோபர் 10, 2006 முதல் புதியதாக குழந்தைத் தொழிலாளர் குறித்து சட்டத் திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதன்படி வீட்டுவேலை, சாலையோரத்தில் உள்ள தாபா உணவகங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தேநீர் கடைகள், சுற்றுலா உணவகங்கள், பொழுதுபோக்கு மையங்கள், நீரூற்று உணவகங்கள் மற்றும் பட்டறைகள் தொழிற்சாலைகள், தொழிலகங்கள் உட்பட எந்த இடத்திலும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தக்கூடாது என உத்தரவிட்டுள்ளது.

**குழந்தைகளின் இணையதளம் :**

மாவட்ட ஆட்சித்தலைவரின் முயற்சியால் குழந்தைகளுக்காகவே www.Back2school.in என்ற பெயரில் இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.



இந்த இணையதளத்தில் பள்ளி செல்லா மற்றும் இடைநின்ற மாணவர்களின் புகைப்படத்துடன் அவர்களின் குடும்ப சூழ்நிலை, பொருளாதார நிலை குறித்த விவரங்கள் இந்த இணையதளத்தில் பதியப்பட்டுள்ளது. மேலும், இவர்களின் வாழ்க்கை நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அவர்களுக்கு தேவைப்படும் அரசு உதவிகள் செய்வதுடன், கல்வியைத் தொடர ஆவன செய்யப்படும்.

**மருத்துவப் பரிசோதனை :**

சிறப்புப்பள்ளி சிறார்களுக்கு மாதம் ஒரு முறை அரசு மருத்துவர்களால் பள்ளிகளில் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.

1. போகனப்பள்ளி சிறப்புப்பள்ளியில் பயிலும் கண்ணப்பன் என்னும் சிறுவனுக்கு மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின் பேரில் விரை வீக்க நோய்க்கு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.



2. U. குருபரப்பள்ளியில் சிறப்புப் பள்ளியில் பயிலும் ஆறுமுகம் என்ற சிறுவனுக்கு சாலை விபத்தில் பாதிக்கப்பட்ட இடது கால் அறுவை சிகிச்சைக்காக மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியிலிருந்து ரூ.2,000 வழங்கப்பட்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

3. தளி ஒன்றியம், லஷ்மிபுரம் குழந்தைத் தொழிலாளர் சிறப்புப்பள்ளியில் பயின்று வரும் மாரி (வயது 9) என்ற சிறுவன் இரண்டு வருடங்களுக்கு முன்பு குப்பை பொறுக்கிக் கொண்டிருந்தபோது டெட்டனேட்டர் வெடித்து அவனுடைய கண்கள் பாதிக்கப்பட்டன. மாவட்ட ஆட்சியர் அவர்கள் மாணவனின் சிகிச்சைக்கு மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியிலிருந்து ரூ.2,000 வழங்கினார்.

**மகளிர் சுயஉதவி குழுக்கள் :**

இச்சிறப்புப்பள்ளிகளில் பயிலும் சிறார்களின் பெற்றோர்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழு ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு தொழில் தொடங்க வங்கிகளின் மூலம் கடன் வாங்கித் தரப்படுகிறது.

இவ்வாண்டு கெலமங்கலம் சிறப்புப்பள்ளியின் சுயஉதவி குழுவிற்கு,

SGSY மூலம் 15 உறுப்பினர்களுக்கு – ரூ.2,50,000

தாட்கோ மூலம் 14 உறுப்பினர்களுக்கு – ரூ.25,000

SISRY மூலம் 10 உறுப்பினர்களுக்கு– ரூ.25,000

முழு சுகாதார திட்ட கடன் – ரூ.45,000

சிறுவனின் அம்மாவிற்கு உடல் ஊனமுற்றோர் கடன் – ரூ.20,000

இலவச தையல் மிஷின் – 18 மிஷின்கள்

பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் ரூ.1,75,000 கடனுதவி வழங்கப்பட்டது.

**தங்கும் விடுதி :**

தளி ஒன்றியம் லஷ்மிபுரம் கிராமத்தில் பெங்களூரை சேர்ந்த பிளக்ஸ்ட்ரானிக்ஸ் நிறுவனம் மூலம் 35 மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர் களுக்கு விடுதி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் அவர்களுக்கு கணினிப் பயிற்சியும் அளிக்கப் பட்டு வருகிறது.

× × ×

# தாழங்குடா கடற்கரைப் பகுதியில் செயற்கை பவளப் பாறை நிறுவ தமிழக அரசு நடவடிக்கை

– எம்.ஆர். லிங்கம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கடலூர் மாவட்டம்.

இயற்கையாக அதிகமான மீன்கள் வளரும் சூழ்நிலையை பவளப் பாறைகள் கொண்டுள்ளன. இந்த இயற்கை பவளப்பாறைகள் தமிழக கடற்கரைப் பகுதிகளில் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற பகுதிகளில் இருந்தாலும் மற்ற பகுதியில் இவ்வகைப் பாறைகள் இல்லாத சூழ்நிலை இருந்து வருகிறது. இதனால் மீன்களின் இயற்கையான வளர்ச்சியினை அதிகமாக்க கடலூர் மாவட்டத்தில் 53 கி.மீ. தூரம் கடற்கரை இருந்தபோதிலும் பவளப்பாறை இல்லை. இந்த சூழ்நிலையை செயற்கையாக உருவாக்கும் நோக்கத்துடன் மத்திய மீன்வளத் துறை, தமிழக மீன் வளத்துறையுடன் சேர்ந்து தஞ்சாவூர் செயற்கை பவளப் பாறையை ரூ.1.5 கோடியில் உருவாக்கி பெரிய கப்பல் மூலமாகக் கொண்டுவந்து முதல் கட்டமாக தமிழகத்தில் 11 கடல்பகுதிகளில் உறைவிடங் களை அமைத்துள்ளது. செயற்கை உறைவிடங்கள் அமைக்கப்பட்ட இடங்களில் தாவரம் மற்றும் இதர உயிரினங்கள் அதிக அளவு உற்பத்தியாகி, அது மீன்களுக்கு ஏற்ற உறைவிடங்களாக உருவாகும். இதனால், அரிய வகை மீன்கள் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும். இதனால் கடல் பகுதிகளில் மீன் உற்பத்தி அதிகமாகும். இவ்வகைப் பாறைகள் நாகப்பட்டினம் – தாரங்கம்பாடி, புதுக்கோட்டை – கோடிமுனை, கோபால்பட்டிணம், தஞ்சாவூர் – கொள்ளுக்காடு, ஏரிபுறந்துறை, வல்லவன்பட்டினம், இராமாநாதபுரம் – திருபாலக்குடி, வில்லுண்ட தீர்த்தம், தூத்துக்குடி – வேம்பர், வெல்லபட்டி, கடலூர் – தாழங்குடா ஆகிய இடங்களில் இவ்வுறைவிடங்கள் அமைக்கப் படுகிறது.

மீன் உற்பத்தியினைப் பெருக்கும் நோக்குடனும், தமிழக மீனவ கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும், செயற்கைப் பவளப் பாறைகள் கடலூர் தாழங்குடா கடல் பகுதியிலிருந்து 3 கி.மீ. தொலைவில் நிறுவப்பட்டுள்ளது. சிமெண்ட் கான்கிரீட்டினால் ஆன இந்த செயற்கைப் பவளப் பாறைகள் கூம்பு, சதுர வடிவம் மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று வளையம் கொண்ட பல அமைப்புகளில் தயாரிக்கப் பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 400 கி.கி. எடையுள்ள இந்த பாறைகள் இயற்கையான பவளப் பாறைகளைப் போன்றே மேடு பள்ளமாக, கரடு முரடான வடிவங்களுடன் மீன்கள் சென்று தங்கும் வகையில் துளைகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பாறைகள் 15 – 20 மீ ஆழத்தில் 200 மீ பரப்பளவிற்கு நிறுவப்பட்டுள்ளன.

இந்த செயற்கைப் பவளப் பாறைகள் தமிழ்நாடு மீனவர் கூட்டுறவு அமைப்பின் மூலம் தயாரிக்கப்பட்டு 28.4.2007 அன்று கடலூர் தாழங்குடா கடல் பகுதியில் நிறுவப்பட்டது. கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இப்பாறைகள் பணியாளர்கள் உதவியுடன் கயிறு மூலம் கடல் படுகையில் வைக்கப்பட்டது. செயற்கைப் பவளப் பாறைகளை நிறுவுவதற்கு இதுவே சரியான காலம் என மீன்வளத் துறை தீர்மானித்துள்ளது. காரணம் ஏப்ரல் 15 முதல் மே 29 வரை மீன் உற்பத்திப் பெருக்கத்திற்காக மீன் பிடிக்கும் பணி தடை செய்யப்பட்டுள்ளது. இது மீன் உற்பத்தியினை மேலும் அதிகரிக்கும் என மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் (Fisheries Development Mission) ஒரு பகுதியாக இப்பணி, கொச்சியில் உள்ள மத்திய கடல் மற்றும் மீன்வள ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து கூட்டுப் பணியாக இதனை மேற்கொள்கிறது. நீண்ட கடல்வள ஆராய்ச்சிக்குப் பின் கடல்வள ஆராய்ச்சி மையம் இந்த செயற்கைப் பவளப்பாறை அமைக்கும் இடங்களைத் தேர்வு செய்துள்ளது. இந்தப் பாறைகள் அமைத்தபின் வழக்கமான மீன்பிடி கப்பல்களின் போக்குவரத்திற்கு இப்பாறைகள் இடையூறு ஏற்படுத்தாவண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் மீன்பிடி வளைகளையும் பயன்படுத்த முடியாது.

கடலின் இயற்கையான இயல்பில் இப்பாறைகள் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. வழக்கமாக கடற்பாறைகளில் படியும், ஆல்கா, நுண் படிவங்கள், சிற்றுயிரினங்கள் போன்றவை இந்த செயற்கைப் பவளப் பாறைகளுடன் சேர்ந்து தங்கள் வளர்ச்சியினை மேற்கொள்ளும். எனவே, இந்த செயற்கைப் பளவப் பாறைகள் வழக்கத்தைவிட செறிவான மீன்வளத்தைப் பெருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதன்மூலம் குறிப்பாக சிறு மீன்பிடி படகுகள், நாட்டுப் படகுகள், ஆழமற்ற கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிப்போருக்கு அதிகப்படியான மீன்வளத்தினை அளிக்கும். மேலும் இந்த செயற்கை பவளப் பாறைகள் கடற்கரைக்கு அருகே அமைந்திருப்பதால் டீசல் போட் மூலம் மீன் பிடிப்போர் அதிக ஆழமான கடற்பகுதிக்குச் செல்லாமல் வெகு அருகிலேயே மீன் பிடிப்பதன் மூலம் அவர்களின் எரிபொருள் செலவு வெகுவாகக் குறைகிறது.

கடலூர் மாவட்டத்தில் சராசரியாக ஆண்டிற்கு 28,000 டன் மீன் பிடிக்கப்படுகிறது. மேலும் மீன் ஏற்றுமதி மூலமாக கடலூர் மாவட்டத்தில் ஆண்டிற்கு ரூ.6 கோடி வருவாய் ஈட்டப்படுகிறது. இங்கு அரிய வகை மீன் இனங்களான மக்காரல், டுனா, கேட்டில் பிஷ், சீ பாஸ் மற்றும் பெர்ஷஸ் போன்ற மீன்கள் அதிக அளவில் காணப்படுகின்றன. இயற்கையாக மீன்கள் வளரும் சூழ்நிலையை கடலுக்கு அடியில் உருவாக்கி மீன் உற்பத்தியை பெருக்குவதே தமிழக மீன் வளத்துறையின் நோக்கமாகும். மீன் அதிக அளவு ஏற்றுமதியாகும் கடலூரில் இதுபோன்ற செயற்கை பவளப்பாறை அமைவதால் மேலும் உற்பத்தி பெருகி மீனவர்களின் பொருளாதாரமும் உயரும் என்பதில் ஐயமில்லை. ■



# சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் கொடைக்கானலில் அரசின் மேம்பாட்டுப் பணிகள்

டி.எஸ்.சுப்பிரமணியம்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திண்டுக்கல் மாவட்டம்.



கோடையில் கடுமையை போக்கும் குடையாக விளங்கும் மலைகளின் இளவரசி கொடைக்கானலுக்கு செல்வதென்றால் மக்களுக்கு தனி மகிழ்ச்சிதான். இன்றைக்கும் இயற்கை அன்னையின் பசுமை மாறாமல் இருப்பதால் மலைகளின் இளவரசி என்ற பட்டப் பெயர் மிகவும் பொருத்தமானதாகும். கொடைக் கானல் மலையேறும்போதே வெள்ளித்துளிகளை நம்மீது சிதறச் செய்து பரவசப்படுத்தும் வெள்ளி நீர்வீழ்ச்சி முதலாவதாக நம்மை வரவேற்கின்றது.

185 மீட்டர் உயரத்தில் இருந்து முத்துப் போல் மூலிகைத் தண்ணீரை நம்மீது தெளித்து வரவேற்கின்றாள் மலைகளின் இளவரசி. கொடைக்கானலின் இயற்கை வனப்பை மேலும் மெருகூட்டும் வண்ணமாக சுமார் 140 ஆண்டுகளுக்கு முன் மதுரை ஆட்சியராக இருந்த சர்வெரே ஹென்றி லெவிஞ் என்பவர் 24 எக்டேர் பரப்பளவில் அழகான நட்சத்திர வடிவத்திலான ஏரியை உருவாக்கினார். ஏறத்தாழ 5 கி.மீ. சுற்றளவு கொண்ட இந்த ஏரியைச் சுற்றிவர

சைக்கிள்கள் மற்றும் குதிரைகள் பயன்படுத்தப் படுகின்றன. ஒருவர், இருவர் மற்றும் நான்கு பேர் சேர்ந்து ஓட்டும் விதவிதமான சைக்கிள்களில் குழந்தைகளுடன் ஏரியைச் சுற்றி வருவது எங்கும் கிடைக்காத பரவச அனுபவம் ஆகும். குதிரை மீது அமர்ந்து சவாரி செய்து இயற்கை அழகை ரசிப்பவர்களும் உண்டு. அடுத்தது பசுமை பள்ளத்தாக்கு. மலைப்பகுதியின் விளிம்பிற்கே சென்று ரசிப்பது இவ்விடத்தில்தான். மலைகளுக்கு அடியில் பெரும்பள்ளம், அப்பள்ளத்தில் பசுமை, பசுமை எங்கும் பசுமை என பல மலைச்சிகரங்கள் நம்மை மெய்மறக்கச் செய்துவிடும்.



### பிரையண்ட் பூங்கா

103 ஆண்டுகளுக்கு முன் வனத்துறை அதிகாரியாக இருந்த பிரையண்ட் 20 ஏக்கர் பரப்பளவில் பச்சைக் கம்பளத்தில் வண்ண வண்ண மலர்களைக் கொண்டு அழகிய வேலைப்பாடு அமைத்தது போன்று பிரம்மாண்ட பூங்காவை வடிவமைத்துள்ளார். இப்பூங்காவில் 500 வருடத்திற்கும் பழமையான மரம் மிக நெடிது வளர்ந்து உயரமாக நிற்கும் காட்சி காண்போரை திகைப்பில் ஆழ்த்துகிறது. இந்தியாவில் வேறெங்கும் கிடைக்காத 80 அரியவகை மலர்ச் செடிகள் கண்ணாடி மாளிகையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு ஆண்டி ரைனம், கொரியாசீஷ், டெல்பினியம், காஸ்மரஸ், டேலியா, அஸ்டோமெரியா, பென்டிசிமென், பாப்பி, டெல்ஸ், மேரிகோல்டு போன்ற 750–க்கும் மேற்பட்ட வகைவகையான மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. வருடந்தோறும் தமிழக அரசு சார்பில் கோடைவிழாவும் மலர்க் கண்காட்சியும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மட்டுமின்றி வெளிமாநிலங்களி லிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் கொடைக் கானலுக்கு வருகை தருகின்றனர்.

### புதிய பேருந்து நிலையம்

இந்த ஆண்டு 20.5.2007 நடைபெற்ற மலர் கண்காட்சி மற்றும் கோடைவிழாவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள் பேசும்போது, "கொடைக்கானலுக்கு ஏராளமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருவதையொட்டி இப்பகுதியை மேம்படுத்த சிறப்பு கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கொடைக் கானல் கேரளாவை இணைக்கும் கோசன் சாலையை சீரமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதுபோல கொடைக்கானல் கும்பக்கரை வழியாகச் செல்லும் பாதை சீரமைக்கப்படும். எப்போதும் மக்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு அவர்கள் வளர்ச்சி பெறவேண்டும் என்ற எண்ணத்தில் திட்டங்களை தீட்டி அவற்றை செயல்படுத்தும் மொத்த உருவம் தான். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் "மலைவாழ் விவசாயிகள் நல்ல முறையில் காய்கறிகளை விற்பனை செய்ய வேண்டும். அதற்கு தொலைத்தொடர்பு வசதிகள் முக்கியம் என்று கருதி மேல் மலைப்பகுதி முழுவதும் தொலைபேசி இணைப்பு கிடைக்க காரணமாக இருந்தவர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள். மேலும் கொடைக்கானலில் 20 ஆண்டுகாலமாக கேட்டுக் கொண்டு இருந்த பேருந்து நிலையம் தற்போது ரூ.4.10 கோடி மதிப்பில் சர்வதேச தரத்துடன் உருவாகிக்கொண்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாது நகர்ப்புறப் பகுதிகளிலே 10 ஆண்டுகளுக்கு மேல் குடியிருப்போருக்கு பட்டா வழங்க உத்தரவிட்டு இருப்பதும் கலைஞர் அவர்களின் அரசு இப்படி ஏழைகளின் நலனை பாதுகாக்கும் அரசாக கலைஞர் அரசு செயல்பட்டுக் கொண்டுள்ளது. ஏனென்றால்



ஒவ்வொரு விநாடியும் அவர் மக்களைப் பற்றியே சிந்தித்துக்கொண்டே இருக்கிறார். என்ன செய்யலாம், எவ்வாறு செய்யலாம், அதனை எப்படி செயல்படுத்தலாம் என்று சிந்தித்துக்கொண்டு இருக்கும் ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

### மேம்பாட்டுப் பணிகள்

இந்திய அரசு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் வளர்ச்சி மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.470.19 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இதில் கணினி மயமாக்கப்பட்ட நவீன சோதனைச் சாவடி கட்டுதல் ரூ.25 இலட்சம் மதிப்பிலும், முக்கிய சுற்றுலா இடங்களுக்குச் செல்லும் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் சுமார் ரூ.50 இலட்சம் மதிப்பிலும், கொடைக்கானல் ஏரியைச் சுற்றி அலங்கார மின்விளக்குகள் அமைத்தல் ரூ.50 இலட்சம் மதிப்பிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ரூ.133 இலட்சம் மதிப்பில் கொடைக்கானல் ஏரி – 3 கி.மீ. அப்சர்வேட்டரி சாலை மேம்படுத்த ரூ.70 இலட்சத்திலும், கொடைக்கானல் – கொச்சின் சாலையில் கோல்ப் மைதானத்தில் இருந்து பில்லர்ராக் வரை 3 கி.மீ. சாலை மேம்படுத்த ரூ.63 இலட்சத்திலும் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு அரசு நிதியுதவி திட்டத்தின் கீழ் மாவட்ட நிருவாகத்தின் பங்களிப்புடன் ரூ.120 மதிப்பில் கொடைக்கானல் கோக்கர்ஸ்வாக் பசுமைப் பள்ளத்தாக்கு மற்றும் அப்பர்லேக் வியூ பகுதிகளில் நவீன உள்கட்டமைப்பு பணிகள் ரூ.45 இலட்சத்திலும், ஏரி பாலம் முதல் ஏராட்டா சாலை வரை குடிநீர் விநியோகப் பணிகள் ரூ.35 இலட்சத்திலும், வெள்ளி நீர்வீழ்ச்சி பகுதியில் நவீன விளக்கு, வசதிகள் ரூ.5 இலட்சத்திலும், கொடைக்கானல் முதல் வட்டக்கானல் வரை, சீனிவாசபுரம் முதல் வெள்ளி நீர்வீழ்ச்சி வரை, உகார்ந்தே நகர் முதல் வெள்ளி நீர்வீழ்ச்சி வரை மற்றும் லாய்ஸ்காட்ரோடு சர்ச் வரை உள்ள பகுதிகள் சாலை மேம்பாட்டுப் பணிகள் ரூ.35 இலட்சத்திலும் நடைபெற்று வருகிறது. மேற்குத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.15 இலட்சத்திலும், பகுதி–2 திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறையின் மூலம் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.10 இலட்சத்திலும் ஆக கொடைக்கானல் சுற்றுலா விளக்க காட்சி மையம் அமைக்க ரூ.25 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வருகிறது. இதுதவிர தமிழகத்தில் திண்டுக்கல் உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கொய்மலர் சாகுபடி செயல்படுத்தப்படுகிறது. ஊட்டிக்கு அடுத்தபடியாக திண்டுக்கல் மாவட்டம் கொடைக் கானலில் கொய்மலர் சாகுபடிக்கு தகுந்த தட்பவெப்ப நிலை உள்ளதால் ரோஜா, மல்லிகை, கனகாம்பரம் போன்ற மலர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.



கோடைவிழாவினையொட்டி 10 நாட்களுக்கும் தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைகளான கரகம், காவடி ஆட்டம் மற்றும் சீர்காழி சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசை நிகழ்ச்சி, பரதநாட்டியம் ஆகிய நிகழ்ச்சிகள் அரசின் சார்பில் நடத்தப்பட்டு பொதுமக்கள் அதிக அளவில் வருகை தர ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து 10 நாட்கள் பல்துறை பணி விளக்க முகாம் நடத்தப்பட்டது. அரசின் திட்டங்களை பொதுமக்கள் பார்த்து பயன்பெற்று சென்றனர். ■

# ஒற்றுமைக்கு வழிகாட்டுகிறது ஒரு கிராமம்

**உல. ரவீந்திரன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருநெல்வேலி மாவட்டம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கு இலக்கணமாகத் திகழ்கிறது திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனந்தல் அருகேயுள்ள மேசியாபுரம் கிராமம். இது ஒரு சிறிய கிராமம். ஆனால் இங்குள்ள மகளிர் ஒற்றுமையால் இன்று உயர்ந்து நிற்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்புவரை இந்த கிராமத்தினர் விவசாயக் கூலி வேலையைத்தான் செய்து வந்தனர். காலையில் விவசாயக் கூலி வேலைக்கு சென்றால் இருட்டிய பின்தான் வீடு திரும்புவர். அன்று அவர்களுக்கு கிடைத்த ஒரு நாள் கூலி ரூ.20 அல்லது ரூ.25தான்.

டான்வா மகளிர் திட்டம் இந்த கிராம மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 1997 ஆம் ஆண்டு டான்வா மகளிர் திட்டத்தின்கீழ் இந்த கிராமத்தை சார்ந்த பெண்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இதில் பயிற்சிப் பெற்ற ஜான்சிராணி என்பவரிடம் வேளாண்மைத்துறை அலுவலர்கள், உங்கள் கிராமத்தில் மகளிர் குழுக்களை அமையுங்கள்; அதன் மூலம் உங்கள் கிராமப் பெண்கள் வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துங்கள் என்றனர். மகளிர் குழுக்களை அமைக்கும் பணியில் ஜான்சிராணி ஈடுபட்டார். 110 வீடுகளை கொண்ட மேசியாபுரத்தில் உள்ள பெண்களை சந்தித்தார். இதன் மூலம் 40 பெண்களை கொண்ட இரண்டு டான்வா பண்ணை மகளிர் குழுக்களை அமைத்தார். இதனால் இக்கிராம மகளிர் தலை நிமிர்ந்தனர்.

சிறிய அளவில் நிலங்களை வைத்து விவசாயம் செய்யாமல், பிறர் நிலங்களில் உழைத்த இம்மக்கள் விழித்தெழுந்தனர். டான்வா பண்ணை மகளிர் திட்டத்தின் கீழ் இவர்கள் தங்கள் நிலங்களில் நிலக்கடலை, பயிறு போன்ற தானியங்களை பயிரிட்டனர். இதன் மூலம் இக்கிராம மக்கள் கையில் காசு சேர்ந்தது. இம்மகளிர் குழுக்களுக்கு கால்நடை வளர்ப்புத் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது. இதையடுத்து கிராம மக்கள், ஒன்றிணைந்து மகளிர் பால் கூட்டுறவு சங்கம் தொடங்கினார்கள்.

வீட்டிற்கு இரண்டு கறவை மாடுகள் வீதம் வாங்கினர். தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் குறைந்தது 20 லிட்டர் பால் கறக்கிறது. இதனால் ஒரு வீட்டிற்கு குறைந்தபட்சம் மாதம் ரூ.3 ஆயிரம் வரை வருமானம் ஈட்டுகின்றனர். இது குறித்து இக்கிராமத்தை சேர்ந்த திருமதி. பொன்னம்மாள் (வயது 32 என்பவர் கூறுகையில், "மகளிர் பால் கூட்டுறவு சங்கத்தின் மூலம் தினமும் ரூ.200 முதல் ரூ.250 வரை சம்பாதிக்கிறோம். இதில் கால்நடை தீவனம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் போக நாள் ஒன்றிற்கு ரூ.100 முதல் ரூ.125 வரை மிச்சமாகிறது. இதனால் நாங்கள் எங்கள் சொந்த காலில் நிற்கிறோம்'' என்றார்.

மேசியாபுரம் மகளிர் பால் கூட்டுறவுச் சங்கம் கடந்த 2000 ஆம் ஆண்டு சிறந்த பால் கூட்டுறவுச் சங்கமாக தேர்வு செய்யப்பட்டு விருது பெற்றுள்ளது.





## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை

### மதுரை, கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகங்கள்

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கிளை செயலகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னையில் அமைக்கப்படவேண்டும் என்றும், மதுரை, கோவை ஆகிய இடங்களில் பாஸ்போர்ட் அலுவலகங்கள் புதிதாக ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மத்திய அரசுக்கு 9.6.2007 அன்று கடிதம் எழுதி வலியுறுத்தியிருந்தார்.

மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் இக்கோரிக் கைகளை ஏற்று, 15.6.2007 அன்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் கிளைச் செயலகத்திற்கான தலைமை அலுவலகம் சென்னையில் உள்ள தமிழ்நாடு பாடநூல் கழகக் கட்டடத்தில் வரும் ஆகஸ்டு மாத ஆரம்பத்தில் தொடங்கப்படும் என்றும், மதுரையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் அமைக்கப் படுவதற்கான இடம் தேர்வு செய்யப் பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவ்வலுவலகம் செயல்படத் தொடங்கும் என்றும், கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் அமைப்பதற்காக, அங்கு அவினாசி சாலையில் உள்ள மாநகராட்சி அலுவலகப் பகுதியில் உள்ள கட்டடம் தேர்வு செய்யப்பட்டு, புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், பணிகள் முடிவடைந்த பிறகு 2007 ஆம் ஆண்டு இறுதியில் கோவையில் புதிய பாஸ்போர்ட் அலுவலகம் செயல்படத் தொடங்கும் என்றும், மாண்புமிகு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி, அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்.



ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள மில்க் டெஸ்டர் என்ற இயந்திரம் அரசு மானியத்துடன் இக்கூட்டுறவு பால் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பால் கூட்டுறவு சங்கத்தினர் தனது சேமிப்பாக ரூ.2 இலட்சம் சேமித்துள்ளனர். இதற்கெல்லாம் காரணம் இக்கிராம மக்களின் ஒன்றுபட்ட ஒற்றுமையே ஆகும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் டான்வா திட்டத்தின் தொடர்ச்சியாக வேளாண் வணிகம் மற்றும் விரிவாக்கத் திட்டத்தில் 373 மகளிர் குழுவிற்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் புளூரோட்டஸ் காளான் மூலம் மக்கிய தொழு உரம் தயாரித்தல், வேளாண் விளை பொருட்களை பதப்படுத்தி பாலிதீன் பைகளில் அடைத்து விற்பனை செய்தல், அழகு மீன்கள் வளர்த்தல், துரித உணவு தயாரித்தல், மண்புழு உரம் தயாரித்தல், தெளிப்பு நீர் பாசனம், மர நாற்றங்கால் வளர்த்தல், சான்று பெற்ற விதைகளுக்கு துணிப்பைகள் தைத்தல் மற்றும் ஸ்கிரீன் பிரிண்டிங் செய்தல், பிளாஸ்டிக் சேர்களை வாடகைக்கு கொடுத்து லாபம் சம்பாதித்தல், முந்திரி பருப்பினை பாலிதீன் பைகளில் அடைத்து லேபிள் ஒட்டி விற்பனை செய்தல் ஆகியவற்றிற்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த தொழில்கள் தொடங்குவதற்காக மகளிர் குழு ஒன்றிற்கு ரூ.3,500 வீதம் 373 குழுக்களுக்கு ரூ.13 இலட்சத்து 5 ஆயிரத்து 500 செலவில் தொழில் தொடங்கப்பட்டது. இப்பெண்கள் குழு தயாரிக்கும் பொருட்களை உலகம் முழுவதும் விளம்பரம் செய்ய www.geocities.com/cashewtanwabe என்ற இணையதளம் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

* * *

சமூக நீதி காத்த சான்றோர்

# இரட்டைமலை சீனிவாசன்

“நானும் எனது நண்பர் ராவ்பகதூர் சீனிவாசனும் ஒடுக்கப்பட்ட வகுப்பினர் இந்திய அரசியல் சட்டத்தில் எத்தகைய பாதுகாப்புகளை எதிர்பார்க்கின்றனர் என்பதைத் திட்டவட்டமாக விளக்கும் தெளிவான அறிக்கை ஒன்றை எழுத்துப் பூர்வமாக இம்மாநாட்டில் சமர்ப்பித்துள்ளோம்” என்று அண்ணல் அம்பேத்கர் ஒரு முறை கூறினார். அம்பேத்கர் அவர்கள் ராவ்பகதூர் சீனிவாசன் என்று குறிப்பிடுவது, தாழ்த்தப்பட்ட மக்களின் தன்னிகரற்ற தலைவராக விளங்கிய இரட்டைமலை சீனிவாசன் அவர்களைத் தான்.



தாழ்த்தப்பட்ட மக்களால் “தாத்தா” என்று அன்போடு அழைக்கப்படும் இரட்டைமலை சீனிவாசன், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கோழியாளம் என்ற சிற்றூரில் 1860ஆம் ஆண்டு ஜூலை மாதம் 7ஆம் நாள் பிறந்தார்.

இவரது தந்தையார் பெயர் இரட்டைமலை, தாயார் பெயர் ஆதிலெட்சுமி. தனது பெயரோடு தந்தை பெயரையும் இணைத்து இரட்டைமலை சீனிவாசன் என இவர் அழைக்கப்பட்டார்.

இரட்டைமலை சீனிவாசன் செங்கல்பட்டு மாவட்டத்தில் பிறந்திருந்தாலும் இவரது பூர்வீகம் தஞ்சாவூர் மாவட்டமாகும். இளம் வயதிலேயே தீண்டாமைக் கொடுமைக்கு இரட்டைமலை சீனிவாசன் ஆளானார். இவர் கோயம்புத்தூரில் ஒரு பள்ளியில் படித்தபோது மொத்தமுள்ள 400 பேர்களில் 10 பேர் தவிர மற்றவர்கள் உயர் ஜாதியினர். ஜாதிக் கோட்பாடுகள் கடுமையாக இருந்த அந்தக் காலத்தில் தனது ஜாதியைப் பற்றி பிற மாணவர்கள் அறிய நேர்ந்தால் தன்னைத் தாழ்வாக நடத்துவார்கள் என அஞ்சி பள்ளி மணி அடித்த பின்பு வகுப்புக்குச் செல்வதும், பள்ளி முடிந்ததும் யாருடனும் சேராமல் நேரே வேகமாக வீட்டுக்கு வருவதும் அந்தச் சிறுவனுக்குப் பழக்கமாகிவிட்டது.

அந்தச் சின்னஞ் சிறுவயதில் மற்ற பிள்ளைகளோடு கூடி விளையாட முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு இருந்துள்ளது. படிப்படியாக கல்வி கற்று உயர்ந்து கோவையிலேயே கல்லூரிக் கல்வியையும் முடித்தார். கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே அரங்கநாயகி என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். பின்பு நீலகிரியில் ஒரு ஆங்கிலேய வணிக நிறுவனத்தில் கணக்கராகப் பணியாற்றினார்.

தனது சொந்த நலனுக்காக வேலைசெய்து வந்தாலும், தமது சமுதாய நலன் குறித்து பெரும் கவலை கொண்டதாகவே அவரது மனம் இருந்தது. 10 ஆண்டுகள் அந்நிறுவனத்தில் பணியாற்றியபோது தீண்டாமையை எப்படி ஒழிப்பது என்பதே அவரது எண்ண ஓட்டமாக இருந்தது.

1890 இல் சென்னைக்கு வந்த இரட்டைமலை சீனிவாசன், இதர வகுப்பினரைப் போல தமது வகுப்பாரையும் மேல்நிலைக்குக்கொண்டு வருவது குறித்து 3 ஆண்டுகள் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து தமது சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுப்பது என்ற முடிவுக்கு வந்தார். இந்தக் காலகட்டத்தில்தான் 1891இல் பறையர் மகாஜன சபை என்ற அமைப்பையும், 1893 அக்டோபர் திங்களில் ‘பறையன்’ என்ற தமிழ் இதழையும், இரட்டைமலை சீனிவாசன் தொடங்கினார். இதே காலகட்டத்தில் வாழ்ந்துவந்தவரும் பவுத்தம் குறித்து, பல்வேறு பணிகளைச் செய்துவந்தவருமான க.அயோத்திதாச பண்டிதரின் மைத்துனர்தான் இரட்டைமலை சீனிவாசன் என்பது குறிப்பிடத்தக்கது.

தனது இதழ் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத்தர குரல் கொடுப்பது, தீண்டாமையை எதிர்ப்பது, நல்லொழுக்கங்களைப் போதிப்பது என பல தொண்டுகளைச் செய்துவந்தார்.

1900 இல் இந்தியாவிலிருந்து புறப்பட்டு லண்டனுக்குச் சென்ற இரட்டைமலை சீனிவாசன், பின்னர் அங்கிருந்து ஆப்பிரிக்காவின் ஜான்சிபாரில் தங்கியிருந்து, அதன்பின்பு தென் ஆப்பிரிக்கா சென்றார். அங்கு ‘நெட்டா’வில் தங்கி நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார். அதோடு அங்கு வழக்கறிஞராகப் பணியாற்றிய மகாத்மா காந்தியடிகளுக்கு மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தார். இந்த காலத்தில் தான் காந்தியடிகளுக்கு தமிழ்மொழியையும், மோ.க.காந்தி என தமிழில் கையெழுத்திடவும் இரட்டைமலை சீனிவாசன் கற்றுத்தந்தார் என்பது குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க நிகழ்வாகும்.

1921 இல் சென்னை திரும்பிய இரட்டைமலை சீனிவாசன், நீதிக்கட்சியுடன் இணைந்து செயல்பட்டார். 1923 முதல் 1938ஆம் ஆண்டு வரை சென்னை ராஜதானியின் மேல்சபைக்கு நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டு பணியாற்றினார்.

‘தாழ்த்தப்பட்ட மக்கள் பொதுச்சாலைகளில் நடக்கவும், பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கவும் அனுமதிக்கவேண்டும்’ என்று, 1924ஆம் ஆண்டு ஆகஸ்டு 25ல் இவர் கொண்டுவந்த தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டு அரசிதழிலும் பதிவு செய்தது.

சட்டசபையிலும் மக்கள் மன்றத்திலும் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்டுவந்த இரட்டைமலை சீனிவாசனுக்கு 1926 ஜனவரி 1ல் ‘ராவ்சாகிப்’ என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1928ல் The Madras Provincial Depressed Classes Federation என்ற அமைப்பை நிறுவினார். இதன் பின்னர், 1930ல் ராவ்பகதூர் பட்டமும், 1936ல் திவான் பகதூர் பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

லண்டனில் 1930, 31, 32 ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று வட்டமேஜை மாநாடுகளிலும் சென்னை மாநிலத்தின் சார்பாக இரட்டைமலை சீனிவாசனும் பம்பாய் மாநிலத்தின் சார்பாக அண்ணல் அம்பேத்கரும் தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின் பிரதிநிதிகளாக கலந்துகொண்டனர்.

“தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியலில் அதிகாரம் வழங்கினால்தான் தீண்டாமை ஒழியும். சட்டசபையிலும் அம்மக்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களின் வாழ்க்கை முன்னேற்ற மடையும் என இரட்டைமலை சீனிவாசன் முதல் வட்ட மேஜை மாநாட்டில் உரையாற்றியது குறிப்பிடத்தக்க தாகும்.

தனது வயது முதிர்ந்த காலத்திலும் தாழ்த்தப்பட்ட மக்களக்காகவே குரல் கொடுத்து போராடிவந்த இரட்டைமலை சீனிவாசன், தமது 85ஆவது வயதில் 1945 செப்டம்பர் 18ஆம் நாள் காலமானார்.

*வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களை மேன்மை தாங்கிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், ராணியும் வின்சர்காஸ்டல் என்னும் ராஜ் மாளிகைக்கு மூன்றுமுறை வரச்செய்து, கை குலுக்கி விருந்தளித்தனர். மன்னரிடம் பின்னுமோர்முறை இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் சந்தித்துப்பேச நேர்ந்தது. அவ்வமயம் மன்னர் ‘தீண்டாமை என்றால் என்ன ? என்று திரு.இரட்டைமலை சீனிவாசன் அவர்களைக் கண்டு வினவினார். அதற்கு அவர், ‘மேல் ஜாதியான் என்போன் கீழ் ஜாதியான் என்போனைத் தீண்டமாட்டான்’ என்று பதிலளித்தார். உடனே மன்னர் “ஒரு கீழ் ஜாதியான் தெருவில் வீழ்ந்துவிட்டால் மேல்ஜாதியான் தூக்கிவிடமாட்டானா ?” என்று மேலும் வினவினார். அதற்கு இரட்டைமலை சீனிவாசன் “தூக்கி விடமாட்டான்” என்று பதிலளித்தார். அதை மன்னர் கேட்டுத் திடுக்கிட்டுநின்று “அவ்விதம்நடக்க என் அரசாட்சியில் விடமாட்டேன்” என்றார்.*

– *தி.பெரியார் சாக்ரடீசு*

### வேலூர் மாவட்டத்தில்

# அரசின் உதவியால் வளம் பெற்ற பண்ணை மகளிர்

ஆ. ராஜா,
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*வேலூர் மாவட்டம்.*

*அரசின் திட்டங்களைப் பெற்று ஒன்றுபட்டு உழைத்தால் உயர்வு நிச்சயம் என்பதைப் பறைசாற்றுகிறது ஒரு பண்ணை மகளிர் குழு. எப்படி உயர்ந்தோம் என்பதை விளக்கமாகக் கூறுகிறார்கள் அந்தப் பண்ணை மகளிர் குழுவினர். அரசின் உதவியால் பயன்பெற்ற நெஞ்சங்கள் இதோ பேசுகின்றன :–*

**"வே**லூர் மாவட்டம் ஆற்காடு வட்டத்தில் உள்ளது கத்தியவாடி என்ற சிறு கிராமம். இந்த கிராமத்தில் வாழ்க்கையின் அடித்தளத்தில் ஏழ்மையில் இருந்த நாங்கள் வேளாண்மைத் துறையின் டான்வாபி திட்டத்தின் மூலம் பண்ணை மகளிர் பயிற்சி பெற்று நாங்கள் 18 பேர் சேர்ந்து டான்வாபி பண்ணை மகளிர் குழுவினை ஆரம்பித்தோம். தலா 50 ரூபாய் வீதம் சிறுசேமிப்பு செய்து அருங்குன்றம் இந்தியன் வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கினோம். மாத சேமிப்பை வங்கியிலிருந்து எடுத்து உறுப்பினரின் அவசிய அவசரத் தேவைக்கு குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து எங்களின் குழு உறுப்பினர்களின் குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்தோம். 2004 ஆம் ஆண்டு இந்தியன் வங்கியின் மூலம் 10 இலட்சம் ரூபாய் மானியக் கடனை நமது வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் கையால் மகிழ்ச்சியுடன் பெற்று 7 ஏக்கர் தரிசு நிலத்தினை குழுவிற்காக விலைக்கு வாங்கி கடும் முயற்சியால்







ஆழ்துளைக் கிணறு அமைத்து அதன் மூலம் பெறும் நீரைப் பயன்படுத்தி 2005–2006 ஆம் ஆண்டு மணிலா, உளுந்து விதைப் பண்ணைகள் அமைத்து தரமான விதைகளை ஆற்காடு வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு விநியோகம் செய்தோம். அதன் மூலம் ரூ.25,000 இலாபம் பெற்றோம். இந்த ஆண்டு குழி முறையில் 3 ஏக்கர் கரும்பு நடவு செய்து சொட்டுநீர்ப் பாசனம் மூலம் உரம் மற்றும் தண்ணீர் விநியோகம் செய்து விதைக் கரணைகளுக்காக 6 மாதத்தில் அறுவடை செய்தோம். அதனை ஆற்காடு கூட்டுறவு கரும்பு அலுவலகத்திற்கு விநியோகம் செய்து அதன் மூலம் 1,20,000 ரூபாய் இலாபம் பெற்றோம். ஆற்காடு வேளாண்மைத் துறையினை அணுகி அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளையும் பெற்றுப் பயனடைகிறோம்.

2006–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வேளாண்மைத் துறை ஆணையர் எங்கள் கரும்பு வயலையும், உழைப்பையும் பார்வையிட்டு கரும்பில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்ததற்கு அரசு மானியம் ரூ.25,000/– பெற ஆணை வழங்கினார். மேலும் வேளாண்மைத் துறையின் மூலம் பருப்பு உடைக்கும் கருவியை எங்கள் குழுவிற்காகப் பெற்று, அனைவருக்கும் குறைவான விலையில் பருப்பு உடைத்தல் மற்றும் கேழ்வரகு கோதுமை மாவு ஆகியனவற்றை அரைத்துக் கொடுக்கிறோம். இவை அனைத்திலும் வரும் வருமானம் மூலம் குழுவிலுள்ள 18 பேருக்கும் 2 பவுன் தங்கச் சங்கிலி வாங்கிக் கொடுத்துள்ளோம். மேலும் வங்கியில் பெற்ற கடனில் ரூ.1,00,000/– திருப்பிச் செலுத்தி உள்ளோம். இதன் மூலம் எங்களால் சொந்தக் காலில் நிற்கமுடியும் என்ற தன்னம்பிக்கை அதிகரித்து குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சி பெருகியதுடன் குடும்பத்தார் மதிக்கும் நிலைக்கு உயர்த்துள்ளோம் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களுடைய நிலத்தில் தினமும் 2 பேர் சுழற்சி முறையில் பணியாற்றி வருகிறோம்.

நடப்பு ஆண்டில் வேளாண்மைத் துறையின் மூலம் பயோ கண்ட்ரோல் லேப் எங்கள் கிராமத்தில் எங்கள் குழுவிற்கு அமைத்து கொடுக்க 5 இலட்ச ரூபாய் சுழல் நிதி வழங்கி உதவி செய்துள்ளனர். இந்த ஆய்வகத்தில் டிரைகோடர்மா விரிடி மற்றும் குடோமோனஸ் பூஞ்சாணத்தை நாங்களே தயாரிக்க எங்களுக்குப் பயிற்சி அளித்தனர். எங்கள் ஆய்வகத்தில் தயாரிக்கும் இந்த மருந்தினை வேளாண்மைத் துறையின் விரிவாக்க மையங்களில் குழுவின் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் மூலம் நாங்கள் தொழில்நுட்ப ரீதியாக திறமை சாலிகளாக மாறிவருவதுடன் எங்கள் குழு உறுப்பினர்களுக்கு நிரந்தர வேலை கிடைப்பதால் வருமானம் பெருகி எங்கள் குடும்ப பொருளாதாரம் மென்மேலும் வளர்ந்துள்ளது. எங்களின் இந்த பொன்னான வாழ்க்கைக்கு உறுதுணையாக, ஏணிப்படிகளாக இருந்த தமிழக அரசின் வேளாண்மைத் துறையினருக்கு எங்கள் குழுவின் சார்பில் சிரம் தாழ்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறோம்''. ※

# இண்டஸ்

## குழந்தைத் தொழிலாளர் திட்டம்

நாமக்கல் மாவட்டத்தில் இண்டஸ் குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின் கீழ் 9 – 13 வயதுடைய குழந்தைத் தொழிலாளர்களை கண்டறிந்து அவர்களை மீட்டு, இத்திட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இணைப்புக் கல்வி மையங்களில் சேர்த்து கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மாவட்டம் முழுவதும் 41 இணைப்புக் கல்வி மையங்களில் 1,671 குழந்தைகள் படிக்கிறார்கள். குழந்தைகளுக்கு இலவச உணவு, இலவச புத்தகம், இலவச சீருடை வழங்கப்படுகின்றது. அனைத்து குழந்தைகளுக்கும் உதவித் தொகையாக மாதம் ரூ.100 வழங்கப்படுகின்றது. ஆடல், பாடல், நாடகக் கலை வடிவில் பாடம் மற்றும் தொழிற்கல்வி கற்பிக்கப்படுகின்றது.

**கி. கண்ணதாசன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**நாமக்கல் மாவட்டம்**



இதுவரை இணைப்புக் கல்வி மையங்களில் படித்து வந்த 688 குழந்தைகள் முறைசார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு படித்து வருகின்றனர். இக்குழந்தைகள் இண்டஸ் திட்ட களப்பணியாளர்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

### ஆசிரியர்களுக்குப் பயிற்சி

இண்டஸ் இணைப்பு கல்வி மையங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையம் மூலமும், அனைவருக்கும் கல்வி திட்டம் மூலமும் ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழிற்கல்வி பயிற்சி, சிறார் நாடகக் கலைப் பயிற்சி, வள மையப் பயிற்சி, வகுப்பறை பாடங்கள், விளையாட்டுகள் போன்றவை தேர்ந்த வல்லுநர்கள் மூலம் அளிக்கப் பட்டுள்ளது.



### மருத்துவ வசதி

இணைப்புக் கல்வி மையங்களில் படிக்கும் குழந்தைகளுக்கு உடல் நல பரிசோதனை மாதந்தோறும் அந்தந்த பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மூலம் செய்யப்பட்டு வருகின்றது.






ஒவ்வொரு இணைப்பு கல்வி மையத்திற்கும் ரூ.600 மதிப்பில் முதல் உதவி பெட்டி வழங்கப் பட்டுள்ளது.

### சுயஉதவிக் குழுக்கள்

குழந்தை தொழிலாளர்களின் பெற்றோர்களை மட்டும் உறுப்பினராகக் கொண்டு 42 மகளிர் சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இண்டஸ் திட்டத்தின் மூலம் குழுவில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுழல்நிதி ரூ.2,000 வீதம் வழங்கப்படுகிறது. மேலும் மகளிர் திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட தொழில் மையம் ஆகிய துறைகளுடன் இணைந்து தொழிற்பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் NABARD, SGRY THADCO மற்றும் திட்டங்களின் மூலம் மானியத்துடன் கூடிய கடன் உதவிகள் மற்றும் வங்கிகள் மூலம் நேரடிக் கடன் உதவிகள் ஆகியவை ஏற்பாடு செய்யப் படுகின்றன. திட்டத்தின் மூலம் இண்டஸ் சுய உதவி குழுக்களின் ஊக்குனர் மற்றும் பிரதிநிதிகளுக்கும் இண்டஸ் பணியாளர்கள் களப்பணி ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் சமுதாய தன்னார்வ பணியாளர் களுக்கும், சுயஉதவிக் குழுக்கள் நடத்துதல் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட நிருவாகம் மூலம் அரசு மூலம் அளிக்கப்படும் பல்வேறு நலத் திட்ட உதவிகளான ஆதரவற்ற விதவைகள் / முதியோர் / கணவனால் கைவிடப்பட்டோர் / உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை மற்றும் சிறுபான்மையினத்தவருக்கு கடன் உதவி மற்றும் மானியம் வழங்குதல் ஆகியவற்றில் குழந்தைத் தொழிலாளர் களின் பெற்றோர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

### குழந்தைத் தொழிலாளர்களை மீட்க எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள்

குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் உள்ள கிராம பகுதிகளில் இண்டஸ் திட்டத்தின் மூலம் சிறப்பு கிராம கல்வி குழு அமைக்கப்பட்டு, குழந்தைகளின் நிலை கண்டறியப்படுகின்றது. அந்தந்த கிராமப் பகுதிகளில் பணிபுரியும் குழந்தைகளின் பெற்றோர்களை குழு உறுப்பினர்கள் சந்தித்துப் பேசி குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வருகின்றனர். கல்வியறிவு இல்லாத குழந்தைகளுக்கு தன்னார்வ பணியாளர் மூலம் சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. பணிபுரியும் குழந்தைகளை மீட்க திருச்செங்கோடு மற்றும் நாமக்கல் கோட்டாட்சியர் தலைமையில் சிறப்பு கண்காணிப்புக்குழு மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்டு திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.



## குழந்தைத் தொழிலாளர் பள்ளியில் பயின்ற சில குழந்தைகளின் பேட்டி

ஆர்.ஜீவானந்தம்
குழந்தை தொழிலாளர் பள்ளி
புத்தர் தெரு
குமாரபாளையம்



நான் சங்ககிரியில் உள்ள சின்னாகவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 7ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது என் குடும்பத்தின் வறுமை காரணமாக பள்ளியை விட்டு நிற்கும் நிர்பந்தம் ஏற்பட்டது. நாங்கள் எங்கள் ஊரை விட்டு குமாரபாளையம் வந்து சேர்ந்தோம். இந்த ஊருக்கு வந்து சேர்ந்த பிறகு வேலைக்குச் சென்றுக் கொண்டிருந்தேன். அப்பொழுது SRET தொண்டு மூலம் – Annai Terasa Indus Child Labour School ஆரம்பிக்கப்பட்டதைப் பற்றி நான் அறிந்தேன். நான் கற்ற கல்வி கனவாகி விட்டது என்று நினைத்திருந்தபோது இண்டஸ் பள்ளியை பற்றி ஆசிரியர்கள் வந்து கூறினார்கள். அதனால் என் படிப்பின் ஆர்வம் அதிகமாகிவிட்டது. இக்காரணத்தால் இப்பள்ளியில் வந்து சேர்ந்தேன். நான் அங்கு பாதியில் விட்ட என் கல்வியைத் தொடர்ந்த கற்க இப்பள்ளி எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. இங்கு நான் 7ஆம் வகுப்பு படித்து வந்தேன். எனக்கு படிப்பின் ஆர்வத்தை போலவே மற்றவற்றிலும் ஆர்வம் அதிகம் இருந்தது. பேப்பரில் பொம்மை, விலங்குகள், வீடுகள் போன்ற சிறு சிறு பொருட்கள் செய்வதில் ஆர்வம் எனக்கு உண்டு மற்றும் எலக்ட்ரானிக்ஸ் சம்மந்தப்பட்ட பொருட்கள் செய்யவும் எனக்குத் தெரியும். நான் இங்கு 7ம் வகுப்பு முடித்து விட்டேன். பிறகு என்னை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் 8ஆம் வகுப்பில் சேர்த்து விட்டார்கள்.

## கோ - ஆப்டெக்ஸ்

### வைகாசி வசந்தம் கைத்தறி கண்காட்சி

CO-OPTEX INTERNATIONAL

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் திரு.என்.கே.கே.பி. ராஜா அவர்கள் 2006 – 2007 ஆம் ஆண்டு கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின்போது, கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில், முதற் கட்டமாக 5 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப் படும் என்று அறிவித்தார்கள். இதனடிப்படையில், சென்னை மயிலாப்பூரில் உள்ள மயிலை கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், மதுரையில் கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி மாளிகை, வேலூர் கோ–ஆப்டெக்ஸ் தீபம் விற்பனை நிலையம் ஆகியவை குளிர்ச்சாதன வசதியுடன் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, குளிர்ச்சாதன வசதியுடன் நவீனப்படுத்தப்பட்ட சென்னை புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள கோ–ஆப்டெக்ஸ் கற்பகம் விற்பனை நிலையத்தை, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 7.6.2007 அன்று திறந்து வைத்து, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்ய புதிய இரக சேலையை அறிமுகப்படுத்தி, "வைகாசி வசந்தம் கைத்தறி கண்காட்சியை" தொடங்கி வைத்தார்கள்.

இங்கு பட்டுப் புடவைகள், கோரா சேலைகள், வனவாசி பருத்தி சேலைகள், மதுரை சுங்குடி சேலைகள், சிறுமுகை சேலைகள், பரமக்குடி சேலைகள், திருச்சி ஜெயங்கொண்டம் பருத்தி சேலைகள், வண்ண வண்ண சுடிதார்கள், ரெடிமேட் சட்டைகள், நைட்டிகள், போர்வைகள், துண்டுகள் வேட்டிகள், லுங்கிகள் ஆகியவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

"மேஜிக் டிசைன்" பட்டு சேலைகளில் ஒரே வடிவமைப்பில் இரண்டு விதமான வடிவமைப்புகள் தெரியும் வண்ணம் புதியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டுச் சேலையில் யானையின் உருவத்தை ஒரு கோணத்திலும், மயில் உருவத்தை மற்றொரு கோணத்திலும் காணலாம். மேஜிக் பட்டு இரக சேலைகள் காஞ்சிபுரம் பகுதியில் தூய ஜரிகையினால் நெய்யப்பட்டுள்ளது. இந்த பட்டுச் சேலையின் எடை 1,100 கிராம். மேஜிக் பட்டுச் சேலையின் நிகர விலை ரூ.35,000. இந்தச் சேலையை உபயோகாப்படுத்தும்பொழுது இரண்டு வகையான மேஜிக் வடிவமைப்புகளை மற்றவர்களால் காண முடியும்.

"வைகாசி வசந்தம்" கண்காட்சியில் புதிய வடிவமைப்புகளுடன் கூடிய பருத்தி இரக சேலைகள் ஜெயங்கொண்டம், உறையூர், சிறுமுகை புதூர், நெகமம், பரமக்குடி, வனவாசி ஆகிய இடங்களிலும் கோரப்பட்டு இரக சேலைகள் கோவையிலும் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இந்த பருத்தி இரக சேலைகள், ரூ.325 முதல் ரூ.1,000 வரையிலும் கோரா பட்டு இரக சேலைகள் ரூ.600 முதல் 1,500வரையிலும் உள்ளது. இதை தவிர மலிவு விலையில் மதுரை பருத்தி சேலைகள் ரூ.180 க்கும் அச்சிடப்பட்ட வண்ண பருத்தி சேலைகள் ரூ.170க்கு ம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும், தேசிய வடிவமைப்பு நிறுவனம் (NID) வடிவமைப்பில் உருவான பத்தி இரக சேலைகள் ரூ.600 முதல் ரூ.1,000 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் கற்பகம் விற்பனை நிலையம் ரூ.64 இலட்சம் அளவிற்கு விற்பனை செய்துள்ளது. நடப்பாண்டில் ரூ.2 கோடி விற்பனை செய்ய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ★






செ.ம.தொ.இ / 602 / வரைகலை / 2007

R.N.I. No.21446/70-Regn.
TN/PMG(CCR)WE



# தமிழரசு

ஆகஸ்ட் 2007
விலை ரூ.10/-

செய்தி மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 24.07.2007 அன்று, ஈரோட்டில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான மண்டலக் கருத்தரங்கில் பங்கேற்று குடிநீர் மற்றும் சுகாதாரம் குறித்த தகவல் கையேட்டினை வெளியிட, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. பொங்கலூர் நா.பழனிச்சாமி அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

# தமிழரசு


செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2038

ஆடி - ஆவணி ஆகஸ்ட் 2007

மலர் : 39 இதழ் : 2



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,இ.ஆ.ப.,**
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க.இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வி.இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ.ஜெயசிம்மன்**

புகைப்படக்காரர்

**வி.ராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்**
**ஆர்.பூரணசி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.

தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in


**குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கும் உலகு**

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின்
அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


❖ சுதந்திரத் திருநாள் விழா ..... 2
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை

❖ மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு ..... 10

❖ டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறி இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது - திருமதி.சோனியாகாந்தி அவர்கள் புகழாரம் ..... 11

❖ மத்திய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசு தொடர்ந்து ஒத்துழைப்பை நல்கி வருகின்றது - மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 13

❖ மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (ம) காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 18

❖ தமிழகத்தையே பூங்காவாக மாற்றுவோம்
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரை ..... 49

❖ அமர்த்தியா சென் ஆய்ந்து அறிவிப்பது என்ன?
- மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிக்கை ..... 55

❖ கிருஷ்ணகிரியில் உலகத்தரத்தில் ரூ.2,300 கோடி மதிப்பில் புதிய தொழில் மையம் ..... 58

❖ இந்தியாவிலேயே அதிக மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது ..... 60

❖ உள்ளாட்சித்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாராட்டு ..... 62

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜுன் சிங் அவர்கள் சந்திப்பு ..... 64

❖ தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் அரசு கால்நடை மருத்துவமனைகளில் 220 கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம் ..... 65

❖ வேலை உறுதியளிப்புத் திட்டம் - இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறப்பாகச் செயல்படுகிறது
- மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ..... 66

❖ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் புதிய உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணையினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார் ..... 68

❖ மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏழு மாவட்ட கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்ற மண்டல கருத்தரங்கம் ..... 70

❖ போக்குவரத்துக் கழகங்களில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணை - மாண்புமிகு ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார் ..... 74

❖ சென்னைப் பெருநகர வளர்ச்சிக்காக அரசு பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் ..... 77


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* **சுதந்திரத்திருநாள் விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேசியக்கொடியை ஏற்றினார்** (15.8.2007)

*நான்காம் பக்க அட்டை :* **மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்தித்தார்கள்** (25.7.2007)

# சுதந்திரத் திருநாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் **மு. கருணாநிதி** அவர்களின்
சுதந்திரத் திருநாள் உரை - 15.8.2007







**தா**ய்மார்களே,

பெரியோர்களே,

உழைக்கும் வர்க்கமே,

உயிரினும் மேலான
என் அன்பு உடன்பிறப்புக்களே,

இந்நாள் ஆகஸ்டு 15 –

இந்தத் திருநாடு விடுதலை பெற உழைத்த – உயிர் விடுத்த – சிறைப்பட்ட – தியாகத் திரு விளக்குகளின் திருவடிகளில் சிரம் வைத்து, கரம் குவித்துத் தொழுதிடுவோம்.

**"ஏற்றுக் கொண்டுள்ள சூளுரையாம்
ஏழையின் சிரிப்பில் இறைவனைக்
காண்போம்"**

என்ற அண்ணாவின் அமுத மொழி – ஏட்டில், எழுத்தில், சொல்லில், கல்லில் என்று மட்டுமல்லாமல் நம் இதயத் துடிப்பில் மூச்சிலே இழையோடும் புரட்சி கீதமாக ஒலித்துக் கொண்டேயிருப்பதற்கு இந்நாள் நமக்கு ஊக்கமளிக்கட்டும் – ஆக்கமும் – தாக்கமும் – அதற்கென அமையட்டும்!

விடுதலைப் போரில் ஈடுபட்ட வீரர்களின் எண்ணிக்கைக்கு ஏறத்தாழ நிகரானது வீராங்கனைகளின் எண்ணிக்கை என்பதை நினைத்துப் பார்க்குமிடத்து நாடு சுதந்திரம் அடைந்த அறுபதாண்டுகள் கடந்து 61–வது ஆண்டு தொடங்கும் வேளையில் நமது நாட்டின் குடியரசுத் தலைவராக பெண்மணிகளில் ஓர் மாமணியாம் திருமதி. பிரதிபா பட்டீல் அவர்கள் பொறுப்பேற்றிருப்பது, நமக்குப் பொற்காலம் உதயமாகிறது என்பதை உணர்த்தும் ஓர் வெற்றி விடியல் அன்றோ!

"கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு" என்று அண்ணல் காந்தியடிகள் சொன்ன வாசகத்தை மறவாமல் – நாடு, நகரம், கிராமம், குக்கிராமம், பட்டிதொட்டி அனைத்திலும் இந்த அரசின் பணிகள் பரவலாக நடைபெற்று வருகின்றன. அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, மின்சாரம், மருத்துவ வசதி, உணவு, உடை, உறைவிடம் போன்ற மக்களின் தேவைகளை

நிறைவு செய்யவேண்டும் என்ற குறிக்கோளை நோக்கித்தான், இந்த அரசின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

"வீடுகள் தோறும் கலையின் விளக்கம் வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி" என்று பாடிய பாரதியாரைப் போல, தெருவெங்கும் பள்ளிகளை அமைத்துத் தந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களைத் தொடர்ந்து, கல்வி வளர்ச்சிப் பணிகளில், குறிப்பாக உயர்கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டு, இன்றைய அரசும் பல கல்வி நிறுவனங்களை வளர்த்து, மாணவ மாணவியர்க்கும், இளைஞர்களுக்கும் ஏராளமான சலுகைகளை வழங்கி வருகின்ற காரணத்தினால் படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்த இளைஞர் பட்டாளத்தின் வேலை வாய்ப்பினைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் இந்த ஆட்சி அமைந்த கடந்த 15 மாதங்களில், 11 ஆயிரத்து 83 கோடி ரூபாய் முதலீட்டில் 11 புதிய தொழில்கள் தொடங்கப்படுவதற்கும், அவற்றின் மூலம் ஏறத்தாழ 1 இலட்சத்து 25 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாவதற்கும், இந்த அரசு வழி வகுத்துத் தந்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத் தொழில்கள் அதிக அளவில் வேலைவாய்ப்புகளை அளித்து வருகின்ற காரணத்தினால் இத்துறை சார்ந்த தொழில்கள் சென்னையிலும், புறநகரங்களிலும் வளர்ந்துள்ளதைப் போல இத்தொழில் மதுரை, கோவை, நெல்லை, திருச்சி, சேலம் ஆகிய மாநகராட்சிப் பகுதிகளிலும் வேகமாக வளர்வதற்கு இந்த அரசு வழி வகுத்துள்ளது.

மாநில அரசு, மத்திய அரசுடன் கொண்டிருக்கும் இணக்கமான நல்லுறவின் அடையாளங்களாக 2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேது சமுத்திரத் திட்டம், தமிழர்களின் நூறாண்டு காலக் கனவான தமிழ் செம்மொழி என்ற





பிரகடனம், சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம், 1,553 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் சேலம் உருட்டாலை சர்வதேச அளவிற்கு தரம் உயர்த்தப்பட்டு புதிய குளிர் உருட்டாலை போன்ற திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

சுதந்திரத்தின் பயன் ஒவ்வொருவருக்கும் கிடைத்திட வேண்டும் எனும் நோக்குடன், பல



சமூகநலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, அவற்றின் மூலம் ஒவ்வொரு குடும்பமும் பயன்பெற்று வருவதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி உங்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் கிடைக்கிறது.

ஏழை எளிய தாய்மார்களின் இதயம் குளிர, நியாய விலைக் கடைகள் மூலம் துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில், ரவை, மைதா ஆகியவைகள் குறைந்த விலையில் வழங்கப்படுவதுடன், தற்போது ஆட்டா மாவும் வழங்கிட அனுமதிக்கப் பட்டுள்ளது.

வரலாற்றில் இதுவரையில் இல்லா வகையில், 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, கிராமம் தோறும் பலர் பயன் பெற்றுள்ளதை நீங்கள் காணமுடியும்.

எல்லோருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது. பயன் பெற்றோர் மகிழ, மற்றவர்களையும் தேடி வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வந்து கொண்டிருக்கின்றன.

அடுப்பு ஊதும் பெண்களின் அல்லல் தீர்த்திட 3 இலட்சம் எரிவாயு இணைப்புகளுடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டு, இவ்வாண்டில் மேலும் 15 இலட்சம் குடும்பங்களுக்குத் தொடர்ந்து வழங்கப்பட உள்ளன.



91 ஆயிரத்து 576 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு 1 இலட்சத்து ஓராயிரத்து 623 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கப்பட்டு பயன்பெற்றுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் மூன்று மாதத்திற்கு ஒருமுறை நிலம் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

10 ஆண்டுகளுக்கு மேல் அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி வாழும் 61 ஆயிரத்து 211 குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறங்களில் 1 இலட்சத்து 51 ஆயிரத்து 453 மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றுக்கு 20 இலட்ச ரூபாய் வீதம் 5 ஆயிரத்து 75 ஊராட்சிகளுக்கு, 1,015 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் சாலை, குடிநீர், சுகாதாரம் மற்றும் மின்வசதி முதலிய அடிப்படை வசதிகள் முழுமை பெறுகின்றன.

பேரூராட்சி ஒன்றுக்கு 50 இலட்ச ரூபாய் வீதம் 561 பேரூராட்சிகளுக்கு, 280 கோடியே 50 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டு, அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், பேரூராட்சிப் பகுதிகள் அனைத்திலும் அடிப்படை வசதிகள் முழுமை பெறுகின்றன.

எஞ்சிய ஊராட்சி, பேரூராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டங்கள் தொடர்ந்து விரிவுபடுத்தப்படுகின்றன.

குழந்தைகளின் உடல் நலம் பேணிட, 71 இலட்சம் குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்க்குச் சத்துணவுடன் வாரம் 3 முட்டைகள் அளிக்கப்பட்டு உங்கள் வீட்டுக் குழந்தைகள் பயன் பெற்று வருவதை பாராட்டாதார் எவர் உளர்?

வேலை வாய்ப்பினைத் தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் விரக்தி அடைவதைத் தடுத்து, ஊக்கமளித்திட, மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டத்தில் 3 இலட்சத்து 38 ஆயிரத்து 818 படித்த இளைஞர்கள் பயன்பெறுகின்றனர். இவர்களில் சிலர், உங்கள் குடும்பப் பிள்ளைகளாகவோ,



உங்கள் வீடுகளின் அருகில் உள்ளவர் களாகவோ இருந்திடக் கூடும்.

படித்த இளைஞர்களில், இதுவரை ஒரு இலட்சத்து 80 ஆயிரத்து 797 பேர் வேலை வாய்ப்பைப் பெற ஆணைகள் இட்டு, பணியில் அமர்த்தி அழகு பார்க்கிறது இந்த அரசு.

விவசாயத் தொழிலாளர்கள், உடல் உழைப்பு தொடர்பான பல்வேறு




தொழில்களில் ஆங்காங்கே ஈடுபட்டுள்ள அமைப்புசாராத் தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் என அனைவருக்கும் தனித்தனி நல வாரியங்கள் மூலம் உதவித் தொகைகள் அளிக்கப்படுகின்றன.

முதியோர் உதவித் தொகை 200 ரூபாய் என்பது 400 ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

10ஆம் வகுப்பு படித்த பெண்களின் திருமண உதவிக்காக வழங்கப்பட்ட 10 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை இடையில் நிறுத்தப்பட்டிருந்ததையும், தற்போது இந்த அரசினால் அது 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப் படுவதையும் உங்கள் குடும்பத்திலோ, அருகிலுள்ள குடும்பங்களிலோ பயன் பெறுவோரைக் கண்டு நீங்கள் உணர்ந்திட முடியும்.

இந்த அரசின் “வருமுன் காப்போம் திட்டம்” உங்கள் நலம் காக்கும் திட்டம். பயன்பெற வேண்டுகிறேன்.

மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற இந்த அரசின் கொள்கைப்படி, விழுப்புரம், திருவாரூர், தருமபுரி ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன.

2 ஆயிரத்து 327 புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளன. மேலும் 3 ஆயிரம் புதிய பேருந்துகள் நடப்பு ஆண்டில் மக்கள் சேவையில் அணிவகுக்க இருக்கின்றன.

ஏழை விவசாயிகளும், எளிய நுகர்வோரும் மகிழ்ந்து போற்றிய உழவர் சந்தைகள் முடங்கிக் கிடந்ததை மறந்திருக்க மாட்டீர்கள். அந்த உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. மீண்டும் கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சைக்கு 70 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கி ஏழை எளிய குடும்பங்களைக் காத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இப்படி ஏழை எளியவர்களின் நலன்கள் காத்திட வேண்டுமானால் சுதந்திரத்தின் பயன் ஒவ்வொருவருக்கும் கிடைத்திட வேண்டும். அதற்குரிய பணிகள் அரசு மூலம் தொடர்ந்து நடைபெறவேண்டும். இவை



பயன்தந்துவரும் 103 உழவர் சந்தைகளுடன், மேலும் 50 புதிய உழவர் சந்தைகள் ஓரிரு மாதங்களில் அமைக்கப்பட உள்ளன.

சாமான்ய மக்களையும் அச்சுறுத்தி வரும் இதயநோயிலிருந்து காத்திட, ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த குழந்தைகளுக்குத் தனியார் மருத்துவமனைகளில் இதயத்தை திறக்காமல் செய்யப்படும் சாதாரண இதய அறுவை சிகிச்சைக்கு 10 ஆயிரம் ரூபாயும், சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சைக்கு 30 ஆயிரம் ரூபாயும், என்றும் எம் சிந்தையை விட்டு அகன்றிடவில்லை. இந்த உணர்வோடுதான் ஒவ்வொரு நாளும் நாம் கடமையாற்றுகிறோம்.

உங்களிடம் வாக்குறுதி அளித்து, வாக்குகளைப் பெற்று, ஆட்சி அமைத்து, பொறுப்பேற்ற அந்தக் கணத்திலிருந்து இந்தக் கணம் வரை,

என் தமிழ்நாடு,
என்னுடைய தமிழக மக்கள்,
என் அருமைத் தமிழ்மொழி



என்ற உணர்வோடு தான் திட்டங்களைச் சிந்திக்கிறேன்; தோழமை கண்டுள்ள நண்பர்களின் துணையோடு அவற்றைச் செயல்படுத்துகிறேன். உங்கள் வாழ்வு சிறக்க, தமிழகம் செழிக்க ஓய்வு ஒழிவின்றிச் செயலாற்றி வருகிறேன்.

தமிழகம் இந்தியாவின் இதர மாநிலங்களுக்குப் பல வழிகளில் முன்னோடியாக நின்று வழிகாட்டுகிறது என்று அண்மையில் திருமதி. சோனியாகாந்தி அவர்கள் மதுரையில் நடைபெற்ற விழாவில் குறிப்பிட்டதை நினைவூட்டுகிறேன். எந்தவொரு பணிக்கும் தமிழகமே முன்னோடி என்ற நிலை வரவேண்டும்; அது நிலைபெறவும் வேண்டும். தமிழக மக்கள் அனைவர் வாழ்வும் வளம் பெற வேண்டும். அதற்காக இந்த அரசு நிறைவேற்றிடும் திட்டங்களுக்கு அனைவரின் ஒத்துழைப்பும் தொடர்ந்து கிடைத்திட வேண்டும் என்று இத்திருநாளில் என் தமிழக மக்கள் அனைவரிடமும் அன்புடன் வேண்டுகிறேன்.

வாழ்க சுதந்திரம்!

வாழ்க தமிழகம்!

வாழ்க தமிழ் மக்கள்!

வணக்கம்

## படமும் செய்தியும்



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.8.2007 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழாவையொட்டி சென்னை அருள்மிகு அகத்தீஸ்வரர் மற்றும் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற 60ஆவது சுதந்திர தின சமபந்தி விருந்தில் கலந்து கொண்டார்.



மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், 15.8.2007 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழாவையொட்டி சென்னை அருள்மிகு ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற 60ஆவது சுதந்திர தின சமபந்தி விருந்தில் கலந்து கொண்டார்.



## மேதகு குடியரசுத் தலைவர் திருமதி. பிரதிபா பட்டீல் அவர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் சந்திப்பு

இந்தியாவின் குடியரசுத் தலைவராக, முதன் முதலில் பெண்மணி ஒருவர் வரவேண்டுமென்பதற்காகத் துவக்கத்திலிருந்து குரல் கொடுத்து, அதிலே மகத்தான வெற்றியும் கண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருமதி.பிரதிபா பட்டீல் அவர்கள் வேட்பாளராக இருந்தபோதே, முதலில் தமிழகத்திற்கு அழைத்துவந்து மிகப் பெரிய மகளிர் பேரணி ஒன்றை நடத்தினார். குடியரசுத் தலைவராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டு 25.7.2007 அன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியேறிய பின்னர், முதல் பார்வையாளராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் குடும்பத்தினருடன் சென்று குடியரசுத் தலைவரைச் சந்தித்தபோது, முதலமைச்சரையும், அவரது குடும்பத்தினரையும் குடியரசுத் தலைவர் திருமதி. பிரதிபா பட்டீல் அவர்களும், அவரது கணவரும் அன்போடு வரவேற்று உபசரித்தனர். □






## டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறி இதர மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது

இந்த விழா முதலில் இராமேசுவரத்தில் நடப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அங்கு வரும் மிகப் பெருமளவிலான பக்தர்களுக்கு எந்த விதமான அசவுகரியமும் ஏற்படக்கூடாது என்பதற்காக, விழா இந்த அழகான மதுரை நகரில் நடப்பதற்காக மாற்றப்பட்டது. இந்த மதுரை நகரம் பல நூற்றாண்டுகளாக தமிழ்நாட்டின் மகத்துவத்தை, அதன் உன்னதமான பண்பாட்டை, இலக்கியத்தை, கலைகளை, கட்டட, சிற்பக் கலைகளை, இசையை உலகிற்கு எடுத்துக்காட்டி வருகிறது. மதுரை நகரம் உலகம் முழுவதும் புகழ்பெற்று விளங்கி வருகிறது. மதுரை தமிழகத்தின் பெருமை மட்டுமல்ல, இந்த நகர் இந்தியாவின் பெருமையாக இந்திய கலாச்சாரத்தை, பண்பாட்டை அவற்றின் உன்னதமான வடிவம் பிரதிபலித்து வருகிறது.



இராமேசுவரம்
அகல ரயில்பாதை தொடக்க விழாவில்
திருமதி. சோனியா காந்தி அவர்கள்
புகழாரம் (12.08.2007)

குறிப்பாக நான் மதுரையிலிருந்து, 'தெற்கு காசி' என்று போற்றப்படும் இராமேசுவரம் வரை உள்ள தூரம் முழுவதையும் அகல ரயில்பாதை மூலம் இணைக்கும் இந்த விழாவில் கலந்து கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த அகல ரயில்பாதை மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம் போன்ற முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் வழியாகச் சென்று இலட்சக்கணக்கான மக்களுக்கும், நாடு முழுவதுமிருந்து வரும் யாத்திரீகர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்கும் மிகவும் பயனுள்ளதாக விளங்கும்.

நாட்டிலுள்ள அனைத்துமீட்டர் கேஜ் ரயில் பாதைகளையும் அகல ரயில்பாதைகளாக மாற்றும் பணி முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கப்பட்டு அப்போது முதல் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஆனால் டெல்லியில், மத்திய அரசில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்த பிறகுதான் தென்னிந்தியாவில் அகல ரயில்பாதைக்கு மாற்றும் பணி மிகவும் விரைவுபடுத்தப்பட்டது என்பதை நான் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் ஏறத்தாழ 25 திட்டங்கள், புதிய தடங்கள், அகல ரயில் பாதையாக மாறுதல், இரட்டைப் பாதைகள் போடுதல் மற்றும் மின் மயமாக்குதல் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன. இவை முழுமையாக நிறைவேற்றப்பட்டு முடியும்போது தமிழகத்திற்கு 2,000 கிலோ மீட்டர் அகல் ரயில்பாதை கிடைக்கும். மாநிலத்தில் அகல ரயில் பாதை அமைக்கும் பணி வேகப்படுத்தப்பட்டு இந்த 2007–2008 ஆம் ஆண்டிற்கு 350 கிலோ மீட்டர் நீள ரயில் பாதை, அகல ரயில் பாதையாக மாற்றியமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய ரயில்வே துறை இந்த நாட்டின் பெருமைக்குரியது. அது பொருளாதார நடவடிக்கைகளை நிறைவேற்றுவதுடன், இந்தியாவின் தேசிய ஒற்றுமைக்கும், ஒருங்கிணைப்பிற்கும் முக்கியமான இணைப்பாக விளங்குகிறது. இந்திய ரயில்வே உலகத்திலேயே மிக அதிகமான தொழிலாளர்களுக்கு, ஊழியர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளதாகவும், தினசரி ஒரு கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பயணிக்கவும் பயன்பட்டு வருகிறது.

எனவே நான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றி முடித்ததற்காக ரயில்வே அமைச்சர் திரு. லாலு பிரசாத் யாதவ் அவர்களையும் இந்திய ரயில்வே துறையையும் பாராட்டுகிறேன். இந்தத் திட்டம் அவ்வளவு இலகுவான திட்டமல்ல என்றும் ஏராளமான பாலங்களையும், புதிய லெவல் கிராசிங்குகளையும் அமைக்க வேண்டியிருந்தது என்றும், இந்தப் பகுதியின் பூகோள அமைப்புக்கும், தட்பவெட்ப நிலைக்கும் ஏற்ற வகையில் புதிய வடிவமைப்பு (டிசைன்) உருவாக்க வேண்டியிருந்தது என்றும் லாலு பிரசாத் அவர்கள் என்னிடம் கூறினார். எப்படிப்பட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தாலும் நமது ரயில்வே பொறியாளர்களும், ஊழியர்களும் மிகவும் பாராட்டத்தக்க வகையில் அவற்றை எதிர்கொண்டு கடமையை நிறைவேற்றி உள்ளனர் என்பதை நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு, இந்திய ரயில்வே துறை மிகப்பெருமளவில் மாற்றம் கண்டுள்ளது. பயணிகள் சேவைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. ரயில்வே துறையின் நிலைமையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் ரயில்வே பட்ஜெட்களில் சாதாரண பயணிகளுக்கு எவ்விதமான சுமையும் சுமத்தப்படவில்லை. பயணிகளும், தொழிற் துறையும் இரயில்வே அளித்து வரும் வேலையில் மிகவும் திருப்தி அடைந்துள்ளன. இதற்காக லாலு பிரசாத் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். இந்திய ரயில்வே துறைக்கு அவர் ஆற்றிவரும் தலைமை பாத்திரத்தை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும். ரயில்வே துறைக்கும், குறிப்பாக இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதற்கும் பங்களிப்பு ஆற்றிய ரயில்வே குடும்பத்தை நான் பாராட்டுகிறேன்.

நான் எப்போதும் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதிலும், அவரை சந்திப்பதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவர் மூத்த ராஜதந்திரியாகவும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் பிரதான தூண்களில் ஒருவராகவும் விளங்குகிறார். அவரது தலைமையின் கீழ் தமிழ்நாடு தொடர்ந்து முன்னேறி, நாட்டிலுள்ள இதர மாநிலங்களுக்கு வழிகாட்டி உதாரணமாகத் திகழ்கிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலுள்ள நம் அனைவருக்கும் தனித்தனியான அடையாளங்களும், முன்னுரிமைகளும் இருக்கலாம். இருப்பினும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதுதான் தமிழக மக்கள் அளித்த தீர்ப்பாகும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து தமிழக மக்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையை நிறைவேற்றுவோம். மீண்டும் உங்கள் அனைவருக்கும், இரயில்வேத் துறையினருக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ◆






# மத்திய அரசின் திட்டங்களுக்கு மாநில அரசு தொடர்ந்து ஒத்துழைப்பை நல்கி வருகின்றது

*மதுரையில் 12.8.2007 அன்று நடைபெற்ற*
*இராமேசுவரம்-மானாமதுரை அகல ரயில் பாதை தொடக்க விழாவில்*
*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*
**கலைஞர் மு. கருணாநிதி** *அவர்கள் ஆற்றிய உரை*

இன்று நடைபெறுகின்ற இந்த இனிய விழா நீண்ட காலமாக எதிர்பார்த்த அகல ரயில் பாதை அமைக்கப்பட்டதற்காக நாம் எடுக்கின்ற திருவிழாவாகும். இந்த விழா நடைபெறுகின்ற இந்த நேரத்தில் இதற்காகப் பாடுபட்ட அந்தத் துறையின் அமைச்சர் பெருமக்களும், குறிப்பாக ரயில்வே துறையின் அமைச்சர் அருமை நண்பர் லல்லு பிரசாத் அவர்களும், ரயில்வே துறையின் இணை அமைச்சர் அருமை நண்பர் வேலு அவர்களும் நம்முடைய பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்களாவார்கள்.

இந்த அகல ரயில் பாதையைப் பொறுத்த வரையில், இன்றைக்கு தமிழகத்திலே தி.மு.கழக ஆட்சியில் இது நடைபெறுகிறது என்றாலும்கூட, இதற்கான தொடக்கம் 1997ஆம் ஆண்டு – அப்போது தி.மு. கழக ஆட்சியில் தான் அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது என்பதை நான் பெருமையோடு எண்ணிப் பார்க்கிறேன். அந்த அடிக்கல் நாட்டு விழா அப்படியே கிடப்பிலே போடப்பட்டு விடப்படாமல் இன்று திறப்பு விழாவாக மாறுவதற்கு நிதி ஒதுக்கீடு புரிந்திட உதவிய நம்முடைய நண்பர், நிதியமைச்சர் ப. சிதம்பரம் அவர்களுக்கும், பணியாற்றி சிறப்பித்துள்ள நம்முடைய பகுதி மக்களின் அவாவை நிறைவு செய்துள்ள அமைச்சர் பெருமக்கள் லல்லு பிரசாத் அவர்களுக்கும், வேலு அவர்களுக்கும் நான்




நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**சமூக நல்லிணக்கம்**

இன்றைக்கு ஒரு பாலத்தின் திறப்பு விழா வெகு விமரிசையாக இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பாலங்கள் ஊர்களை இணைப்பது மாத்திரமல்ல, சமுதாயங்களை இணைப்பதற்கும், இந்த நாட்டிலே தேவைப் படுகிறது. இனங்களை இணைப்பதற்கும் இந்த நாட்டிலே தேவைப்படுகிறது. அந்தப் பாலங்களையும் இணைக்கக் கூடிய அந்த வல்லமையும், திறமையும் வாய்ந்த ஒருவர் இன்றைக்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் தலைவராக அமர்ந்திருக்கின்ற திருமதி சோனியா காந்தி அம்மையார் அவர்களாவார்கள். அவருடைய சிறப்புமிக்க தலைமையில், திறன்மிக்க தலைமையில் இந்தப் பாலங்கள் மாத்திரமல்ல, மானாமதுரை இராமேஸ்வரம் இடையிலே உள்ள பாலங்கள் மாத்திரமல்ல, பல மதங்களுக்கிடையே, சமூக நல்லிணக்கப் பாலங்களையும் அமைப்பதற்கான ஆர்வம், அமைப்பதற்கான திறமை நமக்கெல்லாம் நிச்சயம் உண்டு என்ற எதிர்பார்ப்பு என்னிடத்திலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இதுபோன்ற நல்ல காரியங்கள் நாட்டிலே நடைபெறும்போது, ஆரம்பிக்கும்போதே அதற்கு இடையூறுகள் வருகின்றன. அதையும் தாண்டித் தான் எவ்வளவு தடங்கல் இருந்தாலும் அதை எதிர்த்து நிறைவேற்ற தடந்தோள் உண்டு நமக்கு என்ற அந்த உணர்வோடு தான் இன்றைக்கு இந்தியத் திருநாட்டில் பல காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**உறவும் நட்பும்**

நம்முடைய நிதியமைச்சர் சிதம்பரம் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல இந்தியாவினுடைய ஆட்சி மத்தியிலே நடைபெறுகின்ற ஆட்சி, தமிழகத்திலே நடைபெறுகின்ற இந்த மாநில ஆட்சி, இந்த இரண்டு ஆட்சிகளும் ஒன்றுக்கொன்று உறவோடு, ஒன்றுக்கொன்று நட்போடு, ஒன்றுக் கொன்று விட்டுக் கொடுக்கின்ற தன்மையோடு நடைபெறுகின்ற காரணத்தினால்தான் மக்கள் பல நன்மைகளை, சாதனைகளைப் பெற முடிகிறது.

என்னுடைய தலைவர், அறிஞர் அண்ணா அவர்கள், தி.மு. கழகத்தின் ஆட்சி



அமைந்தபோது அவர் ஒரு கடிதத்திலே குறிப்பிட்டார். அது பத்திரிகைகளிலே வெளிவந்த, வெளிப்படையான கடிதம். அதிலே சொன்னார். மத்திய அரசு, மாநில அரசு என்று இரண்டு அங்கங்கள் இருந்தாலும், சில பேர் அதை ஒரு தனி இலக்கணமாகக் கருதுகிறார்கள். மத்தியிலே அரசு என்றால், மாநில அரசோடு மோதிக் கொள்ள வேண்டும், அதைப் போல மாநில அரசு மத்திய அரசோடு மோதிக் கொள்ள வேண்டும் என்ற அந்தக் கருத்துக்கு நான் எதிரானவன் என்று அண்ணா சொன்னார். ஒருவரையொருவர் அரவணைத்துக் கொண்டு, அந்த அரவணைப்பின் காரணமாக நாட்டு மக்கள் பல சாதனைகளைப் பெற நாட்டு மக்களுக்கு பல நன்மைகள் கிடைக்க இரு அரசுகளும் பாடுபட வேண்டும். அப்படி இப்போது மத்தியிலே ஆட்சி அமைந்த பிறகு மாநிலத்திலே உள்ள இந்த ஆட்சி கடைப்பிடித்த இணக்கமான கொள்கை முறையினால், ஏற்பட்டிருக்கின்ற நன்மைகளை ஒன்றிரண்டை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.




**மக்களின் ஒத்துழைப்பு**

2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இதே மதுரையில் 2-7-2005 அன்று அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது, சேது சமுத்திரத் திட்டத்திற்கு! அந்தத் திட்டம் வெகு விரைவிலே முடியக் கூடிய அளவுக்கு, வெற்றிகரமாக நடை போட்டுக் கொண்டிருக்கின்றது. அதைத் தடுக்க வேண்டுமென்று மீண்டும் அயோத்தியில் காட்டிய ராமரை, இங்கே காட்ட விரும்புகிறார்கள். ஆனால் அதையெல்லாம் மீறி பொதுமக்கள் எங்களுக்கும் ராமர் வேண்டியவர் தான், எங்களுக்கு ஒன்றும் ராமர் விரோதியல்ல, ராமர் எங்கள் பக்கமும் இருக்கிறார் என்று சாதாரண பாமர மக்கள் இன்றைக்கு சூளுரைத்துக் கொண்டு சேது சமுத்திரத் திட்டம் வெற்றி பெறுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை யெல்லாம் நல்கி வருகிறார்கள்.

அதைப் போலவே நீண்ட காலக் கனவு. நூறாண்டு காலக் கனவு. தமிழ் மொழி, செம்மொழியாக ஆக வேண்டும் என்ற கனவு. அந்தக் கனவை நிறைவேற்றிக் கொடுத்தவர்கள் நம்முடைய அம்மையார் அவர்களும், பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், அர்ஜுன் சிங் அவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது.

### தமிழுக்குப் பெருமை

தமிழ் மொழிச் சான்றோர்களுக்கும் விருது வழங்க வேண்டுமென்று இரண்டு நாட்களுக்கு முன்புகூட, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் அறிவித்திருக்கிறார் என்றால், அது தமிழ் மொழிக்கு இப்போது அண்மையிலே கிடைத்த மற்றொரு பெருமையாகும்.

### மத்திய அரசின் திட்டங்கள்

அதைப் போலவே மத்திய அரசினுடைய தேசிய மோட்டார் வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட வளர்ச்சிக் கட்டமைப்பு மையம் ஒன்று 500 கோடி ரூபாய் திட்டத்தில் ஒரகடத்திலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது.




ஆட்சி மத்தியிலே அமைந்தவுடன் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது – உங்களுக்கும் நினைவிருக்கும். பொதுவாக நெசவாளப் பெருமக்களுக்கு எல்லாம் நினைவிருக்கும். ஆட்சி அமைந்த மறுநாளே, பிறப்பிக்கப்பட்ட உத்தரவு – மத்தியிலேயிருந்து வந்த உத்தரவு, நெசவாளர்களுக்கு கடந்த பா.ஜ.க. ஆட்சியில் விதிக்கப்பட்டிருந்த "சென்வாட்" வரியை விலக்கியது தான். அந்த வரியை விலக்கிய காரணத்தால் நெசவாளர்கள் எந்த அளவிற்கு பெருமூச்சு விட்டு மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள் என்பதை நாடறியும், நல்லோர் அறிவார்கள்.

நோக்கியா செல்போன் தொழிற்சாலை தமிழகத்திலே தொடங்கப்பட்டிருக்கிறது.

தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம் தமிழகத்தில், தாம்பரத்தில் நிறுவப்பட்டுள்ளது.

தமிழகத்திலே கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் ஒன்று மத்திய அரசினால் அறிவிக்கப் பட்டு விரைவிலே தொடங்கப்படுகின்ற நிலையிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது.

மகா பயங்கரமான பொடா சட்டத்தை ரத்து செய்த பெருமை இன்றைக்குள்ள மத்திய ஆட்சிக்குத் தான் உண்டு என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.



சேலம் உருட்டாலையை சர்வதேச அளவிற்கு உயர்த்தி, புதிய குளிர் உருட்டாலை அமைத்திட 1,553 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மத்திய சர்க்காரினால்.

கத்திப்பாரா சாலை சந்திப்பு அருகே பிரமாண்டமான மேம்பாலப் பணி இப்போது மத்திய அரசின் உதவியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**"மத்தியிலே நடைபெறுகின்ற ஆட்சி, தமிழகத்திலே நடைபெறுகின்ற இந்த மாநில ஆட்சி, இந்த இரண்டு ஆட்சிகளும் ஒன்றுக்கொன்று உறவோடு, ஒன்றுக்கொன்று நட்போடு, ஒன்றுக் கொன்று விட்டுக் கொடுக்கின்ற தன்மையோடு நடைபெறுகின்ற காரணத்தினால்தான் மக்கள் பல நன்மைகளை, சாதனைகளைப் பெற முடிகிறது."**

2006–2007ஆம் ஆண்டில் மாத்திரம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மாநிலங்கள் பயன்பெறும் வகையில் பத்து புதிய ரயில்கள் இயக்கப்படுகின்றன.

வருமான வரித்துறை மூலம் பல்வேறு சலுகைகளை நம்முடைய நிதியமைச்சர் அவருடைய திறனால் இன்றைக்கு அளித் திருக்கிறார்.

பாரத் நிர்மாண் திட்டம் – இந்தியாவிலே மகத்தான மாபெரும் திட்டம் – ஒரு இலட்சத்து 70 ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் – கிராமப்புற பொருளாதார வசதிகளைப் பெருக்குகின்ற திட்டம் இன்றைக்கு நடைமுறைப்படுத்துப்பட்டு வருகிறது. செல்போன் கட்டணம் குறைக்கப் பட்டுள்ளது.

மதம் மற்றும் சிறுபான்மைப் பிரிவினரின் பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியாக பின்தங்கியோரின் நலத்திற்காக தேசிய ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

வேலைக்கு உணவு தேசியத் திட்டம் இந்தியாவிலே எல்லோராலும் வரவேற்கப் படுகின்ற திட்டமாக இன்றைக்கு இருக்கின்றது.

2,750 கோடி ரூபாயில் இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

### இணக்கமான உறவு

இத்தனை திட்டங்களும் வெற்றிகரமாக அமைய மாநில அரசும் தன்னுடைய ஒத்துழைப்பை தொடர்ந்து நல்கி வருகின்றது. அதைப் போலவே மாநில அரசின் தேவைகளை உணர்ந்து நம்முடைய வேண்டுகோளை மதித்து மத்திய அரசு வழங்குகின்ற திட்டங்களிலே ஒன்று தான் இன்றையதினம் திறப்பு விழா நடத்தப்படுகின்ற இந்த இணைப்புப் பாலத்தினுடைய – அகல ரயில் பாதையினுடைய தொடக்க விழா என்பதை நான் அறிவித்து, இதுபோன்ற நல்ல விழாக்கள் நடைபெற் இணக்கமான உறவை மத்திய, மாநில அரசுகளுக் கிடையே ஏற்படுத்த எல்லோரும் உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒரு நல்ல அரசு நல்ல திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசு, நீண்ட நாள் நடைபெற, நிலைத்து நடைபெற அனைவரும் ஒத்துழைத்தால்தான் ஜனநாயகத்தினுடைய உண்மையான த்த்துவத்தை அனுபவிக்க முடியும் என்பதையும் எடுத்துக் கூறி, இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள நம்முடைய அன்பிற்குரிய தலைவர், திருமதி சோனியா காந்தி அவர்களையும், மற்றும் மத்திய அமைச்சர் பெருமக்களையும் தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற முறையிலே, தமிழகத்தின் பிரதிநிதியாக நின்று, வரவேற்று, நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# ஏழை, எளியோர் வாழ்வில் இன்பம் காண அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்துக்கும் தோன்றாத் துணையாக இருந்திடுவீர்!

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாடு

30.7.2007



மாண்புமிகு
**தமிழ்நாடு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள்
சென்னை தலைமைச் செயலகம்
நாமக்கல் கவிஞர் மாளிகையில்
30.7.2007 அன்று,
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மற்றும் காவல் துறை அதிகாரிகள்
மாநாட்டினைத் தொடங்கிவைத்து
ஆற்றிய தலைமையுரை :

**மா**ண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே! காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களே!

அரசு உயர் அலுவலர்களே! மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

காவல் துறை அலுவலர்களே! நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கம்.



சொன்னதைச் செய்திடும் நன்னெறி அரசாகத் திகழ்ந்து, மக்களின் முழு நம்பிக்கையையும் பெற்றுள்ள இந்த அரசு வகுத்தளித்திடும் திட்டங்களின் திடமான பலன்களையெல்லாம் சிந்தாமல் சிதறாமல் மக்களிடம் கொண்டு சேர்ப்பித்திடும் மகத்தான பணிகளில் ஈடுபட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், சட்டம் ஒழுங்கைப் பேணிக்காத்து வரும் காவல் துறை அலுவலர்களையும் இன்று சந்தித்து உரையாடுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

11.7.2007 அன்று தொடங்கி 21.7.2007 வரை தலைமைச் செயலகத்தில் – அரசுத் துறையின் அமைச்சர், செயலாளர், இயக்குனர், துறையின் ஏனைய அதிகாரிகள் என்று ஒவ்வொரு துறையாக அழைத்து, நடைபெற்ற பணிகள், நடைபெற்று வரும் பணிகள், நடைபெற வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து விரிவாக நான் நடத்திய ஆய்வின் தொடர்ச்சியாக – இன்றைக்கு இந்த மாநாடு நடைபெறுகிறது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்காக ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு மாதத்திலேயே, 24.6.2006 அன்று கடலோர மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்களை அழைத்து கலந்துரையாடினேன். அதனைத் தொடர்ந்து 18.9.2007 அன்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் அழைத்து தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகள், 2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் தொடர்ச்சியாக ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விவாதித்து நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஏறத்தாழ 10 மாதங்களுக்குப் பிறகு, இன்றைக்கு மீண்டும் நாம் இங்கே கூடி, இனி நாம் நமது மாநிலத்து மக்களுக்கு ஆற்றிட வேண்டிய கடமைகள் குறித்துக் கலந்தாலோசித்து முடிவுகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

> **“தேர்தல் அறிக்கையில் 177 வாக்குறுதிகளை தமிழக மக்களுக்கு வழங்கினோம். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுவரை 107 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மீதமுள்ள 70 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.”**

சென்ற முறை நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் கூட்டத்தில், தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு பங்கு வாக்குறுதிகளை முதலாண்டிலேயே நிறைவேற்றி

விடுவோம் என்று நான் உறுதியாகச் சொன்னேன். அப்படிச் சொல்லும் போது உங்கள் அனைவரது உழைப்பையும், ஆற்றலையும், அனுபவத்தையும் நம்பித்தான் அப்படிச் சொல்லுகிறேன் என்றும் சொன்னேன்.

அன்று சொன்னதைப் போலவே உங்களின் ஒத்துழைப்போடு, ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்; ஏழைக் குழந்தைகளுக்கான சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டம்; வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்; எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச அடுப்பு வழங்கும் திட்டம்; நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்; அரசுக்குத் தேவையில்லாத புறம்போக்கு இடங்களில் வீடுகள் கட்டி வாழ்ந்து வருவோர்க்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம்; வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்; அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; நோய் நொடிகள் வந்த பின் எதிர்த்துப் போராடி நலம் பெறுவதற்குப் பதிலாக வருமுன் காப்போம் திட்டம்; கர்ப்பிணிப் பெண்ணுக்கு 6,000 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம்; தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு நலத் திட்டம் என அடுக்கடுக்கான பல திட்டங்களை, 13.5.2006 அன்று பொறுப்பேற்றது முதல் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வாக்குறுதி களை நிறைவேற்றும் நமது வாய்மையை நிலைநாட்டி இருக்கிறோம்.

தேர்தல் அறிக்கையில் 177 வாக்குறுதிகளை தமிழக மக்களுக்கு வழங்கினோம். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இதுவரை 107 வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மீதமுள்ள 70 வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22.7.2006ஆம் நாளன்று வழங்கப்பட்ட 2006–2007ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மொத்தம் 185 அறிவிப்புகள் செய்யப்பட்டன. அவற்றில் 70 அறிவிப்புகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 63 அறிவிப்புகளில் ஆணை வெளியிடப்பட்டு, செயலாக்கத்தில் உள்ளன. மீதமுள்ள 52 அறிவிப்புகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

23.3.2007ஆம் நாளன்று வழங்கப்பட்ட 2007–2008ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் மொத்தம் 183 அறிவிப்புகள் செய்யப்பட்டன. இந்த நான்கு மாதங்க ளுக்குள் 38 அறிவிப்புகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. 52 அறிவிப்புகளின்மீது ஆணைகள் வெளியிடப்பட்டு, செயலாக் கத்தில் இருந்து வருகின்றன. மீதமுள்ள 93 அறிவிப்புகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

சட்டமன்றத்திலே திட்டங்களைத் தீட்டி அவற்றைச் சட்டமாக்கினால் மட்டும் எல்லாம் முடிந்து விடாது. அரசு நலத்திட்டங்களை யெல்லாம் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டுமானால், அவற்றின் தன்மையை முழுமையாகப் புரிந்து கொண்டு உள்ளன்போடு, உற்சாகத்தோடு நீங்கள் ஆற்றுகின்ற பணிகளால்தான் அனைத்துப் பிரிவினரும் பயன்பெற முடியும். கடந்த ஓராண்டில் நீங்கள் ஆற்றிய அரிய பணிகளுக்கும், அளித்த ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவிப்பதுடன்; வரும் ஆண்டுகளில்



செயல்படுத்த வேண்டிய திட்டங் களை அதற்கென குறிப்பிடப் பட்டுள்ள கால கட்டங்களுக்கு முன்பாகவே நிறைவேற்றி, மக்கள் நலனில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு, நீங்கள் அனைவரும் நற்பெயரும் புகழும் ஈட்டி, இந்த அரசுக்கும் அதனைப் பெற்றுத் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**சட்டம் ஒழுங்கு**

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மனநிறைவு அளிப்பதாக உள்ளது. இதற்குப் பொறுப்பான காவல்துறை அலுவலர்களையும், மாவட்ட ஆட்சியர்களையும் பாராட்டிட விழைகின்றேன். தமிழகத்தை அமைதி தவழும் மாநிலமாகத் தொடர்ந்து பராமரிப்பது உங்கள் அனைவரின் தலையாய கடமை என்பதையும் சுட்டிக்காட்டிட விரும்புகின்றேன். சாதி, சமயம் மற்றும் இனம் சார்ந்த பூசல்களையும், கருத்து வேறுபாடுகளையும் நுண்ணறிவுப் பிரிவின் துணைகொண்டு கண்டு, முளையிலேயே கிள்ளி எறிந்து, முறையான சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம், வளர்ச்சிப் பணிகளில் நாம் நமது முழு கவனத்தையும் செலுத்திட முடியும்.

எத்தகைய இடர்பாடுகளையும் எதிர் கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டிய காவல்துறை, 'வருமுன் காக்கும்' நடவடிக்கைகளைத் தொய்வின்றி மேற்கொள்வதிலும் விழிப்புடன் செயல் படுதல் வேண்டும் என்பது என் அவா.

வளர்ந்து வரும் அறிவியல் முன்னேற்றம், பெருகியுள்ள தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றைத் தவறான வழிகளிலே பயன்படுத்தி குற்றவாளிகள் கொடுஞ் செயல்களை அரங்கேற்றி விடுகின்றனர். இத்தகைய அறிவியல் அறைகூவல்களையும் எதிர்கொண்டு, அமைதிக்கு ஊறு விளைவிப்பவர்களைச் சட்டத்தின் முன்னே நிறுத்தித் தண்டனை பெற்றுத் தர வேண்டியதும், ஏதுமறியா அப்பாவிப் பொதுமக்களை இரு கண்ணெனப் போற்றிப்

**15.2.2007 அன்று தொடங்கப்பட்ட 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான இரண்டாவது கட்ட விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. இது நவம்பர் 2007ல் முடிவடையும். 15.7.2007 அன்று வரை 14 இலட்சத்து 62 ஆயிரத்து 179 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் 2007 டிசம்பரில் தொடங்கும்.**




பாதுகாப்பதும், உங்கள் அனைவருக்கும் உள்ள தலையாய கடமையும், பொறுப்பும் ஆகும். அதற்குரிய வசதிகள் சாதனங்கள் அனைத்தையும் இந்த அரசு தயக்கமின்றிக் காவல்துறைக்கு வழங்கி வருகிறது; இனிமேலும் வழங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**காவல் கைதி மரணங்கள்**

சட்டத்தின் ஆட்சி என்ற சமதர்மக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த சமுதாயத்தில், காவல் கைதி மரணம் என்பது மிகக் கொடுமையான குற்றம் என்று இந்திய உச்ச நீதிமன்றம் தெரிவித்ததை நீங்கள் அறிவீர்கள். எனவே, மனிதநேயத்துடனும், பொறுப்பு மற்றும் பொறுமை உணர்ச்சியுடனும், எச்சரிக்கையோடும் செயல்பட்டு, தமிழகத்தில் காவல் கைதி மரணங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கிடவும், அதைத் தொடர்ந்து பேணிக் காத்திடவும் காவல் துறை அலுவலர்கள் அனைவரும் தத்தமது நடவடிக்கைகளை வகுத்துப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**அகதிகள் வருகை**

இலங்கையில் தொடர்ந்து நிலவிவரும் பதற்ற நிலை காரணமாக 12.1.2006 முதல் இதுவரை 19,520 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழகம் வந்துள்ளனர். இவர்களையும் சேர்த்து தமிழகத்தில் உள்ள 117 இலங்கை அகதிகள் முகாம்களில் 19,478 குடும்பங்களைச் சேர்ந்த 74,072 இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வழங்கப்படும் பண உதவியை 1.8.2006 முதல் இரண்டு மடங்காக உயர்த்தி இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகளுக்கு அரசு வழங்கியுள்ள பல்வேறு நலத் திட்ட உதவிகள், முறையாகக் காலத்தில் சென்று சேருகின்றனவா என்பதை விழிப்புடன் கண்காணிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், அகதி முகாம்களில் குடிநீர், மின்சாரம், மருத்துவ வசதி மற்றும் சுகாதார வசதிகளைக் குறைவறப் பராமரிக்கவும் கேட்டுக் கொள்கின்றேன்.



அகதிகளாக வரும் ஆதரவற்ற இலங்கைத் தமிழர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்ய நாம் விழையும் அதே நேரத்தில் அகதிகள் என்ற பெயரில் நச்சு மனம் கொண்ட சமூக விரோதிகள் எவரும் தமிழகத்தில் கால்பதித்து விடாமல் விழிப்புடன் செயலாற்றுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

**முப்படை வீரர்கள் நலன்**

நமது நாட்டின் முப்படைகளுக்கும் அதிக அளவில் வீரர்களை அனுப்புவதில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. நமது முப்படை வீரர்கள் நாட்டின் எல்லையையும், இறையாண்மையையும் காத்திடத் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டு மிகத் தொலைவில் கடுமையான சூழல்களில் பணியாற்றுவதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் தங்களது நிலம் மற்றும் வீடு தொடர்பான அல்லது பிற கோரிக்கை மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி விரைவு நடவடிக்கை மேற்கொண்டு அவற்றிற்கு உடனடித் தீர்வு கண்டு பதிலளித்திட மாவட்ட ஆட்சியர்களையும், காவல் துறை கண்காணிப்பாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

**பொது விநியோகம்**

ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்துடன், குடும்ப அட்டை பெற்றுள்ள எல்லா குடும்பத் தினருக்கும் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்ற விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தகுதியுள்ள அனைவருக்கும் முழுமையாகச் சென்று அடைகின்றதா என்பதையும், வழங்கப்படும் அரிசி தரமானதாக உள்ளதா என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும்.

புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தைத் தவிர்ப்பதற்காகக் குடும்ப அட்டைகளின் விவரங்களைக் கணினியில் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதனைக் கண்காணிக்க வேண்டும். மேலும், போலி குடும்ப அட்டைகளைக் களைவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்திட வேண்டும்.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்து வதற்காக துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை மற்றும் மைதா போன்ற பொருட்கள் கட்டுப்படியாகக்கூடிய நியாயமான விலையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணித்து வெளிச்சந்தை விலைகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம்**

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திட்டம் 15.9.2006 அன்று தொடங்கப்பட்டது.

15.2.2007 அன்று தொடங்கப்பட்ட 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான இரண்டாவது கட்ட விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. இது நவம்பர் 2007ல் முடிவடையும். 15.7.2007 அன்று வரை 14 இலட்சத்து 62 ஆயிரத்து 179 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக

30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணிகள் 2007 டிசம்பரில் தொடங்கும்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட இந்த அரசு உறுதி கொண்டுள்ளது. இந்தத் திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. அடுத்த ஊருக்குக் கிடைத்துவிட்டது; இந்த ஊருக்கு இன்னும் கிடைக்கவில்லையே; அடுத்த தெருவில் உள்ள குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி கிடைத்து விட்டது; இந்த தெருவிலே உள்ள நமக்கு கிடைக்கவில்லையே என்ற ஆதங்கமோ ஐயப்பாடோ யாருக்கும் ஏற்படத் தேவையில்லை. அப்படிப்பட்ட ஆதங்கமும் ஐயப்பாடும் ஏற்படாத வண்ணம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறைப் படுத்திட வேண்டும். இந்த திட்டத்தில் வேண்டுமென்றே திசைதிருப்பும் நோக்கத்துடன் சங்கடங்களை உருவாக்கிட முனைவோரின் முயற்சிகளை முறித்துக் களைந்திட வேண்டும்.

**ஊராட்சி நிருவாகம்**

உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்கிட வேண்டி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டு, அதன் முதல் கூட்டம் 7.3.2007 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கருத்தரங்கம் சென்னையில் நடைபெற்று, அதில் நான் கலந்து கொண்டேன். இதன் தொடர்ச்சியாக, மண்டல வாரியாக, ஈரோடு, திருச்சி ஆகிய இடங்களில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் கருத்தரங்குகள் நடை பெற்றுள்ளன; திருவண்ணாமலை, விருதுநகர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

குடிநீர் வழங்குதல், சுகாதாரம், சாலைகள் மற்றும் தெருவிளக்குகளைப் பராமரித்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவு செய்யும் பொறுப்பு கிராம ஊராட்சிகளைச் சார்ந்தது. ஆனால், பல கிராம ஊராட்சிகள் போதிய நிதி வசதியின்றி அடைப்படை வசதிகளை நிறைவு செய்வதில் சிரமப்படுவதால், இந்நிலையினைச் சரிசெய்ய – இவ்வாண்டிலிருந்து மாநில நிதி ஆணைய நிதிப் பகிர்வில், கிராம ஊராட்சிகளின் பங்கு 47 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது; மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே நிதிப் பங்கீடு செய்யப்படும் போது, பல சிறிய ஊராட்சிகளுக்குப் போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையினை மாற்ற, மாநில நிதிக் குழு மானியத்திலிருந்து அனைத்து ஊராட்சிகளுக்கும் 3 இலட்சம் ரூபாய் சமமாக வழங்கவும், மீதமுள்ள தொகையை மக்கள்தொகை அடிப்படையில் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது; மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பன்னிரெண் டாவது நிதிக் குழு மானியம் முழுவதையும் (100%) கிராம ஊராட்சிகளுக்கு வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

கிராம ஊராட்சிகளின் ஆண்டு செலவினத்தில் 70 விழுக்காடு மின்சாரக் கட்டணத்திற்காகச் செலவழிக்கப்படுவதால் மின்வாரியம் தொடர்புடைய நீண்டகால பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் : –





1. ஊராட்சிகள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு 3 ரூபாய் 40 பைசாவிலிருந்து 3 ரூபாயாகக் குறைக்கப் பட்டுள்ளது;

2. மின் வாரியத்திற்கு ஊராட்சிகள் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீதான அபராத வரி 12 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது;

3. இதில், 13.3.2007க்கு முந்தைய அபராத வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது;

4. மின் கட்டணம் செலுத்துவதற்கான கால அளவு 20 நாட்களிலிருந்து 60 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது;

5. புதிய மின் கம்பங்கள் அமைப்பதில் அதிக செலவினமும், கால தாமதமும் ஏற்படுவதைத் தவிர்க்க, ஒரு மின் கம்பத்திற்கு நிலையான கட்டணமாக 9,500 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் திட்டங்கள்**

கடந்த ஜனவரித் திங்களில் இந்த அரசால் தொடங்கி வைக்கப்பட்ட அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டமே தற்போது தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசுத் திட்டங்களில் மிகப் பெரிய திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சியிலும் குளம், நூலகம், விளையாட்டு மையம், சுடுகாடு மற்றும் இடுகாடு, குடிநீர்த் திட்டப் பணிகள், தெருவிளக்குகள், மீன்வளர்ப்புக் குளங்கள், கிராமச் சந்தைகள் போன்றவை அமைக்கப்படுகின்றன. 2006–2007ல் 2,540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 45 ஆயிரத்து 285 பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. நடப்பாண்டில் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 40 ஆயிரத்து 514 பணிகள் மேற்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்**

2006 – 2007 முதல் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு, தற்போது தஞ்சாவூர், திருவாரூர், கரூர், திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 2006 பிப்ரவரியில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ், 13.5.2006 வரையில் வெறும் 3 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்ட பணிகள், இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் ஜனவரி 2007 – ல் 111 கோடி ரூபாய் அளவுக்கும், தற்போது 350 கோடி ரூபாய் அளவுக்கும் உயர்ந்துள்ளது. ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயன்பெறுவோரில் 85 சதவீதம் பேர் பெண்களே என்பது மகிழத்தக்க

செய்தியாகும். முன்பு, சராசரியாக 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரையே ஊதியம் பெற்ற இப்பெண்கள் தற்போது 80 ரூபாய் ஊதியம் பெறுகின்றனர். இதனால் ஊரகப் பகுதிகளில் பெண் தொழிலாளர்களின் ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது என்பதையும் சிறப்பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**விவசாயிகள் –**
**விவசாயத் தொழிலாளர்கள் நலன்**

தமிழ்நாட்டிலுள்ள நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்காக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) என்ற சிறப்பானதொரு திட்டத்தின் கீழ்; 15.7.2007 வரை 1 கோடியே 52 இலட்சத்து 37 ஆயிரத்து 495 விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்காக 70 இலட்சத்து 33 ஆயிரத்து 789 குடும்பங்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 62 ஆயிரத்து 688 விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் 18 கோடியே 96 இலட்சத்து 84 ஆயிரத்து 375 ரூபாய் உதவித்தொகையாக வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள உறுப்பினர்களைக் கண்டறிந்து பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுத்து விரைவுபடுத்தி 31.8.2007 – க்குள் அப்பணியை முடிக்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித் தொகைகளை உரிய நேரத்தில் அனைத்துப் பயனாளிகளுக்கும் வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

**வேளாண்மை**

2006– 2007 ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தியில் இதுவரை இல்லாத அளவிற்கு மிக அதிகமாக 96.24 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தில் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சாதகமாகப் பருவமழை பொழிந்து கொண்டுள்ளது; தென்மாவட்ட அணைகள் நிரம்பி வருகின்றன. மேட்டூர் அணையிலிருந்து 18.7.2007 அன்று பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப் பட்டுள்ளது. 56 விழுக்காடு மக்கள் வேளாண்மையை நம்பியுள்ள நிலையில், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வேளாண்மையில் குறைந்தபட்சம் 4 விழுக்காடு வளர்ச்சியை எட்டுவதற்கு உதவியாக தரமான விதைகள் மற்றும் உரம் போன்ற இடுபொருள்கள் போதுமான அளவில் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்திட வேண்டும். மேலும், விவசாயிகளுக்குத் தடங்கலின்றிப் பயிர்க் கடன்கள் கிடைப்பதை உறுதி செய்திட மாதமிருமுறை வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கடன் வழங்கப் படுவதையும் சீராய்வு செய்திட வேண்டும்.

மாநிலத்தில் நீர்ப் பற்றாக்குறையால் நுண்ணீர்ப் பாசனம் மற்றும் பாசன வழி உரமிடுதல் காலத்தின் கட்டாயமாகிறது. எனவே, நுண்ணீர்ப் பாசன முறை முனைப்புடன் செயல்படுத்தப்படுவது அவசியமாவதுடன், மாவட்ட ஆட்சியர்களால் தனிக்கவனம் செலுத்தப்பட்டு கண்காணிக் கப்படவும் வேண்டும்.

வேளாண்மையில், விற்பனை முறை என்பது ஒரு முக்கியமான அம்சமாகும். இதனைக் கருத்திற் கொண்டு ஏற்கெனவே



103 உழவர் சந்தைகள் அமைக்கப் பட்டுள்ளன. மேலும், 50 உழவர் சந்தைகளை இவ்வாண்டில் உருவாக்கிட அரசு முடிவு செய்துள்ளது. இந்த 50 உழவர் சந்தைகளுக்குப் பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்து, அடுத்துவரும் இரண்டு மாதங்களுக்குள் இந்த 50 உழவர் சந்தைகளையும் வெற்றிகரமாகச் செயல்படுத்திட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைப்பு சாரா**
**தொழிலாளர் நல வாரியங்கள்**

அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்டங்களைச் சிறப்பாகச் செயல் படுத்தும் பொருட்டு இந்த அரசு – ஏற்கெனவே செயல்பட்டு வந்த 2 வாரியங்களுடன் மேலும் 12 புதிய நலவாரியங்களை ஏற்படுத்தி உள்ளது. இந்த நலவாரியங்களில் பதிவு செய்து 60 வயது அடைந்த அமைப்பு சாரா தொழிலாளர் களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத ஓய்வூதியம் 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த நல வாரியங்களின் மூலம் இதுவரை 1 இலட்சத்து 56 ஆயிரத்து 480 பேருக்கு, 38 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி உதவியாக வழங்கப்பட்டுள்ள செய்தி எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது.

**பிற்படுத்தப்பட்டோர் நலன்**

சமூக, பொருளாதார மற்றும் கல்வி ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல வகுப்பினரின் முன்னேற்றத்தை உறுதி செய்திடவும், சமூக நீதியை நிலை நாட்டிடவும் அரசு பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது.

கிராமப்புறங்களில் வறிய நிலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் 2001 முதல் முந்தைய அரசினால் கைவிடப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்றவுடன் இத்திட்டத்தினை



2006 – 2007 முதல் மீண்டும் செயல்படுத்தி வருகிறது. 2006–2007ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்திட்டத்தினை மேலும் திறம்படச் செயல்படுத்திட வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

10 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற திறன்மிக்க பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியரை ஊக்குவிக்க அவர்கள் விரும்பும் தலைசிறந்த பள்ளிகளில் மேற்கொண்டு பயில உதவித் தொகை வழங்கும் புதிய திட்டத்தை இவ்வரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. பிற்படுத்தப் பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்காக, 50 விழுக்காடு அதிக பட்சமாக 50 ஆயிரம் ரூபாய் வரையிலான அரசு மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு பிற்படுத்தப் பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிந்து சீரிய முறையில் இத்திட்டத்தைச் செயல்படுத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்ட உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் தமிழக அரசு உறுதிபூண்டுள்ளது. சிறுபான்மையினர் வேலைவாய்ப்பில் தகுதிபெறச் செய்திட 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டம் செயல் படுத்தப்படும். இது குறித்த விழிப்புணர்வை மாவட்டங்களில் ஏற்படுத்திச் சிறுபான்மையின இளைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையச் செய்யுமாறு மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நடப்பாண்டில் 21 ஆயிரம் சிறுபான்மை யினத்தவர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 30 கோடி ரூபாய் கடன் வழங்கவுள்ளது. இதேபோன்று, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகமும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 2007 – 2008 ஆம் ஆண்டில் 30 கோடி ரூபாய் கடனுதவி வழங்க விருக்கிறது. இக்கழகங்கள் அளிக்கும் நிதி உதவி தகுதி வாய்ந்தோர்க்குச் சென்றடைய வேண்டும். இத்திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்வு செய்ய வேண்டும்.

**ஆதிதிராவிடர் நலன்**

ஆதிதிராவிடர் மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்யும் பொருட்டு 2006–2007ஆம் ஆண்டில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதன் பயனாக 2006–2007ல் கல்விப் பணிக்கு மட்டும் மொத்த நிதி ஒதுக்கீட்டில் 77 சதவிகிதம், அதாவது 437 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டதன் பயனாக, 2006 – 2007–ஆம் கல்வியாண்டில் 10–ஆம் வகுப்பில் தேர்ச்சி விகிதம் 70 சதவிகிதத்திலிருந்து 77 சதவிகித மாகவும்; 12–ஆம் வகுப்பில் 54 சதவிகிதத்தில் இருந்து 65 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.



இந்தியாவிலேயே முதன்முறையாக விமானப் பணிப்பெண்கள் பயிற்சிக்காக 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 100 ஆதிதிராவிடப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த நிதியாண்டில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுடன், மேலும் புதிய திட்டங்களான விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியர்க்குப் போர்வைகள் வழங்குதல், விடுதிகளில் 1,000 கூடுதல் இடங்கள் ஏற்படுத்துதல், விடுதிகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் கட்டுதல், புதிதாக விடுதிகள் தொடங்குதல், சமுதாயக் கூடங்கள் கட்டுதல், விடுதிகளுக்கு உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்குதல், உண்டி, உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் சமையலர்களுக்குக் குடியிருப்பு இல்லம் கட்டுதல் மற்றும் அப்பள்ளிகளில் பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்குதல் போன்ற பணிகளில் மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த ஈடுபாடு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமண நிதியுதவித் திட்டங்கள்**

வறுமைச் சூழ்நிலையிலுள்ள பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தங்கள் பெண்களின் திருமணத்திற்கென நிதியுதவி பெறவும், பெண்களின் கல்வி நிலையினை மேம்படுத்துவதற்காகவும் சமூகநலத் துறையால்,

1. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்;
2. ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரின் மகள் திருமண நிதியுதவித் திட்டம்;
3. அன்னை தெரசா நினைவு ஆதரவற்றோர் திருமண நிதியுதவித் திட்டம்;
4. டாக்டர் தருமாம்பாள் அம்மையார் நினைவு ஏழை விதவை மறுமண நிதியுதவித் திட்டம்;
5. அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்;

ஆகிய ஐந்து திருமண நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு 45 ஆயிரத்து 999 ஏழைப் பெண்களுக்கு, 69 கோடி ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு 50 ஆயிரம் ஏழைப் பெண்கள் பயன்பெறும் வகையில், 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு திருமண நிதி உதவிக்கான மற்ற நான்கு திட்டங்களின் மூலம் 4,587 பயனாளிகளுக்கு 6 கோடியே 32 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டது. இதுபோன்றே இவ்வாண்டும் இத்திருமண நிதியுதவித் திட்டங்களைச் செயல்படுத்திட 6 கோடியே 95 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து 16.7.2007 அன்று நான் ஆய்வு செய்தபோது, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபாய் வீதம்

நிதியுதவி வழங்கப்படுவதைப் போல; திருமண நிதியுதவிக்கான அனைத்துத் திட்டங்களிலும் தற்போது வழங்கப்படும் நிதியுதவியான 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 15 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

மேலும், ஒவ்வொரு நிதியாண்டிலும் அனைத்துத் திருமண நிதியுதவித் திட்டங்களையும் தடையின்றிச் செயல்படுத்தி, நிதியுதவிகள் விரைவில் ஏழை மக்களைச் சென்றடைவதற்கு உதவியாகக் காலாண்டு நிதிக் கட்டுப்பாட்டு முறை நீக்கப்பட்டுள்ளதால், பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை முன்னுரிமையின் அடிப்படையில் ஆய்வு செய்து காலதாமதமின்றி நிதியுதவி வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கல்வி இயக்கம்**

மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்குவதின் ஒரு கூறாகப் பள்ளிகளுக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடங்கள், பள்ளித் தொகுப்பு வள மையக் கட்டடங்கள் ஆகியவற்றைச் செய்து தருவதிலும் அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டம் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறது.

மாவட்டங்களில் இத்திட்டத்தின் மூலம் நடைபெறும் கட்டுமானப் பணிகளை விரைந்து நிறைவேற்றிடவும், செயல்வழிக் கற்றல் முறையினைத் தொடக்கப் பள்ளிகளில் செம்மையாகச் செயல் படுத்திடவும் மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

"Go to the people; Live among them; Learn from them; Love them; Serve them; Plan with them; Start with, what they know; Build on, what they have." அதாவது, "மக்களிடம் செல்; அவர்களுடன் சேர்ந்து வாழ்; அவர்களிடமிருந்து அறிந்துகொள்; அவர்களிடம் அன்பு செலுத்து; அவர்களுக்குத் தொண்டு செய்; அவர்களுடன் திட்டமிடு; அவர்களுக்கு எது தெரியுமோ, அதிலிருந்து தொடங்கு; அவர்கள் எதைக் கொண்டுள்ளார்களோ அதைப் பயன்படுத்தி அவர்கள் முன்னேறப் பாடுபடு'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய சீரிய வழியில் நடைபோட்டு வரும் இந்த அரசு, தான் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளையும், நிதிநிலை அறிக்கைகளிலே குறிப்பிட்ட அறிவிப்புகளையும் குறைவற நிறைவேற்றி, குன்றின் மேலிட்ட விளக்காகத் திகழ்ந்து வருகிறது.

ஏழை எளியோர் வாழ்வில் இன்பம் காணவும், நலிந்தோர் நலம் பெறவும், உடல் ஊனமுற்றோர் ஒளிபெறவும், மகளிர் மாண்புகள் பெருகிடவும், உழவர், உழைப்பாளர், பாட்டாளி மக்கள் உயர்ந்திடவும், நெசவாளர், மீனவர், கைவினைஞர் நிம்மதியாக வாழ்ந்திடவும் தொழில்வளம் தொடர்ந்து ஓங்கிடவும், மொழி, கலை, பண்பாடு முன்னிலை பெற்றிடவும், மாநிலம் முழுதும் மனிதநேயமும், அன்பும், அமைதியும் நிரம்பிடவும் அரசு அடுத்தடுத்து எடுத்து வரும் நடவடிக்கைகள் அனைத்திற்கும் தோன்றாத் துணையாக இருந்திடுவீர்! ஆற்றல் அனைத்தையும் பயன்படுத்தி அனுதினமும் பணிபுரிவீர்! என்று கேட்டுக் கொண்டு, உங்கள் அனைவரையும் வாழ்த்தி – எனது தலைமை உரையை நிறைவு செய்கிறேன்.



## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 31.7.2007 அன்று, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரை




இன்று காலை முதல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைகளின் செயலாளர்கள் குழுமியுள்ள இந்த மாமன்றத்தில் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி, மக்கள் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றி, சமுதாய நலன் விளைவிக்கத் தேவையான பிரச்சினைகளைப் பற்றி ஒரு அரசு நல்ல வழியில் மக்களை நடத்திச் செல்லவும், தானும் நல்வழியில் நடைபோடவும், என்னென்ன சாத்தியக் கூறுகள் உண்டு என்பதையெல்லாம் சிந்தித்து அவ்வழி நடப்பதற்கான பல கருத்துக்களை இங்கே எடுத்துப் பேசி, பல நல்ல முடிவுகளையும் கண்டிருக்கிறோம்.

நேற்றைய தினம் காவல் துறை அதிகாரிகள், நண்பர்கள், அலுவலர்களுடைய கருத்தரங்கு இங்கே நடைபெற்று, தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு, அமைதி தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டுமென்பதையும், எள்ளளவும் அதற்குச் சேதாரம் வந்திடக்கூடாது என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமென்பது பற்றியும் விவாதித்திருக்கிறோம்.

அது காவல் துறையினுடைய, அதிகாரிகள் தொடர்புடைய பிரச்சினை மாத்திரமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒத்துழைப்போடு நடைபெறவேண்டிய ஒன்று தான், சட்டம், ஒழுங்கு, அமைதியைப் பாதுகாக்கின்ற காரியமாகும். அந்த வகையில் நேற்றும் இன்றும் நடைபெற்றுள்ள இந்த விவாத அரங்கில் நாம் மகிழ்ச்சியடையத்தக்க வகையில் பல பிரச்சினைகளை நாம் விவாதித்திருக்கிறோம்.




தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் 13.5.2006 முதல் 30.6.2007 முடிய பெறப்பட்ட மனுக்களின் மீது சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடைந்திட சீரிய பணியாற்றிய மூன்று சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. எஸ்.எஸ். ஜவஹர், இ.ஆ.ப., அவர்கள் முதல் பரிசை பெற்ற போது எடுத்த படம்.

என்னைப் பொறுத்தவரையில் நான் அரசு அதிகாரிகளை எந்த வகையிலே அணுகுகிறேன் என்றால், அவர்களை நான் முதல் அமைச்சர் அல்லது அதிகாரப் பொறுப்பிலே உள்ளவர்களுக்கெல்லாம் தலைவன், மற்றவர்கள் எனக்கு அடுத்தபடிதான், எனக்கு அடங்கி நடக்க வேண்டியவர்கள் என்ற அந்த அகந்தையோடு, அந்தப் பெருமிதத்தோடு நான் அணுகு வதில்லை. அனைவரையும் நண்பர்களாகப் பாவித்துத்தான் நான் அரசு அதிகாரிகளை அணுகுகின்றேன்.

அப்படி தோழமை உணர்வோடு, நட்பு மனப்பான்மையோடு நண்பர்களாக அவர்களைக் கருதுகின்ற காரணத்தால் சில நேரங்களிலே நண்பர்களையும் சினந்து கொள்வதுண்டு, நண்பர்களிடத்திலே உரிமையோடு சில கருத்துக்களை எடுத்துச் சொல்வதுமுண்டு, நண்பர்களாக இருந்து நாட்டைப் பரிபாலிக்கின்ற இந்தப் பிரச்சினையில் ஒன்றுபட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று ஒரு நல்ல முடிவெடுத்து தொண்டு செய்வதுமுண்டு.

அப்படிப்பட்ட தொண்டினை இப்போது ஐந்தாவது முறையாக நான் பொறுப்புக்கு வந்துள்ள இந்தக் கால கட்டத்தில் மாத்திரமல்ல, 1967ஆம் ஆண்டு என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நான் தமிழகத்தின் பொதுப்பணித் துறை, போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலந்தொட்டு, நான் உங்களோடு, அரசு அதிகாரிகளோடு, அலுவலாளர்களோடு நெருங்கிப் பழகவும், நட்பு கொண்டாடவும் அத்தகைய ஓர் உணர்வோடு உங்களோடு நான் உறவாடியிருக்கிறேன். இன்றைக்கும் அதிலே எந்தவிதமான சேதாரமும் கிடையாது, என்றைக்கும் அந்தச்




தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் 13.5.2006 முதல் 30.6.2007 முடிய பெறப்பட்ட மனுக்களின் மீது சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடைந்திட சீரிய பணியாற்றிய மூன்று சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். கடலூர் மாவட்ட ஆட்சியர் திரு. இராஜேந்திரரட்னூ, இ.ஆ.ப., அவர்கள் இரண்டாவது பரிசைப் பெற்ற போது எடுத்த படம்.

சேதாரம் ஏற்படாது என்ற அந்த உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அதற்குப் பதிலாக எனக்குச் செய்ய வேண்டிய கைமாறு – எனக்கல்ல, என் பெயரால் இந்தச் சமுதாயத்திற்கு, இந்த நாட்டிற்கு, இந்த அரசின் சார்பாக ஆற்ற வேண்டிய பணி என்னவென்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நேற்றும் இன்றும் நாம் உரையாடிய, விவாதித்த இந்த விஷயங்கள் எல்லாம் நமக்காக மாத்திரமல்ல, நம்முடைய நாட்டு மக்களுக்கு, நம்மால் ஆளப்படுகின்ற மக்களுக்கு, நம்முடைய மாநில மக்களுக்குப் பயன்படக் கூடிய, அவர்களை வாழ வைக்கக் கூடிய பல காரியங்களை நாம் பேசியிருக்கிறோம்.

அவைகளையெல்லாம் நினைவுகூர்ந்து தொடர்ந்து நாம் இந்த மாநாட்டிலே பேசினோம், பேசியதில் என்னென்ன கருத்துக்களை இங்கே விதைத்தோமோ, எந்தெந்த கருத்துக்களை எடுத்து நட்டோமோ, எந்தெந்த கருத்துக்கள் இந்த மாமன்றத்தில் விழுதுகளாக இறங்கியிருக்கிறதோ, அவைகள் எல்லாம் நம்மால் மறந்து விடக் கூடியவைகள் அல்ல. அவைகள் விழுதுகளாக இறங்கியது இந்த மாமன்ற மண்டபத்திலே அல்ல, நம்முடைய நெஞ்சத்திலே அது பதிந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, தொடர்ந்து அவ்வழியிலே நீங்கள் பணியாற்ற வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு அரசு என்னதான் நல்ல காரியங்களைச் செய்தாலும், மக்களுக்கு ஆற்ற வேண்டிய பணிகளைத் தொடர்ந்து அலுப்பின்றி, சலிப்பின்றி ஆற்றி வந்தாலுங்கூட, அது ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமைகளை, தப்பித் தவறி ஒன்றிரண்டில் தவறுமேயானால், நேரம் பார்த்து, சமயம் பார்த்து அதைக் கேலி செய்யவும், அதற்கு எதிர்க்குரல் கொடுக்கவும் ஜனநாயகத்தில் தங்களுக்கு இருக்கின்ற உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள அரசியல் கட்சிகள் தயாராக இருப்பார்கள்.

நான் அரசியல் கட்சிகள் என்று எந்தக் கட்சியையும் இங்கே குறிப்பிட்டுப் பேசி குறை சொல்ல விரும்பவில்லை. ஆனால் அவர்கள்




தலைமைச் செயலகத்தில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் 13.5.2006 முதல் 30.6.2007 முடிய பெறப்பட்ட மனுக்களின் மீது சிறப்பான நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளின் மூலம் பொதுமக்கள் பயனடைந்திட சீரிய பணியாற்றிய மூன்று சிறந்த மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். வேலூர் மாவட்ட ஆட்சியர் திரு. தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் மூன்றாவது பரிசைபெற்ற போது எடுத்த படம்.

ஜனநாயகக் கடமையை ஆற்றுகிறார்கள் என்ற அளவில் நான் அதை எதிர்பார்த்து, அவர்கள் என்ன சொல்லுகிறார்கள், எந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும், எந்தக் கருத்தை அலட்சியப்படுத்த வேண்டும், எந்தக் கருத்துக்கு செவிசாய்க்கக் கூடாது என்பதைச் சிந்தித்து செயல்பட்டால் நாடு அமைதியான முறையில், மக்கள் அமைதியான முறையில் வாழ வழியுண்டு. அப்படி தொண்டாற்ற நீங்கள் எல்லாம் எனக்குத் துணை நிற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சில மாதங்களில் எத்தனையோ பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டி வந்தது, நாம் வெளிநாடுகளைப் பார்க்கிறோம், பக்கத்து நாடுகளைப் பார்க்கிறோம். அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்ற முன்னேற்றங்களைக் காணுகிறோம். அந்த முற்போக்கை, அந்த முன்னேற்றத்தை, அந்த வாய்ப்பு வசதிகளை இங்கே தோற்றுவிக்க வேண்டுமென்று நாம் கருதி, செயல்பட்டால் உடனடியாக அதற்கு எத்தனையோ தடங்கல், இடையூறுகள் அதற்கு வருவதை நாம் காண்கிறோம்.

அதிலே அரசியல் முலாம் பூசப்பட்டு விடுகிற காரணத்தால் நேரடியாக அதை எதிர்க்கக்கூடிய வல்லமை இருந்தாலும், தேவையில்லை என்று அதை ஒதுக்கி வைத்து விட்டு, நாம் ஒதுங்கிப் போக நேரிடுகிறது. அப்படித்தான் உங்களுக்குத் தெரியும், மறந்திருக்க மாட்டீர்கள்,

சென்னைக்குப் பக்கத்தில் ஒரு துணை நகரத்தை ஏற்படுத்த வேண்டுமென்று விரும்பினோம். எல்லோருடைய கருத்தையும் கேட்டோம், ஆமாம் வேண்டுமென்று தான் எல்லோரும் சொன்னார்கள். ஏனென்றால் சென்னை மாநகரத்தின் போக்குவரத்து நெரிசல், மக்கள் படுகின்ற அவதி இதை பாதியளவாவது குறைப்பதற்கு அந்த துணை நகரம், சாட்டிலைட் டவுன் ஒன்று நிச்சயமாகத் தேவை என்பதை உணர்ந்து எல்லோரும் வரவேற்றார்கள். ஆனால் அதற்கு எதிர்ப்புக் கிளம்பியது. அந்த எதிர்ப்பு எங்கே போய் முடியும் என்று நான் எண்ணினேனோ அந்த இடத்திற்கு அந்த எதிர்ப்பின் உச்சக் கட்டம் வரத் தொடங்கியதும், இதற்கு மேல் இதை அனுமதிக்கக்கூடாது என்று என்னை





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஊனமுற்றோருக்கு உதவிகள் வழங்கியதில் சிறந்த மாவட்ட ஆட்சியராக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. சத்யபிரதா சாகு, இ.ஆ.ப., அவர்களுக்கு விருது வழங்கினார்.

நான் அந்தப் பக்கம் அனுமதித்துக் கொள்ளவில்லை.

மற்றவர்களைத் தடுப்பதை விட நாமே நம்மைத் தடுத்துக் கொண்டால், சுமூகமாக, அமைதியாக காரியங்கள் நடைபெறும் என்ற அந்த அளவிலேதான் நான் அந்த முடிவை எடுத்தேன்.

இப்படி சிலபல முற்போக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்றாலும்கூட அடித்தட்டிலே இருக்கிற மக்களுடைய வாழ்விற்காக – ஏழையெளியவர்களுடைய வாழ்விற்காக – உழவர்களுடைய வாழ்விற்காக – குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுடைய வாழ்விற்காக நாம் நம்முடைய அரசின் சாதனைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், அதுவே நம்முடைய மனதிற்கு ஓர் ஆறுதலை, புராணிகர்கள் சொல்வார்களே, ஆத்ம திருப்தி என்று அதை அளிக்கும் என்ற அந்த எண்ணத்தோடு தான் நான் செயல்பட்டு வருகிறேன், இந்த அமைச்சரவை செயல்பட்டு வருகிறது, நீங்களும் அதை உணர்ந்து செயல்பட்டு வருகிறீர்கள் என்பதை நான் உணருகிறேன்.

நீங்கள் எனக்குத் தர வேண்டிய, இந்த அரசுக்குத் தரவேண்டிய ஆதரவு நேற்றும் இன்றும் பேசப்பட்ட இந்த பிரச்சினைகளையெல்லாம் செயல் வடிவமாக காணுகின்ற நேரத்தில் உங்களுடைய முழு ஒத்துழைப்பு அந்தப் பிரச்சினைகளுக்கு கிடைத்தாக வேண்டும். குடிசைகளை கோபுரங்களாக ஆக்க வேண்டும் என்பதற்காக உங்களையெல்லாம் நான் அழைக்கவில்லை. இருக்கிற குடிசைகளைக் காப்பாற்ற வேண்டும், அந்தக் குடிசைகளிலே இருக்கின்ற ஏழையெளியவர்கள் அழக்கூடாது, அவர்களுடைய வாழ்வை உத்தரவாதம் அளித்து நாம் ஒளி பெறச் செய்ய வேண்டும் என்ற அந்தக் காரியத்திற்கு நீங்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும், ஒத்துழைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

நேற்றும் இன்றும் நாம் பல தலைப்புகளிலே மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி விவாதித்திருக்கிறோம். ஒவ்வொரு தலைப்பையும் மீண்டும் நான் நினைவுபடுத்த விரும்பவில்லை. ஏனென்றால் அதற்கே நாம் இரண்டு நாள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அவைகளைப் பற்றிப் பேசிட இன்னும் நேரம்

போதாது. பேசியதையெல்லாம் செயலாக்க நீங்கள் ஊர் திரும்ப வேண்டும். நீங்கள் பணியாற்றுகின்ற மாவட்டங்களுக்கு செல்ல வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். சென்று பணியாற்றுங்கள் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்மை இந்த இடத்திலே உட்கார வைத்தவர்கள் யார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. சாதாரண, சாமான்ய மக்கள், ஏழையெளிய மக்கள், எளியோர் – அவர்களுக்கு நாம் பாடுபட வேண்டும். அவர்களுக்காகப் பாடுபடுகின்ற பிரதிநிதிகள் யாராக இருந்தாலும், அவர்களை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் தான் முதலமைச்சராக இருக்கிறோமே என்று நான் இன்னொருவரை அலட்சியப்படுத்தினால் அவர் நேரடியாகச் சொல்லாவிட்டாலும், இவரை முதலமைச்சராக ஆக்கினோமே என்று தவறாக எண்ணிக் கொண்டு போனால், அதன் விளைவு இப்போது தெரியாது, அது ஓட்டிலே தெரியும், வாக்குச் சாவடியிலே தெரியும் என்று நான் பயப்படவில்லை.

அவர்களுடைய வாக்கிலே தெரிந்தால் கூட, அது எனக்குப் பெரும் தீங்கு, எனக்குப் பெரும் சாபம், எனக்குப் பெரும் இழிவு என்று நான் கருதுவதைப் போல ஒவ்வொருவரும், உயர்ந்த நிலையிலே இருக்கின்ற ஒவ்வொருவரும் அவர் கலெக்டராக இருந்தாலும், தாசில்தாராக இருந்தாலும், கவர்னராக இருந்தாலும், அமைச்சரவையிலே ஒருவராக இருந்தாலும், அதிகாரிகளில் ஒருவராக இருந்தாலும், ஐ.ஏ.எஸ். ஆபீசராக இருந்தாலும், காவல் துறை நண்பராக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்கள் குடிமக்களை, குடிமக்களுடைய பிரதிநிதிகளை மரியாதை கொடுத்துப் பழகி அவர்களிடத்தில் மனம் கோணாமல் – நமக்கு ஆயிரம் பிரச்சினைகள் இருக்கலாம், அந்தப் பிரச்சினைகளையெல்லாம் மறைத்துக் கொண்டு, முகமலர்ச்சியோடு – நடிப்பு என்பார்களே – அந்த நடிப்பைக் கூடப் பயன்படுத்த வேண்டும்.

அப்போது தான் வருகிறவர், நம்மிடத்திலே உதவி கேட்க வருபவர்களுக்கு நாம் இல்லை என்று சொன்னால் கூட, உண்மையில் கொடுக்க முடியாது, செய்ய முடியாது என்ற நிலை இருந்தால்கூட, அதைக் கூட சிரித்துக் கொண்டே சொன்னால் அவர்களும் ஆறுதலாகச் செல்வார்கள். ஆகவே நம்முடைய பிரஜைகளை, நாட்டு மக்களை ஏழையெளியவர்களை, நமக்கு வாக்களித்த வர்களை, நம்மை இந்த இடத்திலே உட்கார வைத்தவர்களை, நமக்குப் பொறுப்பு வழங்கியவர்களை நாம் மதிக்க வேண்டும்.

அப்படி மதித்து நடந்து அவர்களுக்கும் நாம் இந்த நாட்டிலே ஆக வேண்டிய காரியங்களை, ஆகக் கூடிய காரியங்களாக இருந்தால் செய்து கொடுத்து, முடிந்தவரையிலே அவர்களோடு ஒத்துழைத்து நம்முடைய ஆட்சியைத் திறம்பட நடத்துவோம், சிறப்போடு நடத்துவோம், அப்படி நடத்துவதற்கு உங்களுடைய துணை தான் எனக்குத் தேவை. நான் என்னையே நம்பி இருப்பவன் அல்ல, நான் என்னையே நம்பியிருக்கிறேன் என்றால், உங்களை நம்பி இருப்பதால்தான் நான் என்னையே நம்பியிருக்கின்ற அந்தத் துணிவைப் பெற முடிகிறது என்பதை எடுத்துச் சொல்லி, நேற்றும் இன்றும் மிக அழகாக, மிக அறிவுப்பூர்வமாக, மிக ஆக்கப்பூர்வமாக நல்ல கருத்துக்களை எடுத்துரைத்த உங்களுக் கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்து தொடர்ந்து இத்தகைய பணிகளை ஆற்றிக் கொண்டேயிருப்போம் என்று கூறி, என்னுடைய உரையை இந்த அளவிலே நிறைவு செய்கிறேன்.

தொடர்ச்சி 45ஆம் பக்கம் பார்க்கவும்





# நதிகளை இணைத்து இந்தியாவின் ஒற்றுமையை பலப்படுத்துவோம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை

**செ**ம்பரம்பாக்கத்தில் நடைபெறுகின்ற இந்தத் தொடக்க விழா மனிதர்களுக்கு மிக மிக இன்றியமையாத ஒரு தேவையை நிறைவு செய்ய பொறுப்பேற்றுக் கொண்டுள்ள அரசு ஆற்ற வேண்டிய கடமைக்கு – அந்தக் கடமையின் வெற்றிக்கு நடத்துகின்ற வெற்றி விழாவாகும். ஏறத்தாழ 1996ஆம் ஆண்டு திட்டமிட்டு பணம் ஒதுக்கி, பிரான்ஸ் நாட்டோடு ஒப்பந்தம் செய்து கொண்டு, மத்திய அரசின் உதவிகளைப் பெற்று, தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் இன்றைக்கு நம்மால் நம்முடைய ஆட்சியால் நிறைவேற்றி வைக்கப்பட்டு, பயன்பெறுகின்ற விழா நாளில் நாமெல்லாம் இங்கே வீற்றிருக்கிறோம். நம்முடைய மகிழ்ச்சியைப் பரிமாறிக் கொள்கிறோம்.



இங்கே தொகுப்புரையாற்றிய வர்ணனையாளர் ஒவ்வொருவரும் ஆற்றிய உரையைப் பற்றி மாத்திரமல்ல, ஆற்ற வேண்டிய உரைகளுக்கான குறிப்புக்களையும் தந்து உற்சாகப்படுத்தியதிலிருந்து அந்த உற்சாகம் கொஞ்சமும் குறையாமல் இந்த மாமன்றத்திலே அமர்ந்திருக்கின்ற இந்தப் பகுதி தமிழ்ப் பெருங்குடி மக்கள், ஏழையெளிய மக்கள், சாதாரண சாமான்ய பெருமக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் இத்தகைய அரசு நலத்திட்டங்களால் அடைகின்ற பயனை எந்த அளவிற்கு விரும்புகிறார்கள், எந்த அளவிற்கு அந்தப் பயன்களோடு தங்களை ஒன்ற வைத்துக் கொள்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுகின்ற நிகழ்ச்சியாக இது அமைந்திருக்கின்றது.

**நாங்கள் பெறும் இன்பம்**

நாங்கள் இந்த விழாவிற்கு வருகின்ற நேரத்தில் வழக்கம்போல் என்று சொன்னாலுங்கூட, வழக்கத்தையும் மீறிய அளவில் வழியெங்கும் தோரணங்கள், கொடிகள், வரவேற்புரைகள், வாழ்த்து முழக்கங்கள் என்ற அளவிலும் நீண்ட நெடிய சாலைகளில் எல்லாம் பல்லாயிரக்கணக்கான ஏழையெளிய மக்கள், சாதாரண சாமான்ய மக்கள் எங்களை வரவேற்று மகிழ்ந்து இங்கே இந்த இடத்திற்கு வழியனுப்பி வைத்த நிகழ்ச்சிகளும் கண்கொள்ளா காட்சிகளாக அமைந்திருந்தன. இதற்கு என்ன காரணம் என்று பார்க்கும்போது, நான் இந்த வழியாக வந்தவன், அந்த வழியாக துரைமுருகனும் வந்திருக்கிறார். தம்பி ஸ்டாலினும் பலமுறை வந்திருக்கிறார், வந்தாலும்கூட இன்றைக்கு நாங்கள் புதிதாக ஒப்பனை செய்து கொண்டு வரவில்லை. அதே கருணாநிதி தான், அதே துரைமுருகன் தான், அதே வீராசாமிதான், அதே ஸ்டாலின் தான். ஆனால் பல மடங்கு மகிழ்ச்சியோடும், பூரிப்போடும் எங்களை வரவேற்றதற்கு என்ன காரணம்? நாங்கள் மாற்றம் பெற்று வரவில்லை, நாங்கள் வேடமணிந்து வரவில்லை, நாங்கள் புதிதாக ஒப்பனை செய்து கொண்டு வரவில்லை, என்றைக்கும் கட்டிக் கொண்டிருக்கின்ற வேட்டி, சட்டை துண்டு இவைகளோடு தான் வருகிறோம் என்றால், நீங்கள் இப்படி வரவேற்றதற்கு என்ன காரணம் என்றால், என்றைக்கும் இருப்பவன், இன்றைக்கும் நமக்காக இருக்கிறான் என்ற அந்த உணர்வோடுதான் நாங்களும் உங்களை அந்த அளவிற்கு நேசிப்பதற்கும், அந்த அளவிற்கு உங்களைப் பார்த்தவுடன் கண்கள் எல்லாம் பூரிப்பு பொங்க உங்களைக் காணுகிறோம் என்றால், அதற்குக் காரணமும் இதுதான். என்றைக்கும் பார்க்கின்ற அதே முகத்தைப் பார்க்கிறோம். இருந்தாலும் இன்றைக்கு அந்த முகத்திலே எவ்வளவு பரவசம்? அவர்களுடைய இல்லத்திலே, சொந்தத்திலே எவ்வளவு துக்கங்கள் இருந்தாலும், எவ்வளவு சோதனைகள் இருந்தாலும், அதையெல்லாம் ஒருகணம் மறந்து விட்டு எங்களைச் சந்திப்பதில், எங்களைக் காண்பதில் நீங்கள் அடைகின்ற பூரிப்பு அதே நிலையிலே எவ்வளவுதான் அன்பு துயரங்கள் இருந்தாலும், துன்பச் சுமைகள் மூட்டை மூட்டையாக எங்கள் தலையிலே, முதுகிலே, தோளிலே இருந்தாலும், அவைகளையெல்லாம் இறக்கி வைத்ததைப் போன்றதொரு இன்பத்தை உங்களைக் காணுகின்ற நேரத்திலே நாங்கள் பெறுகிறோம் என்றால், நாமெல்லாம் ஒரு குலம், தமிழ்க் குலம், இந்தத் தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்களின் குலம். எனவே, இந்தத் தமிழ்நாட்டு மக்களுக்காக நடைபெறுகின்ற காரியங்கள்–தமிழக அரசால் நடத்தப்படுகின்ற காரியங்கள் தமிழ்நாட்டிலே உள்ள ஏழையெளிய சாதாரண சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகின்ற காரியங்கள் – அண்ணா வழியில் தந்தை பெரியார் வழியில் சமத்துவ நிலையிலே ஆற்றப்படுகின்ற திட்டங்கள் இவைகள் நிறைவேறும்போது நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சியோடு நீங்கள் எங்களைப் பார்ப்பதும், நாங்கள் உங்களைப் பார்ப்பதும் இயல்பான ஒன்றுதான்.

**உயிர்ப் பிரச்சினை**

அதைத்தான் இங்கே தம்பி ஸ்டாலின் பேசும்போது சொன்னார். அவருடைய ஆற்றொழுக்கு நடையில் அவரையும் அறியாமல் ஒரு தவறு வந்தது என்றாலும், அந்தத் தவறையும் நான் சரிப்படுத்தி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர் சொன்னார் – பகீரதன் காவேரியைக் கொண்டு வருவதற்காகவும், இருந்தான் என்று – இல்லை, காவேரியை அல்ல. அவன் கொண்டு வர விரும்பியது கங்கையை – கங்கையைத் தான் கொண்டு வந்தான். அவன் ஏன் காவேரியைக் கொண்டு வரவில்லை என்றால், கங்கையைக் கூட கொண்டு வர முடியும். காவேரியைக் கொண்டு வர முடியாது என்ற காரணத்தினால் அவன் அந்தக் காலத்திலேயே எதைப் பிடிக்கலாம் என்று காவேரியா? கங்கையா? என்று அலசிப் பார்த்து காவேரி என்றால் அதற்கு நடுவர் மன்றம் அல்லவா வைக்கப்பட வேண்டும்? நம்முடைய சடாமுடியில் கொண்டுவரப்படக்கூடிய காரியமல்ல அது. ஆகவே நடுவர் மன்றம் கொண்டு வர வேண்டும் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்கு உச்ச நீதிமன்றத்திற்கெல்லாம் போக வேண்டும், "ஏ அப்பா! நம்மால் ஆகாது. அந்த வேலையென்று" பகீரதனே பதைபதைத்துப் போய் கங்கையோடு விட்டுவிட்டான். எனவே, அப்படி தண்ணீர் தேவை மக்களுக்கு அவ்வளவு ஆழமாக, அவ்வளவு அவசியமாக உயிர்ப்பிரச்சினையாக இன்றல்ல, என்றைக்கும் இருந்திருக்கிறது.

ஒரு சேரமன்னன், கணைக்கால் இரும்பொறை சிறைச்சாலையிலே கேட்டவுடன் தண்ணீர் கொடுக்கவில்லை என்பதற்காக தன்னுடைய மானத்தை நிலைநாட்டினான் மரணத்தைத் தழுவி என்று இலக்கியத்திலே படித்திருக்கிறோம். அதைப்போலவேதான் தண்ணீருக்காக தவம் இருந்தவர்கள், தண்ணீருக்காக தங்களுடைய குழந்தை குட்டிகளையெல்லாம் கூட விற்று விட்டவர்கள், தாங்கள் தங்களுடைய தாகத்தை போக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காக படாதபாடுபட்ட



ஏழையெளியவர்கள், பட்டினியால் சுருண்டாலும் பரவாயில்லை ஒரு சொட்டு தண்ணீர் கிடைக்காதா என்று எண்ணியவர்கள் எல்லாம் கூட எத்தனையோ நாடுகளில் இன்றைக்கும் தொலைக்காட்சிகளிலே காணுகிறோம், படக்காட்சிகளிலே காணுகிறோம், பத்திரிகைகளிலே படங்களாகக் காணுகிறோம், தவித்த வாய்க்கு ஒரு சொட்டு தண்ணீர் கிடைக்காமல் எத்தனை வதங்கிய இலைகளைப் போல கசங்கிய மலர்களைப் போல, குழந்தை குட்டிகளோடு பல நாடுகளில் அதிலும் குறிப்பாக கறுப்பர்கள் வாழும் நாடுகளில் மக்கள் அந்த தண்ணீர்ப் பஞ்சத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் காணுகிறோம்.

## நீர்வளம் நிலவளம்

அவைகளையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய தமிழகம் – நம்முடைய தாய் நாடு – நாம் பிறந்த இந்த மண் எவ்வளவோ பரவாயில்லை என்றாலும்கூட, ஒப்பிட்டுப் பார்க்கின்ற நேரத்திலே நாமும் அந்தத் தண்ணீர் தேவைக்காக கண்ணீர் விட வேண்டியவர் களாகத்தான் இருக்கிறோம். அதை மறந்து விட முடியாது. நீங்கள் பழைய புத்தகங்களை எடுத்துப் படித்தால், அது நாவல் ஆனாலும், சரித்திரம் ஆனாலும், நவீன கதைகள் ஆனாலும் அவைகளில் முதலில் ஊர் வர்ணனை வரும். அப்போது நீர் வளம், நில வளம் நிறைந்த தஞ்சை மாவட்டத்தில் – நெல்லை மாவட்டத்தில் – பாண்டிய மண்டலத்தில் என்று ஊர்ச்சிறப்பைச் சொல்லும்போது எடுத்தவுடன் நிலவளத்தைக் கூடச் சொல்லாமல், நீர்வளம், நிலவளம் நிறைந்த அந்த ஊரில் இன்னின்னார் வாழ்ந்தார்கள், இன்னார் பிறந்தார், அவருக்குப் பிள்ளையாக இன்னார் பிறந்தார் என்றெல்லாம் சரித்திரத்தை ஆரம்பிப்பார்கள்.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், நீர்வளம் அவ்வளவு முக்கியமானது. நீர்வளம் இல்லாமல் வாழ முடியாது. நீர், நிலம் என்றுதான் ஆரம்பமாகும். "நீரின்றி அமையாது உலகு" என்றான் வள்ளுவன். நிலமின்றி அமையாது உலகு என்று சொல்லவில்லை, சொல்ல மாட்டான். ஏனென்றால் நிலம் இருப்பது தானே உலகு என்கிற போது, அவன் நிலமின்றி அமையாது உலகு என்று சொல்லமாட்டான். நிலம் இருக்கலாம், காடு இருக்கலாம், மரங்கள் இருக்கலாம், அவ்வளவு இருந்தாலுங்கூட நீர் இருந்தால் தான் உலகம் என்று அமையும் என்று சொன்னான். அதைப்போல நாடு என்று அமைய, நகரம் என்று அமைய, ஊர் என்று அமைய, வீடு என்று அமைய, வீடுகளில் மனிதர்கள் என்று அமைய மக்கள் ஜீவராசிகள் என்று அமைய வேண்டுமேயானால் நீர் மிகமிகத் தேவை. அந்த நீர்த் தேவையை நிறைவு செய்கிற அரசாக எந்தவொரு அரசும் முழு மனநிறைவோடு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இன்னும் அமையவில்லை.

ஒவ்வொரு மாநிலத்தையும் நீங்கள் பார்த்தால் ஏதோ ஒரு நதி நீர்ப் பிரச்சினை அவர்களுக்கு. தமிழ்நாட்டில் மூன்று பக்கங்களிலிருந்தும் நதி நீர்ப் பிரச்சினை. கர்நாடகத் திலேயிருந்து நதிநீர்ப் பிரச்சினை, கேரளத்திலேயிருந்து நதி நீர்ப் பிரச்சினை. ஆந்திராவிலேயிருந்து நதிநீர்ப் பிரச்சினை. இப்படி மூன்று புறங்களிலிருந்தும் நதிநீர்ப் பிரச்சினை. இவர்கள் எல்லாம் கொடுக்கவில்லையே, தரவில்லையே என்று பிரச்சினை. இன்னொரு பக்கத்திலே புதுச்சேரி மாநிலம் இருக்கிறது. அங்கேயும் நதி நீர்ப் பிரச்சினை தான். அவர்கள் நீங்கள் எங்களுக்குக் கொடுக்கவில்லையே என்று நம்மைப் பார்த்துக் கேட்கிறார்கள். இப்படி நம்மைச் சுற்றியிருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் இந்தத் தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு ஏராளமாக தண்ணீர் இருக்கிறது. எங்கே இருக்கிறது ? கொடுக்க முடியாது என்று சொல்பவர்களிடம் இருக்கிறது. தருவதற்கு தயக்கம் காட்டுகிறவர்களிடம் இருக்கிறது. ஏன் தர வேண்டும் என்று கேள்வி கேட்பவர்களிடம் இருக்கிறது. இந்தியா ஒரே நாடு என்று சொல்லி விட்டு, அதை, அந்த நிலையை உறுதிப் படுத்தாதவர்களின் நெஞ்சங்களிலே அந்தத் தடை இருக்கிறது. அந்தத் தடை நீக்கப்பட வேண்டுமென்பதற்காகத் தான் இன்றைக்கு இந்தப் பகுதியிலே – சென்னை மாநகரத்திற்காக தண்ணீர் கிடைத்த ஒரு மகிழ்ச்சியைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தண்ணீரைத் தேக்கி வைத்து அனுப்புகிற – ஒரு தூய்மைப்படுத்தும் நிலையத்தை உருவாக்கியதற்காக மகிழ்ச்சி அடைந்து கொண்டி ருக்கிறோம். அதே நேரத்தில் இந்தியா முழுமையும் இருக்கின்ற இந்தச் சங்கடத்தை நாம் உணர்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த நிலைமையிலே அதை உணர்ந்து பார்த்தால்தான் அதற்கொரு முடிவு வந்தால் தான் ஒரு இடத்திலே தண்ணீர் தேங்கியிருக்கிறது, இன்னொரு இடத்திலே தண்ணீர் இல்லாமல், நம்முடைய கண்களிலே கண்ணீர் தேங்கவுமான நிலை மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் – கர்நாடகத்திலே மிதமிஞ்சிய தண்ணீர் வருகிறது என்றால் மழை பொழிந்து வருகிறது என்றால், துரைமுருகன் முகத்திலே மகிழ்ச்சியைக் காண முடிகிறது. காரணம் விவசாயிகளின் முகத்திலே மகிழ்ச்சி ஏற்படும் என்று அவர் கருதுகிறார், நான் கருதுகிறேன், எங்களுடைய நெஞ்சம் எல்லாம் பூரிக்கிறது. ஆனால் மழை வந்து கர்நாடகத்திலிருந்து தண்ணீர் வராவிட்டால் வறண்டு கிடக்கின்ற நிலத்தைப்போல எங்கள் உள்ளமும் வறண்டு போகிறது. அங்கே மழை வந்து, மழைபொழிந்து வெள்ளக்காடாக ஆகின்ற நேரத்தில் அந்த வெள்ளக்காடு இங்கேவந்து, நம்மை வாழ வைக்கின்ற வெள்ளக்காடாக இல்லாமல், நம்முடைய வாழ்வை வதைக்கின்ற – நம்மைக் கெடுக்கின்ற – இங்கே வெள்ளம் பெருக்கெடுத்தது, ஆறு உடைந்தது, கரைகள் எல்லாம் உடைந்தன, நான்கு பேர் தொலைந்தார்கள், நாற்பது பேர் மாண்டார்கள் என்று அந்தச் செய்திகளைச் சொல்கின்ற வெள்ளம் தான், அப்படி வெள்ளக் காடாக வருகிறது. சீராக வர வேண்டிய தண்ணீர் வந்து எல்லோரும் சிறப்பாக வாழ ஒரு சமத்துவ நிலையை இங்கே, இந்தியாவிலே உற்பத்தியாகின்ற கங்கை ஆனாலும், காவேரி ஆனாலும், தாமிரபரணி ஆனாலும், மகாநதி ஆனாலும் எந்த நதியானாலும் அந்த நதிகளால் நாம் பெற முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் அதைப் பெறக் கூடிய மதியை நாம் பெறவில்லை. மதியைப் பெறுகிறோமோ இல்லையோ, அந்த விதியை நாம் இந்த நாட்டு மக்களுக்கு ஒழுங்காக எழுதுகின்ற நிலையைப் பெறவில்லை. அந்த நிலையை நாம் பெற்றாக வேண்டும். அந்த நிலையைப் பெற்றால்தான் தண்ணீர் எப்படி உற்பத்தியான பொருள்கள் எல்லாம் அனைவருக்கும் சொந்தம். பொது உடைமை, என்று கூறுகிறோமோ அதே நேரத்திலே இயற்கை அளிக்கின்ற வரம் தண்ணீர் அதுவும் எல்லோருக்கும் பொது என்கிற அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால் தான் – அதைத் தான் நதி நீர் இணைப்பு என்று சொல்கிறோம். அந்த நதிநீர் இணைப்பு ஏற்பட்டு விட்டால் இங்கே ஒரு விழா கொண்டாட வேண்டிய அவசியமே நமக்கு இருக்காது.

நாம் தூய்மைப்படுத்தப்பட்ட தண்ணீரை சென்னைக்கு அனுப்புவதையே ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடுகிறோம் என்றால், தண்ணீரை இங்கே பார்ப்பதே – தண்ணீரை தூய்மையாகப் பார்ப்பதே இவ்வளவு பெரிய காரியமாக இருக்கிறது. தண்ணீர் கிடைப்பதே அவ்வளவு பெரிய காரியமாக ஆகிவிட்டது. அப்படியாகிவிட்ட காரணத்தினாலே தான், அது அனைவருக்கும் கிடைக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று, ஆன்றோர், சான்றோர், அறிஞர் பெருமக்கள், விஞ்ஞானிகள், பொறியாளர்கள், அத்தனை பேரும் இன்றைக்குச் சிந்திக்கின்றார்கள். ஆனால் அதற்கு வழிவிடாமல் தடுப்பது ஒன்றே ஒன்றுதான் அதற்குப் பெயர்தான் அரசியல்.

விஞ்ஞானம் நதிகள் பொதுவாக வேண்டுமென்று சொல்கிறது. பொறியாளர் களுடைய துறை நதிகள் பொதுவாக வேண்டுமென்று சொல்கிறது. அப்போதுதான் நாடு வாழும், நலிவு தீரும் என்று சொல்கிறது. ஆனால் இயற்கை வழங்குகிறது எல்லோருக்கும் பொதுவாக ஆனால் அப்படி வழங்கப்படுகின்ற தண்ணீரை அனுப்ப முடியாது என்று மறுக்கிறது அரசியல். அந்த அரசியல் ஒரு மனிதனுடைய உள்ளத்தின் காரணமாக மறுக்கப்படுகிறதா என்றால் அவன் மறுக்கக் கூடிய அளவிற்கு அங்கே இருக்கும் அரசியல் சூழ்நிலை அவனைத் தள்ளுகிறது. அவன் கூட நினைப்பான். பாவம் தமிழ்நாட்டு மக்கள் கஷ்டப்படுகிறார்களே, அவர்களுக்குத் தண்ணீரைத் தந்து உதவுவோம் என்று பக்கத்து மாநிலத்திலே இருக்கிற ஒருவன் – அந்தப் பக்கத்து மாநிலத்தின் அதிபர் எண்ணலாம், கருதலாம், நல்ல உள்ளத்தோடு சிந்திக்கலாம். வழங்கலாம் என்று வழங்க முன் வரலாம். ஆனால் அவனை அங்கே தடுப்பது அவனை சூழ்ந்திருக்கிற அரசியல். அந்த அரசியலைப் புனிதப்படுத்துவோம், அந்த அரசியலுக்கு இரக்கக் குணத்தை உண்டாக்குவோம். நாம் முதலில் மனிதனுடைய இரக்க குணத்தை வளர்ப்போம் என்பதை விட அரசியலுக்கு இரக்கக் குணத்தை உருவாக்குவோம். இந்த இரக்கக் குணத்தை அரசியலுக்கு உருவாக்கினால்தான் பக்கத்து மாநிலங்களிலே வாழ்கின்ற மனிதர்கள் வாழ முடியும். எல்லோரும் வாழ முடியும்.

இந்தியா ஒன்று என்று சொல்கிறோமே, அது நன்று என்று பக்கத்திலே உள்ள நாட்டுக்காரன் சொல்ல வேண்டுமேயானால், இன்று இந்தியா ஒன்று என்று சொன்னாலுங்கூட, அது என்று என்று கேட்கக் கூடிய நிலையிலே தான் நாம்



இருக்கிறோம். ஆகவே இந்தியா ஒன்று. ஒருமைப்பாடு, ஒற்றுமை – இந்தியா வலிமை பெற்ற நாடு என்கின்ற இந்த கனவுகள் எல்லாம் நனவுகளாக ஆக வேண்டுமேயானால், நான் இன்றைய தினம் செம்பரப்பாக்கம் குடிநீருக்காக மாத்திரம் மகிழ்ச்சியடைய முடியாது. செம்பரம்பாக்கத்திலே உட்கார்ந்து கொண்டு நான் கருதுகிறேன், செந்தமிழ் நாடு முழுவதையும் எண்ணிப் பார்க்கிறேன். சிந்து நதியும், மற்ற நதிகளும் பாய்ந்திட்ட இந்தியா முழுமையையும் நான் எண்ணிப் பார்க்கிறேன். அப்படி எண்ணிப் பார்க்கும் போது, நான் மாத்திரமல்ல, நானும் சுதர்சனமும், யசோதா அம்மையாரும், கழக நண்பர்களும் மற்றக் கட்சி நண்பர்களும், எல்லா கட்சி நண்பர்களும், கட்சி மாச்சரியங்களை யெல்லாம் விட்டு விட்டு, நாமனைவரும் தமிழர்கள், திராவிடர்கள் என்ற நிலையையும் கூடக் கடந்து, இந்தியர்கள் – அந்த நிலையையும் கடந்து மனிதர்கள் – அந்த மனிதனின் தாகத்தைத் தீர்க்க – மனிதனின் தேவைகளை நிறைவு செய்ய – தண்ணீரை முதலில் பொதுவுடைமையாக்குவோம். தண்ணீரை பொதுவுடைமையாக்கி நதி நீரை இணைத்து இந்தியாவின் ஒற்றுமையைப் பலப்படுத்த இது போன்ற நிகழ்ச்சிகளில் நாம் சபதம் எடுத்துக் கொள்வோம் என்று சொல்லாவிட்டாலும் கூட இத்தகைய நிகழ்ச்சிகளில் அதை ஞாபகப்படுத்திக் கொள்கிறோம். ஞாபகத்திலேயே அந்த நிகழ்ச்சிகள் இருக்குமேயானால், அது சபதமாக மாறும். அந்தச் சபதம் நிறைவேறும். அது நிறைவேறினால் தான் இந்தியா வாழும் என்று கூறி, அப்படிப்பட்ட இந்தியா வாழ்கின்ற நிலைமையை உருவாக்க இந்த விழா பயன்படட்டும் என்று எடுத்துரைத்து, விழாவிலே கலந்து கொண்டுள்ள என்னுடைய அத்தனை தோழர்களுக்கும், இந்த வட்டாரத்துப் பொது மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நன்றியையும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

[illegible]ல் 19.7.2007 அன்று
சென்னைக்கு நாள்தோறும் 530 மில்லியன் லிட்டர்
குடிநீர் வழங்கும் சுத்திகரிப்பு நிலையத்தை தொடங்கிவைத்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
புதுதில்லியில் 25.7.2007 அன்று
மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், 25.7.2007 அன்று, புதுதில்லியில், மாண்புமிகு நாடாளுமன்ற பேரவைத் தலைவர் திரு. சோம்நாத் சாட்டர்ஜி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்தார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.7.2007 அன்று, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உதவி பொறியாளர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கினார்கள்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.7.2007 அன்று ஆலந்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரத்தில் நடைபெற்ற விழாவில், வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மூன்றாவது கட்டமாக அரசின் உதவித் தொகைகளை வழங்கினார். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் உடன் உள்ளார்.

36ஆம் பக்கத் தொடர்ச்சி...



மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி**
அவர்கள் தலைமையில்
30.7.2007, 31.7.2007 ஆகிய
இரு நாட்கள்
சென்னை –
தலைமைச் செயலகம் –
நாமக்கல் கவிஞர் மாளிகையில்
உள்ள மாநாட்டுக் கூடத்தில்
நடைபெற்ற
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மற்றும் காவல் துறை அதிகாரிகள்
மாநாட்டில்;
கலந்தாலோசனைக்குப் பின்னர்
மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்
பின்வருமாறு:–

1. அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகள் கட்டி குடியிருப்போருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற திட்டம் குறித்தும் நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு அரசு சார்பில் பண்படுத்தப்பட்ட நிலம் வழங்கும் திட்டம் குறித்தும் இன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

ஏழையெளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குகின்ற கொள்கையை நீண்ட காலமாக ஏற்று நடைமுறைப்படுத்தி வருகின்ற இந்த அரசு 1996ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பையேற்றவுடன் இந்தத் திட்டத்தை சிறப்புத் திட்டமாக எடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்து, அதன்படி வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கத் தொடங்கியது.

அதன் பயனாக 1996–1997ஆம் ஆண்டு 1,10,343 பேருக்கும், 1997–98 இல் 2,50,811 பேருக்கும், 1998–99 இல் 2,27,414 பேருக்கும், 1999–2000 இல் 1,98,052 பேருக்கும், 2000–2001இல் 1,63,829 பேருக்கும், 2001–2002 இல் 25,628 பேருக்கும், 2002–03 இல் 70,197 பேருக்கும், 2003–04 இல் 88,148 பேருக்கும், 2004–05 இல் 94,456 பேருக்கும், 2005–06 இல் 82,196 பேருக்கும், 2006–2007 இல் 76,622 பேருக்கும் என மொத்தம் 14 இலட்சத்து 87 ஆயிரத்து 696 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு இதை மேலும் ஒரு சிறப்புத் திட்டமாக கடைப்பிடித்து ஏழையெளியோருக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்க வேண்டுமென்பதை குறிக்கோளாக எடுத்துக் கொண்டு 2008ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிவடைவதற்குள் 3 இலட்சம் பேருக்கு வீட்டுமனைகள் வழங்கப்பட வேண்டும் என்ற முடிவு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

2. நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின்

கீழ் இதுவரை 91,576 குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 1 ஆயிரத்து 623 ஏக்கர் நிலம் வழங்கிட அரும்பாடுபட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்தக் கூட்டத்தில் பாராட்டுத் தெரிவித்தார். மேலும் நிலம் வழங்கும்போது நிலத்தை வரையறுத்து எல்லைக்கல் பதித்து வழங்கிட வேண்டுமென்றும்; நிலத்தை வழங்காமல் பட்டா மட்டுமே வழங்கப்பட்டது என்ற புகார் எழாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும்; இந்தத் திட்டத்தை மேலும் சிறப்பாக நடத்துவதற்கு என்னென்ன வழிமுறைகளை பின்பற்றலாம் என்பது குறித்து முடிவு செய்து நடைமுறைப் படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுள் சிலரைக் கொண்ட குழு ஒன்றினை உடனடியாக அமைத்து, அவர்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்று, இத்திட்டத்தை மேலும் செம்மையாக நடத்துவதென்றும் இன்றையக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது.

3. தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் 45 சதவீதத்தில் இருந்து 38 சதவீதமாக தற்போது குறைந்திருக்கிறதெனினும், இன்னும் பெருமளவுக்கு குறைப்பதற்கான முயற்சிகளில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபடுவதென்றும்; "காவல்துறையின் நண்பர்கள்" அமைப்பின் செயல்பாடுகளை இன்னும் செம்மையாக மேம்படுத்துவது என்றும்; காவல் நிலையத்திற்கு வரும் புகார்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தும், அவற்றைப் பின்பற்றாத காவல் துறை அதிகாரிகள் மீதும், காவலர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுப்பதென்றும்; பொது விநியோக முறையில் விற்கப்படுகின்ற அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களை கடத்துவதைத் தடுக்க எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளையும், தமிழகத்தின் எல்லையோர மாவட்டங்களில் கண்காணிப்பையும் இன்னும் தீவிரப் படுத்துவதென்றும்; தீவிரவாதப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ள பின்தங்கிய மற்றும் மலைப்புறங்களில் வறுமை ஒழிப்பு நடவடிக்கையாக சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை காவல்துறையுடன் இணைந்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிறைவேற்றுவதென்றும்; காவல்துறை நேரடியாகத் தலையிடக்கூடாத உரிமையியல் பிரச்சினைகளில் தலையிடும் சூழ்நிலைகளைக் கட்டாயம் களைந்திட வேண்டுமென்றும் முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிருவாகத் துறையைப் பொறுத்தவரை, 1996–2001 கால கட்டத்தில் ஊராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட "நமக்கு நாமே திட்டம்" மிகுந்த பயன்களை அளித்து, நாட்டு வளர்ச்சியில் நமது பங்குப்பணியைச் செலுத்துகிறோம் என்ற நல்லுணர்வினை பொதுமக்களிடையே ஏற்படுத்தி பெருத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. எனினும், கடந்தகால ஆட்சியில் இந்த திட்டம் கைவிடப்பட்டது. தற்போது, அந்தத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவது பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்வதென்றும்;

தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டுவரும் மத்திய, மாநில திட்டங்களிலேயே மிகப் பெரிய திட்டமான "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட"த்தின் செயல்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் நேரில் கண்டறிந்து ஆய்வு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென்றும்; ஒரு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றும்போது, மத்திய, மாநில அரசுகளின் அனைத்துத் திட்டங்களின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டுமென்றும்;

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ள 10 மாவட்டங்களில், வேலை



செய்வோருக்கு வழங்கப்படும் வாராந்திர ஊதியத்தை வெளிப்படையாகவும், நியாயமாகவும் வழங்குவதை உறுதி செய்திடும் பொருட்டு ஊதியம் வழங்குவதற்கென வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளை நிர்ணயம் செய்து, அதற்கென அமைக்கப்பட்டுள்ள "ஊதியம் வழங்கும் குழுவினரின்" முன்னிலையில் வழங்குவதென்றும்; இத்திட்டத்தின்கீழ் எக்காரணம் கொண்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தக் கூடாதென்றும்; இந்த 10 மாவட்டங்களிலும் உள்ள அனைத்துக் கிராமங்களும் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்;

சுயஉதவிக் குழுக்களில் ஒருவரே பல குழுக்களிலும் உறுப்பினராக இருப்பதைக் கண்காணித்துத் தடுக்க வேண்டுமென்றும்; சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களில் 45 சதவீதத்தினர் எழுத்தறிவு இல்லாதவர்களாக இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு 'அனைவருக்கும் கல்வித் திட்டத்தில்' தொடக்கநிலைக் கல்வி அறிவைப் புகட்டுவதென்றும்; சுயஉதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் புதிய திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதென்றும்; முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

5. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைப் பொறுத்தவரை கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை முறையாகப் பராமரித்து வருவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும்; பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு தனி மின்பாதை அமைக்கும் பணியினை விரைவுபடுத்தி நிறைவேற்றுவதென்றும்; சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பயன்பெறும் வகையில் வைகை ஆற்று நீரைத் தேவையான அளவுக்குத் திறந்து விடுவது பற்றி ஆலோசனை செய்வதென்றும்; இந்த ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு பேரூராட்சியிலும் பணிகளை எடுத்துச் செய்யும்பொழுது மத்திய, மாநில அரசுகளின் அனைத்துத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டுமென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

6. இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ், தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குவதற்கென அறிவிக்கப்பட்ட நாளில் தாமதமின்றி தவறாமல் வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது. சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்பதற்காக கால தாமதம் செய்யக் கூடாதென்றும் முடிவெடுக்கப்பட்டது.

7. அனைவருக்கும் கல்வி இயக்கம் எனும் திட்டத்தின்கீழ் அனைத்து மாவட்டங்களிலும் கட்டட வசதிகளை ஏற்படுத்துவதற்கென 330 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டிருப்பதால், கட்டுமானப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவதென முடிவு செய்யப்பட்டது.

8. எரிசக்தித் துறையைப் பொறுத்தவரையில் தெருவிளக்குகள், குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிப்பதென்றும்; மின்சாரத் துணை நிலையங்கள் அமைக்க அரசு நிலங்களைத் தேர்வு செய்யும்போது, அந்த நிலங்களில் முன்நுழைவுக்கான அனுமதி வழங்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்குவதைப் பற்றி உடனடியாகப் பரிசீலனை செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

9. மினி பஸ் திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கு 7,000 சிற்றுந்து அனுமதிச் சீட்டுகள் (permits) வழங்கப்பட்டிருந்தும், இதுவரை 3,965 அனுமதிச் சீட்டுகளே மாவட்ட ஆட்சித் தலைவர்களால்

வழங்கப்பட்டிருப்பதால், எஞ்சியுள்ளவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தக்க வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழித்தடங்களைக் கண்டறிந்து, அனுமதிச் சீட்டுக்களை வழங்கிட வேண்டுமென்று 14.8.2007க்குள் முடிவு செய்யப்பட்டது.

10. 2008ஆம் ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி ஏழை எளியோர்க்கு வழங்கப்பட வேண்டிய 159 இலட்சம் சேலைகள், 161 இலட்சம் வேட்டிகள் அனைத்தையும், பொங்கலுக்கு முன்னதாகவே வழங்கக்கூடிய வகையில், 15.12.2007க்குள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைத்திட வேண்டு மென்று முடிவு செய்யப்பட்டது.

11. படித்து, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு நிதியுதவி வழங்குவதோடு நில்லாமல், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளுக்குத் தேவையான திறன் பயிற்சிகள் அளிப்பதற்கான ஏற்பாடுகளிலும், திறன் பெற்றோர் உரிய வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஈடுபாடு காட்ட வேண்டுமென்றும்; 8 கோடி ரூபாய் செலவில் வேலைவாய்ப்பற்றோர் நிதியுதவி பெறும் 50 ஆயிரம் இளைஞர்களுக்கான திறன் பயிற்சித் திட்டம், 25 கோடி ரூபாய் செலவில் ஆதிதிராவிட இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம், 10 கோடி ரூபாய் செலவில் 13 ஆயிரம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இளைஞர்களுக்கான தொழில் பயிற்சித் திட்டம், 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் சிறுபான்மையின இளைஞர்களுக்கும், பெண்களுக்குமான வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம், 4 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு மகளிர்நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் 5 ஆயிரம் இளைஞர்களுக்கான தொழில் பயிற்சித் திட்டம் ஆகிய தமிழக அரசின் திட்டங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

12. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவ மனைகளில், ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் இதய அறுவை சிகிச்சைகளை உடனடியாகப் பெற இயலாத நிலை இருப்பதானது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்தது. இக்குறையைக் களையும் நோக்கத்தோடு, தனியார் மருத்துவமனைகளோடு இணைந்து, இத்தகைய அறுவை சிகிச்சைகளை உடனடியாக மேற்கொள்வதற்கான பின்வரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். அத்திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் இதய அறுவை சிகிச்சைக்காகப் பதிவு செய்து காத்திருப்போரில் ஆண்டுதோறும் ரூ. 50,000/–க்கும் குறைவான வருவாய் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்வதற்காக, தமிழ்நாடு நோயாளர் நிதி உதவி அமைப்பின் மூலமாக பின்வருமாறு நிதி உதவி வழங்கப்படும்.

| | |
|---|---|
| மூடிய இதய அறுவை சிகிச்சை .. | ரூ. 10,000 |
| சாதாரண திறந்த இதய அறுவை சிகிச்சை .. | ரூ. 30,000 |
| கடினமான திறந்த இதய அறுவை சிகிச்சை .. | ரூ. 70,000 |

இத்திட்டத்தில் பங்கு பெற வசதியுள்ள தனியார் மருத்துவமனைகள் முன்வரலாம். இம்மருத்துவமனைகளை அரசின் வல்லுநர் குழு ஆய்ந்து, தகுதியுள்ள மருத்துவமனைகளைத் தெரிவு செய்யும் என்றும் இன்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

❖ ❖ ❖






# தமிழகத்தையே பூங்காவாக மாற்றுவோம்!

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி**
அவர்கள் 10.08.2007 அன்று,
சென்னையில்
ரூ.100 கோடி மதிப்பிலான
"அடையாறு பூங்கா"விற்கு
அடிக்கல் நாட்டி
ஆற்றிய உரை

**அ**டையாறு பூங்கா அடிக்கல் நாட்டு விழா மிக எழுச்சியோடு, நாமெல்லாம் மகிழத்தக்க வகையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பூங்காவை இன்று தொடங்கி வைக்கப் போகிறோம் என்று முன்கூட்டியே விளம்பரங்கள் வந்தபோது எனக்கொரு ஐயப்பாடு, அச்சமும்கூட; முன்கூட்டி அறிவிப்பதால் "தடை" ஏதும் ஏற்படுமோ என்று! நல்லவேளையாக தடை ஏதும் ஏற்படவில்லை, இனிமேலும் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

ஏனென்றால் இந்த ஆட்சி அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஈடுபாடு கொண்டிருக்கின்ற மாநகராட்சி எந்தவொரு நல்ல திட்டத்தை மக்களுக்காக நிறைவேற்ற முன் வந்தாலும் அந்தத் திட்டத்தைக் குறை சொல்லி, வம்புக்கு இழுத்து, வழக்காடி ஏதோ ஒரு வகையில் நிறுத்தி வைப்பது என்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் இன்றைக்கு நாட்டிலே சில பேர் இருக்கிறார்கள்.

சில பேர் தான் இருக்கிறார்கள், பெரும்பாலோர் அப்படி இல்லை என்ற காரணத்தினால் தான் நாம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறோம், அவர்கள் எதிர்தரப்பிலே இருக்கிறார்கள். அந்த சிலர் பலராக ஆனால் இந்தத் திட்டங்கள் எல்லாம் வருமா வராதா என்பதை கடந்த கால நிகழ்ச்சிகளை தயவுசெய்து எண்ணிப்பார்த்து, தமிழ்ப்பெருமக்கள், சென்னை வாழ் மக்கள் புரிந்துகொள்ள முடியும் என்றே தான் நான் கருதுகிறேன்.

**வெளிநாடுகளிலே கண்ட காட்சி**
**விரைவிலே வரவேண்டும்**

இந்த விழாவில் உரையாற்றிய நம்முடைய கவிஞர் தம்பி வைரமுத்து அவர்களும் மற்றும் தம்பி துரைமுருகன்



அவர்களும், மேயர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்களும், மற்றவர்களும் இந்தத் திட்டத்தால், இந்தத் தொடக்க விழாவினால், இதனுடைய விரிவாக்கத்தினால் சென்னை மக்கள் எந்த அளவிற்கு எதிர்காலத்திலே மகிழ்ச்சி அடைவார்கள், விறுவிறுப்போடு தங்கள் பணிகளை ஆற்றுவதற்கு இந்தத் திட்டம் கைகொடுக்கும் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள்.

எனக்கு இந்தப் பூங்காவைத் தொடங்கி வைக்கின்ற நேரத்தில் எனக்குள்ள ஆசையெல்லாம் நான் வெளிநாடுகளிலே கண்ட காட்சிகள், சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை, நெல்லை போன்ற நகரங்களிலே விரைவிலே வர வேண்டுமே என்பதுதான். ஏனென்றால் வெளிநாடுகளுக்கு நாம் சென்றால் அங்கெல்லாம் அந்த நாட்டின் தலைநகரத்தை, பெருநகரத்தை அழகுபடுத்துவதற்கென்று அங்குள்ள பூமி பயன்படுகிறதோ இல்லையோ, நிலம் பயன்படுகிறதோ இல்லையோ, மரம் செடி கொடிகள் பயன்படுகிறதோ இல்லையோ, தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கின்ற ஆறுகள் அந்த நகரங்களின் நடுவிலே பாய்ந்து சென்று அந்த நகரத்திற்கு ஒரு புது எழிலை உருவாக்கிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

அப்படிப்பட்ட நதிகளிலே படகுகள் செல்லவும், அந்தப் படகுகளில் வாலிபர்களும், மாணவர்களும், தாய்மார்களும், ஆடவர்களும் பயணம் செய்வதும் பார்ப்பதற்கே ரம்மியமான காட்சியாக இருக்கும். அப்படிப்பட்ட காட்சிகள் சென்னை போன்ற நகரங்களில், தமிழகத்திலே உள்ள பெருநகரங்களில் எப்போது வரும், வரும் என்று நான் வெளிநாடு சென்று திரும்புகிற நேரத்தில் எல்லாம் எண்ணி ஏங்கியதுண்டு. அப்படிப்பட்ட ஏக்கத்தைப் போக்குகின்ற நாளாக, தொடக்க நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது என்றே நான் நம்புகிறேன். அதற்கேற்றாற்போல், இந்த விழாவை அமைத்துள்ள நம்முடைய நண்பர்கள், அரசுப் பொறுப்பிலே அல்லது நகராட்சி மன்றப் பொறுப்பிலோ இருப்பவர்கள் அரும்பாடுபட்டு இந்த விழாவை நடத்துகிறார்கள் என்பதும், இதற்காக எத்தனை நாள் அவர்கள் தங்களுடைய உழைப்பைச் செலவிட்டிருக்கிறார்கள் என்பதும் எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

இங்கே மாலையிலே நாங்கள் வந்த போது ஒரு வண்டியிலே அமர வைத்து, இங்கேயிருக்கின்ற காட்சிகளையெல்லாம் தம்பி ஸ்டாலின் எனக்குக் காட்டினார். என்னென்ன இங்கே வரப் போகிறது என்றெல்லாம் சொன்னார். என்னென்ன அமைப்புகள் இங்கே இடம் பெற இருக்கின்றன என்பவைகளையும் என்னிடம் சொன்னார். அவைகளையெல்லாம் நான் மிகுந்த உற்சாகத்தோடு கேட்டேன், உணர்ச்சியோடு கேட்டேன்.

### கூவம் மணக்கப் போகின்ற நாள்...?

இருந்தாலும் என்னுடைய உள்ளத்திலே ஒரு தாக்கம்; இவ்வளவு அழகும் எழிலும், இவ்வளவு அருமையான நிழலும், அங்கே உட்கார்ந்து உரையாடுகின்ற தம்பதியர்களுடைய காட்சிகளும் நிறைந்த இடமாக இந்தப் பூங்கா அமையப் போகிறது என்றாலும் கூட இந்த நகரத்தில் தானே கூவமும் இருக்கிறது?



அந்தக் கூவம் அகலப் போகிற நாள், அந்தக் கூவம் அகற்றப்படுகின்ற நாள், அந்தக் கூவம் மணக்கப் போகிற நாள் என்றுவரும் ? என்கிற கேள்வி என் உள்ளத்திலே எழாமல் இல்லை. அந்த நாள் விரைவிலே வருவதற்கு நாம் பாடுபட்டாக வேண்டும். நாம் இது போன்ற உள்ளம் உடையவர்களை ஆதரிக்கின்ற மனப்பக்குவத்தை பெற்றாக வேண்டும்.



ஒரு மாநிலம் இந்தியாவிலே, தமிழ்நாடு இன்றைக்கு தொழில் வளம் மிக்க மாநிலமாக வளர்ந்து வருகிறது. இதைப் போல பல மாநிலங்கள் இந்தியத் திருநாட்டில் இருக்கின்றன. தொழில் வளம் மிக்க மாநிலங்களாக அவை வளருகின்றன என்றாலுங்கூட, தமிழ்நாடு அவைகளையெல்லாம் முந்திக் கொண்டு இன்றைக்கு வளருகின்ற நிலையை நானல்ல, இங்கேயுள்ள மக்கள் அல்ல, வெளிமாநிலங்களிலே உள்ள ஏடுகள் பாராட்டுகின்றன, பத்திரிகை நண்பர்கள் புகழுகிறார்கள், காணும்போதெல்லாம் தங்கள் களிப்பை வெளிப்படுத்துகிறார்கள். அத்தகைய ஒரு நல்ல சூழ்நிலை இன்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கின்றது.

### தடைகளைத் தகர்த்து திட்டம் நிறைவேற்றம்

இந்தியாவிலே மத்தியிலே உள்ள தொழில்கள் தமிழகத்தை என்றைக்கும் மிகச் சாதாரணமாக, விரைவாக, எளிதாக எட்டிப் பார்ப்பதில்லை என்ற நிலையை மாற்றியுள்ள பெருமை நமக்குண்டு. அந்தப் பெருமைக்கு அடையாளம்தான், தமிழகத்திலே இன்றைக்கு நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற, தம்பி டி.ஆர். பாலு முன்னின்று நடத்தி வருகின்ற சேது சமுத்திரத் திட்டம் என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். அந்தத் திட்டத்திற்கும் எதிர்ப்பு இல்லாமல் இல்லை. அந்தத் திட்டமும் கூடாது என்று கூறுகின்றவர்கள் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறார்கள். அதையும் மீறி, அந்தத் தடைகளையும் தகர்த்துத்தான் ஒரு திட்டத்தை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கின்றது.

திட்டங்கள் நிறைவேறும்போதெல்லாம், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான இடையூறுகளும் கூடவே முளைப்பதை நாம் காணுகிறோம். அந்த இடையூறுகளை நம்முடைய ஒற்றுமையால் நம்முடைய மக்களுடைய ஆதரவால் போக்கி, இடையூறு இல்லாத நிலையை உருவாக்கி இங்கே தமிழ்நாட்டை எதிர்பார்க்கின்ற வளம் உள்ள பூமியாக ஆக்கிட வேண்டும். ஒரு சென்னையை மாத்திரமல்ல, ஒருசில நகரங்களை மாத்திரமல்ல, சில கிராமங்களை மாத்திரமல்ல, சென்னையை தலைநகரமாகக் கொண்டு தமிழகத்தையே வளம் உள்ள பூமியாக, தொழில் வளம் மிக்க பூமியாக, உலகத்தொடர்புடைய ஒரு மாநிலமாக வாணிபத்தில், ஏனைய நாகரிகத்தைப் பரப்புவதில் தமிழகம் ஒரு காலத்தில் முன் நின்றது, இன்றைக்கு அந்த நிலையை மீண்டும் அடைகின்ற வகையிலே படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்த வளர்ச்சியைத் தடுப்பதற்காகவும் பலர் இருக்கிறார்கள். நான் அதைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச விரும்பவில்லை.

அவர்கள் தமிழகத்திற்கு எதுவும் செய்ய முடியாவிட்டாலும், செய்பவர்களையாவது தடுக்காமல் இருந்தால் வேகவேகமாக, விரைவாக இன்னும் விறுவிறுப்பாக இந்தக் காரியங்களைச் செய்ய முடியும். நகராட்சியிலே, மாநகராட்சியிலே ஒரு பூங்கா இன்றைக்கு அமைக்கிறோம் என்றால், நான் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன், இதற்கும் கூட தடை வாங்குவதற்கான முயற்சி நடைபெற்றது என்று. நடைபெறாமல் இருந்தால்தான் ஆச்சரியம்.

நாம் நம்முடைய ஆட்சியிலோ, நகராட்சியிலோ, மாநகராட்சியிலோ ஒரு நற்காரியத்தைச் செய்யத் தொடங்கும்போது அதற்கு எந்தவிதமான தடங்கலும்



இல்லாமல் நிறைவேறினால் நாமே ஆச்சரியப்படுவோம். என்ன ஒரு தடங்கலும் இல்லையா ? என்று ஆச்சரியப்படுவோம்.

"தடைக்கற்கள் உண்டென்றால் தடந்தோள் உண்டு" என்று பாரதிதாசன் சொன்னாரே, அந்தப் பாட்டைப் பாடநேரமே கிடைக்காதா என்கிற ஏக்கத்தோடுதான் நாம் சில சாதனைகளைச் செய்ய விரும்புகிறோம். அப்படி சாதனைகளைச் செய்யும்போது என்னைப் பொறுத்தவரையிலே, அதிலே எந்த விதமான தடையும் இல்லாமல், கண்ணாடி பலகையிலே விளக்கெண்ணெயை விட்டு, அதிலே நகர்ந்துபோவதைப் போன்ற அவ்வளவு எளிமையாக காரியம் நடைபெறாமல், கல்லும் மண்ணும் பாறையும், பாதையிலே இருந்து அதிலே பயணம் நடத்துவதைத் தான் நான் விரும்புகிறவன். அப்படிப்பட்ட பயணம்தான் எனக்குப் பிடிக்கும்.

### நான் கற்ற பாடம்

எதிர்ப்புகள் நிறைய இருக்க வேண்டும், இந்தப் பக்கத்திலே கட்டாரி, இன்னொரு பக்கத்திலே ஈட்டி என்றெல்லாம் பகைவர்களால் எதிர்ப்புகள் வாரி இறைக்கப்பட வேண்டும் அதிலே நான் என்னுடைய படையைத் திரட்டிக் கொண்டு அந்தப் பாதையிலே பயணம் செய்து எடுத்த காரியத்தை முடித்தால்தான் எனக்கு நிம்மதி ஏற்படும், அதுதான் நான் கற்றப் பாடம், நான் பயின்ற பாசறை எனக்குத் தந்துள்ள பக்குவம். அப்படிப்பட்ட பக்குவத்திற்கு இன்றையதினம் என்னை ஆட்படுத்திய தலைவர்களையெல்லாம் இந்த நேரத்தில் நான் தாள்பணிந்து வணங்குகிறேன், அவர்களுக்கெல்லாம் நான் இதயமார நன்றி கூறுகிறேன்.

### எளிய மக்களை உயர்த்தும் காரியம்

அத்தகைய ஒரு நிலையில் என்னைப் பெற்றெடுத்து உங்கள் மத்தியிலே விட்டிருக்கின்ற என்னுடைய பெற்றோர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு என்னை சூழ்ந்திருக்கின்ற தோழர்களுக்கெல்லாம், தம்பிமார்களுக்கெல்லாம் துணையாக இருக்கின்ற தொண்டர்களுக்கெல்லாம் அவர்களுடைய தாள் தொட்டு வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் நான் செய்கின்ற காரியம், நான் புரிகின்ற செயல் எனக்காக அல்ல, என்னுடைய குடும்பத்திற்காக அல்ல, என்னுடைய வீட்டிற்காக அல்ல, நான் வாழ்கின்ற ஒரு சிலருக்காக அல்ல, நான் ஈடுபடுகின்ற எந்தக் காரியமானாலும், இந்த நாட்டிலே கடைக் கோடியிலே இருக்கின்ற கருப்பன், முத்தன், கந்தன், கடம்பன் என்றெல்லாம் பேசப்படுகின்ற சாதாரண கிராமப்புற தோழர்களிலிருந்து நகர்ப்புறத்திலே இருக்கின்ற பாட்டாளி தோழர்கள் வரையிலே, அத்தனை பேரையும் சென்றடைகிற காரியங்களைத் தான் நான் செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். அதைத் தான் செய்து கொண்டிருக்கிறேன். அதற்கு நான் இன்றைக்கு எடுத்திருக்கின்ற முயற்சிகள் எல்லாம் அந்தக் காரியத்தில் ஏழையை, எளியவனை, சாதாரண சாமான்யமான மக்களை உயர்த்தி வைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்ற காரணத்தினால் அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே நான் செய்கின்ற காரியத்தை நாலு பேர் ஏதோ பேசி என்னைச் சலிப்படையச் செய்து, அந்தக் காரியத்தைக் கெடுத்து விடலாம் என்று கருதுவார்களானால் இறுதியிலே தோற்கப் போகிறவர்கள் அவர்கள் தான், வெற்றி பெறப் போகிறவன் நான் தான் என்பதையும், அந்த வெற்றியிலே தான் இந்த நாட்டுப் பாட்டாளி மக்கள், ஏழையெளிய மக்களின் நல்வாழ்வு இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### கடமையை நிறைவேற்றுவோம்

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சென்னை மாநகரத்திலே எத்தனையோ நற்காரியங்கள், நம்முடைய தம்பி துரைமுருகன் எடுத்துக் காட்டியதைப் போல், உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலின் எடுத்துக் காட்டியதைப் போல், தம்பி வைரமுத்து எடுத்துச் சொன்தைப் போல் சென்னையை உயர்த்த, சென்னை மாநகரத்தை வளர வைக்க இன்று நேற்றல்ல, எத்தனையோ ஆண்டு காலமாக நாம் பாடுபட்டிருக்கிறோம். பதவிப் பொறுப்பிலே அமர்ந்தல்ல, பதவிக்கு வராத காலத்திலேயே பாடுபட்டிருக்கிறோம். இந்தச் சென்னை மாநகரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களும், நானும் நம்முடைய கழகத்தைச் சேர்ந்தவர்களும் கைத்தறி துணிகளை மூட்டைகளாகக் கட்டி தோளிலே போட்டுக் கொண்டு "கைத்தறி வாங்கலையோ கைத்தறி" என்று கூவி கூவி விற்றோம். அப்படி விற்பனை செய்தது இழிவல்லவா ? என்று கருதவில்லை. இந்த நாட்டிலே உள்ள கைத்தறி நெசவாளன் வாழ முடியாமல் தவிக்கிறானே, அதை விட இழிவல்ல இது, அவனைக் காப்பாற்றுவது இழிவல்ல என்று கைத்தறியாளனுக்காக கண்ணீர் உகுத்த கழகம், கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

அந்தக் கழகத்தின் தலைவன் இன்றைக்கு நான். எனவே கண்ணீரைத் துடைக்க, கவலையைத் தீர்க்க ஏழையெளியவர்களை உப்பரிகையிலே ஏற்றி உட்கார வைக்கப் பாடுபடக் கூடிய, பயன்படக் கூடிய இயக்கம் இந்த இயக்கம் என்ற காரணத்தால், இந்த இயக்கத்தை வளர விடாமல் செய்தால், பாமர மக்கள், சாமான்ய மக்கள், சாதாரண மக்கள் என்றென்றும் ஆதிக்கக்காரர்களுக்கு அடிவருடிகளாக இருப்பவர்கள் என்ற எண்ணத்தோடு இன்றைக்கு நடைபோடுகிறவர்கள் தொடர்ந்து வெற்றி பெற்றுக் கொண்டிருப்பார்கள். அந்த வெற்றியைத் தடுத்து நிறுத்துவது தான் இந்த இயக்கத்தின் கடமை. அந்தக் கடமையை நாங்கள் எந்த அளவிற்கு பலி கொடுத்தாயினும், உயிர் கொடுத்தாயினும் நிறைவேற்றுவோம் என்பதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

இங்கே ஒரு பூங்கா அமைத்திருப்பது – நூறு கோடி ரூபாயிலே அடையாறு பூங்கா என்று ஒரு பூங்காவை அமைத்திருப்பது நாங்கள் எண்ணுகின்ற எண்ணங்களிலே, நாங்கள் கட்டியிருக்கின்ற மனக்கோட்டையிலே ஒரு சாதாரண விஷயம்தான். நாங்கள் தமிழகத்தையே பூங்காவாக ஆக்க வேண்டுமென்று கருதிக் கொண்டிருப்பவர்கள். அப்படி பூங்காவாக ஆக்கும்போது, அதிலே புயல் புகுந்து விடக் கூடாது என்று கருதுகிறவர்கள் நாங்கள். அப்படி புயல் புகுமேயானால், அந்தப் புயலைத் தடுக்க தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை மக்களும் சுவர்களாக எங்கள் பக்கத்திலே இருக்க வேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் நாங்கள்.

எனவே பூங்கா, சென்னைக்கு மாத்திரமல்ல அடையாறுக்கு மாத்திரமல்ல, நம்மை வந்து இதுவரையிலே "அடையார்" பலர் – அவர்கள் எல்லாம் – "அடையாறு பூங்கா" இன்றைக்கு ஏற்பட்டிருப்பதைக் கண்டு "அடைவோம்" என்று கூடக் கருதலாம். அதைத் தான் கவிதை வரிகளிலே நான் எழுதி, இந்தக் கல்லிலே அதைச் செதுக்கி வைத்திருக்கிறார்கள், "அடையாறு பூங்காவில் அடைவார்கள் தேனீக்களைப் போல" என்று.

தேனீக்களைப் போல அடைந்து, தேனை உருவாக்கி, தேனை மற்றவர்களுக்கும் பருகக் கொடுத்து, நாமும் அமைதியாக கொஞ்சம் இனிமையாக அனுபவிக்க, பொழுதைக் கழிக்க இந்தப் பூங்காவை பயன்படுத்தலாம் என்று சொல்வதற்குக் காரணமே, இந்தப் பூங்கா போன்ற சாதனைகளால் நாம் பெறுகின்ற சுகம், துளியளவு. நமக்குள்ள சுயநலம் என்




முனையளவு, அதனால்தான் நான் தனிமைச் சுகத்தையும் இங்கே பெறலாம் என்று தனிமைச் சுகத்தைப் பெறுவதற்காக பூங்கா என்று குறிப்பிடலாம், தனிமைச் சுகத்தையும் இங்கே பெறலாம் என்று எழுதினேன்.

அந்தத் தனிமைச் சுகத்தை இது போன்ற பூங்காக்களிலே பெறுபவர் தம்பி வைரமுத்து என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவருக்கு பாட்டு எழுத இது மாதிரியான பூங்காக்கள்தான் தேவை. எனக்கு இதைப் போன்ற பூங்காக்களைப் பார்த்தால் என்னுடைய எண்ணம் எல்லாம், இந்தப் பூக்களை உருவாக்க, இந்தப் பூஞ்செடிகளை உருவாக்க புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதைப் போல "எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ, உங்கள் வேரினிலே" என்று, அந்தப் பாட்டுத் தான் எனக்கு நினைவுக்கு வரும். இப்படிச் சொல்வதால் வைரமுத்துவிற்கு இந்தப் பாட்டு நினைவுக்கு வராது என்று பொருள் அல்ல, அவருக்கும் நினைவுக்கு வரும்.

**கனவை நிறைவேற்றுவோம்**

"சித்திரைச் சோலைகளே, உம்மை நன்கு திருத்த இந்தப் பாரினிலே, எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே" என்று புரட்சிக் கவிஞர் கேட்டார். அதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறோம். அதையும் நினைவிலே செதுக்கி வைத்திருக்கிறோம். அப்படி பூங்காவாக, இங்கே தமிழகத்தையே ஆக்க வேண்டும் என்ற அந்தப் பெரிய திட்டத்தையும், பெரும் கனவையும் சிந்தையிலே தேக்கி வைத்திருக்கிறோம். அந்தக் கனவு நிறைவேற, இவைகள் எல்லாம் அடித் தளங்கள் ஆகட்டும்.. அந்தக் கனவு நிறைவேற இவைகள் எல்லாம் அஸ்திவாரங்கள் ஆகட்டும். இந்த முயற்சிகள் எல்லாம் அச்சாரங்களாகட்டும்.

அந்தக் கனவை நிறைவேற்றுவோம், அந்தக் கனவு நிறைவேற வேண்டுமேயானால் நான் ஒருவன் மாத்திரமல்ல, இந்த அவையிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் மாத்திரமல்ல, அந்தக் கனவு நிறைவேற வேண்டுமேயானால் நீங்கள் அத்தனை பேரும் எனக்கு, இந்த ஆட்சிக்குக் கைகொடுக்க வேண்டும். அப்படி கை கொடுத்தால்தான் – நாம் நம்முடைய கையை நம்பி – நம்முடைய உழைப்பை நம்பி – நம்முடைய வலிவை நம்பி – நம்முடைய நல்ல எண்ணத்தை நம்பி நாட்டு மக்களுக்கான தொண்டைத் தொடருவோம், இதுபோன்ற பல நன்மைகளை தொகை தொகையாக மக்களுக்கு, நாட்டுக்குச் செய்திடுவோம் என்று கூறி இந்த முயற்சியிலே ஈடுபட்ட நம்முடைய அரசு அலுவலர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், குறிப்பாக நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் தம்பி ஸ்டாலினுக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன். •





# அமர்த்தியா சென் ஆய்ந்து அறிவிப்பது என்ன?

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிக்கை

தூத்துக்குடி மாவட்டத்தில் டைட்டானியம் டை ஆக்ஸைடு தொழிற்சாலை ஒன்றை 2,300 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்க டாட்டா நிறுவனம் முன் வந்தது குறித்துத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் கருத்துத் தெரிவித்துள்ளன. அநேகமாக எல்லாக் கட்சிகளும் அங்கே சென்று மக்களிடம் கருத்துக்களைக் கேட்பதாக கூறி அவ்வாறே செய்தும் வருகின்றன. அந்தக் கருத்துக் கேட்பின் போது, அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப தங்கள் தங்கள் அபிமானிகளை அழைத்து வந்து கருத்துக்களைச் சொல்ல வைக்கும் ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கூட்டத்திலும் எதிர்ப்புக் கருத்துக்களும் சொல்லப்பட்டு அதனை இந்து போன்ற நாளேடுகள் வெளியிடவும் தவறவில்லை. இந்தத் தொழிற்சாலைக்கான மூலப் பொருள் கிடைக்கும் இடத்தை விட்டு விட்டு வேறு எங்கேயோ தொழிற்சாலையை ஆரம்பித்தால் என்ன என்ற கேள்விகளும் கேட்கப்படுகின்றன. அவர்கள் கருத்துப்படி அங்கே தொழிற்சாலை ஆரம்பித்தால் கூட, மூலப்பொருள் உள்ள தொலை தூரத்திலிருந்து அதனை எடுத்துத் தானே கொண்டு போக வேண்டும். வேறு சிலர் அரசாங்கமே இந்தத் தொழிற்சாலையை நடத்தினால் என்ன என்று யோசனைகளையும் வழங்குகிறார்கள். 2,300 கோடி ரூபாய் உடனடியாக முதலீடு செய்ய அரசாங்கத்திடம் நிதி வசதி உள்ளதா என்பதைப் பற்றி அவர்கள் யோசிக்கவில்லை. டாட்டா தொழிற்சாலையைப் பொறுத்தவரை இந்தியாவிலே நேர்மையாக எவ்வித ஊழலுக்கும் இடமின்றி தொழில் நிறுவனங்களை நடத்துவோர் என்பது தொழில் துறை பற்றி அறிந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். வேறு சிலர் டாட்டா நிறுவனம் முதன் முதலாக இப்போது தான் தமிழகத்திற்கு வருவதாகச் சொல்கிறார்கள், அவர்களுக்கு டாட்டா நிறுவனத்தின் சார்பில் தமிழகத்தில் ஏற்கெனவே பல நிறுவனங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன என்ற விவரம் கூடத் தெரியாத நிலை.

இதே டாட்டா நிறுவனம் மேற்குவங்க மாநிலத்தில் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவது குறித்து அங்கே பிரச்சினைகள் தோன்றி அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெறுகின்றன. நந்திகிராமம் என்ற பெயர் திடீரென நாடு முழுதும் பேசப்படுகிற ஒன்றாகி விட்டிருக்கிறது.

இந்த நிலையில் ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் கல்வி நிறுவனம் ஒன்றை தோற்றுவித்து நடத்திய "சாந்திநிகேதனில்" பிறந்தவரும், நோபல் பரிசு பெற்றவரும், உலகப் புகழ் பெற்ற பொருளாதார நிபுணருமான அமர்த்தியா சென் அவர்கள் மேற்கு வங்கத்தில் தொடங்கப்படும் டாட்டா தொழிற்சாலை பற்றி கொல்கத்தாவில் இருந்து வெளியாகும் "டெலிகிராப்" இதழுக்கு ஒரு சிறப்புப் பேட்டியினை அளித்துள்ளார். அந்தப் பேட்டியில் உள்ள சில கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுபவை என்பதால் அவற்றை இந்தக் கடிதத்தில் தொகுத்து தந்துள்ளேன். அது வருமாறு:–

கேள்வி :– தொழில் துறைக்கு வேளாண் நிலங்களை கையகப்படுத்துவது குறித்தும், நந்திகிராமம் – சிங்கூர் விவகாரம் குறித்தும் தங்களுடைய கருத்து என்ன ?

அமர்த்தியா சென் :– இது மிகவும் சிக்கலான கேள்வி. இதற்கு பல பரிமாணங்கள் உண்டு. அவற்றைத் தனித்தனியாகப் பார்க்கலாம். முதலில் மேற்கு வங்கத்திற்குத் தேவையான தொழில் கொள்கை குறித்து ஆராய்வோம். இது ஒரு நீண்ட கால கேள்வி மட்டுமன்றி அதி முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட. மேற்குவங்கத்தில் தொழில் துறை எவ்வளவு தூரம் பின்னடைந்து இருக்கிறது என்பதை நாம் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். இந்தியாவில் மட்டுமன்றி, உலகத்தில் உள்ள முக்கியமான தொழில் மையங்களில் ஒன்றாகவும் கொல்கொத்தா இருந்தது. ஐரோப்பியர்கள் எழுதிய புத்தகங்களில் உலகத்திலுள்ள வளமான தொழில் மையங்களில் ஒன்றாக கொல்கொத்தா குறிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற ஒரு பெருமையை இத்தாலியின் சில பகுதிகள் பிற்காலத்தில் எட்டின. வரலாற்று ரீதியாகப் பார்த்தால் 300 ஆண்டுகளுக்கு முன்பாக ஜோப் சார்நோக் மற்றும் வர்த்தகத்தின் அடிப்படையிலும், நகர்ப்புறக் குடியிருப்புகளும் அங்கிருந்தன. இந்தியாவில் கிடைக்கும் ஆவணங்களில் மட்டுமின்றி டாலமி, பிளினி, எல்டர் போன்ற ஐரோப்பிய எழுத்தாளர்களின் எழுத்துக்களிலும் இது குறித்த தகவல்கள் காணக் கிடைக்கின்றன. கொல்கத்தாவின் தொழில் வளத்தை ஐரோப்பியர்கள் நன்கறிந்திருந்தனர். கொல்கொத்தாவிற்கு அருகிலேயே வளம் மிக்க தொழிற்பேட்டைகள் இருந்தன. கி.பி. 401 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து பத்தாண்டுகள் இங்கே தங்கியிருந்த பாஹியானின் பயணக் குறிப்புகளிலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது. கொல்கொத்தாவிற்கு அருகில் உள்ள தம்ராலிப்தாவில் இருந்து படகு மூலம் அவர் புறப்பட்டுச் சென்றார். இவையெல்லாவற்றையும் பரந்து விரிந்து கிடந்த கொல்கொத்தாவின் பகுதியாகத் தான் கருத வேண்டும். கொல்கொத்தா ஒரு தொழில் வர்த்தக மையமாக வெகு காலத்திற்கு முன்பு இருந்ததை இவையெல்லாம் சுட்டிக் காட்டுகின்றன.

கம்யூனிஸ்ட் கட்சியின் தொழில் கொள்கையானது நன்றாக ஆராய்ந்து எடுக்கப்பட்ட ஒன்றல்ல. தொழிற்சாலைகளில் நடைபெற்ற போராட்டங்கள், தொழிலாளர்களுக்குச் சில உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கலாம். ஆனால் கொல்கொத்தாவிலிருந்து தொழிற்சாலைகள் வெளியேறியதன் காரணமாக பல உரிமைகளை அவர்கள் இழக்க வேண்டியிருந்தது. ஜோதிபாசுவிற்கு இந்தப் பிரச்சினைகள் தெரியும். பெரிய தொழிற்சாலைகள் அமைய வேண்டியதன் அவசியத்தை புத்ததேவ் பட்டாச்சார்யாவும் உணர்ந்திருக்கிறார். இது மிகவும் அவசியமான ஒன்று. தொழில் உற்பத்தியானது ஹுக்லி நதிக்கரையிலும், கங்கை நதிக்கரையிலும் உள்ள வளமான நிலங்களில் தான் நடைபெற்றது என்பதை நாமெல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே வளமான வேளாண் நிலங்களைத் தொழில் துறைக்கு விட்டுக் கொடுக்கமாட்டோம் என்று கூறுவது மேற்கு வங்கத்தின் தொழில் கொள்கைக்கு விரோதமானது மட்டுமின்றி வங்காளத்தின் இரண்டாயிரம் ஆண்டு கால வரலாற்றுக்கும் எதிரானது.

நிலங்கள் வளமானவைகளாக இருந்தாலும், அவற்றை தொழிற்சாலைகளுக்கு அளிக்கும் பட்சத்தில் அங்கு உற்பத்தி செய்யும் பொருட்களின் மதிப்பானது வேளாண் உற்பத்திப் பொருட்களை விட எத்தனையோ மடங்கு அதிக மதிப்புடையதாக இருக்கும். மான்செஸ்டரிலும், லங்காஷயரிலும் தொழிற்சாலைகள் வளமான வேளாண் நிலங்களில் தான் அமைக்கப்பட்டுள்ளன.

கேள்வி :– நிலம் கையகப்படுத்துவது குறித்து உங்களுடைய கருத்து என்ன ?

அமர்த்தியாசென் :– இதில் சில தவறுகள் நடைபெற்றன. இதை அரசு ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். இதை ஓரளவுக்கு மேற்கு வங்க அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

கேள்வி :– நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு அரசு வழங்கிய இழப்பீடு குறித்து ?



அமர்த்தியா சென் :– சந்தையில் கிடைக்கும் விலையை விட அதிக அளவிலான தொகையை அரசு கொடுத்தது. அரசுக் கோணத்தில் பார்த்தால் அரசு சரியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அரசு செய்த பெரிய தவறு எது என்று யோசித்தால் நடைமுறைக்குத் தக்கப்படி யோசிக்காமல் இழப்பீட்டை முடிவு செய்ததுதான். வேளாண் நிலங்களின் மதிப்பீட்டில் எடுத்துக் கொண்டால் வழங்கப்பட்ட இழப்பீடு நல்ல தொகை தான். ஆனால் தொழிற்சாலைக்கான நிலம் என மதிப்பீடு செய்தால் அரசு வழங்கிய தொகை மிகச் சொற்பமானது. சந்தைப் பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக நாம் மாறும்போது தொழிற்சாலைகளுக்கான நிலத்தின் மதிப்பீட்டையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் இழப்பீடு வழங்க வேண்டும். இந்த விஷயத்தை அரசு புரிந்து கொள்ள வேண்டும். அந்த வகையில் அரசு செய்தது தவறு என்று கருதுகிறேன். இது ஒரு நேர்மையான தவறு. அதை எதிர்காலத்தில் சரி செய்து விட முடியும்.

கேள்வி :– உங்களைப் பொறுத்தவரை வேறு என்னென்ன பிரச்சினைகள் இருப்பதாக கருதுகிறீர்கள் ?

அமர்த்தியா சென் :– பிரச்சினை எதுவானாலும் நாம் இப்போது தீர்ப்பு கூற முடியாது. ஒரு சுதந்திர நாட்டில் மக்கள் எங்கே வேண்டுமானாலும் முறைப்படி போகலாம். எங்கே வேண்டுமானாலும் வரலாம். இதை அரசாங்கமோ எதிர்கட்சிகளோ கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மேற்குவங்கம் தொழில் மயமாவதைத் தடுப்பவர்கள் மக்களின் நலன்களை கவனத்தில் கொள்ளவில்லை என்று தான் கூற வேண்டும்.

ஆஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வேளாண்மையில் வளம் கொழித்தாலும், அங்கெல்லாம் மிகச் சிறிய அளவிலான மக்களே வேளாண்மையில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பாலான மக்கள் தொழில் துறையில் நுழைந்து விட்டனர். தொழில் துறை தான் வசதியாக இருக்கிறது. எத்தனை பேருக்கு வேண்டுமானாலும் வேலை அளிக்கும்.

வேளாண்மையை மக்கள் கை விட்டதன் காரணமாக ஒட்டு மொத்த உற்பத்தி வீழ்ச்சி அடைவதில்லை. அதற்குப் பதிலாக தனி நபர் வருமானம் உயர்கிறது. தொழில் துறை, வேளாண்மை, பொருளாதாரம் ஆகியவை வளர வேண்டுமானால் தொழில் மயமாக்குதல் வேண்டும். அரசியல் மூலமாக தொழிலதிபர் களுக்கு நெருக்கடியை உருவாக்குபவர்களும், அவர்கள் நிலங்களை வாங்குவதாகத் தடுப்பவர்களும் மக்களின் நலன்களை உதாசீனப் படுத்துகிறார்கள். உலகத்திலேயே செல்வம் கொழிக்கும் பகுதிகளில் ஒன்று என்ற பெயரை கொல்கொத்தா மீட்டெடுக்க வேண்டுமானால் தொழில் மயமாதல் நடந்துதான் ஆக வேண்டும். தொழில்களைத் தொடங்க வேளாண் நிலங்களை கொடுக்க மறுத்தால் அது மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தும்."

உடன்பிறப்பே, பொருளாதார மேதையான திரு. அமர்த்தியா சென் அவர்கள் மேற்கு வங்கத்திலே தொழிற்சாலை தொடங்குவது பற்றி தெரிவித்த கருத்துக்கள் தமிழகத்திற்கும் பல விதங்களிலே பொருந்தும் என்பதால்தான் இந்தக் கருத்துக்களை நான் தொகுத்துத் தந்துள்ளேன்.

தென் மாநிலங்கள் முன்னேற வேண்டும், அந்தப் பகுதிகளிலே உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திட வேண்டும், பொருளாதாரத்திலே அங்குள்ளவர்கள் செழிப்படைய வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்படுகின்ற அரசைப் பற்றியும், அரசு செய்கின்ற நல்ல காரியங்களுக்கு குந்தகம் விளைவிக்க எண்ணுவோரைப் பற்றியும், அரசு எந்த நோக்கத்தோடு இந்தத் திட்டத்தைக் கொண்டு வர முயலுகிறது என்பதைப் பற்றியும் அந்தப் பகுதியிலே உள்ள மக்களே சிந்தித்துப் பார்த்து முடிவுக்கு வரட்டும். அதே நேரத்தில் அரசின் சார்பில் எந்தக் காரியத்தைத் தொடங்க நினைத்தாலும், அதற்கு ஏதாவது குறை கூறி திட்டங்களை தாமதம் செய்விக்க முயல்வோர் யார் என்பதையும் மக்கள் புரிந்து கொள்ளட்டும்.

◆ ◆ ◆



# கிருஷ்ணகிரியில் உலகத்தரத்தில் ரூ.2,300 கோடி மதிப்பில் புதிய தொழில் மையம் - 70 ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
முன்னிலையில் புரிந்துணர்வு
ஒப்பந்தம் கையெழுத்தானது

**த**மிழகத்தின் வட மாவட்டங்களில் குறிப்பாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் வாய்ப்புகளை முடுக்கிவிடும் நோக்கத்திலும், பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் பல்வகைப் பொருள்களின் உற்பத்திக்காக உலகத் தரத்திலான கட்டமைப்பு வசதிகள் கொண்ட தொழில் மையம் ஒன்றினை டிட்கோ நிறுவனம் புதிதாக அமைக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1,330 எக்டேர் பரப்பில் அமையும் இத்திட்டத்திற்காக மத்திய அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. சென்னையையும், பெங்களூரையும் இணைக்கும் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை ஆகியவற்றின் அருகில் இத் தொழில் மையம் அமைகிறது.

உலகத்தரத்தில் கட்டமைப்பு வசதிகள், பசுமைசூழ் சாலைகள் (Green Corridors), உயர்தர சமூகக் கட்டமைப்பு வசதிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்புகள் ஆகியவற்றுடன் இத் தொழில் மையம் வடிவமைக்கப்படவுள்ளது.

ஏற்றுமதியை ஊக்குவிக்கும் மின்னணுத் தொழில்கள், ஆடை உற்பத்தித் தொழில்கள், பொறியியல் தொழில்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்கள் உயிரி தொழில்நுட்பம் மற்றும் நேனோ தொழில் நுட்பம் சார்ந்த அறிவுசார் தொழில்கள் ஆகியவை இம்மையத்தில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஏறத்தாழ 2,300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைய விருக்கும் இத்தொழில் மையம் ஏறத்தாழ 11 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் முதலீடுகளை ஈர்க்கும். இங்கு ஆண்டுக்கு 16 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அமையும்; ஏறத்தாழ 70,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்புகளை வழங்கும்.

இத்திட்டத்தைச் செயல் படுத்துவதற்காகத் திருவாளர்கள் ஜி.எம்.ஆர். குழும நிறுவனம் பன்னாட்டு அளவிலான போட்டி ஏலத்தின் மூலம் டிட்கோவின் கூட்டுத்துறை பங்குதாரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. டிட்கோவும் ஜி.எம்.ஆர். நிறுவனமும் இணைந்து கூட்டுத் துறை நிறுவனம் ஒன்றை உருவாக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், 6.8.2007 அன்று இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

டிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எஸ்.இராமசுந்தரம், ஜி.எம்.ஆர். கூட்டமைப்பு நிறுவன இயக்குநர் பி.வி. நாகேஸ்வரராவ் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆற்காடு நா.வீராசாமி, தலைமைச் செயலாளர், எல்.கே. திரிபாதி,இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் சக்திகாந்ததாஸ், இ.ஆ.ப., ஜி.எம்.ஆர். குழுமத்தின் தலைவர் ஜி.மல்லி கார்ஜுனராவ் ஆகியோர் உடனிருந்தனர். ✶

# பெரம்பலூரில் ரூ.62 கோடியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்



**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**பெ**ரம்பலூரில் 12.8.2007 அன்று நடந்த விழாவில் ரூ.62 கோடி மதிப்பிலான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டி, ரூ.3 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் மாவட்டங்கள் தோறும் சுற்றுப் பயணம் செய்து மக்கள் நலத்திட்டங்களைத் தொடங்கி வைத்து வருகிறார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை மற்றும் பெரம்பலூர் ஒன்றியங்களில் 306 குடியிருப்புகளுக்கு ரூ.62 கோடி மதிப்பில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவும், பெரம்பலூர் மற்றும் ஆண்டிமடம் பகுதிகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடக்க விழா மற்றும் பல்வேறு நலத்திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடந்தது. விழாவுக்கு மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு.ஆ.ராசா அவர்கள் தலைமை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அனில்மேஷராம்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு , மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் புதிய காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிச் சிறப்புரையாற்றினார். ✶



# இந்தியாவிலேயே அதிக மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தலைமையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து 17-7-2007 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆய்வின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர், நகராட்சிகள் நிருவாக ஆணையாளர், பேரூராட்சிகள் இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர், சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நகராட்சி நிருவாகம் குறித்த ஆய்வில் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம், நகர்ப்புற மக்களுக்கான அடிப்படை வசதிகள் வழங்கும் திட்டம் போன்றவைகளின் கீழ் இதுவரை 3,053 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 162 பெரிய திட்டங்களுக்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றும், இந்தியாவிலேயே அதிக மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது என்றும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கோவை, மதுரை மாநகராட்சிகளில் இத்திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள மேம்பாட்டுப் பணிகளை விரைந்து செயல்படுத்திடவும்,

உலக வங்கியின் உதவியுடன் 19.10.2005இல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகளை விரைவுபடுத்திடவும்,

நகராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்துதல், நவீன இறைச்சிக் கூடங்கள் கட்டுதல், நவீன எரிவாயு தகன மேடைகள் அமைத்தல், திடக் கழிவு மேலாண்மைப் பணிகள், பணியாளர் நலன் குறித்த அறிவிப்புகள், அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப் படுத்தும் திட்டம் ஆகிய பல்வேறு அறிவிப்புகளின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை விரைவுபடுத்திடவும்;

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 505 கிலோ மீட்டர் நீள உட்புறச் சாலைகள், 112 கிலோ மீட்டர் நீள நடைப்பாதை பணிகள் புதுபிக்கப்பட்டுள்ள நிலையில் புதியதாக 4 மேம்பாலங்கள் கட்டுதல், ஏறத்தாழ 100 கோடி ரூபாய் செலவில் அடையாறு சிற்றோடைப் பகுதியில் பூங்கா அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை விரைவு படுத்திடவும்;

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் அளவை உயர்த்திட குடிநீர் ஆதாரங்களின் திறனை மேம்படுத்துதல், குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை விரைவுபடுத் திடவும்;

சென்னை மாநகரில் குடிநீர் வழங்கும் அளவை உயர்த்திட குடிநீர் ஆதாரங்களின் திறனை மேம்படுத்துதல், குடிநீர் விநியோக அமைப்புகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை விரைவு படுத்திடவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், பேரூராட்சிகள் தொடர்பான ஆய்வின் போது அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் செயல்பாடு, 2006-2007 மற்றும் 2007-2008 ஆம் ஆண்டுகளில் பேரூராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளுவதாக அறிவிக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்கள் , சாலைப் பணிகள், பேருந்து நிலைய மேம்பாட்டுப் பணிகள், மின்வசதித் திட்டங்கள், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள், சந்தை மேம்பாட்டுப் பணிகள், கணினி மயமாக்கல், நவீன இறைச்சிக்கூடப் பணிகள், புதிய அலுவலகக் கட்டடப் பணிகள், உள்கட்டமைப்பு வசதி மேம்பாடு,



செம்பரம்பாக்கம் ஏரியில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் துணை கொண்டு குடிநீர் விநியோகப் பணிகளை விரைவுபடுத்திடவும்;

கடந்த இரண்டு ஆண்டுகளில் சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் வாரியத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட திட்டப் பணிகளின் நடவடிக்கைகளை விரைவுபடுத்திடவும்;

மே மாதம் 2006க்கு பிறகு, 7,742 குடியிருப்புகளுக்கு முழு அளவு குடிநீர் வழங்கிட வகை செய்யப்பட்டுள்ள நிலையில், மேலும் 63 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் முன்னேற்றப் பணிகளை விரைவு படுத்திடவும்; தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி, கரூர் மற்றும் இனாம் கரூர் ஆகிய நகரங்கள் மற்றும் இதர 29 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளை விரைவுபடுத்திடவும்;

பகுதி-II – திட்டப்பணிகள் மற்றும் ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனராமைப்புத் திட்டம் மற்றும் உபதிட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள 75 திட்டப் பணிகளின் முன்னேற்றங்களையும் விரைவுபடுத்திடவும் முடிவுகள் மேற்கொள்ளப் பட்டன.

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்காக 2006-2007 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 947 கோடியே 90 இலட்சத்தில், 906 கோடியே 35 இலட்சம் ரூபாய்க்கான, அதாவது 95.62 சதவீத நிதி செலவிடப்பட்டு சாதனை படைத்துள்ளமைக்கும், திட்டம் சாராப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 1,256 கோடி 30 இலட்சம் ரூபாயில், 1,296 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, சாதனை நிகழ்த்தப்பட்டு, அதாவது 103.17 சதவீதம் அளவிற்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளமைக்கும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமது பாராட்டுகளைத் தெரிவித்தார். ❖



# உள்ளாட்சித்துறையின் சிறப்பான செயல்பாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் பாராட்டு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள், மத்திய மாநில அரசுகளின் திட்டப் பணிகள் மற்றும் ஊராட்சி நிருவாகப் பணிகள் குறித்து 21.7.2007 அன்று தலைமைச் செயலகத்தில் விரிவாக ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமைச் செயலர், நிதித் துறைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

2006–2007 மற்றும் 2007–2008 நிதி ஆண்டுகளில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இத்துறையின் கீழ் செயல்படும் அமைப்புகளின் மூலம் செயல்படுத்திட அரசு அறிவித்துள்ள அனைத்து அறிவிப்புகளைப் பொறுத்தும் உரிய நிதி ஒதுக்கீடு அளித்து, அவற்றிற்கான அரசாணைகள் வெளியிடப் பட்டுப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருவதற்காகவும், முந்தைய அரசு நிலுவையாக விட்டுச் சென்ற 1 இலட்சத்து 54 ஆயிரம் பணிகளில், 1 இலட்சத்து 53 ஆயிரம் பணிகளை இத்துறை இதுவரை முடித்துள்ளமைக்காகவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மிகவும் மகிழ்ந்து தமது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

குறிப்பாக, தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கடந்த ஆட்சி காலத்தில் 3 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்த நிலையில், 2006 மே முதல் இதுவரை 363 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு பணிகளை, ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்கள் மூலம் அல்லாமல், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் விதமாக, மனித உழைப்பின் மூலம் நிறைவேற்றப் பட்டுள்ளமைக்கும், இத்திட்டத்திற்கெனக் குறைந்தபட்ச தினசரி ஊதியமாக 80 ரூபாயைப் பணியில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்.



அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ஊராட்கள் அனைத்திலும், கிராமக் குளங்களைச் சீரமைத்தல், சிமெண்டு சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் விநியோகப் பணிகள், சந்தை வசதி, நூலகம், விளையாட்டு மையங்கள் முதலியவற்றை அமைத்திடும் பணிகளுக்காக 2006–2007–இல் 2540 கிராம ஊராட்சிகளில் 508 கோடி ரூபாய் செலவிலும், 2007–2008–இல் 2,534 கிராம ஊராட்சிகளில் 507 கோடி ரூபாய் செலவிலும் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளில் நிறைவேற்றப்பட்டுள்ளவைகளுடன், தற்போது நடைபெற்று வரும் பணிகளை விரைவுபடுத்திடவும். அரசுப் பணியிடங்களில் காலியாக உள்ள இடங்களை நிரப்பிட இந்த அரசு வழங்கிய அறிவுரைகளையொட்டி, முதல் துறையாக ஊரக வளர்ச்சித் துறை விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு, காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் இதுவரை 14,298 காலிப் பணியிடங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டமைக்குப் பாராட்டுகள் தெரிவித்து, எஞ்சிய பணியிடங்களையும் விரைந்து நிரப்பிடவும். துறையின் நிருவாக மேம்பாட்டிற்காக அனுமதிக்கப்பட்டு, ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளபடி, 123 புதிய வாகனங்கள், 385 நிகரி எந்திரங்கள், 416 படிப்பெருக்கிகள் ஆகியவற்றை விரைந்து வழங்கிட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அரசு பொறுப்பேற்றபின், நகர்ப்புற சுய உதவி குழுக்களுக்கு, சுழல் நிதி வழங்க ஆணையிடப்பட்டு அதன் அடிப்படையில், 2006–2007 ஆம் ஆண்டில் ஊரக நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள 56,602 சுய உதவிக் குழுக்களுக்கு 572 கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப்பட்தற்கும், புதிதாக 22,843 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் 9,957 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதற்கும், சிறந்த தொழில் நிறுவனங்கள் மூலம் 4,677 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய தொழில் புரிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும், சுனாமி அவசர கால நிதி உதவித் திட்டத்தின் கீழ் முந்தைய ஆட்சியில் 5 கோடி ரூபாய் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்த நிலையில், மே 2006க்கு பின், இதுவரை இத்துறையின் முயற்சியால் 264 கோடி ரூபாய் செலவில் நலத்திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு இதுவரை 74 சதவீத நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், இந்நிதியில், 30,773 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 80 கோடி ரூபாய் சுழல் நிதியும், 2,058 குழுக்களுக்கு பொருளாதார நடவடிக்கைகளுக்காக 26 கோடி ரூபாய் மானியமும், 32,527 உடல் ஊனமுற்றோருக்கு 33 கோடி ரூபாய் மானியமும் வழங்கப்பட்டு,450 கி.மீ. நீள சாலைப்பணிகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் 2008 ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் இத்திட்டத்தில் எஞ்சியுள்ள பணிகளையும் விரைவாக முடித்திட முடிவு செய்யப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், கடந்த இரண்டாண்டு காலமாக ராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் தன்னார்வ அமைப்புகளால் கட்டப்படாமல் இருந்த 2,118 வீடுகளுடன், கடற்கரையிலிருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் உள்ள 11,500 வீடுகள், மேலும் 1,000 மீட்டருக்குள் உள்ள 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 8,500 தொகுப்பு வீடுகள் ஆகிய 20,000 வீடுகளையும் அடிப்படை வசதிகளுடன் 476 கோடி ரூபாய் செலவில் புதிதாகக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளப் பணிகளை விரைந்து நிறைவேற்றிடவும், கிராம ஊராட்சிகளுக்குத் தொலைபேசி வசதி அளித்தல், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம், சுய உதவிக் குழு பெண்களுக்கு அடிப்படைக் கல்வி அளிக்கும் திட்டம் போன்ற பணிகளை விரைவில் நிறைவேற்றிடவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பகிர்வு குறித்து பரிந்துரைத்திட மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மாநில உயர்நிலைக் குழுவின் பணிகளின் முன்னேற்றம் மற்றும் உள்ளாட்சிகளின் நிலை உயர்த்துதல், எல்லை சீரமைப்பு தொடர்பாக மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆய்வு செய்தார்.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலைமை மேம்படுத்திட மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, அவற்றிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் நிதி 8 சதவீதத்தில் இருந்து 9 சதவீதமாக உயர்த்தப்பட்டு, முந்தைய ஆண்டைவிட 30 சதவீதம் அதிக நிதியாக, அதாவது ஆண்டுக்கு 361 கோடி ரூபாய் கூடுதலாக நிதி வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தலா 3 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகளுக்கான பகிர்வு நிதி ஒதுக்கீடு முன்பு 47 சதவீதமாக இருந்தது தற்போது 60 சதவீதமாக உயர்த்தப்பட்டு ஊராட்சிகளின் நிதித் திறன் மேம்பட இதன்மூலம் வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளமைக்கும். முன்பு கிராம ஊராட்சிகளுக்கு மின் நுகர்வு கட்டணம் காரணமாக மிகுந்த நிதிச் சுமை இருந்ததால். 1 யூனிட்டுக்கு ரூபாய் 3.40 என்று இருந்த மின் கட்டணம் தற்போது 3 ரூபாய் எனக் குறைக்கப்பட்டு, நிலுவையில் இருந்த 13.3.2007க்கு முந்தைய அபராத வரியும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இத்திட்டம், அனைத்துக் கிராம ஊராட்சிகள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளமைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தார். ◇



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களுடன் மாண்புமிகு மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் அவர்கள் சந்திப்பு

மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்கள், 26-7-2007 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை புதுதில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் சந்தித்தார். அப்போது மாண்புமிகு மத்திய அமைச்சர் பெருமக்கள் திரு.டி.ஆர்.பாலு, திரு.ஆ.ராசா ஆகியோர் உடன் இருந்தனர்.

28-5-2007 அன்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அர்ஜுன்சிங் அவர்கள் சென்னையில் செம்மொழியாம் தமிழுக்கென மத்திய அரசு நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து தனக்கு எழுதிய கடிதத்தினை நினைவூட்டிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அதற்கு மத்திய திட்டக் குழுவின் கொள்கை ரீதியிலான இசைவு கிடைத்த போதிலும், இறுதி ஒப்புதல் மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சகத்திடம் இருந்து தமிழக அரசுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று கூறினார். மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் விரைவில் அதனைக் கவனித்து ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மாண்புமிகு மத்திய அமைச்சரிடம் மத்திய அரசின் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகிதம் இடஒதுக்கீடு செய்வது குறித்து உச்ச நீதி மன்றத்தில் நடைபெறும் வழக்கினைச் சுட்டிக் காட்டி, அதிலும் விரைவில் நல்ல முடிவு காண்பதற்கான முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் தமிழக அரசும் தன்னை இணைத்துக் கொண்டிருப்பது பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்.

செம்மொழிக்கான மத்திய அரசின் நிறுவனம் ஒன்றைத் தமிழகத்திலே அமைப்பது குறித்தும், அதற்கான குழுவின் பணிகளைத் தொடங்கி வைக்கும் வகையிலும், சென்னையில் நடைபெறும் விழாவில் மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் அவர்களை கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் நாளன்று நடைபெறும் அந்த விழாவில் தான் கலந்து கொள்வதாக மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்கள் உறுதியளித்து, அதன்படி இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.





# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் அரசு கால்நடை மருத்துவமனைகளில் 220 கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழகம் முழுவதிலும் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கால்நடை உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். 2001 ஆம் ஆண்டில் முந்தைய அ.தி.மு.க அரசு நடைமுறைப்படுத்திய பணி நியமனத் தடைச் சட்டம் காரணமாகக் காலிப் பணியிடங்கள் இருந்தும் அரசுத் துறைகளில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படாதது போலவே, அரசு கால்நடை மருத்துவ மனைகளிலும் காலிப்பணியிடங்களில் கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம் செய்யப்படவில்லை.

தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் பணி நியமனத் தடைச் சட்டத்தை இரத்து செய்தது. அதன் தொடர்ச்சியாக, தற்போது அரசு கால்நடை மருத்துவமனைகளில் காலியாக உள்ள 250 பணியிடங்களில் கால்நடை உதவி மருத்துவர்களை நியமனம் செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் முறைப்படி எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு முதலிய தேர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு தகுதியானவர்களைத் தேர்வு செய்துள்ளது.

தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களில் முதற்கட்டமாக, 220 பேர் அரசு கால்நடை மருத்துவமனைகளில் கால்நடை உதவி மருத்துவர்களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர். இவர்களில் 10 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, அவர்களது நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 24.7.2007 அன்று வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார். ◆



# வேலை உறுதியளிப்புத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் சிறப்பாகச் செயல்படுகிறது

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்தில் 2.8.2007 அன்று, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10,171 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி ரூ.659.767 இலட்சம் மதிப்பிலான 163 புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து ரூ.3665.420 இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றும்போது :

"செங்கம் பகுதி வறட்சிப் பகுதியாக உள்ளது என்று சட்டமன்ற உறுப்பினர் கூறினார். இப்பகுதி வறட்சிப் பகுதி, புரட்சிப் பகுதியாக மட்டுமின்றி எழுச்சிப் பகுதியாகவும் உள்ளது. காரணம் உணவு அமைச்சர் பேசும் போது கூறியதைப்போல திருவண்ணாமலையிலிருந்து செங்கம் வரை வரும் வழியில் மக்கள் வெள்ளம் – இதை பார்த்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ரூ.28 கோடி மதிப்பில் பால் பவுடர் தொழிற்சாலை செங்கம் வட்டத்தைச் சேர்ந்த அம்மாபாளையம் மேல்முடியனூர் கிராமத்தில் அமைப்பதற்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டது. ஏறக்குறைய 2 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு பதப்படுத்தவும், 20 டன் பால் பவுடர் தயாரித்திடவும் இயலும். இந்த மாவட்டத்தைச் சுற்றியுள்ள திருச்சி, விழுப்புரம், சேலம் மற்றும் வேலூர் ஆகிய கூட்டுறவு ஒன்றியங்களும் இதனால் பயன் பெறும். இத்தொழிற்சாலை விரைவில் மக்களின் பயன்பாட்டிற்குச் செயல்படும்.



உலக அளவில் பால் பவுடர் தொழிலில் டென்மார்க் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் குஜராத்தில் உள்ள அமுல் கூட்டுறவு பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. அந்த உயர்வை ஆவின் அடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூ.36 கோடி மதிப்பில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் புதிய நூலக கட்டடம், புதிய குளம் அமைத்தல், பொது விநியோகக் கட்டடம் கட்டுதல், திருவண்ணாமலை நகராட்சியின் மூலம் நவீன ஆடுவதைக் கட்டடம், நவீன எரிவாயு தகன உலை போன்ற 177 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ரூ. 659.767 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட 163 கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கு கூட்டுறவு அமைப்பின் சார்பிலும் கடனுதவி மானியத் தொகை வழங்கப்படுகிறது. திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று இந்த ஓராண்டில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் 1 கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம், விவசாயிகள் கடன் 7 ஆயிரம் கோடி தள்ளுபடி, சத்துணவில் வாரம் 2 முட்டை வழங்கப்படுகிறது. தற்போது கடந்த 15ந் தேதி கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட அரசு உத்தரவிட்டு அன்று முதல் வாரம் 3 முட்டை வழங்கப்படுகிறது.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கப்படும் என தேர்தல் வாக்குறுதி வழங்கப்பட்டு அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. முதல் கட்டமாக 30 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு தமிழகத்தில் உள்ள சமத்துவபுரங்களுக்கு வழங்கப்பட்டது. 2ஆவது கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கப்பட்டு 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் தலா 10 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. தற்போது 30 லட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்க டெண்டர் விடப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

செங்கம் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதாகத் தெரிவித்தார்கள். கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் சாத்தனூரிலிருந்து செங்கத்திற்கு குடிநீர் கொண்டு வர நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. பணிகள் தாமதமாக நடைபெறுவதாகக் கூறினார்கள். நிச்சயமாகப் பணி நிறைவேற்ற இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் வேலூரிலிருந்து தனியாக திருவண்ணாமலை ஒன்றியத்தைப் பிரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். கூட்டுறவுத் தேர்தல் முடிந்திருந்தால் அந்தப் பணியும் முடிந்திருக்கும். கூட்டுறவுத் தேர்தல் முடிந்தவுடன் தனி ஒன்றியம் பிரிக்கப்படும்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படும் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளும் 5 ஆண்டு காலத்தில் எல்லா வசதிகளும் குறிப்பாக அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும். கடந்த ஆண்டு 500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டத்தின் கீழ் பணிகள் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஆண்டு 508 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 2,534 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு பணிகள் நடைபெறுகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 860 கிராம ஊராட்சிகளில் கடந்த ஆண்டில் 167 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ.183.60 கோடி மதிப்பில் பணிகள் நடைபெற்றது. நடப்பு ஆண்டில் 170 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப் பட்டு ரூ.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 3,372 பணிகள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள 561 பேரூராட்சிகளில் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. திருவண்ணா மலை மாவட்டத்தில் உள்ள 10 பேரூராட்சிகளில் புதுப்பாளையம், கீழ்பென்னாத்தூர், களம்பூர் ஆகிய 3 பேரூராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு தலா ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**வேலை உறுதியளிப்புத் திட்டம்**

வேலை உறுதியளிப்புத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் சிறப்பாகச் செயல்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் பங்கு 90 சதவிகிதமாகவும், மாநில அரசு 10 சதவிகிதமாகவும் நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் மட்டும் அல்ல; அனைத்துத் திட்டங்களும் சிறப்பாகச் செயல்படுவது தமிழகத்தில்தான் என்று பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் கூறினார்.

மகளிர் சுய உதவிக்குழு முதன் முதலாக தருமபுரி மாவட்டத்தில் தான் இந்த அரசால் தொடங்கப்பட்டது. பெண்கள் தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும். யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் தன் சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்று மகளிர் நலனில் அக்கறை கொண்ட இந்த அரசு மகளிர் சுய உதவிக்குழுக்களைத் தொடங்கி இன்று நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வங்கிகளில் கடன் பெற்றுச் சிறப்பாகச் செயல்படுகிறது'' என உரையாற்றினார். ❖



# தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் புதிய உதவிப் பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணையினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினை நிறுவிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆணைப்படி வாரியத்தில் பல ஆண்டுகளாக முந்தைய அரசால் முடக்கி வைக்கப்பட்ட சலுகைகள் மற்றும் பதவி உயர்வுகளை வழங்கிட ஆணை பிறப்பித்ததன் பயனாக பல நலத் திட்டங்கள் குறுகிய காலத்திலேயே திரும்ப வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதன்படி,

★ 858 தொகுப்பு ஊதியப் பணியாளர்கள் கால முறை ஊதியத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

★ 173 மதிப்பூதியப் பணியாளர்களின் வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதிகளின் வரைமுறைகளை தளர்த்தி தொகுப்பூதியப் பணியாளர்களாக மாற்றி ஆணையிடப்பட்டது.

★ 20 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 54 ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

★ 10 ஆண்டுகள் விபத்தின்றிப் பணியாற்றிய 33 ஊர்தி ஓட்டுநர்களுக்குத் தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கப்பட்டது.



★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு பணியாளர்களுக்கு 28.8.2006 அன்று, கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004–05 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகையும் 2005–06 ஆம் ஆண்டிற்கான போனசும் மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதனால் சுமார் 8,000 பணியாளர்கள் பயனடைந்தார்கள்.

★ 25 ஆண்டுகள் மாசற்ற பணி முடித்த 6 அலுவலர்களுக்கு கிசான் விகாஸ் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

★ ஐந்து ஆண்டு காலமாகப் பதவி உயர்வுகள் வழங்கப்படாமலிருந்த பல பிரிவு பணியாளர்களுக்கும், பொறியாளர்களுக்கும் விதிமுறைகளின்படி 432 நாட்களில் 528 நபர்களுக்கு, பதவி உயர்வு வழங்கப்பட்டது.

மேலும், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மாவட்டங்கள் தோறும் ஆய்வுகள் மேற்கொண்டு, பணிகள் செவ்வனே துரிதமாக நடைபெற அறிவுறுத்தியதற்கிணங்க, பெரிய குடிநீர்த் திட்டமான இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைத் துரிதமாகச் செயல்படுத்திட இரண்டு வட்ட அலுவலகங்கள் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் உருவாக்கப்பட்டன.

இதே போல ஊரகக் குடிநீர்த் திட்ட வேலைகள் துரிதமாகச் செயல்படுத்திட திருவள்ளுவர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியிலும், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டிலும் இரு ஊரகக் குடிநீர்த் திட்டக் கோட்டங்கள் புதியதாக உருவாக்கப்பட்டன. இப்புதிய வட்டங்கள் மற்றும் கோட்டங்கள் உருவாக்கப்பட்டதால் மேலும் பொறியாளர்களுக்கும் மற்றும் பணியாளர்களுக்கும் பதவி உயர்வு பெற்றிட வழிவகை செய்தது.

குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள், தரத்துடன் திட்டங்களைச் செயல்படுத்தத் தேவையான எண்ணிக்கையில் உதவிப் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டியது அவசியம். இதனடிப்படையில் நடப்பு ஆண்டில் 100 உதவிப் பொறியாளர்கள் காலியிடங்கள் விதிமுறைகளின்படி நிரப்பப்படும் என தமிழக சட்டமன்றப் பேரவையில் 12.4.2007 அன்று நடைபெற்ற நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து முதற்கட்டமாக வாரிய விதிமுறைகளின்படி வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக புதியதாகப் பணி நியமனம் செய்யப்படும் 19 உதவிப் பொறியாளர்கள் மற்றும் வாரியத்தில் கீழ் நிலைப் பதவிகளில் பணியாற்றி வரும் பணியாளர்களில் தகுதி வாய்ந்த வரைவாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், மின் கண்காணிப் பாளர்களில் 67 நபர்களுக்கும் 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில், உதவிப் பொறியாளர்களாகத் தேர்வு செய்யப்பட்டனர். இதற்கான பணி நியமன ஆணையை 23.7.2007 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள். ★

# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏழு மாவட்ட கிராம ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்ற மண்டலக் கருத்தரங்கம்



திரு. **எஸ். பாண்டியன்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**மா**ண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 25.7.2007 அன்று திருச்சிராப்பள்ளியில் திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 7 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பங்கேற்ற மண்டலக் கருத்தரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

இம்மண்டலக் கருத்தரங்கில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஆஷிஷ் வச்சானி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என். செல்வராஜ், மாண்புமிகு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரிய கருப்பன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் திருமதி. பூங்கோதை ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறைச் செயலாளர் திரு.க.அசோக் வரதன் ஷெட்டி, இ.ஆ.ப., விளக்கவுரை யாற்றினார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிருவாக இயக்குநர் திரு.சுவரன்சிங், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சித்துறை இயக்குநர் திரு.ககன் தீப்சிங்பேடி, இ.ஆ.ப., மற்றும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பி.என். வெங்கடேஷ், இ.ஆ.ப., பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அனில்மேஷ்ராம், இ.ஆ.ப., புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ்.ஜே. சிரு இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு. முத்துக்கருப்பன், திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தென்காசி ஜவகர் இ.ஆ.ப., ஆகிய 7 மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.





இக்கருத்தரங்கில் 7 மாவட்டங்களைச் சேர்ந்த கிராம ஊராட்சித் தலைவர்கள் 2,618 பேர் பங்கேற்க தங்கள் ஊராட்சிகளின் தேவைகளையும், அதனைச் சீர்செய்ய உரிய கருத்துக் களையும் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமையேற்று உரை ஆற்றும் போது, "இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்ட ஊராட்சித் தலைவர்களுக்கு ஒரு படிவம் கொடுக்கப் பட்டது. அந்தப் படிவத்தில் நீங்கள் சுட்டிக்காட்டிய குறைகளை முழுமையாகப் படித்துப் பார்த்து எந்தெந்தக் குறைகளை உடனே நிவர்த்தி செய்ய முடியுமோ அவற்றை உடனேயும், ஆய்வு செய்து தீர்க்க வேண்டியவற்றைப் பின்னர் தீர்த்து வைப்போம் என்று உறுதி அளிக்கிறேன். நேற்று கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த 6 மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் கருத்தரங்கம் நடைபெற்றது. இன்று திருச்சி மத்திய மண்டலத்தில் 7 மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சித் தலைவர்களின் கருத்தரங்கம் இரண்டாவது நாளாக நடந்து வருகிறது. அடுத்து 3-ஆவது கட்டமாக திருவண்ணா மலையில் காஞ்சிபுரம், வேலூர் உள்பட சில மாவட்டங்கள் அடங்கிய கருத்தரங்கம் ஆகஸ்ட் முதல் வாரத்திலும், அதற்கடுத்து மதுரையில், மதுரை முதல் கன்னியாகுமரி வரை உள்ள மாவட்டங்களின் கருத்தரங்கமும் நடத்தப்பட இருக்கிறது. இப்படி 4 மண்டலங்களாகப் பிரித்து நடத்த இருக்கிறோம்.

இந்தக் கருத்தரங்கில் திருச்சி மாவட்டத்தில் உள்ள 408 கிராம ஊராட்சித் தலைவர்களில் 387 பேரும், கரூர் மாவட்டத்தில் உள்ள 158 பேரில் 151 பேரும், பெரம்பலூர் மாவட்டத்தில் 322-க்கு 293 பேரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 498-க்கு 466 பேரும், தஞ்சை மாவட்டத்தில் 589 பேருக்கு 541 பேரும், திருவாரூர் மாவட்டத்தில் 430-க்கு 409 பேரும், நாகை மாவட்டத்தில் 434 பேருக்கு 371 பேரும் பங்கேற்று இருக்கிறார்கள். இந்த 7 மாவட்டங்களிலும் மொத்தம் உள்ள 2,839 கிராம ஊராட்சித் தலைவர்களில் 2,618 பேர் வந்து உள்ளனர்.

**மக்கள் நலப்பணிகளுக்கு அங்கீகாரம்**

இது 92 சதவீத வருகை ஆகும். இதுவே இந்தக் கருத்தரங்கிற்கு கிடைத்த வெற்றி ஆகும். ஒன்றரை ஆண்டு காலம் இந்த அரசு செய்து வரும் மக்கள் நலப்பணிகளுக்கு கிடைத்த அங்கீகாரமாகவே இதனை கருதுகிறேன். இதுபோன்ற கருத்தரங்கம் மூலம் ஒட்டுமொத்தமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து கிராம

ஊராட்சித் தலைவர்களையும் நேரடியாகச் சந்தித்துப் பேசுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன். இது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்து உள்ளது.

"இந்தியாவின் இதயமே கிராமத்தில் தான் இருக்கிறது" என்று சொன்னார் தேசப்பிதா மகாத்மா காந்தி. "தம்பி. . . மக்களிடம் செல், மக்களிடம் நெருங்கிப் பழகு, கிராம மக்களுக்கு பணி செய், அவர்களின் வாழ்க்கையை வளமாக்க பாடுபடு" என்று சொன்னார் அறிஞர் அண்ணா. இந்த வாசகங்களை அடியொற்றி நமது தலைவர் கலைஞர் அவர்கள் உள்ளாட்சிப் பணி அரசு நிருவாகத்தில் ஆலமரத்து வேர் போன்றது என்றும், மனிதனை ஒப்பிட்டால் நாடி நரம்புகள் போன்றது என்றும் உள்ளாட்சிப் பணிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி இருக்கிறார். மறைந்த இளம் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களால் 'பஞ்சாயத்து ராஜ்' மற்றும் 'நகர் பாலிகா' சட்டங்கள் கொண்டு வரப்பட்ட போது அதனை முதல் முறையாக அமல்படுத்தியது தமிழகம் தான்.

தமிழகத்தில் 1996-ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் முதல் அமைச்சராக இருந்த போதுதான் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு செய்து உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்பட்டது.

**பெண் தலைவர்கள்**

தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் மகளிர் மட்டும் 4,275 ஊராட்சிகளில் தலைவர்களாக இருக்கிறார்கள். சட்டம் சொல்லி இருப்பது 33 சதவீதம். ஆனால் தமிழ்நாட்டில் இன்று பெண்கள் 34 சதவீதம் பேர் தலைவர்களாக இருக்கிறார்கள். இதே போல் 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களில் 146 பேர் மகளிர். இது 36 சதவீதம் ஆகும். மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் 29-ல் 10 பேர் பெண் தலைவர்கள் உள்ளனர். இது 34 சதவீதம். 6 மாநகராட்சிகளில், 3 மாநகராட்சிகளில் பெண் மேயர்கள் உள்ளனர். இது 50 சதவீதமாகும். நகராட்சிகளைப் பொறுத்த வரை 152 தலைவர்களில் 59 பேரும். பேரூராட்சிகள் 561-ல் 218 பேரும் பெண்கள் தலைவர்களாக உள்ளனர். இந்த அளவிற்கு நிர்ணயிக்கப் பட்டதை விடப் பெண்கள் உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்புக்கு வந்திருப்பதற்குக் காரணம் இந்த சட்டத்தை முதல் முதலாக தமிழகத்தில் தலைவர் கலைஞர் அமல்படுத்தியது தான். அதற்காக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த மேடையில் நான் அரசியல் பேசுவதாக நினைக்க வேண்டாம். ஆனால் கடந்த ஆட்சியில் இதுபோல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது உண்டா? 5 வருடத்தில் உள்ளாட்சித் துறைக்கு 3 அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள். அதுவும் கடைசி 3 வருடங்கள் பொறுப்பு அமைச்சர் தான் இந்த இலாகாவைக் கவனித்தார். அந்த அளவிற்கு உள்ளாட்சித் துறை மீது அக்கறை இல்லாமல் அவர்கள் ஆட்சி நடத்தினார்கள். அது மட்டும் அல்ல. இருந்த அதிகாரத்தையும் கூடப் பறித்தார்கள். ஆனால் இப்போது நாங்கள் நிபுணர் குழுக்களை அமைத்து இருக்கிறோம். இந்த 2 குழுக்களும் எனது தலைமையில் அமைக்கப்பட்டு உள்ளது. இந்த குழுக்களில் அமைச்சர்கள், அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், கிராம ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், மேயர்கள் இடம் பெற்று உள்ளனர். குழு உறுப்பினர்களைக் கூட்டி நாங்கள் ஆலோசனை நடத்தி இருக்கிறோம். எங்களது பரிந்துரைகளை அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

**அடையாள அட்டை**

இந்தக் கருத்தரங்கில் கிராம ஊராட்சித் தலைவர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். பயணப்படி நீண்டகாலமாக உயர்த்தப்படவில்லை என்றார்கள். பயணப்படியை இன்னும் கொஞ்சம் உயர்த்தும் முயற்சியில் இந்த அரசு உள்ளது. விரைவில் இதற்கான அறிவிப்பு வெளிவரும். அடையாள அட்டை பற்றி குறிப்பிட்டார்கள். இது நியாயமான கோரிக்கை தான். இது பெரிய பிரச்சினையே அல்ல. ஒவ்வொரு ஊராட்சித் தலைவருக்கும் அவர்களது கழுத்தில் தொங்கும் வகையில் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை விரைவில் வழங்கப்படும். அந்த அடையாள அட்டையில் அவர்களது பதவிக் காலம், வருடம் பற்றியும் குறிப்பிடப்பட்டு இருக்கும். புறம்போக்கு நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படுவதாக கூறப்பட்டது. ஆக்கிரமிப்பு பற்றி தகவல் கிடைத்ததும் அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் வருவாய்த்துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிராம ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதைப் பற்றி பேசப்பட்டது. இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் இலவச கலர் டி.வி திட்டம் உள்ளது. 2 ரூபாய்க்கு ரேசன் அரிசி வழங்கும் மாநிலமும் தமிழகம் தான்.

மக்களுக்குத்தான் இதுபோன்ற திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறோம். எனவே இதனை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பேசவேண்டும். அரசியலுக்காகப் பேச வேண்டும் என்றால் எதையும் பேசலாம். உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடந்த 2006-2007ஆம் ஆண்டு ரூ.1,225 கோடி நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. 2007-08ஆம் ஆண்டு நிதிப் பங்கீடு ரூ.1,586 கோடியாக உயர்ந்தது.

இது கடந்த ஆண்டை விட 30 சதவீதம் கூடுதல் ஆகும். கட்சிப் பாகுபாடு இன்றி 5 ஆண்டுகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் எல்லாப் பணிகளும் அனைத்து ஊராட்சிகளில் ரூ.508 கோடி பணிகளும், இந்த ஆண்டு 2,540 கிராம ஊராட்சிகளில் ரூ.508 கோடி பணிகளும், இந்த ஆண்டு 2,534 பணிகளுக்காக ரூ.507 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. திருச்சி மண்டலத்தைப் பொறுத்தவரை 570 கிராமங்களில் இந்த ஆண்டு 21 ஆயிரத்து 655 பணிகள் செய்வதற்காக 114 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

தமிழகத்தில் நடந்து வரும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி டெல்லியில் நான் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்துப் பேசிய போது கேட்டார். நான் இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் பற்றிக் கூறினேன். இதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்த பிரதமர் இந்தியா முழுவதும் இந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் ஒட்டுமொத்த இந்தியாவே வளம் பெறும் என்று பாராட்டினார். கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு கூடுதல் அதிகாரங்கள், சலுகைகள் வழங்குவது பற்றி இன்னும் 2 அல்லது 3 மாதங்களில் அறிவிக்கப்படும்.

ஊதியம் வேண்டும் என்று கேட்டார்கள். நாம் மக்கள் பிரதிநிதி. நமக்கு எதற்கு ஊதியம் என்று நினைக்க வேண்டாம். மக்களுக்காகப் பணியாற்ற வந்து இருப்பதால்தான் நான் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து கிராம ஊராட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருகிறேன்.

நான் சென்னையில் இருக்கும் நாட்கள் கூட மிகவும் குறைவு. இப்படி ஊர் ஊராகச் சுற்றுகிறாயே உனது உடம்பு என்னத்துக்கு ஆகும்? என்று எனது தாயார் பாசத்தின் மிகுதியால் கேட்டபோது தலைவர் கலைஞர், ஊர் ஊராகச் சுற்ற வேண்டும் என்பதற்காகதான் ஊரக வளர்ச்சித் துறையை அவனுக்கு ஒதுக்கி இருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய பல்வேறு ஊராட்சித் தலைவர்களும் பேசும்போது, "இது போன்று ஊராட்சித் தலைவர்களை அழைத்து அவர்களது கருத்துக்களை இதுவரை யாரும் கேட்டதில்லை என்றும் ஊராட்சித் தலைவர்களை மதித்து எங்களது கருத்துக்களைக் கேட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவிருக்கும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதாகவும் கூறினார்கள்" என்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★



# போக்குவரத்துக் கழகங்களில் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி ஆணை

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி பணிக்காலத்தில் உயிர்நீத்த 474 பேரின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் ஒட்டுநர் மற்றும் நடத்துநர்க்கான பணி ஆணையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் மத்திய பணிமனையில், அனைத்து போக்குவரத்துக் கழகங்களில் பணிக்காலத்தில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்குதல், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் புதிய பேருந்துகளை இயக்கிவைத்தல், என்ஜின் அதிக உழைப்புத்திறன் பெற்றமைக்காக ஒட்டுநர் மற்றும் பராமரிப்புப் பணியாளர்களுக்கு பரிசு வழங்கல் மற்றும் 24 மணிநேர நடமாடும் பராமரிப்பு வாகனத்தைத் தொடங்கி வைத்தல் ஆகிய விழாக்கள் அனைத்தையும் மாண்புமிகு .உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவிற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள்தலைமை தாங்கினார். போக்குவரத்துத்துறை அரசுச் செயலாளர் தேவேந்திரநாத் சாரங்கி முன்னிலை வகித்தார். நிர்வாக இயக்குநர் திரு.இரா.பாலசுப்பிரமணியம் வரவேற்புரை யாற்றினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும்போது கூறியதாவது :–

"என்றைக்கும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் கலைஞர்தான். ஆட்சியில் இருந்தாலும் இல்லா விட்டாலும் நமக்கு முதல்வர் கலைஞர்தான்.

உங்களை சந்திக்க அமைச்சராக, எம்.எல்.ஏ. வாக, தி.மு.க. துணைப்பொதுச் செயலாளராக பல பொறுப்புகளோடு வந்திருக்கிறேன், என்று எண்ண வேண்டாம். உங்களில் ஒருவனாக இருந்து உங்களுக்காகக் குரல் கொடுப்பவனாக வந்து உள்ளேன்.



போக்குவரத்துத் தொழிலாளர்கள் சென்னையில் பிரமாண்டபேரணியை நடத்தினீர்கள். கடந்த ஆட்சியில் இழந்த சலுகைகளை இந்த அரசு வழங்கவேண்டும் என்று உரிமையோடு எடுத்துக் கூறினீர்கள். அதன் அடிப்படையில் இந்த நிகழ்ச்சியில் முதல் கட்டமாக பணிக்காலத்தில் இறந்த 474 வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் ஒட்டுநர், நடத்துனர் ஆகியோருக்கு பணிஆணை வழங்கப்படுகிறது.

முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளைத் திட்டமாக்கி நிறைவேற்றி வருகிறார். இது சொன்னதையும், சொல்லாததையும் செய்யும் ஆட்சி. அப்படிப்பட்ட ஆட்சிக்கு எப்போதும் போல் தொழிலாளர்கள் துணை நிற்கவேண்டும்''.

இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், பணிக்காலத்தில் இறந்த வாரிசுதாரர்கள் 474 பேருக்கு கடந்த 10 ஆண்டுகளுக்குப் பிறகு ஒட்டுநர் மற்றும் நடத்துனராக பணி நியமன ஆணைகளையும், 5 லட்சம் கிலோ மீட்டர் பழுதின்றி இயக்கப்பட்ட அதிக உழைப்புத்திறன் பரிசினை 2006–2007 ஆம் ஆண்டுக்கான ஒட்டுநர்கள் மற்றும் பராமரிப்பு பணியாளர்கள் 80 பேருக்கு கைக்கடிகாரங்களையும் வழங்கினார்.

மாநகர் போக்குவரத்திற்காக 25 தொடர் பேருந்துகளும், 3 தாழ்தளப் பேருந்துகளும் 47 நவீனரக மாசற்ற பேருந்துகளும் வழங்கப்பட்டன. இவைகள் பழைய பேருந்துகளுக்குப் பதிலாக இயக்கப்படும். இந்த பேருந்துகளைப் பராமரிக்க 24 மணிநேரமும் இயங்கும் வாகனமும் வழங்கப்பட்டது.

★ ★ ★

# வாரியங்களுக்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம்

## தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் அமைப்புச் சாராத் தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களைத் தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் தலைவராக, தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும்;

அரசுப் பிரதிநிதிகளாக, தொழிலாளர் ஆணையர், நிதித் துறைச் செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், தொழில் மற்றும் வர்த்தகத் துறை ஆணையர் ஆகியோரையும்;

வேலையளிப்போர் பிரதிநிதிகளாக, மதுரை திரு.எஸ்.அமீர் சாதிக், சென்னை திரு.எஸ்.காந்திமணி, இராணிப்பேட்டை திரு. இரா. சிவஞானம், சென்னை திரு.ஆர்.ரமேஷ் பிரசாத், தருமபுரி திரு.ர.வேலுமுருகன் ஆகியோரையும்;

தொழிலாளர் பிரதிநிதிகளாக, திண்டுக்கல் திரு.கே.கருப்பையா, வேலூர் திரு.சௌந்தர்ராஜன், ஆம்பூர் திரு.எஸ்.ஆர். தேவதாஸ், திண்டுக்கல் திரு.கே.ஆர். கணேசன், திருவள்ளூர் திரு. ஆதிசரவணன், தருமபுரி திரு.இரா. திருவேங்கடம் ஆகியோரையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம்

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களைத் தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் தலைவராக, தமிழக அரசின் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும்;

அரசுப் பிரதிநிதிகளாக, தொழிலாளர் ஆணையர், நிதித் துறைச் செயலாளர், சென்னை அரசு கலை மற்றும் கைவினைக் கல்லூரி முதல்வர், அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறைச் சிறப்பு ஆணையர், கைவினை வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆகியோரையும்;

வேலையளிப்போர் பிரதிநிதிகளாக, சென்னை திரு.எஸ். கோபி, டாக்டர் ஜே.பி.கிருஷ்ணா, விருத்தாசலம் திரு.ஜிரகுபதி, மதுரை திரு.ஆர்.பிரான்சன், தஞ்சாவூர் திரு.எம்.முருகேசன், சென்னை திரு.எஸ்.தியாகராஜன், திரு.கே.புகழேந்தி ஆகியோரையும்;

தொழிலாளர் பிரிதிநிதிகளாக, திண்டுக்கல் திரு.டி.சந்தியாகு, செங்கம் திரு.கே.கே.தேவேந்திரன், அம்பத்தூர் திரு.பி.என்.உண்ணி, திருவண்ணாமலை திரு.பி.அன்பு, சென்னை கரோ (எ) கே.போஸ், நாகர்கோவில் திரு.அரிதாசு ஆகியோரையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் இந்தியாவிற்கான உலக வங்கியின் புதிய இயக்குநர் சந்திப்பு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை 24.7.2007 அன்று இந்தியாவிற்கான உலக வங்கியின் புதிய இயக்குநர் திருமதி. இசபெல் குரேரோ அவர்கள் சந்தித்தார். அப்போது மாண்புமிகு நிதியமைச்சர், தலைமைச் செயலாளர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் ஆகியோர் உடன் இருந்தனர். இச்சந்திப்பினபோது உலக வங்கியின் நிதி உதவியுடன் தமிழகத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தமிழகத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் 9 திட்டங்கள் ரூபாய் 10 ஆயிரத்து 635 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ரூபாய் 2 ஆயிரத்து 160 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், ரூபாய் 597 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுகாதார அமைப்புகள் திட்டம், ரூபாய் 717 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து உலக வங்கியின் இயக்குநர் தமிழக அரசுக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்தார். இவர் நமது நாட்டில் பொறுப்பேற்றுள்ள உலக வங்கியின் முதல் பெண் இயக்குநர் என்பது குறிப்பிடத்தக்கது. ●



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.7.2007 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாண்புமிகு மத்திய உள்துறை இணையமைச்சர் திருமதி.ராதிகா செல்வி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆர்.பழனியாண்டி,இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



## சென்னைப் பெருநகர வளர்ச்சிக்காக அரசு பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்**




மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் 10.8.2007 அன்று நடைபெற்ற FICCI கூட்டத்தில் ஆற்றிய உரை :-

**தமிழக நகரங்கள்**

"நகரமயமாதல்" என்பது இன்று தவிர்க்க முடியாத நிகழ்வாக உள்ளது. நகரமயமாதலும், சமூக பொருளாதார வளர்ச்சியும் ஒன்றை மற்றொன்று சார்ந்தும், ஊக்குவித்தும் வளர்ந்து வருகிறது. இன்னும் 20 ஆண்டுகளில் உலகின் மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் நகரங்களில் மட்டுமே வசிப்பர் என்று கணக்கீடும், ஆராய்ச்சியும் தெரிவிக்கின்றன.

உலகின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நமது இந்திய நாட்டில் தமிழகம் 3ஆவது பெரிய பொருளாதார மாநிலமாக உருவாகியுள்ளது. தமிழக மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள்

தொகையின் பங்கு 44 சதவீதம் ஆகும். அதிக நகர மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் தமிழகம் முதன்மை இடம் வகிக்கிறது.

**மக்கள்தொகை வளர்ச்சி**

சென்னை ஒரு நல்ல வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரம் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. இந்நகரம் சுதந்திரத்திற்குப்பின் அபாரமான வளர்ச்சி அடைந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 43 இலட்சங்களாக இருந்த சென்னை மாநகராட்சிப் பகுதியின் மக்கள் தொகை, 59 இலட்சங்களாக அடுத்த 20 ஆண்டுகளில் உயரும் என கணக்கிடப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர எல்லையின் மக்கள் தொகை அடுத்த 20 ஆண்டுகளில் 126 இலட்சங்களாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சியை முழுவதுமாகத் தடுக்க இயலாது. ஆனால் முடிந்த அளவு நகர்ப்புற வளர்ச்சிகளைச் சீர்படுத்தி மக்களுக்காக, மக்களை மேம்படுத்தும் திட்டங்கள் தரும் கடமை அரசுக்கும், திட்டமிடும் துறைகளுக்கும் உள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது.

அதே நோக்கத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் மனதில் கொண்டு, இந்த அரசு பல முற்போக்கான திட்டங்களை முன்னிறுத்தி வருகிறது. பல்வேறு நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.

சென்னை பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின் எடுத்துக்கொண்ட இந்த முயற்சி சென்னை நகரின் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதோடு, அது சீரான வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**வெளிவட்டச் சாலை**

சென்னைக்கான இந்த இரண்டாம் முழுமைத்திட்டம் ஒரு தொலைநோக்கோடு தயாரிக்கப்பட்டு வருகிறது. நாட்டில் ஏற்படும் அனைத்து வளர்ச்சிகளும், அனைத்து மக்களிடமும் சேரவேண்டும். சமூக நல்லிணக்கங்கள் வளரவேண்டுமானால், சமுதாய இருப்பிடங்கள் சமமான வளர்ச்சிப் பாதையில் செல்ல வேண்டும் என்பதில் இந்த அரசு தெளிவாக உள்ளது.

சென்னைப் பெருநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டும், பெருநகர வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் பெருநகரின் வெளி ஓரத்தில் வெளிவட்டச் சாலை அமைக்க திட்டம் நடைபெற்று வருகிறது. இச்சாலையானது வண்டலூரில் தேசிய நெடுஞ்சாலையையும், மீஞ்சூரில் திருவொற்றியூர் – பொன்னேரி – பஞ்செட்டி சாலையையும் இணைக்கிறது. இச்சாலையின் நீளம் 62.3 கி.மீ ஆகும். சுமார் 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டம் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை மெட்ரோ ரயில்**

அடுத்ததாக, சென்னைக்கு ஒரு மாபெரும் முற்போக்குத் திட்டமாக விளங்கப் போகும் "சென்னை மெட்ரோ ரயில்" திட்டம் தெற்காசிய நாடுகளில் ஒரு முன்மாதிரித் திட்டமாக விளங்கும் என்பதை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்வதில் பெருமையடைகிறேன். இந்தத் திட்டம் சென்னை நகரில் இரண்டு வழித் தடங்களில் செல்லும். இது சுமார் 50 கி.மீ தொலைவை உள்ளடக்கியிருக்கும். இத்திட்டம் ரூ.18,000 கோடி மதிப்பீட்டில் நான்கு ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற அரசு திட்டம் தீட்டியுள்ளது.

மேலும், உலகவங்கி உதவியுடன் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 3–ன் கீழ் சென்னைப் பெருநகரம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள பகுதிகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்தவும், இரயில் பாதைகளில் மேல் மேம்பாலங்கள் அமைக்கவும் திட்டம் வகுக்கப்பட்டு செயல் நிலையில் உள்ளது. இதனால் பெருநகரத்தின் பல பகுதிகளுக்கு ஒரு சீரிய போக்குவரத்து இணைப்பு வசதி கிடைக்க உள்ளது. இதனால் மக்கள் துரிதமாக ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் செல்ல இயலும்.



சென்னைப் பெருநகர வளர்ச்சியையும், தேவையையும் மனதில் கொண்டு பல சிறப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அதில் மொத்த உணவு தானிய அங்காடி வளாகம், சென்னை மற்றும் பெருநகரங்களில் பல அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள், சிறப்புத் தகவல் தொழில்நுட்பப் பகுதி, ஜவுளி வளாகம், மோட்டார் நகரம் போன்ற திட்டங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

நகர வளர்ச்சியிலும், திட்டமிடுதலிலும் "போக்குவரத்துத் திட்டம்" இன்றியமையாதது. சென்னையிலும், தமிழகத்தின் ஏனைய முக்கிய நகரங்களிலும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு தலைமைச் செயலாளரின் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு பல்வேறு போக்குவரத்துத் திட்டங்கள் நடைமுறைக்கு வந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞரின் கடந்த ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட மேம்பாலங்கள் தான், இன்று சென்னையில் அசுர வேகத்தில் வளர்ந்துள்ள போக்குவரத்தைத் தாக்குப்பிடிக்கிறது. தொடர்ந்து இந்த அரசு பல்வேறு இடங்களில் மேம்பாலங்கள் அமைப்பதுடன், புதிய போக்குவரத்து வழித் தடங்கள் கண்டறியப்பட்டு பலநூறு புதிய வாகனங்கள் விடப்பட்டுள்ளன.

நகர வளர்ச்சியில் அடுத்து ஒரு இன்றியமையாத அம்சம் குடிநீர் விநியோகம். சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் சென்னையில் மாபெரும் குடிநீர் சுத்திகரிக்கும் திட்டத்தை திறந்துவைத்தார் என்பதை நினைவு கூற கடமைப்பட்டுள்ளேன்.

அனைத்திற்கும் மேலாக மக்கள் அனைவருக்கும் அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் குறித்து அனைத்து மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விருப்பப்படி "செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை" மக்களின் விழிப்புணர்வை கொணர பாடுபட்டு வருகிறது. ஏனென்றால் சமமான வளர்ச்சி என்பது கட்டமைப்புகளில் மட்டுமல்லாமல், அறிவு வளர்ச்சியிலும் இருக்க வேண்டும் என்பதே உண்மையான வளர்ச்சி.

**புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்**

எனவே, தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சியையும், அதனைச் சார்ந்த பொருளாதார வளர்ச்சியையும் குறிக்கோளாகக் கொண்டு மாநிலத்தை முதல் நிலைக்கு எடுத்துச் செல்ல அரும்பாடுபட்டு வருகிறது. இதற்கென தனியார் நிறுவனங்கள், பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செய்துள்ளது. பல்வேறு நிறுவனங்கள் கட்டமைப்புப் பணிகளைத் துவக்கியுள்ளன. நிறுவனங்கள் தமிழகத்தைத் தனது தளமாகத் தேர்ந்தெடுக்க ஏதுவாக அரசு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருகிறது என்பதும் தாங்கள் நன்கு அறிந்ததே.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களும், அதனைச் சார்ந்த பொறியியல் துறை நிறுவனங்களும், மோட்டார் வாகனத் தொழிற்சாலைகளும் தமிழகத்தில் தொடங்கி இருப்பது வரவேற்கத்தக்க வளர்ச்சியாகும். அதே நேரத்தில் அதிகப் பரப்பளவு கொண்ட, சுமார் 100 முதல் 500 ஹெக்டேர் வரையிலான நிலங்கள் தேவைப்படுகிறது. இதற்கான நிலங்கள் நகரியப் பகுதிக்குள் கிடைக்க வாய்ப்பில்லை. எனவே நகரைச் சார்ந்த கிராமப்புறப் பகுதிகளை நிறுவனத்திற்கு இடமாகத் தேர்வு செய்ய நேரிடுகிறது. ஆகையினால் நகர்ப்புற வசதிகளான போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம், அடிப்படை வசதிகளை அங்கேயும் ஏற்படுத்தும் கட்டாயம் எழுந்துள்ளது. அதற்கான ஆக்கபூர்வமான ஏற்பாடுகளை அரசு செய்து வருவதும் நீங்கள் அறிவீர்கள்.

நகர்ப்புற வசதிகளை கிராமப் பகுதிகளுக்கும் குறிப்பாக தொழில் நிறுவனங்கள் அமையும் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதும், அந்த இடைவெளியை நிரப்புவதையும் அரசு முன்னுரிமையாகக் கொண்டு செயல்படுகிறது. ஆனால் இந்தப் பெரும் பொறுப்பை அரசு மட்டும் நிறைவேற்ற இயலுமா ? பயன்பெறுகிற, லாபம் ஈட்டுகின்ற நிறுவனங்களின் பங்கு இதில் என்ன ? சிந்திக்க வேண்டுகிறேன். அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் அரசும், தொழில்

நிறுவனங்களும் கைகோர்த்து செயல்பட வேண்டும். வளர்ச்சிக்கான தேவைகளை நிறைவு செய்வதில் பங்கேற்றுச் செயல்படத் தொழில் நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

தொழில் நிறுவனங்கள் தொடங்குகின்ற பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரங்கட்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பதோடு மட்டும் அல்லாமல், அங்கு தோற்றுவிக்கப்படுகின்ற நகரிய வசதிகளின் பலன்கள் அப்பகுதியைச் சார்ந்த மக்களின் தேவையை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும். அதனைப் பயன்படுத்தவும், அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் தங்கு தடையற்ற வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டும். அங்கு நிலவி வருகின்ற சுற்றுச்சூழலை பாதிக்காத வண்ணம் இருக்க வேண்டும். பசுமைக் கட்டட கருத்துருக்கள் (Green Building concept) முடிந்த வரையில் செயல்படுத்தப்பட வேண்டும்.




கட்டமைப்பும் அடிப்படை வசதிகளும் உலகத் தரம் வாய்ந்தவையாக ஏற்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும் என்ற குறிக்கோளோடு அரசு திட்டங்களைத் தீட்டி வருகிறது.

**வளர்ச்சித் திட்டக்குழு**

உலகத்தரம் வாய்ந்த போக்குவரத்து வசதியை ஏற்படுத்த அரசு திட்டம் தீட்டி செயல்படுத்தி வருகிறது. அதைப் போன்றே குடிநீர் வசதி, கழிவு நீர் வெளியேற்றம் கட்டமைப்பு வசதிகளில் முன்னுரிமை பெறுகிறது. நிலத்தடி நீர் பாதிக்காத வண்ணம் புதிய நீர் ஆதாரங்களை தோற்றுவித்து, தேவையான அளவு குடிநீர் விநியோகிக்க திட்டம் தீட்டப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், சமூகக் கட்டமைப்புகளான கல்வி, மருத்துவம், கலாச்சார வசதிகளை ஏற்படுத்த ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகிறது. தங்கு தடையற்ற மின் விநியோகம், தொலைதொடர்பு வசதியை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, சென்னைப் புறநகர்ப் பகுதியில், பல்வேறு கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள தொழில் நிறுவனங்கள், அதனுடைய தாக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசானது, எனது தலைமையில், தலைமை செயலர், அரசு செயலாளர்கள் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய "வளர்ச்சித் திட்டக் குழு" (Development Planning Committee) அமைத்துள்ளது. அக்குழு, நிறுவனங்கள் மற்றும் மக்களின் தேவைகளுக்கேற்ப பகுதிவாரியாக திட்டம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தமிழகத்தை தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார வளர்ச்சியிலும் முன்னோக்கி எடுத்துச் செல்கின்ற அதே வேலையில், கிராமப்புறங்களில் நகரிய வசதிகளை ஏற்படுத்தி அம்மக்களும் வளர்ச்சியின் அனைத்து பரிமாணங்களிலும் பங்கேற்கவும், பயனடையவும் வழிகாண வேண்டும் என விரும்புகிறேன்.

இந்த அருமையான நிகழ்ச்சியில் பங்கேற்று, என்னுடைய கருத்துக்களை உங்கள் முன் வைப்பதற்கு வாய்ப்பளித்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன். □






# கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை

ரூ.160/- முதல்
ரூ.1,500/- வரை



கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

R.N.I. No.21446/70-Regn.No.TN/AR
TN/PMG(CCR) WPP-518/06-...



# தமிழரசு

விலை ரூ.10







# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு
திருவள்ளுவர் ஆண்டு 2038
ஆவணி - புரட்டாசி செப்டம்பர் 2007
மலர் : 39 இதழ் : 3



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்**,இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத் துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு. ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான

செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**எஸ்.பி.எழிலழகன்**
**டி.ஆர்.ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா.சுரேஷ்**
**வீ. இரா.நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா. இளவரசி**

நிருபர்கள்

**கோ.சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.வைரியர் சாக்ரடீஸ்**
**ஜெ.ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.ராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ.மதன்**
**ஆர்.பத்மாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது**
**வாஅய்மை வேண்ட வரும்**

தூய்மை என்பது பேராசையற்ற தன்மையாகும். அத்தூய்மை வாய்மையை நாடுவோர்க்கே வாய்க்கும்.

- **கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...


❖ பட்டணங்களிலே உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்குத் தரவேண்டும்
- மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் உரை ........ 3

❖ என்னை பெரியார் பழக்கியது. அண்ணா பயிற்றுவித்தது
உங்களுக்கு உழைப்பதற்காகத்தான்! - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை .......... 8

❖ தமிழ் வாழும் மற்றவர்களையும் வாழ வைக்கும்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ........ 14

❖ அண்ணன் ஜீவானந்தம் பெயரால் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டுவோம்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ........ 20

❖ 2006-2007ஆம் ஆண்டில் ரூ.20 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக
கணினி மென்பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் முன்னிலை
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தகவல் ........ 26

❖ நோய் நொடிகளின்றி தூய்மையாக வாழ, போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருக்க
புதிய புதிய நகரங்கள் அமைந்தாக வேண்டும்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரை ........ 29

❖ மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில்
உயர்கல்வி நிறுவனங்களை திறக்க வேண்டும்
- மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடிதம் ........ 35

❖ பதிவு மூப்பு அடிப்படையில் முதன்முதலாக 5,098 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு ........ 47

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்வுகள்**

❖ அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் கணினி ........ 54

❖ பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.89.14 கோடி மதிப்பிலான
வளர்ச்சித் திட்டப்பணிகளைத் தொடங்கிவைத்து உரை ........ 55

❖ தஞ்சை நகராட்சியில் ரூ.70 கோடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ........ 59

❖ மதுரை - அரசு இராசாசி மருத்துவமனைக்கு ரூ.22 கோடி மதிப்பீட்டில்
நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் புதிய கட்டடத்திற்கு
அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை ........ 60

❖ தமிழக அரசு மக்களுடைய எண்ணங்களையும் தேவைகளையும்
உணர்ந்து செயலாற்றி வருகிறது - நாமக்கல்லில் நடைபெற்ற அரசு விழாவில்
நலத்திட்டங்களை தொடங்கிவைத்தும், அடிக்கல் நாட்டியும் ஆற்றிய உரை ........ 64

❖ நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச்
சார்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசுதான்,
தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு
- மாமல்லபுரத்தில், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
தொடங்கப்பட்ட விழாவில் ஆற்றிய உரை ........ 68

❖ பார்வையற்ற 38 பேருக்கு அரசுப் பணி - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்
திரு.**பரிதி இளம்வழுதி** அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார் ........ 73

❖ அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி சென்னைப் பெருநகர்ப்பகுதி இரண்டாம்
முழுமைத் திட்டம் அமையும் - மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் ........ 75


**அட்டைப் பட விளக்கம்**

*முதலாம் பக்க அட்டை :* **மாமல்லபுரத்தில் நடந்த பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (3.9.2007)**

*இரண்டாம் பக்க அட்டை :* **பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (21.8.2007)**

*நான்காம் பக்க அட்டை :* **மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (18.8.2007)**



"எங்களுடைய மொழியும்
கலாச்சாரமும்
காப்பாற்றப்பட வேண்டும்.
இந்தியக் கூட்டாட்சிக்குள் எங்கள்
மாநிலத்திற்குரிய அரசியல்
உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
எங்களுடைய பொருளாதார
முன்னேற்றத்திற்கு
உறுதி மொழி தேவை"

**- பேரறிஞர் அண்ணா**



பேரறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்,
பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்துவைத்து
மாலையணிவித்தார்கள். (ஏற்காடு – 15.9.2007)



# பட்டணங்களிலே உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்குத் தரவேண்டும்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் உரை**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை 3.9.2007 அன்று தொடங்கி வைத்து மாமல்லபுரத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :-

இன்று மாலையிலேயிருந்து மாமல்லபுரம் வட்டாரத்தில் மக்களின் எழுச்சியையும் அவர்கள் முகத்தில் பொங்குகின்ற மகிழ்ச்சியையும் காணுகின்ற வாய்ப்பைப் பெற்று அந்த மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்ள உங்களையெல்லாம் சந்திக்கின்ற, இந்தப் பந்தலிலே உங்களைக் காணுகின்ற பெரிய வாய்ப்பைப் பெற்றமைக்காக பெருமையடைகின்றேன். மாமல்லபுரம் ஏதோ இன்று மாலையிலேதான் நான் வந்த ஊரல்ல. மாமல்லபுரத்திற்கும் எனக்கும் ஏறத்தாழ ஒரு 60 ஆண்டு கால தொடர்பு உண்டு. 1950 ஆம் ஆண்டு வாக்கில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களும் அவருடைய சகோதரர் எம்.ஜி. சக்கரபாணி அவர்களும், இயக்குனர் காசிலிங்கம் அவர்களும் இந்த மாமல்லபுரத்திலே அரசு விருந்தினர் விடுதியிலே தங்கி எம்.ஜி.ஆர். நடிப்பதற்காக "நாம்" என்கின்ற ஒரு சமூகப் புரட்சிப் படத்தை நான் எழுதிய போது இந்த வட்டாரத்திலே எந்தளவிற்கு நான் பழகியிருக்கின்றேன், எவ்வளவு நண்பர்களை நான் அன்றைக்கே பெற்றிருக்கின்றேன் என்பதையெல்லாம் விரிக்கின் பெருகும். எனவே விரிவஞ்சி விடுக்கின்றேன் .

இன்று கூட நான் மாலையிலே சொல்லிக் கொண்டு வந்தேன் . இங்கே எத்தனையோ சிற்பங்கள் இருக்கின்றன. எத்தனையோ பழங்காலத்து வரலாற்றுக் காலத்து அடையாளச் சின்னங்கள் இருக்கின்றன. ரதங்கள் இருக்கின்றன. குகைகள் இருக்கின்றன. இப்படியெல்லாம்

இருந்தும்கூட, இங்கே "புலிக்குகை"என்கின்ற ஒரு இடத்தை மரங்கள் அடர்ந்த ஒரு இடத்திலே அமைக்கப்பட்டிருந்த அந்த புலிக் குகையைத் தேடிக் கண்டுபிடித்து அதை புகைப்படமாக எடுத்து வெளியிடச் செய்வதற்கு நானும் எம்.ஜி. சக்கரபாணியும் தான் அன்றைக்கு காரணமாக இருந்தோம் என்பதை நண்பர்களிடத்திலே கூட நான் மாலையிலே சொன்னேன்.

## மகாபலிபுரமா ? மாமல்லபுரமா ?

மாமல்லபுரம் – இது மாமல்லபுரமா ? மகாபலி புரமா ? இந்தப் பிரச்சினைக்கு நாம் ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். இன்றைக்கு காணுகின்ற முடிவுதான் என்றைக்கும் தொடர வேண்டும். இப்பொழுது தம்பி ஸ்டாலின் சொன்னாரே நாம் எடுக்கிற முடிவுதான் பேருந்து நிலையம் எது என்று தீர்மானிக்கும் என்று. அப்படி ஒரு முடிவு எடுத்து இதுதான் பேருந்து நிலையம் என்று கட்டிவிட்டால் பிறகு அதுதான் பேருந்து நிலையமாக, எப்படி இருக்க வேண்டுமோ அதைப்போல மகாபலிபுரமா ? மாமல்லபுரமா ? இந்த இரண்டில் எது சரி ? என்ற ஆராய்ச்சிக்கு நாம் இடம் அளித்து எந்த முடிவு எடுக்கிறோமோ அந்த முடிவை நாம் தொடர்ந்து காப்பாற்ற வேண்டும். எந்த முடிவை எடுப்போம் என்றால், தமிழாய்ந்த தமிழர்கள் ஆய்ந்தெடுத்த முடிவு என்றால், அது மாமல்லபுரம் என்ற முடிவாகத்தான் இருக்க முடியும். இரண்டு நாளைக்கு முன்பு கூட ஏடுகளிலே வந்த செய்திகளை பார்த்திருப்பீர்கள். ஓணம் பண்டிகை என்ற ஒரு பண்டிகையை மலையாள மொழி பேசுகின்ற மக்கள் கொண்டாடுகிறார்கள். அந்த ஓணம் பண்டிகை எப்படி வந்தது ? யாரால் வந்தது ? ஏன் வந்தது ? என்பதற்கான காரண காரிய விளக்கங்களை தாங்குகின்ற ஒரு அச்சிலேற்றப்பட்ட ஒரு துண்டுத்தாளை நான் பார்க்க நேரிட்டது. அந்த துண்டுத் தாளிலே உள்ள விஷயங்களை நான் படித்த பிறகு அது பற்றிய புத்தகத்தையே வாங்கிப் படிக்க கேரள மாநிலத்திலேயிருந்து ஆங்கிலப் புத்தகங்களை வரவழைத்து அதற்கான சான்றுகளை படித்துப் பார்த்தேன். என்ன சான்று என்றால், மகாபலி என்று அழைக்கப்பட்ட மன்னன், புராணிகர்களுடைய கருத்துப்படி அவர் தமிழருமல்ல, மலையாளியுமல்ல, ஒரு ராட்சசன். அவன் கேரளத்திலே அரசு புரிந்தான். நான் சொல்வதல்ல, நம்முடைய தமிழகத்திலே உள்ள புராணங்கள், இப்படி சொல்லிக் கொண்டிருக்கின்றது. அவன் அங்கே அரசு புரிந்தான். அவனுடைய ஆட்சியில் தேவர்களுக்கெல்லாம் தீமை செய்தான். அதனால் தேவர்கள் வெகுண்டு, மகாவிஷ்ணுவிடத்திலே சென்று நீதான் எங்களை காப்பாற்ற வேண்டும் என்று கேட்டார்கள். உடனே மகாவிஷ்ணு பயப்படாதீர்கள். நான் வாமனா அவதாரம் எடுத்து அதாவது குள்ள உருவம் கொண்டு மகாபலி சக்கரவர்த்தியை ஏமாற்றி அவனை வெல்லுகிறேன். அவனை யுத்தத்தால், போரால், ஆயுதங்களால் யாரும் தோற்கடிக்க முடியாதென்றால் என்னுடைய தந்திரத்தால் தோற்கடிப்பேன் என்று மகாவிஷ்ணு புறப்பட்டுவிட்டார்.

## ஓணம் பண்டிகை

ஒரு குள்ளமான பிராமண வடிவிலே வந்தார். யார் எதைக் கேட்டாலும் கொடுக்கக் கூடிய வள்ளல் மகாபலி சக்கரவர்த்தியிடத்திலே சென்று எது கேட்டாலும் "கொடுப்பாயா ?" என்று கேட்டார். "தருவேன் " என்றான். "அப்படியானால் ஒன்றும் அதிகம் வேண்டாம். எனக்கு ஒரு மூன்று அடி மண் கொடு போதும்" என்று கேட்டார். உடனே சக்கரவர்த்தி, "இவ்வளவு பெரிய ராஜ்யத்தில் எத்தனையோ கல் தொலைவு பரப்பளவு உள்ள இந்த மண்டிலத்தில் மூன்றடி மண்தானா பிரமாதம், எடுத்துக் கொள்ளுங்கள்" என்றான் . உடனே அந்த குள்ளமான பிராமணர், தன்னுடைய பாதத்தை கீழே ஊன்றி "ஒன்று" என்று அளந்தார். அதில் உலகத்திலே பாதியை அளந்தார். மறுபடியும் "இரண்டு" என்று அளந்தார், உலகத்திலே இன்னொரு பாதியையும் அளந்து விட்டார். அளந்துவிட்டு மன்னரைப் பார்த்துக் கேட்டார், இரண்டடி முடிந்து விட்டது மகாபலி, மூன்றாவது அடி மண் எங்கே என்று கேட்டார் ? மூன்றாவது அடிக்கு மண் இல்லாவிட்டால் என் மண்டை இருக்கிறது என்று தலையை குனிந்தார். அவனுடைய தலையிலே காலை வைத்து மகாபலி சக்கரவர்த்தியை ஒரே அழுத்தாக அழுத்திய மகாவிஷ்ணு, பிராமண உருவிலே, குள்ள உருவிலே இருந்த மகாவிஷ்ணு அவனை கொன்றுவிட்டார் என்றும், அப்படி மகாபலி சக்கரவர்த்தி சாகும் போது அய்யனே நான் இறந்தாலும்கூட ஆண்டுக்கு ஒரு முறை என்னுடைய மக்களைப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரு வரம் தா என்று கேட்டார். பரவாயில்லை வரம் தருகிறேன் என்று வரம் கொடுத்தார், அந்த வரத்தை நிறைவேற்றுகிற நாள்தான் ஓணம் பண்டிகை என்று தமிழ்நாட்டிலே உள்ள புராணங்கள் சொல்லுகின்றன.

## திராவிடமொழி உணர்வு

ஆனால் கேரளத்திலே இருக்கிற புராணங்கள் என்ன சொல்லுகிறது என்றால், இங்கே தமிழ்நாட்டு புராணத்தை புராணிகர்கள் எழுதியது. கேரளத்துக் கதையை, ஏதோ கொஞ்சம் பகுத்தறிவு உள்ளவர்கள் எழுதியது. கேரள மக்களை புரிந்தவன் எழுதியது. மான உணர்வு உள்ளவன் எழுதியது. மனித உணர்வு உள்ளவன் எழுதியது. மலையாள உணர்வு உள்ளவன் எழுதியது. கேரளமும் கலி தெலுங்கும், கவின் மலையாளமும் திராவிட மொழி என்கின்ற காரணத்தால் திராவிட மொழி உணர்வு உள்ளவன் எழுதியது. அவன் என்ன எழுதினான் , அவன் எழுதியது இன்றைக்கும் கேரளத்திலேயிருந்து வெளிவருகின்ற கதைகளாக நமக்கு கிடைக்கின்றன. அவன் எழுதியதுதான் கேரளத்திலே "மாவலி", 'மகாபலி'






அல்ல. "மாவலி" என் று ஒரு மன்னர் இருந்தார். "மாவலி" என்றால் தமிழ் புரிந்தவர்களுக்கு சொல்கிறேன் , 'வலி' என்றால் வலிமை. மாவலி என்றால் பெரிய வலிமை. பெரிய வலிமை கொண்டவன் 'மாவலி' மன்னன் . அந்த மாவலி மன்னன் கேரளத்திலே ஒரு பகுதியை ஆண்டான். அவன் ஆண்டபொழுது மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். நல்லாட்சி நடத்தினான் . நல்லாட்சி நடத்தினால் சில பேருக்கு பொறுக்குமா ? இங்கே அம்மையார் யசோதா சொன்னாரே, அதைப் போல சில பேருக்குப் பொறுக்கவில்லை. ஆகவே எல்லோரும் சென்று மகாவிஷ்ணுவிடம் முறையிட்டார்கள். இவன் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்றானே, இப்படியேவிட்டால் இவனை ஜெயிக்கவே முடியாதே, நிரந்தரமாக மன்னனாக ஆகிவிடுவானே. என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். பொறுங்கள், நான் பார்க்கிறேன் என்று சொல்லி, மகாவிஷ்ணு அந்த மன்னனை அழித்தார். இதுதான் மாவலி கதை. அவன் அழியும் போது கேட்டுக் கொண்டான், மகாவிஷ்ணுவைப் பார்த்து, நான் உன்னுடைய தந்திரத்தால், சூழ்ச்சியால் அழிக்கப் படுகின்றேன் . இருந்தாலும் பரவாயில்லை, என்னுடைய மக்களை நல்லாட்சி நடத்தி வாழவைத்தேன். அப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களை ஆண்டுக்கு ஒருமுறை நான் காண்பதற்கு எனக்கு ஒரு வரம் தா என்று கேட்டான். அந்த வரத்தை மகாவிஷ்ணு அவனுக்கு வழங்கினான் . அதுதான் ஓணம் பண்டிகை. ஒவ்வொரு ஆண்டும் ஓணம் பண்டிகை அன்று அவன் வெளியிலே வந்து, அரண்மனையிலேயிருந்து வெளியே வருவான், மக்களைப் பார்ப்பான் , அப்படி மன்னன் வருகிறான் என்பதற்கு அடையாளமாக கேரள மாதர்கள் எல்லாம் தங்களுடைய வீட்டு வாசல்களில் கோலங்கள் இட்டு, வாழை, கமுகு போன்ற மரங்களையெல்லாம் நட்டு, பூ வைத்து, மஞ்சள் தெளித்து வரவேற்பார்கள். இது கேரளத்து வரலாறு. ஆக மகாபலி வேறு, மாவலி வேறு. ஆனால் மாவலி என்று அழைக்கப்படுகிறவன் திராவிட மன்னன் . தமிழ் மன்னன். நல்லாட்சி நடத்தியவன் மக்களை நல்ல முறையிலே வாழ வைத்தவன் . மக்களுக்கு நல்லாட்சி கொடுத்தவன். மக்களுக்கு அமைதியான வாழ்வைத் தந்தவன். அந்த அமைதியான வாழ்வைத் தந்து, மக்களை அவன் காப்பாற்றுகிறான் என்ற காரணத்தால் பொறாமை கொண்டவர்கள் அவனை வீழ்த்தினார்கள் என்பது தான் கதை. அந்த மாவலி கதையை எப்படியோ கொண்டு வந்து மகாபலி கதையோடு சேர்த்து இரண்டையும் ஒன்றாகப் போட்டு குழப்பி மாமல்லன் வேறு, மாவலி வேறு, மகாபலி சக்கரவர்த்தி வேறு என்று இல்லாமல் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டுக் குழப்பி இதுதான் மகாபலி கதை என்று ஒரு பெரிய தகராறை இன்றைக்கு புராணிகர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

## மாமல்லன்

நான் உங்களுக்கு சொல்லுகின்றேன் உண்மையான சரித்திரத்தை. மாமல்லன் நரசிம்மவர்மனின் பெயர் தான் – புனைப்பெயர் தான் மாமல்லன். மகேந்திரவர்மன் இந்த பல்லவ பூமியை ஆண்டவன். அவனுடைய மகன் நரசிம்மவர்மன். மகேந்திரவர்மன் இந்த பல்லவ பூமியை ஆண்ட போதுதான் – தம்பி ஸ்டாலின் இங்கே சொன்னாரே சாளுக்கியர்களுடைய படை எடுப்பைப் பற்றி. சாளுக்கிய ம்ன்னன் புலிகேசி காஞ்சிபுரத்தை

பிடிப்பதற்காக வந்து காஞ்சிபுரம் கோட்டையைச் சுற்றி வளைத்து, மகேந்திரவர்மன் தோல்வியுற்றான் என்கின்ற ஒரு பிரச்சாரத்தை செய்து காஞ்சிபுரத்தை வென்று விட்டோம் என்று சொன்னான் , அந்த புலிகேசி சாளுக்கிய மன்னன் . ஆனால், அதை பொய்யாக்கி மகேந்திரவர்மன் மீண்டும் புலிகேசி மீது படை எடுத்தான் . புலிகேசி தோற்று ஓடினான் . அப்படி தோற்று ஓடிய புலிகேசியை – மகேந்திரவர்மனுடைய மகன் நரசிம்மவர்மன் துரத்திச் சென்று அவனை தோற்கடித்து அவனுடைய தலைநகரம் வாதாபி வரை சென்று வாதாபியிலே அவனை வீழ்த்தி வெற்றிப் பேரிகை கொட்டினான். அப்படி வெற்றி பெற்று விட்டு வாதாபி நகரத்தை அவன் சுற்றி வந்த போது தான் அவனுடைய தளபதி பரஞ்ஜோதி என்பார் அங்கே ஒரு விசித்திரமான ஒரு சிலையை பார்த்தார். அந்த சிலைக்கு மனித முகம் இல்லை. யானை முகம். மனித கால், மனித கை, அந்த யாலன முகத்திலே துதிக்கை. இதைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது. இந்த சிலையை நம்முடைய தமிழ்நாட்டில் கொண்டுபோய் வைத்தால் எல்லோரும் அதிசயமாக பார்ப்பார்கள் என்று அந்தச் சிலையை கொண்டு வந்து தமிழ்நாட்டிலே காஞ்சிபுர அரண்மனையிலே வைத்தார். அதைப் பார்த்து பல்லவ மன்னர்களெல்லாம் பரவசப்பட்டார்கள். இது புதிய சிலையாக இருக்கிறதே என்று ஆச்சர்யப்பட்டார்கள். அதுதான், வாதாபி கணபதி! இன்றைக்கும் இசை நிகழ்ச்சிக்குப் போனால் கணபதி ஸ்தோத்திரத்தை பாடுகிறார்களே 'வாதாபி கணபதி' என்று. இந்த கணபதி நம்மூர்க்காரர் அல்ல. இவர் வாதாபியிலே பிறந்தவர். வாதாபியிலே சிலையாக இருந்தவர். அந்தச் சிலையை இங்கே கொண்டுவந்தார்கள். நம்மூர் கணபதி யார் என்றால் மாமல்லபுரத்திலே சிற்பியாக இருந்து திருவள்ளுவர் சிலை செய்தாரே அவர் நம் ஊர் 'கணபதி'. ஆனால் இந்த கணபதி வாதாபியில் இருந்து இங்கே வந்த கணபதி. எனவே நரசிம்மவர்மனுக்கு எப்படி மாமல்லன் பட்டம் வந்தது என்றால், அவன் மற்போரில் சிறந்தவன். அவனை மல்யுத்தத்தில் யாரும் தோற்கடிக்க முடியாது. பல யுத்தங்களில் ஈடுபட்டு நரசிம்மவர்மன் வெற்றிபெற்ற காரணத்தால், அவன் தந்தை அவையைக் கூட்டி அவையோர் சார்பில் – புலவர்கள் சார்பில் – அறிஞர்கள் சார்பில் – வீரர்கள் சார்பில் தன்னுடைய மகன் நரசிம்மவர்மனுக்கு சூட்டிய பட்டம் தான் மாமல்லன் ஆகும்.

அந்த மாமல்லன் என்ற வீரப் பெயர் தான் அவன் ஆண்ட இந்த பூமிக்கு மாமல்லபுரம் என்று வழங்குகிறதே அல்லாமல், மகாபலியும் இல்லை, புடலங்காயும் இல்லை, பெரியார் சொல்வதை போல எந்த வெங்காயமும் இல்லை என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் .

ஆக இந்த சரித்திரம் எப்படியெல்லாம் நார் நாராக கிழிக்கப்பட்டு நம்முடைய நாகரிகம், பண்பாடு, வரலாறு உண்மைநிலை இவைகளையெல்லாம் ஒழிக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தான் இதை சொல்லுகின்றேன். அப்படிப்பட்ட மாமல்லபுரத்தை நான் தினந்தோறும் காணுகிற, வாரம் ஒருமுறை காணுகின்ற என்னுடைய நண்பர்கள் எம்.ஜி.சக்கரபாணி, எம்.ஜி.ராமச்சந்திரன் இவர்களோடு வந்து காணுகின்ற அந்த வாய்ப்பை "நாம்"என்கின்ற படக்கதை எழுதும்போது பெற்றிருந்தேன். அதுமுதல் மாமல்லபுரம் என்றால் எனக்கு ஒரு இன்பக்கனவு. இந்த





மாமல்லபுரத்தை வரலாற்றுப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமாக ஆக்கவேண்டும் என்று அன்றைக்கே கண்ட கனவு. அதை நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு தான் ஆக்க வேண்டும் என்ற நிலைமையிருந்திருக்கிறது.

## சுற்றுலா மையம்

இப்படிதான் பூம்புகார் கடற்கரை ஓரத்தில் இருந்து எத்தனையோ மாலைநேரங்களில் உட்கார்ந்து கதைகளை கேட்டிருக்கின்றோம். அப்போது கண்ட கனவுதான், இப்போது காவிரிப்பூம்பட்டினத்தை பூம்புகாராக பார்க்கிறோம். அதைப் போலதான் இந்த மாமல்லபுரத்தை சுற்றுலா மையமாகக் காணவேண்டும் என்ற ஆசையை நிறைவேற்றிக்கொள்ளத்தான், நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். நான் இறுமாப்போடு சொல்வதாக யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. இன்றைக்கு சென்னையிலே இருந்து அழகான சாலை, வேகமாக வரக்கூடிய சாலை அமைந்திருக்கிறது என்றால் அந்த சாலையை அமைக்க காரணமாக இருந்தவன் நான். இரண்டு கட்டங்களாக முதலமைச்சராக இருந்த போது அந்த சாலையை இங்கே அமைத்தவனே இந்த கருணாநிதி தான் என்பதை மாமல்லபுரம் மக்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன் . அது மேலும் மேலும் பெருகி அந்த எண்ணம் வளர்ந்து அந்த கனவு நனவாகக் கூடிய காலம் இன்றைக்குக் கனிந்திருக்கின்றது. அந்த எண்ணத்தை நிறைவேற்றக்கூடிய வகையிலே இன்று மாலையிலே தம்பி ஸ்டாலின் மற்றும் நம்முடைய அரசு அதிகாரிகள் இவர்களெல்லாம் என்னை அழைத்துக்கொண்டு போய் எனக்குக் காட்டினார்களே, குன்னப்பட்டு என்ற அந்த ஊர். அந்த ஊரைப் பார்த்ததும் மெய் மறந்து போனேன் . குன்னப்பட்டு ஏதோ குக்கிராமமாக இருக்கும் என்று கருதித் தான் அங்கே சென்றேன் . இந்த வட்டாரத்து மக்களெல்லாம் ஏறத்தாழ 90 சதவிகிதம் பார்த்தால் குக்கிராம மக்களாகவே இருப்பார்கள். நம்முடைய மூர்த்தியைப் பார்த்தால் கிராமத்தான் என்று தான் சொல்கின்றோம். அவரை பட்டணவாசி என்று யாரும் சொல்ல முடியாது. அதைப்போல, மூர்த்தியைப் போல நம்முடைய ஆறுமுகத்தைப் போல, இந்த வட்டாரத்திலே வாழுகின்ற மக்கள் கிராமத்து மக்கள். இங்கு வாழ்ந்து பல ஆண்டு காலமாக இங்கே அவர்கள் வசித்து அவர்களுடைய பழக்க வழக்கம் நாகரிகங்கள் இவைகளெல்லாம் தோய்ந்திருக்கின்ற இந்தப் பகுதி. இன்று மாலையிலே தம்பி ஸ்டாலின் என்னை அழைத்துக் கொண்டு போய் காட்டியபொழுது நம்முடைய அதிகாரிகளெல்லாம் – உள்ளாட்சித் துறையைச் சார்ந்த அதிகாரிகளெல்லாம் அங்கே வந்து அவைகளையெல்லாம் எடுத்துக்காட்டியபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அதனுடைய பெருமைகளையெல்லாம் எடுத்துப் பேசிய போது இந்த குன்னப்பட்டு எந்தளவுக்கு முன்னேறியிருக்கின்றது என்பதை நான் பார்த்து வியந்து போனேன்.

## மாதிரி கிராமம் – குன்னப்பட்டு

ஒரு குளத்தையே உருவாக்கியிருக்கிறார்கள். அழகான குளம். அதைப்போல, இறந்து போனவர்களுடைய உடலை எரிப்பதற்கு ஒரு அருமையான இடத்தை உருவாக்கியிருக்கிறார்கள். அது பார்ப்பதற்கு வியப்பாக இருக்கிறது. ஒரு கிராமத்திலே இப்படிப்பட்ட சுடுகாடா ? மயானமா ? என்று மலைத்துப்போகின்ற அளவிற்கு உருவாக்கியிருக்கின்றார்கள். அது மாத்திரமல்ல, ஒரு நூல் நிலையம் இருக்கிறது. அது மாத்திரமல்ல, அங்கே மருத்துவமனை இருக்கிறது. அதுமாத்திரமல்ல, மக்கள் தொடர்பு கொள்ளக் கூடிய அளவிற்கு அங்கே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பணியாற்றக்கூடிய இடங்களெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு சாலைகள் உருவாகி இருக்கின்றன. தண்ணீர் தேங்கியிருக்கின்ற குளம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதைப்பார்த்த பொழுது குன்னப்பட்டு ஒரு மாதிரி கிராமமாக தமிழகத்திலே இனி உருவாகக் கூடிய கிராமங்களெல்லாம் குன்னப்பட்டு போல உருவாகுமேயானால் அது நமக்குப் பெருமகிழ்ச்சியைத் தரக்கூடிய ஒன்றாக இருக்கும் என்று நான் எண்ணிக்கொண்டேன் . அதைப்பார்த்ததும் எனக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. அது சுயநலமாகக் கூட இருக்கலாம். நான் பிறந்த ஊர் திருக்குவளை இப்படி ஆக வேண்டாமா ? குன்னப்பட்டுப்போல என்று எண்ணிக் கொண்டேன். அதை ஆக்க வேண்டும். ஆக்குவார்கள், என்னுடைய நண்பர்கள். நம்முடைய அமைச்சர்கள், நம்முடைய அதிகாரிகள் என்ற அந்த நம்பிக்கையோடுதான் நான் கார் ஏறினேன், இங்கு வந்தேன். இங்கும் இப்பொழுது எதிர்பார்க்கின்றேன். இப்படிப்பட்ட கிராமங்கள், கிராமங்கள் இல்லாவிட்டால் நம்முடைய அம்மையார் யசோதா சொல்லியதைப் போல, காந்தியடிகள் சொன்னார்கள். கிராமங்கள்தான் ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான முதுகெலும்புகள் என்று. அந்த முதுகெலும்பை வளர்க்க வேண்டும், அந்த கிராமங்கள் இன்னும் நாகரிகம் பெற வேண்டும், பட்டணங்களில் உள்ள வசதி வாய்ப்புகளை கிராமங்களுக்குத் தர வேண்டும். அப்பொழுது தான் நாம் இந்தியாவை கட்டிக்காக்க முடியும். இந்தியாவினுடைய ஒற்றுமையைக் கட்டிக்காக்க முடியும். இந்தியாவினுடைய பொருளாதாரத்தை சமத்துவமாக ஆக்க முடியும். இந்தியாவிலே ஏழ்மையைப் போக்க முடியும். இந்தியாவிலே எங்கு சென்றாலும் இந்தியன், இந்தியன் என்று சொல்லக்கூடிய அந்த உணர்வை வளர்க்க முடியும். அப்படிப்பட்ட இந்தியாவை காண கிராமங்கள் முன்னேற வேண்டும். அந்த முன்னேற்றத்திலேதான் நான் சொன்ன உண்மைகள் முகிழ்க்கும் என்று கூறி, அதற்கான முதல் முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்ற தமிழகத் தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சகத்துக்கு என்னுடைய பாராட்டுக்களை, நன்றிகளை தெரிவித்து விடைபெறுகிறேன். ✶



# என்னை தந்தை பெரியார் பழக்கியது பேரறிஞர் அண்ணா பயிற்றுவித்தது உங்களுக்கு உழைப்பதற்காகத்தான்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை**

கடலூரில் நடைபெறுவது ஒரு அரசாங்க விழாவா அல்லது ஒரு பெரிய மாநாடா மாநாடாக இருந்தாலும்; ஒரு வேளை மாவட்ட மாநாடா ? மாநில மாநாடா என்று ஐயுறத்தக்க வகையில் பல்லாயிரக்கணக்கிலே இந்த பந்தலிலே குழுமி இருக்கிறீர்கள் என்பது மாத்திரமல்லாமல்; பந்தலிலே இடமில்லாமல் பந்தலுக்கு வெளியேயும் நீங்கள் காத்திருந்து கருத்துக்களை கேட்க உங்களுடைய ஆவலை காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். எனக்கு முன்னால் இங்கு பேசிய நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்களும், அதிகாரிகளும் நடைபெறுகின்ற இந்த ஆட்சியின் மாட்சியை எடுத்து இயம்பி இருக்கிறார்கள். அப்படிச் சொல்லாவிட்டால் நாளைக்கு யாரோ ஒருவர் நேற்றைய தினம் கருணாநிதியும் மற்றவர்களும் வந்து ஒரு மாபெரும் பந்தலிலே மகத்தான விழாவை நடத்தி மக்களுக்கு இவ்வளவு சாதனைகளை புரிந்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லிவிட்டு போனார்களே – அதெல்லாம் வெறும் வாய்வீச்சு என்று உங்களிடத்திலே சொல்லமுடியும். ஆனால் இது வாய்வீச்சு அல்ல – செயல்தான் என்பதை உங்களுடைய வீட்டிலே இருக்கின்ற – தொலைக்காட்சிப் பெட்டி – உங்கள் வீட்டிற்கு வருகின்ற இலவச எரிவாயு அடுப்பு – நீங்கள் தீர்த்த ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன் இவைகளெல்லாம் எடுத்துச் சொல்ல காத்திருக்கின்றன.

இந்தக் காரியங்களை ஏறத்தாழ ஓராண்டு காலத்தில் இந்த அரசு உங்கள் அத்தனை பேருடைய உதவியோடும், ஆதரவோடும் இந்த மேடையிலே





வீற்றிருக்கும் தோழமைக் கட்சிகளுடைய நட்புணர்வோடும் செய்து முடித்திருக்கிறது என்பதை நான் நன்றி உணர்வோடு இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கு பேசிய நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள், நண்பர்கள், என்னுடைய தம்பிமார்கள், அவர்களுடைய தொகுதிகளுக்கு இந்த அரசின் சார்பிலே செய்யப்பட்ட காரியங்களை – அரிய சாதனைகளை எடுத்துச் சொல்லிவிட்டு, அதற்கு நன்றி கூறியதோடு நிறுத்தாமல், மேலும் காரியங்களைச் செய்துகொடு என்று சில கோரிக்கைகளை இங்கே வைத்துவிட்டுத்தான் அமர்ந்திருக்கிறார்கள். "நான் எழும் போது எல்லாம் சட்டமன்றத்தில் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார் முதலமைச்சர் கலைஞர்" என்று இங்கே கூறிய வேல்முருகன் கூட இங்கேயும் கோரிக்கை வைக்காவிட்டால் அவருடைய பேச்சு நிறைவுபெறாது என்று எண்ணி, இங்கேயும் ஒரு கோரிக்கையை வைத்தார். நல்லவேளை – அவர் கோரிக்கை வைத்த போது அதுபற்றி கலந்து பேசி அறிவிக்க என் பக்கத்திலே உயர்கல்வித் துறை அமைச்சர் தம்பி பொன்முடி இருந்த காரணத்தால் நான் அந்தக் கோரிக்கை என்னாயிற்று என்று அவர் எதிர்பார்ப்பதற்கு முன்பு – நீங்களும் அதைப் பற்றி சிந்திப்பதற்கு முன்பு அதைப் பற்றி சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

**புதிய பொறியியல் கல்லூரிகள்**

இன்று காலையிலே தான் நான் சென்னையில் இருந்து புறப்பட்டு இங்கே வருகின்ற வழியில் வேறு எதுவும் நாங்கள் பேசவில்லை. இரண்டு அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவது என்றால் அவர்கள் சேமலாபங்களை பற்றிப் பேசி உங்களுடைய கடை எப்படி நடக்கிறது, வியாபாரம் எப்படி நடக்கின்றது என்று பேசுவதில்லை. அது எங்களுக்கு அவசியம் அல்ல; இன்னும் என்ன செய்யலாம் இந்த சமுதாயத்திற்கு, இந்த மாநிலத்திற்கு என்று அந்தக் கேள்விக்கு விடையளிக்கத்தான் எங்களுடைய பேச்சு அமையும். அப்படி அமைந்த பேச்சில் பொன்முடி காலையிலே வரும் பொழுது என்னிடம் சொன்னார்.

நாம் ஏற்கெனவே தமிழகத்திலே கலைக் கல்லூரிகள் சிலவற்றை புதிதாக அமைப்பது என்று முடிவு செய்திருக்கின்றோமே; அதைப்போல தமிழ்நாட்டில் வருகிற ஆண்டு – 25 பொறியியல் கல்லூரிகளை அமைத்தால் என்ன அண்ணா என்று என்னிடத்திலே கேட்டார். நல்ல யோசனை; நிச்சயமாக அதைச் செய்யலாம்–எந்தெந்தப் பகுதிகளிலே எந்தெந்த ஊர்களிலே அந்தப் பொறியியல் கல்லூரிகளை அமைக்கலாம் என்பதைப் பற்றி யோசிப்போம் என்று சொன்னேன்.

பிறகு என் பேச்சு நின்றது–மேடைக்கு வந்தோம், வேல்முருகனுடைய பேச்சைக் கேட்டோம், அப்போது

நான் சொன்னேன் பொன்முடி இடத்திலே; இதோ ஒரு கோரிக்கை வந்திருக்கிறது, இந்த கோரிக்கையைப் பயன்படுத்திக் கொண்டு பொறியியல் கல்லூரி ஒன்றை பண்ருட்டியிலே அமைத்து விடலாமே என்று பொன்முடியிடத்திலே கேட்டேன். அவர் நல்ல யோசனை, பண்ருட்டி மாத்திரம் அல்ல, மூன்று பொறியியல் கல்லூரிகளை இந்த வட்டாரத்தில் திண்டிவனத்திலே ஒன்று, விழுப்புரத்திலே ஒன்று, பண்ருட்டியில் ஒன்று என்று மூன்று ஊர்களை ரொம்ப கஷ்டப்பட்டு சொன்னார். அதிலே விழுப்புரம் பெயரை சொல்லும் போதுதான் கொஞ்சம் இழுத்துச் சொன்னார். ஏனென்றால் அந்த பெயரைச் சொல்லாவிட்டால் இவர் பெயர் நிலைக்குமோ, நிலைக்காதோ என்ற சந்தேகம் அவருக்கு; அந்த இரண்டு பெயரைச் சொல்லி விழுப்புரத்தை நிலைக்க வைத்துவிட்டார்.

ஆக இந்த வட்டாரத்தில் உள்ள மக்களுக்கு விழுப்புரம். பண்ருட்டி, திண்டிவனம் ஆகிய இந்த மூன்று இடங்களில் அடுத்த ஆண்டில் நிச்சயமாக பொறியியல் கல்லூரிகள் அமைக்கப்படும் என்பதை இங்கே எதிர்பாராத நிலையில் அல்ல, இங்கே கோரிக்கை வைத்த நம்முடைய தம்பி வேல்முருகன் அவர்களுக்கு நான் உறுதி அளிக்க விரும்புகிறேன்.

**உங்களுடைய வேலைகளைச் செய்கின்றேன்**

தமிழ்நாட்டில் கடந்த ஓராண்டு காலத்திற்கு மேலாக நீங்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல தி.மு.கழக ஆட்சி தொடர்ந்து மீண்டும் உங்களால் உருவாக்கப்பட்டு, அப்படி உருவான காரணத்தால் உங்களுடைய அன்பான ஆதரவோடு தோழமைக் கட்சியினுடைய துணையோடு உங்களை வழிநடத்திச் செல்கின்ற அரசுக்குத் தலைவனாக நான் ஆக்கப் பட்டிருக்கிறேன். அப்படி அரசுக்குத் தலைவனாக இருக்கின்ற நான்–அந்த அரசின் சார்பில் உங்களுக்காகச் செய்கின்ற பணிகளெல்லாம் உங்களுக்கு எடுத்துப்போடுகின்ற நன்கொடைகள் அல்ல. வழங்குகின்ற பரிசுகள் அல்ல. உங்களால் நியமிக்கப்பட்ட நான் உங்களுடைய வேலைகளை ஒழுங்காகச் செய்கின்றேன். அப்படி செய்கின்ற போதுதான் நிறைவேறிய கோரிக்கைகள் இவை என்பதை நான் உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

இந்த ஓராண்டு காலத்தில் தி.மு.கழக ஆட்சியில் என்னென்ன சாதனைகள் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்பதை இங்கே நம்முடைய இந்த விழாவினுடைய தலைவரும், எங்கள் கட்சியினுடைய இந்த மாவட்டத்தின் செயலாளரும், அமைச்சருமான தம்பி பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார், அவரே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறார். இந்த ஓராண்டு கால அரசாங்கத்தினுடைய சாதனைகளை எடுத்துச் சொல்ல ஒரு விழாவினை நடத்துகிறோம் என்றால் அந்த விழா நடத்துவதற்கு நான் கடந்த வாரம் தான் தேதி கொடுத்தேன். இந்த ஒரு வார காலத்தில் இவ்வளவு பெரிய மாநாட்டை பன்னீர்செல்வம் இங்கே கூட்டியிருக்கிறார் என்றால், அவர் தனிப்பட்ட முறையிலே கூட்டியது அல்ல என்றாலும் அரசின் துணையோடு, அரசின் உதவியோடு, அருமைத் தோழர்களுடைய உதவியோடு, இந்த வட்டாரத்தில் உள்ள நண்பர்கள் உதவியோடு, அவர் இதைச் செய்திருக்கிறார் என்றாலும் கூட அதிலே அடங்கி இருக்கின்ற, உள்ளீடாக இருக்கின்ற உணர்வை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். ஓராண்டு காலத்தில் ஒரு ஆட்சியில் அளப்பரிய சாதனைகள்! ஒன்றா இரண்டா? வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் அரிசி விலை இன்றைக்கு என்ன என்ற அந்த கேள்விக்கு கிடைக்கின்ற பதிலே போதும்–கிலோ அரிசி 2 ரூபாய்க்கு தருகின்ற ஒரு ஆட்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் தி.மு.கழக ஆட்சியைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது நீங்கள் காண முடியுமா?–முடியாது. ஆனால் என்ன பேசப்படுகிறது சிலரால்? ஓராண்டு ஆகின்றது இந்த ஆட்சி வந்து, எங்களுக்கு என்ன செய்து விட்டது இந்த ஆட்சி? என்று இன்றைக்குப் பேசப்படுகிறது.



அப்படிப் பேசுகின்ற நேரத்தில் நான் சிரிக்கத்தான் செய்கிறேன். ஏளனமாக இல்லை, வருத்தமாக–என்ன செய்வது நான் எவ்வளவுதான் கஷ்டப் பட்டாலும் இந்த மக்களுக்காக பணியாற்றினாலும் பாடுபட்டாலும், நம்முடைய தொண்டுக்குக் கிடைக்கின்ற பரிசு இதுதானா? இது என்ன பெரிய காரியங்கள்? என்று பேசுகிறார்களே, அதுதான் நமக்குக் கிடைத்த பரிசு என்று நான் அதற்காக வேதனைப்படுவதுமில்லை, வருத்தப்படுவதுமில்லை –யாரிடமும் கோபப் படுவதுமில்லை– இதையாவது சொன்னார்களே என்று நான் நிம்மதி அடைகிறேன்; அமைதி அடைகிறேன். இன்னும் சொல்லப்போனால் இதைவிட இன்னும் அதிகமாக மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்றால் அது மக்களுடைய தேவையைத்தான், மக்களுடைய நிலைமையைத் தான் உணர்த்துகிறதே அல்லாமல் வேறல்ல.

**நீயும் மனிதன்தான்; மண்ணன்று**

இந்த நாட்டு மக்கள் ஆண்டாண்டு காலம் அடிமைப்பட்டிருந்தவர்கள்; ஒரு காலத்திலே மன்னர்களுக்கு, மகாராஜாக்களுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தார்கள். முடியாட்சிலே–அதற்குப் பிறகு வந்த ஆட்சிகளில் ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அதற்குப் பிறகு சாம்ராஜ்யங்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அதற்குப் பிறகு அயல்நாட்டுக்காரர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தார்கள். அண்ணல் காந்தியடிகளுடைய அகிம்சா போராட்டத்திற்குப்பிறகு இந்தியாவிலே பல வீரர்கள் மாண்டு மடிந்து ரத்த வெள்ளத்திலே உருவாயிற்றே சுதந்திரச் செடி–அந்த சுதந்திரச் செடி பூத்துக் காய்த்து அதனுடைய பயனை அனுபவிக்கின்றவர்கள் ஏழை, எளியவர்கள் அல்ல, அடிமைப்பட்ட மக்கள் அல்ல. அன்றைக்கு ஓரத்திலே ஒதுக்கி விடப்பட்ட மக்கள் அல்ல, தாழ்த்தப்பட்ட மக்கள் அல்ல, தொடாதே–தீட்டு தூர விலகிப் போ என்று துரத்தப்பட்ட அந்த மக்கள் அல்ல. அவர்கள் நெருங்கி வந்துவிடவில்லை.

அவர்களை நெருங்கி வரச் செய்ய–அவர்களை உயர்த்தி உட்கார வைக்க–நீயும் "மனிதன்தான்; மண்ணன்று–புழு அன்று–பூச்சி அன்று–நீயும் உயிரினம்தான்" என்று உணர்வூட்டி அவர்களை உட்கார வைக்கவேண்டிய இடத்திலே உட்கார வைத்து அதற்காக என்ன விலை கொடுக்க வேண்டுமோ, எத்தனை உயிரைக் கொடுக்க வேண்டுமோ அத்தனை உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கின்ற ஒரு இயக்கம்–அந்த இயக்கத்தினுடைய தலைவன்–தந்தை பெரியாரால் வழி நடத்தப்பட்ட, அறிஞர் அண்ணா அவர்களால் வழிநடத்தப்படுகின்ற நாங்கள், இன்றைக்குத் தருகின்ற உழைப்புதான் அதற்குத் தருகின்ற விலைதான்–நாங்கள் தருகின்ற இந்த இழிவுப் பிரச்சாரத்தைத் தாங்கிக் கொள்கின்ற மனப் பக்குவம்தான்; இன்றைய தினம் இவ்வளவு செய்கிறோம்–இதை மக்கள் சிந்திக்கிறார்களா இல்லையா என்று கூட நாங்கள் கவலைப்படவில்லை. இதற்காக மக்கள் நன்றி காட்டப்போகிறார்களா இல்லையா? அதைப்பற்றியும் நாங்கள் கவலைப்படப் போவதில்லை.

**நன்றியை எதிர்பார்த்து எந்தக் காரியங்களையும் செய்யவில்லை**

ஒருமுறை நான் சொன்னேன். தஞ்சை மாவட்டத்தில் ஒரு விழாவிலே பேசும்போது சொன்னேன். எனக்கு முன்னால் பேசிய தம்பி எல்.கணேசன் சொன்னார்; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தருகின்றீர்கள்; நீங்கள் கட்டித் தருகின்ற வீடுகளைப் பார்த்து அகில இந்திய ரீதியிலே இந்திரா காந்தி பெயரால் வீடுகளை கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால், நீங்கள் கட்டுகின்ற வீடுகளில், தமிழ்நாட்டில் பார்க்கிறோம், அந்த வீட்டுச் சுவர்களில் கருணாநிதி ஒழிக என்று

அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்களாக ஆனவர்களே எழுதி வைத்திருக்கிறார்கள் பார்த்தீர்களா; இவர்களுக்குப் போய் ஏன் செய்கின்றீர்கள் என்று எல்.கணேசன் பேசினார். அவர் பேசிய பிறகு நான் பேச எழுந்தேன். அப்போது சொன்னேன் "தம்பி கணேசன் இப்படி வருத்தத்தோடு சொன்னார்–நான் கட்டித் தருகின்ற இலவச வீடுகளில் "கருணாநிதி ஒழிக" என்று எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னார், நான் அதற்காக கவலைப் படவில்லை; அப்படி எழுதும் போதும் என் பெயரை மறந்துவிடாமல் எழுதியிருக்கிறார்களே என்பதற்காக நான் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன் என்று சொன்னேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், இதையும் சொல்லிவிட்டு இன்னும் ஒன்றையும் சொன்னேன். இன்றைக்கு நான் இந்தக் காரியங்களைச் செய்யும்போது நன்மைகளைச் செய்யும்போது அதைப்பற்றி யாரும் கவலைப்படாமல் இருந்தால் அதைப்பற்றி யாரும் சிந்திக்காமல் இருந்தால் இது எப்படி வந்தது; ஏன் வந்தது; யாருடைய உழைப்பால் வந்தது, யார் நடத்திய போராட்டத்தால் வந்தது என்பதைப்பற்றியெல்லாம் அடிபட்டுக் கிடந்த மக்கள் சிந்திக்காமல் இருந்தால்; நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்–ஒரு வகையில் விவசாயி உழைக்கின்ற நேரத்தில் அவனுக்குத் தேவையான நேரத்தில் மழை வந்தால், அந்த மழைக்கு அவன் செலுத்துகின்ற நன்றியே அலாதி. ஆனால், அவன் விரும்புகிற நேரத்திலே மழை வராமல் எப்போதோ வந்தால் அதைப்பற்றி அவன் கவலைப்படமாட்டான்.

அதைப்போலத்தான் இன்றைக்கு இந்த மக்கள் இந்த வீடுகளையெல்லாம் கட்டித் தருகின்ற நேரத்தில், இந்த அரசின் சார்பிலே தி.மு.க ஆட்சியின் சார்பிலே கட்டித்தருகின்ற நேரத்தில், நீங்கள் என்னை வாழ்த்தினாலும், வாழ்த்தா விட்டாலும்; நீங்கள் வாழ்த்துகின்ற நேரத்தில் அந்த வாழ்த்தைக்கேட்க யார் இருப்பார்கள் என்று எண்ணிப் பாருங்கள்; மழை உரிய நேரத்தில் வரும்போது விவசாயி மகிழ்ச்சி அடைவான். வானத்தை அண்ணாந்து பார்த்து வானத்தை வாழ்த்துவான். அந்த மேகங்கள் மழையைத் தந்ததற்கு நன்றி கூற நினைப்பான். ஆனால் அவன் நன்றி கூறுகின்ற நேரத்தில் அந்த மேகங்கள் இருக்காது. அவைகளெல்லாம் மழையாகப் பொழிந்து கலைந்துபோய் இருக்கும். அதைப்போல எனக்கு தமிழ்நாட்டு மக்கள், ஏழை எளிய மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள், அடிமைப்பட்டுக் கிடக்கின்ற மக்கள் நன்றி கூற வரும்போது அந்த மேகங்கள் இல்லாததைப் போல, நான் ஒரு வேளை இல்லாமல் போயிருக்கலாம்–ஆனால் நான் அதற்காகக் கவலைப்படவில்லை. நன்றி–கூறுகின்ற இயல்பு அவர்களுக்கு இருக்கின்றது. மனிதனுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள தமிழனுக்கு இருக்கிறது என்ற அந்த உணர்வு வெளிப்பட்டால் போதும் என்றுதான் அன்றைக்கு சொன்னேன். ஆகவே நன்றியை எதிர்பார்த்து எந்த காரியங்களையும் செய்யவில்லை. நம்முடைய கடமையை நான் செய்கிறேன்.

இந்த நாளில் இந்த விழாவில் தலைமைச் செயலாளர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல **330–400** கோடி ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்றால் இவைகளையெல்லாம் இந்த அரசினுடைய தலைமைப் பொறுப்பிலே இருக்கின்ற நான் மக்களிடத்தில் நன்றியை எதிர்பார்த்து வழங்குகின்றேன் என்று பொருள் அல்ல.

நீங்கள் என்னை இங்கே உட்கார வைத்தீர்கள்; மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை; உட்காரவைத்த மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நான் செய்கின்றேன். அந்தக் கடமையைச் செய்யாவிட்டால் நீங்கள் என்னை தண்டிக்கக் கடமைப்பட்டவர்கள்; அதை நான் மறந்து விடவில்லை. அந்த உணர்வோடுதான் நான் உங்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறேன். இன்னும் உழைக்க வேண்டும், பாடுபட வேண்டும், பணியாற்ற வேண்டும் என்ற ஆசை இருக்கிறது.

### 20 சதவிகித இடஒதுக்கீடு

இங்கே பேசிய சில பேர்கள் சொன்னார்கள். "நிரந்தர முதல்வர்" என்று வாழ்த்தினர். எதுவும் நிரந்தரம் அல்ல. யாரும் நிரந்தரம் அல்ல–நிரந்தரம் அல்ல என்பது தான் நிரந்தரம். இதைத்தான் காரல்மார்க்ஸ் அழகாகச் சொன்னார் "மாற்றம் என்பதுதான் மாற்றம் இல்லாதது" என்று. அதைப்போல யாரும் நிரந்தரம் அல்ல. ஒருவர் போகும் போது வைத்துவிட்டுப் போகின்ற புகழ் இருக்கிறதே; நன்றி இருக்கிறதே; வைத்து விட்டுப் போகின்ற சாதனை இருக்கிறதே; மக்களை வாழ வைப்பதற்காக பட்ட பாடு இருக்கிறதே; அதை நீங்கள் பசுமையாக நினைத்துக் கொண்டிருப் பீர்களானால்; அதை விட வேறு கடவுள் இல்லை.



என்னை தந்தை பெரியார் பழக்கியது; பேரறிஞர் அண்ணா பயிற்றுவித்தது, உங்களுக்காக–உழைப்பதற்காகத் தான்; உங்களிடத்திலே லாபம் பெறுவதற்காக அல்ல; உங்களைப் பயன்படுத்தி பெயர் பெறுவதற்காக அல்ல; நான் பிறக்கும்போதே மாபெரும் கலைஞன், மக்கள் புகழ் பெற்ற கலைஞன், மக்கள் புகழ்கின்ற ஒருவன் என்று அடையாளம் இட்டுக்கொண்டு பிறந்தவன் அல்ல. நான் பிறக்கும்போது முதலமைச்சர் என்று முகத்தில் விலாசம் போட்டுக் கொண்டு பிறந்தவன் அல்ல. நான் பிறக்கும்போது சட்டமன்ற உறுப்பினர் என்று சொல்லிக்கொண்டு பிறந்தவன் அல்ல. நான் பிறக்கும்போது சாதாரண குடும்பத்தில் தஞ்சை மாவட்டத்தில் எங்கேயோ ஒரு குக்கிராமத்திலே; திருக்குவளை என்ற கிராமத்திலே பிறந்த ஒரு சாதாரண சாமான்ய குடும்பத்திலே பிறந்தவன் நான். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தவன், இன்னும் சொல்லப்போனால் மிகவும் பிற்படுத்தப்பட்ட, மிக மிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்தவன்–அப்படிப் பிறந்த காரணத்தினாலேதான் இந்த வட்டாரத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை கைதூக்கி விட வேண்டும் என்று போராடியபோது பல முதலமைச்சர்கள் செய்யாத காரியத்தை; அந்தக் கோரிக்கையை மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிதம் என்கின்ற அந்த இடஒதுக்கீட்டை நிலைநாட்டிக் கொடுத்துவிட்டு இன்றளவும் அதற்காகப் போராடுகின்ற வல்லமையை நானும் பெற்றுநீங்களும் பெறக்கூடிய அந்த நிலைமை உருவாக்கியவன்தான் நான். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திலே பிறந்த காரணத்தால்தான் நான் என்னை உணர்கின்றேன், என்னுடைய சமுதாயத்தை உணர்கிறேன்; என்னுடைய சமுதாயத்தை உணர்கின்ற காரணத்தால் எனக்கு அடுத்து இருக்கின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயங்கள், தீண்டத்தகாதவர்கள் என்றெல்லாம் ஒதுக்கப்பட்ட சமுதாயம், தலித் என்று சொல்லப்படுகின்ற சமுதாயம்; இந்தச் சமுதாயத்திலே இருக்கின்றவர்கள் எல்லாம் இன்றைய தினம் இங்கே வந்து பேசினார்கள் என்றால் செல்வப் பெருந்தகையும், இரவிக்குமாரும், இங்கே வந்து பேசினார்கள் என்றால் அவர்களுடைய பேச்சினைக் கேட்கும்போது நான் எண்ணிக் கொண்டேன். இவர்கள் இன்றைக்கு நம்மோடு வந்து அமர்ந்திருக்கிறார்கள்; அதிலே எனக்குப் பெருமை. அவர்களுக்குப் பெருமை அல்ல; எனக்குப் பெருமை. இங்கே வந்து பேசினார்கள்; கரகோஷம் செய்து வரவேற்றீர்கள்–அதில் பெருமை அவர்களுக்கு அல்ல; நமக்குப் பெருமை. அவர்கள் நம்மோடு இருப்பது நமக்குப் பெருமை. நாமெல்லாம் ஒன்று என்கின்ற ஒரு சமுதாய உணர்வை, சமத்துவ உணர்வை தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், அறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று, இவர்கள் வழிநின்று இன்றைக்குக் கட்டிக்காத்தோம். அத்தகைய மக்கள் சமுதாயத்தை இன்றைக்கு உருவாக்கி இருக்கின்றோம்; அவர்களுடைய கௌரவம் மாத்திரம்; அவர்களுடைய உழைப்பு மாத்திரம்; அவர்களுடைய சுயமரியாதை மாத்திரம் முக்கியமல்ல; அவர்களுக்கு வயிறு என்று ஒன்று உள்ளது; வாழ்வு என்று ஒன்று உள்ளது; அவர்களின் வயிறும் குளிரவேண்டும் என்பதை நம்முடைய கடமைகளில் ஒன்றாகக் கருதவேண்டும்.

அதற்குத்தான் இந்த ஆட்சி காப்பாற்றப்பட வேண்டும். மரியாதையைக் காப்பாற்ற–சுயமரியாதையைக் காப்பாற்ற–அவர்களின் வாழ்வைக் காப்பாற்ற–அவர்களை சமுதாயத் துறையிலும், ஆட்சித்துறையிலும், சாதாரண சாமானிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுடைய இந்த ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆட்சியைக் காப்பாற்றுவதும் காப்பாற்றாமல் விடுவதும்; பாதுகாப்பதும் பாதுகாக்காமல் பாராமுகமாக இருப்பதும் உங்கள் இஷ்டம் என்று கூறி விடைபெறுகிறேன்.

**கடலூரில் 30.8.2007 அன்று நடைபெற்ற இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு இணைப்புடன் அடுப்புகள் வழங்கிய விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.**



# தமிழ் வாழும் மற்றவர்களையும் வாழ வைக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் உரை

**செ**ன்னை கலைவாணர் அரங்கில் 1.9.2007 அன்று தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் நடைபெற்ற விழாவில் கலைத்துறையில் செயற்கரிய செயல்புரிந்த கலைஞர்களுக்கு 2006 ஆம் ஆண்டிற்கான கலைமாமணி விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் வழங்கினார். இவ் விழாவில், பொற்பதக்கங்களை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இன்று ஏறத்தாழ கலைமாமணி விருதுகள் 70 பேருக்கு வழங்கப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். இத்தனை பேருக்கு இந்த அவையில் நானும் ஆளுநர் அவர்களும் வழங்கியுள்ள இந்த விருதும், பரிசளிப்பும், பாராட்டுப் பத்திரமும் அவர்கள் இதுவரையிலே ஆற்றியிருக்கின்ற தொண்டுக்காக, அவர்கள் தமிழகத்திலே தங்களுடைய திறமையின் மூலமாக, எடுத்துக்காட்டிய கலைக்காக, இசைக்காக, காவியத்திற்காக என்று எடுத்துக் கொண்டாலுங்கூட, இவர்களைப் பார்த்து இந்த விழாவிலே அவர்கள் விருது பெறுவதைப் பார்த்து அடுத்த அடுத்த விழாக்களில் நாமும் இத்தகைய சிறப்பைப் பெற வேண்டுமென்கிற எண்ணம், வருங்காலக் கலைஞர்களுக்கெல்லாம் ஏற்பட வேண்டுமென்பதற்காகத் தான், இந்த விழா ஆண்டுதோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

### இயல், இசை, கூத்து

இந்த ஆண்டு "சின்னத்திரை" கலைஞர்களும் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீண்ட காலமாக ஒரு ஆதங்கம் இருந்தது. என்னிடத்திலே அந்த





ஆதங்கத்தை அவர்கள் வெளிப்படுத்திய போது, அதை நிறைவு செய்கின்ற இடத்தில் அப்போது நானில்லை. நான் வருவேன் என்று காத்திருந்தார்கள், வந்தவுடனே அதனை வெளியிட்டார்கள், நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள், மன்னிக்க வேண்டும், கேட்டுக் கொண்டார்கள் என்பதை விட அன்புக் கட்டளையிட்டார்கள். அதனை இன்றைக்கு நிறைவேற்றிய பெரும் மகிழ்ச்சியும், பூரிப்பும் எனக்கு இருக்கின்றது. இந்த மன்றத்திற்கு எனக்கு முன்னால் பேசிய நம்முடைய ராமநாராயணன் குறிப்பிட்டதைப் போல "சங்கீத நாடக சபா" என்று தான் தொடக்கத்திலே பெயர் இருந்தது. நாம் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தமிழர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆனால் தமிழ்நாட்டில் இயல், இசை, கூத்து என்று நம்முடைய தனித் தமிழில் அந்தச் சொற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஏதோ அந்தச் சொற்களில் தெய்வீகம் இல்லை, அதிலே கடவுள் கருணை இல்லை, அதிலே பக்தி ரசம் இல்லை, அது தமிழாக இருக்கிற காரணத்தால் வடமொழியாக இல்லாத காரணத்தால், அதிலே இருக்க வேண்டிய அருள் இல்லை என்ற ஒரு அபவாதம் நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு, அதற்கேற்ப சங்கீத நாடக சபா என்றே இதனை அழைத்து வந்தோம்.

### தமிழ்நாடு பெயர் சூட்டல்

தி.மு.கழக ஆட்சி தொடங்கிய பிறகு அறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையிலே நீண்டகாலமாக நம்முடைய கோரிக்கையாக இருந்த "தமிழ்நாடு" என்கிற பெயரை அண்ணா அவர்கள் சட்டப் பேரவையிலேயே எடுத்துச் சொல்லி, அதற்காக காங்கிரஸ் க்ட்சியின் தியாகி, சங்கரலிங்க நாடார் அறுபது நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்து, இந்த மாநிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் வேண்டும் என்று கேட்ட அந்தக் கோரிக்கையை - அண்ணா அவர்கள் நிறைவேற்றினார்கள். நிறைவேற்றியது மாத்திரமல்ல, நான் உங்களுக்குச் சொல்கிறேன், காங்கிரசார், கம்யூனிஸ்ட்டுகள் என்று எல்லா கட்சிகளும் - கட்சி வித்தியாசம் இல்லாமல், சட்டப்பேரவையிலே தமிழர்கள் என்கிற ஒரே நிலையிலே அமர்ந்திருந்தபோது, அண்ணா அவர்கள் எழுந்து நின்று, நான் "தமிழ்நாடு" என்று பெயர் வைத்திருக்கிறேன், நான் செய்த சாதனைகளில் எதை மாற்றினாலும், இந்தச் சாதனையை யாராலும் மாற்ற முடியாது, அவர்களை காலம் தண்டிக்கும், தமிழ்நாட்டு மக்கள் அவர்களை விடமாட்டார்கள் 'என்று அன்றைக்குச் சொல்லி, அண்ணா அவர்கள் தான் முதலமைச்சர் என்பதை மறந்து, அந்த அவையிலேயே சொன்னார்கள், நான் மூன்று முறை "தமிழ்நாடு, தமிழ்நாடு, தமிழ்நாடு" என்று சொல்வேன். ஒவ்வொரு முறையும் நீங்கள் "வாழ்க, வாழ்க" என்று சொல்ல வேண்டுமென்று கூறிவிட்டு, அண்ணா அவர்கள்



சட்டப்பேரவையிலேயே "தமிழ்நாடு" என்று மூன்று முறை ஒலிக்க, எல்லா உறுப்பினர்களும், கட்சி சார்பற்ற முறையில் "வாழ்க வாழ்க" என்று ஒலித்த அந்த ஒலி முழக்கம் இன்றைக்கும் என்னுடைய காதுகளிலே கேட்டுக் கொண்டிருக்கிறது. என்றும் மறக்க முடியாத முரசமாக கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி பெயர் சூட்டப்பட்ட இந்த மாநிலம் இங்கே தமிழை தகுந்த முறையில் உயர்ந்த முறையில், அதை நாம் செங்கோலோச்சுகின்ற முறையிலே நடத்திட வேண்டாமா என்ற கேள்விக்கு பதில் கிடைக்க ஏறத்தாழ நூறாண்டு காலமாயிற்று. தமிழுக்கு "செம்மொழி" என்ற தகுதி உண்டே, அந்தத் தகுதி எங்கே போயிற்று என்று முதன் முதலில் கேட்டவர் பரிதிமாற் கலைஞர். பரிதிமாற் கலைஞர் என்றால் அவர் வேறு ஏதோ ஒரு இயக்கத்தைச் சார்ந்தவர் என்று யாரும் கருதக் கூடாது, அவருடைய இயற்பெயர் சூரிய நாராயண சாஸ்திரி. சாஸ்திரியாக இருந்தாலும், அய்யர், அய்யங்காராக இருந்தாலும் அந்தக் காலத்தில் தமிழின் மீது அவர் கொண்டிருந்த பற்றுக்கு ஈடில்லை, இணையில்லை என்ற அந்த நிலைமையிலேதான் சூரிய நாராயண சாஸ்திரி தன்னுடைய பெயரை பரிதிமாற் கலைஞர் என்று தமிழ்படுத்திக் கொண்டார்.



பரிதி என்பது சூரியனைக் குறிக்கும், மால் என்பது நாராயணனைக் குறிக்கும், நாராயணன் என்றால் மகாவிஷ்ணு, சாஸ்திரி என்பது கலைஞனைக் குறிக்கும். நான் கூட இப்போது ஒரு சாஸ்திரி தான். அந்த பரிதிமாற் கலைஞர் தான் நூறாண்டுகளுக்கு முன்பு போர்க்கொடி உயர்த்தினார். நம்முடைய தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து வேண்டும், உலகத்திலே ஹிப்ரு போன்ற ஐந்தாறு மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து இருக்கிறது, ஆனால் நம்முடைய தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து இல்லையே என்று வருத்தப்பட்டார். அந்த வருத்தம் பல ஆண்டு காலமாகத் தேக்கத்திலே இருந்து இப்போதுதான் அண்மையில் நம்முடைய ஆட்சி தோழமை கட்சி நண்பர்களுடைய ஒத்துழைப்போடு உதயமான பிறகு, நான் டெல்லிப் பட்டணம் சென்று அங்கே அம்மையார் சோனியா காந்தி அவர்களை சந்தித்து, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களைச் சந்தித்து, அதற்குப் பிறகு அந்தத் துறையின் அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களைச் சந்தித்து,





செம்மொழி என்கிற அந்தஸ்து தமிழுக்குத் தரப்பட வேண்டும், அதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னவுடன், எனக்கு சோனியா காந்தி அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். செம்மொழி அந்தஸ்து தமிழுக்குத் தரப்பட்டு விட்டது என்ற செய்தியைச் சொல்லிவிட்டு, அவர்கள் அந்தக் கடிதத்திலே எழுதியிருந்தார்கள், இந்த அந்தஸ்து வந்ததற்கு யாராவது பெருமை பேசிக் கொள்ள வேண்டுமேயானால், அந்தப் பெருமை உன் ஒருவனுக்குத் தான் உரிமை உடையது என்று எனக்கு எழுதினார்கள். அந்தக் கடிதம்; நான் புதையலாக வைத்து போற்ற வேண்டிய ஒன்றாகும். அத்தகைய நிலைமையிலே செம்மொழித் தகுதி நம்முடைய தமிழுக்குக் கிடைத்திருக்கும்போது, அந்தத் தமிழால் நம்முடைய மன்றத்தை இசைவாணர்களை, கலைவாணர்களை – இவர்களையெல்லாம் பாராட்ட, புகழ அவர்களுக்கெல்லாம் மேலும் மேலும் ஊக்கத்தை வழங்க – அவர்களில் பலர் இயக்குநர்களாக நம்முடைய ராமநாராயணனைப் போல இருக்கிறார்கள், பலர் கவிஞர்களாக இருக்கிறார்கள். இந்த மன்றத்தில் செயலாளராக இருக்கின்ற இளையபாரதியைப் போல, இப்படி இருக்கின்றவர்களையெல்லாம் சிறப்பிக்க, அவர்களையெல்லாம் உயர்த்த,



இந்த சங்கத்திற்கு, சபாவிற்கு, மன்றம் என்று பெயரிடுவதா அல்லது வேறு பெயர் வைப்பதா என்று எண்ணியபோது தான் நான் இந்த மன்றத்திலே உள்ள நண்பர்களையெல்லாம் அழைத்துப் பேசினேன், அவர்களிடம் கேட்டுக் கொண்டேன், இயல், இசை நாடகம் என்ற இந்த மூன்றும் நம்முடைய தமிழுக்கே பெருமையளிக்கக் கூடியது, ஆகவே இந்த மூன்றையும் சேர்த்து இயல் இசை நாடக மன்றம் என்று இதற்கு பெயர் வைக்கலாமென்று கேட்டேன், அப்படியே எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள், அன்று முதல் இன்று வரையில் இது இயல், இசை, நாடக மன்றமாக விளங்கி வருகிறது. அப்படிப்பட்ட இந்த மன்றத்தில் நடைபெறுகின்ற இந்த விழாவில் பலர் இன்றைக்கு பாராட்டப்பட்டிருக்கிறார்கள். சிறப்பிக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவராக நம்முடைய இயக்குநர் பார்த்திபன் அவர்களை நன்றி சொல்லச் சொன்னால், அவர் தமிழ்நாட்டையே நான் இதன் மூலம் பெற்றுக் கொண்டேன் என்று நமக்குத் தெரியாமலே எடுத்துக் கொண்டு போய்விட்டார். பல பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள், தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டுபோக பார்த்திபன் உட்பட தமிழர்கள் அவ்வளவு பேரும் ஏமாளிகள் அல்ல என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.





அவர் நன்றி கூறியது எனக்கு – கலைஞர்களுக்கு விருது வழங்கினேன் என்று நன்றி கூறினார். ஆனால் நான் அந்த நன்றியை எனக்குக் கூறியதாக எடுத்துக் கொள்ளவில்லை. இதே மன்றத்தில் 1967 ஆம் ஆண்டு இந்த கலைமாமணி விருதை இந்த மேடையில் எனக்கு அணிவித்து, வாழ்த்துச் சொன்னவர் என்னை ஆளாக்கிய என் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களாவார்கள். அப்போது கூட அந்தப் பதக்கத்தை நேரடியாக என்னுடைய கழுத்திலே போடாமல், போடுவது போல பாவித்து, இரண்டு முறை எனக்கு ஏமாற்றத்தைத் தந்து, மூன்றாவது முறை தான் அதைப் போட்டார்கள். அப்படி ஒரு வேடிக்கையாக அந்தப் பதக்கம் எனக்கு அன்று அளிக்கப்பட்டது. இன்றைக்கு ஒவ்வொரு விழாவிலும் நூற்றுக்கணக் கானவர்களுக்கு, ஐம்பதுக்கு மேற்பட்டவர்களுக்கு இந்த பதக்கம் அணிவிக்கப்படுகிறது. நான் முதலில் நம்முடைய மன்றத்திற்கு தமிழ்ப் பெயர் வைக்கப்பட்டது பற்றிச் சொன்னேன். இன்று தமிழைக் காப்பாற்ற வேண்டிய, போற்ற வேண்டிய, பாதுகாக்க வேண்டிய ஒரு கட்டம் தமிழர்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. தமிழைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொண்டு, தமிழுக்கு நாங்கள் தான் காப்பாளர்கள் என்று கூறிக் கொண்டு அந்தப் பெருமையிலே நாம் ஏமாந்துவிடக் கூடாது, ஏமாற்றிவிடக் கூடாது. இன்று நான் ஒரு பத்திரிகையைப் படித்தேன். "மாலை முரசு" பத்திரிகை. நான் பேசுவது ஒன்றும் அரசியல் அல்ல. தமிழ் மொழியைப்பற்றி ஒரு வாதம். தனித்தமிழ் பேசுவதா, வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு வாதத்தை அந்த மாலைப் பத்திரிகை இன்று எழுப்பியிருக்கிறது. அதிலே அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். "ஆரம்பமாகப் போகிற கலைஞர் டி.வி.க்கு சில அறிவுரைகள்" – "தமிழிலேயே நடத்துங்கள்" – அதாவது எனக்கு அறிவுரை கலைஞர் தொலைக்காட்சியை தமிழிலேயே நடத்துங்கள் என்பது தமிழை வளர்ப்பதற்கு, தமிழர்களை வளர்ப்பதற்குப் பயன்படவேண்டுமென்று சொல்கிறார்கள். நான் அதை நன்றியோடு ஏற்றுக் கொள்கிறேன் . நீங்கள் யார் சொல்வது, நான் யார் கேட்பது என்கின்ற அகம்பாவம் என்னுடைய உள்ளத்திலே எந்த மூலையிலும் அரும்பாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் அவர்கள் ஆங்கிலம் கலந்து சில சொற்கள் கையாளப்பட்டதை – குறிப்பாக சன் டி.வி.க்கு தமிழ் உணர்வே கிடையாது அவர்களுக்கென்று – நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் கலகம் ஊட்டி விடுகின்ற அளவிற்கு அதிலே ஒரு கட்டுரை வந்திருக்கிறது. சன் டி.வி. என்பதே ஆங்கில கலப்பு என்றும், சன் டி.வி.யில் தமிழுக்கே இடம் இல்லை என்றும் பெரிய தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் தமிழை வளர்ப்பதற்காக உற்சாகத்தோடு செய்யப்படுகின்ற – அந்த ஊக்க உணர்வோடு செய்யப்படுகின்ற காரியமா என்றால் இல்லை. ஏதோ ஒரு பகையைத் தீர்த்துக் கொள்வதற்கு பயன்படுகின்ற காரியமாகத்தான் அது இருக்கின்றது. நான் அந்தப் பத்திரிகையைப் படித்துப் பார்த்தேன் . சன் டி.வியால் தமிழ் உணர்வு அழிந்தது என்பது தலைப்பு. எல்லோருக்கும் சன் டி.வி.யிலே தொடர்பு உண்டு. நமக்கு இன்றைக்கு தொடர்பு இல்லாத காரணத்தால், அது தமிழை அழித்து விட்டதா என்ற கேள்விக்கு அவ்வளவு அவசரப்பட் டு, யாரும் பதில் சொல்ல முடியாது. கலைஞர் தொலைக்காட்சியிலாவது தமிழ் வாழுமா என்று சந்தேகப்படுகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற ஒரே பதில் – கலைஞர் வாழுகிறாரோ இல்லையோ, தமிழ் வாழும். இது தான் அவர்களுக்கு என்னுடைய பதில்.



"வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்" என்பது தான் நான் தமிழைப் பற்றிக் கூறிய ஒரு சூளுரை. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்பது. எனவே தான் தமிழ் வாழுமா என்ற கேள்விக்கே இடம் இல்லை, வாழும். மற்றவர்களையும் வாழ வைக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சன் டி.வி.யால் தமிழ்மொழி அழிந்தது என்பதற்கு நான் ஏதோ சன் டி.வி.க்கு புதிதாக வக்காலத்து வாங்குகிறேன் என்று நாளைக்குப் பத்திரிகை களில் எப்படி செய்தி வரும் என்று எனக்குத் தெரியும். ஸ்ரீபெரும்புதூர் என்று வேண்டுமென்றே, அவ்வளவு பெரிய "ஸ்ரீ"யை போட்டிருக்கிறார்கள். பதிலுக்குப்பதில் தாக்குவதற்காக இதைச் சொல்லவில்லை. மாலைமுரசைக் கேட்டுக் கொள்கிறேன் . இனிமேல் திருப்பெரும்புதூர் என்று போடுங்கள். உங்களுடைய தமிழ் உபதேசத்தைக் கேட்டு சன்டி.வி. திருந்திக் கொள்ளும், நானும் கூட திருந்திக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் தயவுசெய்து ஸ்ரீபெரும்புதூர் என்பதை திருப்பெரும்புதூர் என்று திருத்திக் கொள்ளுங்கள் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



ஆனால் தமிழின் பெயரால் ஒருவரைக் குற்றம் சொல்லி, ஒருவரை குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி தமிழ் உணர்வே இல்லை என்று சொல்வது நல்லதல்ல. எல்லோரும் சேர்ந்து தான் தமிழைக் காப்பாற்ற வேண்டும், தமிழை வளர்க்க வேண்டும். அறிவுரை கூற வேண்டும். ஆனால் அதே "மாலைமுரசு" பத்திரிகையில் முதல் பக்கத்தில் "ஸ்ரீபெரும்புதூரில் இன்று ராஜிவ் நினைவிடத்தில் பிரதிபா பட்டீல் அஞ்சலி" என்று பெரிய கொட்டை எழுத்தில் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இதிலே ஸ்ரீபெரும்புதூர் என்பது தமிழா ? திருப்பெரும்புதூர் என்று அதை தமிழர்கள் எல்லாம் அழைக்கிறார்கள். நாமெல்லாம் திருப்பெரும்புதூர் என்று தான் அழைக்கிறோம். அதை

இது ஒரு வாதப்பிரதிவாதத்திற்காக எழுப்பப்பட்டதல்ல. எல்லோரும் சேர்ந்து தமிழைக் காப்பாற்ற ஒருவருக்கொருவர் பகையைக் கக்கி, தமிழைக் காப்பாற்ற முடியாது. எனவே உள்ளுணர்வோடு, யோசித்து அந்த உணர்வைப் பயன்படுத்தி, அந்த வகையில் தமிழ் வாழ வேண்டும், தமிழ் பரப்பப்பட வேண்டுமென்ற அந்த எண்ணத்தோடு பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இன்றைக்கு விருது பெற்ற, பரிசு பெற்ற அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்து வாழ்க! வாழ்க! தமிழ் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன் .



# அண்ணன் ஜீவானந்தம் பெயரால் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டுவோம்

பொதுவுடைமைவீரர் ப. ஜீவானந்தம் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களின் உரை

**அ**ரசின் சார்பில் இந்த நூற்றாண்டு விழா நிகழ்ச்சியை தமிழகத்திலே மூன்று இடங்களில், நகரங்களில் நடத்துவது என்று தீர்மானித்து தலைநகரத்திலே இன்று மிக எழுச்சியோடும், சிறப்போடும், சீரோடும் இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, விழா நடைபெறுகின்ற நேரமும், காலமும் எப்படிப்பட்டது என்பதை விழாவிலே நீங்கள் கேட்ட உரைகளே உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கும். அத்தகைய ஒரு அரிய நேரத்தில் இந்த விழாவை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

### இது அரசு விழா!
### " அரசு விழா''

இது அரசு விழா, அரசு "விழா'' – நிச்சயமாக "அரசு விழா'' என்ற நம்பிக்கையோடு– "விழா'' என்பது பன்மை "ப்ளூரல்'' – மாநில அரசு, மத்திய அரசு என இரண்டையும் சேர்த்துச் சொல்வதால் 'விழா' என்று சொன்னேன், தமிழ் இலக்கணம் புரிந்தவர்களுக்கு சொல்லத் தேவையில்லை. புரியாதவர்கள் புரிந்தவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பிறந்து நூறாண்டுகள் ஆயிற்றா என்று எண்ணும்பொழுது அவரோடு இளமைக் காலத்திலேயே பழகிய எனக்கு, என் போன்றோர்களுக்கு எத்தகைய ஆதங்கமும், பெருமூச்சும் ஏற்படும் என்பதை எங்களால்தான் உணர முடியும். அத்தகைய உணர்வுகளோடுதான் நான் இந்த மேடையிலே அமர்ந்திருக்கிறேன், உடல்நிலை சற்று சரியில்லை என்றாலும் கூட நான் வரத் தவறக் கூடாது என்ற உறுதியோடு வந்து அமர்ந்துள்ள இந்த விழாவில் சில செய்திகளை உங்களோடு பரிமாறிக் கொள்ள நான் விரும்புகின்றேன்.

நம்முடைய நண்பர் கோபு இங்கே வந்திருக்கிறார், அவர் எழுதிய கட்டுரை ஒன்றை இன்று காலை நான் படித்தேன், என் சம்பந்தப்பட்ட கட்டுரை அது.






என்னைப்பற்றி மாத்திரம் அல்ல. அண்ணன் ஜீவானந்தம் பற்றிய தொடர்புடைய கட்டுரையும்தான் அது. ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பான பழைய நினைவை இன்றைக்கு அவர் திரும்ப எதிரே நிறுத்தி அதைக் காட்சியாக்கி அவருக்கே உரிய எழுத்தாற்றலோடு ஜனசக்தி பத்திரிக்கையிலே காட்டியிருக்கின்றார்.

ஒரு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் திருவாரூரில் இருந்து இயக்கப் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்த காலகட்டத்தில் திருவாரூரிலே என்னோடு மிக அதிகமாகப் பழகிய பாண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த சுரேந்திரன் என்ற இளம் நண்பர் என்னைச் சந்தித்து அவருடைய திருமண விழாவிற்கு நான் தலைமையேற்க வேண்டும் என்று கேட்டார், அப்படியே கோபு எழுதியதை உங்களுக்கு சொல்கிறேன், நான் மறுப்பு சொல்லாமல் திருமணத்திற்கு தலைமையேற்க ஒப்புக் கொண்டேன். காரணம் இருவரும் நெருங்கிய நண்பர்கள். அது மாத்திரமல்ல. இயக்கத்தின்பால் பற்றுக் கொண்ட இளம் நண்பர் சுரேந்திரன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அளவற்ற பற்றுக் கொண்டு அதற்குக் காரணமாக நான் இருந்ததால் என்னை மணவிழாவிற்கு அழைத்தார். வருகிறேன் என்று ஒத்துக் கொண்டேன். அவருடைய அண்ணனுக்கு அன்றைக்கே திருமணம். அவருடைய அண்ணன் பெயர் பாண்டியன். அவர் கம்யூனிஸ்ட் கட்சி பற்றுக் கொண்டவர். பாண்டியன், சுரேந்திரன் என்ற சகோதரர்களில்– பாண்டியன் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் – சுரேந்திரன் தி.மு.க. பற்றாளர். இருவருக்கும் திருமணத்திற்கு தேதி குறிப்பிட்டாகி விட்டது.

### ஜீவா தலைமையில் திருமணம்

சுரேந்திரன் திருமணத்திற்கு தலைமை ஏற்பதாகக் கேட்டு நான் ஒப்புதல். மூத்த மகன் பாண்டியன் திருமணத்திற்கு "ஜீவானந்தம் அவர்கள் தலைமை வகிப்பதாகக் கேட்டு அவரும் ஒப்புதல். இந்த தகவல் எனக்குக் கிடைக்கிறது. நண்பர்களெல்லாம், ஜீவாவைப் பற்றி பத்திரிக்கையில் எல்லாம் எழுதுவாய். கேலி பேசுவாய். அவருடைய கருத்துக்களையெல்லாம் சில நேரங்களில் விமர்சிப்பாய். இரண்டு பேரும் ஒரே மேடையில் போய் திருமணத்தில் என்ன பேசப் போகிறீர்கள் ?'' என்றெல்லாம் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். எப்படி நடக்கப் போகிறது திருமணம் என்பதை உன்னிப்பாக அந்த வட்டாரமே கவனித்தது. திருமணம் எங்கே நடைபெற்றது என்றால் ஒரு பெரிய பண்ணையில் நடைபெற்றது. பாண்டி பெரிய பண்ணை என்றால் – பாண்டி மைனர் வைத்தியநாதத் தேவர் என்பவருடைய வீட்டுத் திருமணம் அது. என்ன கம்யூனிசம் என்கிறாய், மைனர் என்கிறாய், பெரிய பண்ணை என்கிறாய் என்று கேட்டால், அப்போதெல்லாம் கம்யூனிஸ்ட்கள் சில பேர் பெரிய பண்ணையிலே இருந்தாலும் கம்யூனிஸ்ட்களாக இருப்பார்கள். எப்படி குமாரமங்கலம் ஜமீன்தார் இருந்தாரே, அதைப் போல என்று வைத்துக் கொள்ளுங்களேன். நல்லகண்ணு அவர்களுக்கு இது நன்றாகத் தெரியும்.

அந்தத் திருமணங்களுக்கு நான் போக வேண்டும். திருவாரூரிலிருந்து ஒரு காரை எடுத்துக்கொண்டு நான் அந்தத் திருமணத்திற்குச் செல்கிறேன், மாப்பிள்ளை சுரேந்தர் என்னை அழைத்துப் போகிறார். அதே

திருமணத்திற்கு அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பக்கத்திலே உள்ள புகை வண்டி நிலையத்திலே இறங்கி மாட்டு வண்டியில் திருமண வீட்டிற்கு வந்து இறங்கினார், இரண்டு பேரும் போய்ச் சேருவதற்குள்ளாக நான் ஒரு யோசனை சொன்னேன். இரண்டு திருமணங்களும் ஒரே மேடையில், அவர் ஒரு திருமணத்திற்கு தலைமை வகிப்பார், நான் ஒரு திருமணத்திற்கு தலைமை வகிப்பேன் – அது கம்யூனிஸ்ட் திருமணம். இது சுயமரியாதை இயக்கத் திருமணம் – சுயமரியாதை இயக்கத்திற்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் வித்தியாசம் இருப்பதாக கருதிக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட திருமண நிகழ்ச்சிகள் அது. நான் அப்போது, இரண்டு திருமணங்களையும் ஒன்றாகவே நடத்தலாம் என்றேன். எப்படி என்றார்கள். அண்ணன் ஜீவானந்தம் அவர்களே இரண்டு திருமணங்களுக்கு தலைமை வகிக்கட்டும். நான் இரண்டு மாப்பிள்ளைகளையும் வாழ்த்துகிறேன் என்று சொல்லி, இதை இரண்டு மண வீட்டாரும் ஏற்றுக் கொண்டு, நான் அந்தத் திருமண விழாவிலே வாழ்த்தினேன், அண்ணன் ஜீவானந்தம் அவர்களும் தலைமை வகித்து வாழ்த்தினார்கள்.

**அண்ணன் என்கிற உறவு**

யார் அந்தக் குடும்பம் என்று தெரிந்து கொள்ள வேண்டுமேயானால், அன்று நடைபெற்ற இரண்டு திருமணங்களில் மூத்த மகன், பாண்டியன், அவருடைய மகன் தான், அண்மையிலே ரஷ்யாவிலே கேமராமேனாகச் சென்று திடீரென்று நெஞ்சடைப்பின் காரணமாக மறைந்துவிட்டாரே, ஜீவா என்ற தோழர், திரையுலகத்தைச் சேர்ந்த தோழர், அவர் இறந்து விட்டார் அல்லவா, அந்தக் குடும்பம் தான் அது. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், எவ்வளவு நீண்ட நெடிய பாரம்பரியம் உள்ள குடும்பத்திற்கு நான் அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை சொந்தக்காரனாக இருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

நீங்கள் இந்த மேடையிலேயே பார்த்தீர்கள், எனக்கு பொன்னாடை போர்த்த, மாலை அணிவிக்க, வாழ்த்துச் சொல்ல, பாராட்டுக் கூற அந்தக் குடும்பமே வந்து நின்றதை நீங்கள் கண்டீர்கள். அண்ணன் ஜீவா அவர்களின் மறைவுக்குப் பிறகு எத்தனையோ நிகழ்ச்சிகள், அவைகளையெல்லாம் நான் இங்கே கூற விரும்பவில்லை, அடக்கத்தின் காரணமாக, பண்பாட்டின் காரணமாக, எத்தனையோ நிகழ்ச்சிகள், அவ்வளவு நிகழ்ச்சிகளிலும் நான் சொல்ல விரும்புகிறேன், கர்வத்தோடும், இறுமாப்போடும் சொல்கிறேன், பல நல்ல நிகழ்ச்சிகள் அந்த இல்லத்தில், நான் இல்லாமல் நடந்ததில்லை. இப்போதும் கூட மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு நம்முடைய பெரியவர் நல்லகண்ணு அவர்களுக்கு நன்றாகத் தெரியும்– அவரும் நானும் இந்தக் குடும்பத்திலே ஒரு திருமணத்தை நடத்திவைத்தோம். இப்படி நான் அண்ணன் என்று அவரை அழைக்கின்ற அளவிற்கு உறவு கொண்ட ஒரு இயக்க ஆர்வம் அவருக்கும் எனக்குமிடையே இருந்தது.

**எழுதவில்லை – பேனா முள்**

ஆனால் இத்தனைக்கும் நாங்கள் இருவரும் அவ்வளவு தோழமை உணர்ச்சியோடு பழகினோமா என்றால் இல்லை. இயக்கக் கொள்கை உறவு எங்களைப் பிணைத்தது. சண்டை போட்டுக் கொண்டோம், மேடையிலே சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். எழுத்திலே சண்டை போட்டுக் கொண்டிருக்கிறோம். நான் முரசொலி வார இதழை திருவாரூரில் இருந்து








நடத்தியபோது. முதல் பக்கத்திலேயே அண்ணன் ஜீவா அவர்களைக் கண்டித்து, தாக்கி "எழுதவில்லை'' என்ற தலைப்பில் ஒவ்வொரு வாரமும் கட்டுரை எழுதுவேன். கட்டுரைக்குப் பெயர் "எழுதவில்லை'', எழுதுகின்ற கட்டுரையாளரின் பெயர் "பேனா முள்'' என்றைக் காவது என்னைப் பார்த்து, "என்னடா என்னைப் பற்றி இப்படி எழுதியிரு க்கிறாய்'' என்று கேட்டால் நான் எழுதவில்லை. பேனா முள் அல்லவா எழுதியது என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு இரண்டு பேருக்குமிடையே பழக்கம் உண்டு.

அவருடைய சிந்தனையாற்றல், அவருடைய சீற்றம், அவருடைய வேகப் பேச்சு, மேடையிலே பேசும்போது ஜீவானந்தம் என்ற மனிதர் பேசுகிறாரா ?சிங்கம் உறுமிக் கொண்டிருக்கிறதா ? என்றே தெரியாது, அப்படிப்பட்ட மேடைப் பேச்சுகளுக்குச் சொந்தக்காரர்.

**பெரிய பாக்கியம் –பெரும்பேறு**

ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு முறை எனக்கு பரமக்குடியில் இருந்து திரும்பும் வழியில் இராமனாதபுரம் திருப்பத்தூர் அருகில் ஒரு பாலத்தில் என்னுடைய கார் மோதி கண்ணிலே பெருத்த அடிபட்டது. ஒரு விபத்து. அந்த விபத்திற்குக் காரணம் இரவு 3 மணிக்கு மேல் நான் பரமக்குடியிலிருந்து திரும்பியதுதான். சென்னையிலிருந்து கார் மூலமாக பரமக்குடி பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள சென்று – 11 மணிக்கு நான் கூட்டம் பேச வேண்டுமென்று அறிவித்திருந்தும்கூட – நான் போய்ச் சேர்ந்த நேரம் 3 மணி. அப்போது நான் கேட்டேன். "இவ்வளவு கூட்டம் இருக்கிறதே'' என்று நான் கேட்டபோது, "அது மாத்திரமல்ல, உங்களுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருக்கிறது'' என்றார்கள், என்ன என்று கேட்டேன். "இங்கிருந்து ஒரு பர்லாங் தொலைவில் அந்தக் கூட்டத்தை ஒரு இடத்தில் அமர்ந்து பொதுவுடைமை வீரர் ஜீவானந்தம் அவர்கள் உங்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்'' என்று சொன்னார்கள். அதை விட பெரிய பாக்கியம், அதை விடப் பெரும் பேறு, அந்தக் காலத்திலே வளருகின்ற ஒரு பேச்சாளனுக்கு இருக்க முடியுமென்று கருதுகிறீர்களா ? அந்தப் பாக்கியம் நமக்குக் கிடைத்ததே என்று நினைத்துக் கொண்டே பேசிவிட்டு திரும்பினேன். 3 மணிக்குப் புறப்பட்டு திரும்பி வருகிற வழியிலே தான் திருப்பத்தூருக்குப் பக்கத்திலே கார் விபத்துக்கு உள்ளாகி நான் பெரும் ஆபத்திற்கு ஆளானேன், அதனால் தான் இப்போது உங்களிடையே இருக்கிறேன், அது வேறு விஷயம்.

**தியாக உருவம்**

இதை ஏன் சொல்கிறேன் என்றால், அவர் அவ்வளவு நேரம் அப்போது ஏன் உட்கார்ந்திருந்தார் என்பதற்கும் காரணம் உண்டு. அப்போது இராமாயணப் போட்டி தமிழ்நாடு முழுவதும் கம்பராமாயணத்திற்கு எதிராக பேரறிஞர் அண்ணா அவர்கள் "கம்பரசம்'' போன்ற கட்டுரைகளை எழுதினார், அதைப் பிரச்சாரம் செய்கின்ற பணியிலே மாணவர்களாகிய நாங்கள் எல்லாம் ஈடுபட்டிருந்தோம். அப்போது அதை எதிர்த்து, மூர்த்தன்யமாக எங்களைத் தாக்கிய பெருமை மறைந்த ஜீவா அவர்களுக்கு உண்டு. நீங்கள் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர் கம்பராமாயணத்தை எப்படியெல்லாம் பாராட்டிப் பேசுகிறார் என்று கேட்க நான் கூட்டங்களில் ஒளிந்து கொண்டு கேட்பதுண்டு. அதைப் போல அவர்

நான் எப்படி கம்பராமாயணத்தைத் தாக்கிப் பேசுகிறேன் என்பதைக் கேட்க பரமக்குடி கூட்டத்தில் ஒரு இடத்தில் அமர்ந்து கேட்டிருக்கிறார். நான் எப்படி தாக்கிப் பேசுகிறேன் கம்பராமாயணத்தை என்று கேட்க அண்ணனும் – அதைப் போல அவர் எப்படி கம்பராமாயணத்தைப் பாராட்டிப் பேசுகிறார் என்பதைக் கேட்க தம்பியும் – இந்த இலக்கிய சந்தையிலே ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்ட நேரம் தான் எங்களை இன்றைக்கு உங்களிடையே – அந்தச் சந்திப்பிலே ஏற்பட்ட பெருமிதம்தான், விளைவுதான் இன்றைக்கும் அவரை நினைக்கவும், அவரைப் போன்ற தியாகிகள், தேசப் பற்றாளர்கள், நாட்டுப் பற்றாளர்கள், எதைப் பற்றியும் கவலைப்படாமல், இங்கே சென்னார்களே, தன்னுடைய மகளைக் கூட 17 ஆண்டுகள் கழித்துத்தான் பார்த்தாரென்று, அப்படிப்பட்ட தியாக உருவத்தை அற்ப ஆயுளிலே நாம் இழந்திருக்கிறோம்.

### ஜீவானந்தம் மறையவில்லை

பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் 39 வயதிலும், 49 வயதிலும், 56 வயதிலும் மறைந்திருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணாவை 59ஆவது வயதிலே பறி கொடுத்தோம், இல்லையென்றால் இன்றைக்கும் இன்னும் எத்தனையோ செழிப்புகளை, எத்தனையோ முன்னேற்றங்களை, ஏற்றங்களை நாடு கண்டிருக்க முடியும், அதைப் போல ஜீவா அவர்கள் இன்றைக்கும் இருந்திருந்தால் – இன்றைக்கு என்றால் 100 ஆண்டுகள் முடியாது – அவ்வளவு பேராசைப் பட வில்லை நான் – மேலும் பத்து, பதினைந்து ஆண்டுகள் 90 வயது வரை வாழ்ந்திருப்பாரேயானால் எத்தனையோ அரிய கருவூலங்கள், இலக்கியத்திற்கு கிடைத்திருக்கும், எத்தனையோ ஆராய்ச்சி புதையல்கள் நம்முடைய காவியத்திற்கு, நம்முடைய கலைக்கு, நம்முடைய நாட்டிற்கு, நம்முடைய மொழிக்குக் கிடைத்திருக்கும்.

அவர் அளித்த உறுதி தான் – அவர் எழுப்பிய முழக்கம் தான் 1955 ஆம் ஆண்டு நம்முடைய நல்லகண்ணு அவர்கள் எடுத்துக்கட்டியதைப் போல், சட்டப்பேரவையில் 29–9–1955 அன்று "நான் தமிழன், என்னுடைய மொழியே இந்த ராஜ்யத்தில் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். கல்விக் கூடங்களிலும், ஆட்சி மன்றத்திலும் நியாய மன்றத்திலும், நிருவாகத் துறையிலும் தமிழ்மொழியே இயங்க வேண்டும். உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான் வழக்கு மொழியாக இருக்க வேண்டும். கல்வியில் தமிழே போதனா மொழியாக இருக்க வேண்டும்'' என்று பேசியவர் அண்ணன் ப. ஜீவானந்தம் அவர்கள் என்பதை 27–1–2007 அன்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு நான் பதிலளிக்கும்போது எடுத்துக் குறிப்பிட்டேன் என்றால் ஜீவானந்தம் மறையவில்லை, வாழ்ந்து கொண்டிருக்கிறார், வாழ்ந்து கொண்டிருப்பது மாத்திரமல்ல, தான் சொன்னதை யெல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறார்.

> **"நான் தமிழன்,**
> **என்னுடைய மொழியே**
> **இந்த ராஜ்யத்தில் ஆட்சிமொழியாக**
> **இருக்க வேண்டும்.**
> **கல்விக் கூடங்களிலும்,**
> **ஆட்சி மன்றத்திலும்,**
> **நியாய மன்றத்திலும்,**
> **நிர்வாகத் துறையிலும்**
> **தமிழ்மொழியே இயங்க வேண்டும்.**
> **உயர் நீதிமன்றத்திலும் தமிழ்தான்**
> **வழக்குமொழியாக இருக்க வேண்டும்.**
> **கல்வியில் தமிழே போதனா மொழியாக**
> **இருக்க வேண்டும்"**
> **என்று பேசியவர் அண்ணன்**
> **ப. ஜீவானந்தம்**

"சொன்னேன், இடையிலே வந்தவர்கள் செய்யவில்லை, நீ செய் தம்பீ!'' என்று ஆணையிட்டுக் கொண்டிருக்கிறார் என்பதைத் தவிர அதற்கு வேறு என்ன அர்த்தம்? அதை ஆணையாக ஏற்றுத் தான் இன்றைய தினம் அதை கட்டளையாக ஏற்று அவற்றையெல்லாம் இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட மாவீரர், தன்னுடைய குடும்பத்தைப் பற்றி எண்ணாமல், நாட்டைப் பற்றி எண்ணியதும், வீட்டைப் பற்றிக் கருதாமல் நாட்டைப் பற்றி கருதியதும் – அவர் மறைந்த போது நான் எழுதிய ஒரு கவிதையை இங்கே நம்முடைய நல்லகண்ணு அவர்கள் நினைவுப்படுத்தினார்கள்.



### அறுபதுகளில் அண்ணன் ஜீவானந்தம் பற்றி நான் எழுதிய கவிதை!

1963 ஆம் ஆண்டு "நம்நாடு'' பத்திரிகையில் ஜீவா அவர்களைப் பற்றி நான் எழுதிய கவிதை இது.

'நாமணக்கும் நல்ல தமிழ் மணக்கும்
நாஞ்சில் என்ற பேர் மணக்கும்
பாமணக்கும் பூதப்பாண்டி யெனும் ஊர்
மணக்கும்
பண்பாளர் ஜீவா புகழ் பாடுகின்ற வாய்
தேன் மணக்கும்!

ஆட்டம் போடும் வாலிபத்தின் – பனி
மூட்டம் கலையா வயதினிலே
நாட்டம் கொண்டார் பொது வாழ்வினிலே!

தோட்டம் நிறையப் பூ இருந்தும்
தொலைவில் பறந்த வண்டினைப் போல்
தொண்டே என்றன் வாழ்வென்று
சுற்றிப் பறந்தார் நாட்டினிலே
வீட்டில் சிலநாள் தங்கிடுவார் – சிறைக்
கூட்டில் பலநாள் வதங்கிடுவார்!

மேடையில் முரசு கொட்டிடுவார் – வாழ்வின்
கோடையில் பயணம் சென்றிடுவார்!
'தாமரை' மலரைத் தந்திடுவார் – அதில்
தமிழாம் அமுதை உண்டிடுவோம்!

கையை ஓங்கிப் பேசிடுவார் – அங்கே
கடும்புயல் வீசக் கண்டிடுவோம்!
வாரீர் என்று அழைத்திடுவார் – அந்த
வாஞ்சை கண்டு சிலிர்த்திடுவோம்!

குன்றாம் அவர்தம் தோளெங்கே?
குன்றா அவர்தம் திறமெங்கே?
நன்றாம் அவர்தம் குணமெங்கே?
நாட்டுக் குழைக்கும் பண்பெங்கே?
வீரம் செறிந்த முகம் எங்கே?
விழிகள் கொட்டும் ஒளி எங்கே?

குருதியெலாம் புரட்சி மணம்
கமழுகின்ற வரிப்புலியைக்
கொள்கையிலே உறுதிகொண்ட
தமிழ்க் கவியைக்

கொளையடித்து மகிழ்ந்ததோ
கொடுஞ்சாவு எனக்கேட்டுக்
குமுறுகின்றார் நாட்டுமக்கள்!
வாழ்க ஜீவா! வாழ்க என்றும்!'

என்ற இந்தக் கவிதையை அன்று எழுதினேன். இன்றும் இதுபோன்ற நிகழ்ச்சிகளில் என்னை உணர்ச்சி மயமாக ஆக்கிடத் தவறுவதில்லை. அந்த அளவிற்கு நான் அவரிடத்திலே பாசம் கொண்டிருந்தேன்.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். நான் இந்த இயக்கத்தில் எல்லோருடனும், அண்ணன் தம்பி, அக்காள் தங்கைகள் என்றுதான் பழகிக் கொண்டிருந்தாலுங்கூட, "அண்ணா'' என்று ஒருவரைத் தான் அன்றும் அழைத்தேன், இன்றும் குறிப்பிடுகிறேன், "அய்யா'' என்று ஒருவரைத்தான் அன்றும் அழைத்தேன், இன்றைக்கும் குறிப்பிடுகிறேன். அண்ணா, அய்யா என்று இருவரை அழைத்தது போக, அண்ணன் என்று பட்டுக்கோட்டை அழகிரிசாமியை அழைத்தேன், அண்ணன் அழகிரி என்று. அந்த அண்ணனுக்கு அடுத்தபடியாக அண்ணன் ஜீவானந்தம் என்று அழைத்தது நம்முடைய ஜீவா அவர்களைத்தான். இந்த அண்ணனைத் தான் இன்றைக்கு நாம் நினைவு கூர்கிறோம்.

அந்த அண்ணன் பெயரால் இந்த நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டுவோம் என்று உறுதி பூணுகிறோம். அந்த அண்ணனுக்கு நினைவு போற்றுகிற இந்த நேரத்தில் நாட்டு ஒற்றுமைக்கு என்ன சொல்கிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். நீங்களும் நானும் சேர்ந்து அந்த ஒற்றுமைக்கான வழியை நம்முடைய ஒற்றுமையின் மூலம் காட்டுவோம். யார் யார் ஒற்றுமை உடன்படாமல் இருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் நம்முடைய ஒற்றுமையைக் கண்டு நீங்கள் தானே பத்திரிகை நடத்துகிறீர்கள் "ஜனசக்தி'' என்று – ஜனசக்தி திரண்டால், அதன் கீழே எல்லா சக்திகளும் அடங்கும், தீயசக்தியை அடக்குவோம், ஜனசக்தியை எழுப்புவோம் என்று இந்த மாமேடையிலே நம்முடைய தலைவர்கள் அமர்ந்திருக்கின்ற இந்த மேடையிலே உறுதி எடுத்துக் கொள்வோம் என்று கூறி, "ஜீவா புகழ் வாழ்க'' என்றுரைத்து விடை பெறுகிறேன்.

**சென்னை கலைவாணர் அரங்கில்**
**தமிழக அரசின் சார்பில்**
**21.08.2007 அன்று நடைபெற்ற**
**பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம்**
**பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவில்**
**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
ஆற்றிய உரை.

# 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.20 ஆயிரம் கோடிக்கும் அதிகமாக கணினி மென்பொருள் ஏற்றுமதி செய்து தமிழகம் முன்னிலை



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தகவல்

**மா**நில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 23.8.2007 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் வடிவம் வருமாறு:

1997–ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தில் நடைபெற்றபோது ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கிய முதல் மாநிலம் இந்தியாவில் தமிழகமே என்ற பெருமையைப் பெற்றது. அதே ஆண்டில் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான "மாநில அளவிலான பணி முனைப்புக் குழு" அமைக்கப் பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையின் 1996–2001ஆம் கால கட்டத்தில் பல முன்னோடி யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**டைடல் பூங்கா**

1999–ஆம் ஆண்டில் "தமிழ்நெட் 99" என்னும் பெயரில், கணினியில் தமிழைப் பயன்படுத்துதல் குறித்த பன்னாட்டு மாநாடு நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து யுனிகோட் கண்சோர்டியத்தில் தமிழகமும் ஒரு முழுமையான உறுப்பினராக இணைந்தது; தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டது; சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்கைக்கோள் தரை நிலையங்கள் அமைத்திட இந்திய மென்பொருள்



தொழில்நுட்பப் பூங்காவிற்கு (STP I) தமிழ்நாடு அரசு வட்டியில்லாக் கடன்களை வழங்கியது.

எணினிப் (Digital) புரட்சியினால் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மக்களிடையே ஏற்பட்டுள்ள இடைவெளியை இணைத்திடும் பாலமாக "கிராமப்புற இந்தியாவைப் பேணுவதற்கான நுழைவு" (Sustainable Access to Rural India) எனப்படும் சிறந்த திட்டம் அக்கால கட்டத்தில் தொடங்கப் பட்டது; தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது; வழித்தட உரிமைக் கொள்கை (Right of Way Policy) உருவாக்கப்பட்டது; துணிகர முயற்சிக்கான முதலீட்டு நிதி (Venture Capital Fund) நிறுவப்பட்டது; 1,200 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தகைய பல பணிகள் அப்பொழுது மேற்கொள்ளப் பட்டன. அந்நாளில் ஆற்றிய பணிகளுக்கெல்லாம் மணிமுடிச் சாதனையாக – முத்தாய்ப்பாகச் சென்னையில் "டைடல் பூங்கா"வும், சிறுசேரியில் தகவல் தொழில்நுட்பப் பூங்காவும் அமைக்கப்பட்டன. எனவே 1996 முதல் 2001 வரையிலான காலத்தில் அப்போதைய தமிழக அரசுதான் இன்று தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிக்கு வித்திட்டது எனக் கூறினால் அது மிகையாகாது.

**தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்**

ஐந்தாவது முறையாக நான் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் பெங்களூருக்கு நானே நேரடியாகச் சென்று அங்குள்ள பல தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களைப் பார்வையிட்டேன்; வன்பொருள் மற்றும் மென்பொருள் தொழில் நிறுவனங்களின் தலைவர்களுடன் விரிவாக விவாதித்தேன். அதன்மூலம் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக மென்பொருள் ஏற்றுமதி தமிழகம் முன்னிலை பெற்றிருப்பதை அறிந்து பெருமிதம் கொண்டேன்.

2006–2007 நிதியாண்டில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட மென்பொருள் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 20 ஆயிரம் கோடிக்கு அதிகம் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் உவகை அடைகிறேன்.

"இன்போஷிஸ்", "டி.சி.எஸ்", "விப்ரோ", "காக்னி சண்ட்", "சத்யம்", "எச்.சி.எல்" ஆகிய நிறுவனங்கள் பெரிய அளவிலான தகவல் தொழில்நுட்ப வளாகங்களைத் தமிழகத்தில் அமைக்கின்றன. ஐ.பி.எம். நிறுவனம் சென்னையில் அதன் உலக விநியோக மையத்தை ஏற்படுத்த இருப்பதாக அண்மையில் அறிவித்துள்ளது.

**தமிழகம் தலைமை ஏற்கும்**

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளுக்கான சிறப்புத் தொழில் மையங்கள் பல நிறுவனங்கள் தமிழகத்தில் அமைக்கப்படுகின்றன. இவை தவிர, 61 மில்லியன் சதுரஅடிப் பரப்பில் தமிழகத்தில் தகவல் தொழில்



நுட்பத் தொழில் பிரிவுகள் உருவாக்கப்படுவதற்குத் தடையின்மைச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இவை காரணமாகத் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் தொழில்களின் வளர்ச்சிக்கான வாய்ப்புகள், வரும் சில ஆண்டுகளில் மேலும் பெருகிப் புகழ் சேர்க்கும், உங்கள் அனைவரின் அயராது ஒத்துழைப்புகளின் பயனாக இத்துறையில் தமிழகம் உலகில் தலைமை ஏற்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் அய்யமில்லை.

தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் பயன்கள் சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும் மட்டுமே அமைதல் கூடாது என நான் உணர்ந்துள்ளேன். மாநிலத்தின் பிற பகுதிகளுக்கும் இத்திட்டத்தின் பயன்கள் பரவுதல் வேண்டும். எனவே கோவை, மதுரை, சேலம், திருச்சி, நெல்லை ஆகிய நகரங்களிலும் தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கான தொழில் மையங்களை அரசு நிறுவுகிறது. இந்த இடங்கள் அனைத்திலும் உள்ள மனிதவளங்களும், போக்குவரத்து இணைப்பு வசதிகளும், எந்த வகையிலும் சென்னைக்குக் குறைந்தவை அல்ல என்பதை நீங்கள் காணமுடியும். உண்மையில் இந்த இடங்களைத் தேர்வு செய்வதன்மூலம் கிடைக்கும் பயன்கள் கணிசமானவையாகும். அரசு இந்த இடங்கள் அனைத்திலும் உரிய கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. இந்த முனைப்பான முயற்சிகளுக்கு உங்கள் அனைவரது ஆதரவையும் கோருகிறேன்.

**தொழில் முனைவோரின் ஆர்வம்**

மின்னணு வன்பொருள் உற்பத்தியில் உலக நாடுகளின் இணைப்பு மையமாகத் தமிழகம் எழுச்சி பெற்று வருகிறது.

உலகின் மிகப் பெரிய வன்பொருள் உற்பத்தியாளர்களில் மோட்டோரோலா, நோக்கியா, பிளெக்ஸ்ரானிக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ், சாம்சங், சான்மினா ஆகிய நிறுவனத்தினர் தமிழகத்தில் தங்கள் தொழிற்சாலைகளை அமைத்து வருகின்றனர். இப்பிரிவில் மேலும் பல தொழில் முனைவோர் தங்கள் தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்கிட ஆர்வம் கொண்டு தமிழக அரசுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர். அவர்களும் தங்கள் தொழில் திட்டங்களை விரைவில் அறிவிப்பார்கள்.

வன்பொருள், மென்பொருள் ஆகிய இரண்டின் உற்பத்திகளில் இந்தியாவின் மற்ற எந்த ஒரு மாநிலமும் இணையாக முடியாத அளவுக்குத் தமிழகம் சிறந்து விளங்குகிறது. இந்தச் சிறப்பான சாதனையை நிலைநிறுத்துவதற்காகவும், தகவல் தொடர்பு தொழில் நுட்பத் துறையில் மேலும் முன்னேற்றம் அடைந்திட வேண்டும் என்பதற்காகவும் ஆலோசனைகளைப் பெறுவதற்காக உங்கள் அனைவரையும் இன்று அழைத்துள்ளோம். இது தொடர்பாக எங்கள் அரசு தொடர்ந்து மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களுடைய கருத்துரைகளை வழங்கிட வேண்டுகிறேன்.

தகவல் தொடர்பு தொழில்நுட்பத் துறைக் கொள்கை களை வகுப்பதில் உங்கள் கருத்துரைகள் மதிப்பு வாய்ந்தவையாக அமையும். நாம் அனைவரும் இணைந்து தகவல் தொழில்நுட்பத் தொழில்துறையில் தமிழகத்தை உலகின் தலைமையகமாக உருவாக்கிடுவோம். தமிழக மக்கள் மகிழ அவர்கள் வாழ்வில் வளம் குவிப்போம்!

இக்கூட்டத்தில் பங்கேற்றவர்கள் விவரம் வருமாறு:

மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் – திரு. ஆ. இராசா, துணைத் தலைவர்,

உறுப்பினர்கள்:– கோபால் சீனிவாசன் (சி.ஐ.ஐ), டாக்டர் எம்.அனந்த கிருஷ்ணன் (மிட்ஸ்), என்.மகாலிங்கம் (டி.சி.எஸ்), டாக்டர் அனந்த் (ஐ.ஐ.டி), லஷ்மிநாராயணன் (சி.டி.எஸ்), டாக்டர் டி.விஸ்வநாதன் (அண்ணா பல்கலைக்கழகம்), ரஞ்சித் நரசிம்மன் (எச்.சி.எல்), லஷ்மண் படிகா (விப்ரோ), அருண் (ஸ்பெல்), அருண் ஜெயின்(போலாரிஸ்), எச்.ஆர்.பினோத் (இன்போஸிஸ்), டாக்டர் டி.சுப்பு சுப்ரமணியம் (சத்யம்), அசோக் பக்தவச்சலம் (கேஜி குழு), ஏ.குருராஜ் (பிளக்ஸ்ட்ரானிக்ஸ்), பிரமோத் ஜெயின்(டெல்), பிரேமநாதன் (சி.ஐ.ஐ, திருச்சி), புருஷோத்தமன்(நாஸ்காம்), ஸ்ரீராம் ஐயர் (சி.ஐ.ஐ., சென்னை), சபியாசச்சி பத்ரா (நோக்கியா),

அலுவலர்கள்:– தலைமைச் செயலாளர், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை கூடுதல் செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் துறை செயலாளர், தொழில்துறை, செயலாளர், நிதித்துறை செயலாளர், தமிழ்நாடு மின்னணு நிறுவனமேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் தேசிய தகவல் மைய துணை இயக்குநர், தொழில் வழிகாட்டி நிறுவன இயக்குநர், மின் ஆளுமை இயக்குநர், இந்திய மென்பொருள் பூங்கா இயக்குநர் ஆகியோர் கூட்டத்தில் பங்கேற்றனர்.

⁂






# நோய் நொடிகளின்றி தூய்மையாக வாழ, போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருக்க புதிய புதிய நகரங்கள் அமைந்தாக வேண்டும்

அகில இந்திய கட்டுனர் வல்லுனர் சங்கம் (தென்னக மையம்) சார்பில் சென்னை கலைவாணர் அரங்கில் 26.8.2007 அன்று நடைபெற்ற கட்டுனர் தின வெள்ளி விழா, கட்டுமானத் தொழிலாளர்களைச் சிறப்பிக்கும் விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

அகில இந்திய கட்டுனர் வல்லுநர் சங்கத்தின், தென்னக மையத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வாழ்த்துரைக்க வந்துள்ளேன். இந்தச் சங்கத்தின் விழாக்களுக்கு நான் வருவது என்பது புதிதல்ல, ஏற்கெனவே அவர்களின் அழைப்பையேற்று, ஒரு பெரிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு வைத்த கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்ற முடியாவிட்டாலும், சிலவற்றை நிறைவேற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்ற முறையில் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதிலே மிகுந்த பெருமை அடைகிறேன்.






இன்று நடைபெறுகின்ற இந்த விழா மிகுந்த சீரோடும் சிறப்போடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் "சிமெண்ட்டோடும்" நடைபெற்றால் இன்னும் உங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்து முடித்து விட்டுத்தான், விரைவில் "சிமெண்ட்" பற்றிய சங்கடம் தீரும் என்ற நம்பிக்கையை உங்களுக்குத் தருவதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். அதற்கான முயற்சிகளில் நம்முடைய அரசின் செயலாளர்கள், அதிகாரிகள் நான் காட்டுகின்ற வேகத்தைக் காட்டி, விரைவில் அதனைச் செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையும் எனக்குண்டு. அந்த நம்பிக்கையோடு நீங்கள் இருக்கலாம் என்பதை நான் இந்த விழாவினுடைய தொடக்கக் கட்டத்திலேயே குறிப்பிடுகிறேன். உங்களுடைய முயற்சிகள் வென்றிடும், உங்களின் எண்ணங்கள் நிறைவேறிடும், நீங்கள் வைக்க நினைக்கின்ற கோரிக்கைகள் முதற்கட்டத்திலே நிறைவேறியது என்று சொல்லா விட்டாலும், சற்று ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு நிறைவேறும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சங்கத்தினுடைய பெயரே "அகில இந்திய கட்டுனர் வல்லுநர் சங்கம்" என்றாலும், கட்டுமானத் தொழிலாளர்கள் எல்லாம் இந்தச் சங்கத்துடன் இணைந்து பணியாற்றுபவர்களாவர். இதிலே உள்ள சொற்களின் இணைப்பு இருக்கிறதே, அது எவ்வளவு அருமையான அழகான உணர்ச்சியுள்ள இணைப்பு என்பதை நான் உங்களுக்குப் புரிய வைக்க விரும்புகிறேன்.

**கட்டுமானத் தொழிலாளர்களிடத்திலே பற்றும் பாசமும் உண்டு**

கட்டுமானம் என்பதை இரண்டாகப் பிரித்தால் – முதலில் உங்களிடத்திலே "கட்டுப்பாடு" வேண்டும், அதற்குத்தான் "கட்டு". கட்டும் வேண்டும், மானமும் போற்றப்பட வேண்டும். இரண்டையும் போற்று கின்றவர்கள் நீங்கள் என்பதை நான் நன்றாக அறிவேன். கட்டும் மானமும் இருந்தால்தான், மானத்தைக் காப்பாற்றுகின்ற அந்தக் கட்டுப்பாட்டு உணர்வு இருந்தால்தான், சிறப்படைய முடியும். இந்தக் கட்டுமானத் தொழிலாளர்கள் இணைந்த, கட்டுனர் வல்லுநர் சங்கத்தின் தென்னக மையத்தைப் பொறுத்தவரையில் நான் நீண்ட நாட்களாக இதனுடைய தலைவர், நிருவாகிகள் அனைவரையும் நன்றாக அறிவேன். அவர்களைக் காணமுடியாத நேரத்தில், அவர்களையெல்லாம் கண்டதைப் போன்ற வாய்ப்பை எனக்கு தம்பி துரைமுருகன் அடிக்கடி நினைவூட்டிக் கொண்டிருப்பார். அவர்களுக்கு தேதி தருவதிலே கூட அவர் காட்டிய ஆர்வம் சாதாரணமானதல்ல. இந்தத் தேதியைத் தருவதற்கு எனக்குள்ள சங்கடங்கள், தம்பி துரைமுருகனுக்குத் தெரியும் என்றாலுங்கூட, இந்தத் தேதியை அவர் என்னுடைய நாட்குறிப்பிலே இருந்து பிய்த்தெடுத்து அவர்களிடம் கொடுத்திருக்கிறார் என்று சொன்னால், தம்பி துரைமுருகனின் பொதுப்பணித் துறைக்கும், இந்தக் கட்டுமானத் துறைக்கும் உள்ள தொடர்பு உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும், நானும் ஒரு காலத்திலே பொதுப்பணித் துறையின் அமைச்சராக இருந்தவன் என்ற முறையில், அந்தப் பற்றும்



பாசமும் கட்டுமானத் தொழிலாளர்களிடத்திலே, கட்டுனர் வல்லுநர்களிடத்திலே எனக்கு என்றைக்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுடைய பல கோரிக்கைகளை முன்பு பிரதமராக இருந்த தேவகவுடா அவர்களோடு உங்கள் மாநாடு ஒன்றிலே நான் கலந்து கொண்ட போது வைத்தீர்கள். அப்போது மொத்தம் 11 கோரிக்கைகளை வைத்தீர்கள். அதிலே மாநில அரசுக்கு சம்பந்தப்பட்ட மூன்று கோரிக்கைகளையும் அதே இடத்தில் நிறைவேற்றியதாக எனக்கு நினைவு. மீதமுள்ள எட்டு கோரிக்கைகளை தேவகவுடா அவர்கள் பிரதமர் என்ற முறையில் நிறைவேற்றுவார் என்று நான் அப்போது கூறினேன். அவர் நிறைவேற்றினாரா இல்லையா என்பது உங்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது.

இப்போது இங்கே வீற்றிருப்பவர்கள், இந்த விழாவிலே கலந்து கொண்டிருப்பவர்கள் எல்லாம் கட்டிடங்களைக் கட்டுவதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பேசி அதற்காகப் பெருந்தொகை செலவிட்டு ஆட்களை வைத்து, தொழிலாளர்களை வைத்து அந்தப் பணியை நிறைவேற்றுகின்றவர்களின் எண்ணிக்கையா என்றால் இல்லை. அந்தப் பணியை நிறைவேற்றுகின்ற பாட்டாளிகள், தொழிலாளர்கள் அத்தனை பேரும் உங்களோடு இருக்கின்ற காரணத்தால் தான் இந்த அரங்கம் நிரம்புகின்ற அளவிற்கு அவர்கள் இங்கே கூடியிருக்கின்ற காட்சியினை என்னால் காண முடிகிறது.

**கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் உதவி**

ஆகவே கட்டுமானத்தில் ஈடுபட்டிருக்கின்ற பத்துபேர், நூறுபேர் என்று நான் அலட்சியப்படுத்த முடியாமல் ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில் உங்களைச் சார்ந்தவர்கள் கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள் என்பதும், அந்த வாரியத்தினை இன்றைய அரசு மிக நேர்த்தியாக நடத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், 13–5–2006 அன்று இந்த ஆட்சி என் தலைமையில் ஐந்தாவது முறையாக அமைந்தது. அமைந்தது முதல் 24–8–2007 வரையில் உள்ள கணக்கைப் பார்த்தால், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் 13–5–2006 முதல் 24–8–2007 வரையில் 4 இலட்சத்து 40 ஆயிரத்து 335 தொழிலாளர்கள் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த விழாவிலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கட்டுமானப் பணிகளின்போது ஏற்பட்ட விபத்துகள் என்பது இயல்பானது – அந்த விபத்துக்களைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல்தான் வீடு கட்டவோ, மாளிகை கட்டவோ, கோபுரங்கள் கட்டவோ, கோட்டைகள் கட்டவோ நீங்கள் துணிந்து வருகிறீர்கள். அப்படிப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற உங்களுக்கு விபத்துக்களின் காரணமாக ஏற்பட்ட மரணங்களில், பாதிக்கப்பட்டு மரணம் அடைந்த 86 தொழிலாளர் குடும்பங்களுக்கு 13–5–2006 முதல் 24–8–2007 வரையில் இந்த பதினைந்து மாதக் காலத்தில் 87 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் உதவி கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் வழங்கப் பட்டிருக்கின்றது.

காயம் அடைந்த 18 தொழிலாளர்களுக்கு 7 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் உதவி வழங்கப் பட்டுள்ளது.

இயற்கை மரணங்கள் எய்திய 5,527 கட்டுமானத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 8 கோடியே 96 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் உதவி நிதியாக வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த வாரியங்களினால் என்ன பயன் என்று கேட்பவர்களுக்கு நான் பயன்களை இந்தப் பதிலின் மூலமாகத்தான் தெரிவிக்க விரும்புகிறேன்.

9,510 கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் மகன், மகள் திருமணச் செலவிற்கு வழங்கப்பட்ட உதவித்தொகை மாத்திரம் 1 கோடியே 90 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்.

அதையன்னியில் உங்கள் சங்கத் தலைவர்கள் போன்றவர்கள் இன்னும் எவ்வளவோ உதவிகளை வழங்கியிருப்பார்கள். அதையெல்லாம் நான் இந்தக் கணக்கிலே கொண்டுவரவில்லை.

1,144 கர்ப்பிணிப் பெண்களின் பேறுகாலச் செலவிற்காக 50 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் இந்த வாரியத்தின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது.

41,680 கட்டுமானத் தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்புச் செலவிற்காக வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை 6 கோடியே 32 இலட்சத்து 47 ஆயிரத்து 643 ரூபாய் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1,321 தொழிலாளர்களுக்கு – கண்ணாடி வாங்க வழங்கப்பட்ட உதவித் தொகை 6 இலட்சத்து 26 ஆயிரத்து 239 ரூபாய்.

1,239 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகை 1 கோடியே 13 இலட்சத்து 9 ஆயிரத்து 139 ரூபாய்.

மொத்தம் 60 ஆயிரத்து 525 கட்டுமானத் தொழிலாளர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் பல்வேறுநலத்திட்டங்களின் கீழ் இந்த 15 மாதக் காலத்தில் இந்த அரசின் சார்பாக வாரியத்தின் சார்பாக வழங்கப்பட்ட உதவி நிதி 18 கோடியே 90 இலட்சத்து 5 ஆயிரத்து 21 ரூபாய் என்பதை நான் பெருமிதத்தோடு, பெருமையோடு, பேரானந்தத்தோடு அவர்களுக்கு உதவுகிறோம் என்ற மன ஆறுதலோடு உங்களிடத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள் முன்பிருந்த அரசிலே வழங்கப்படவில்லையா? நான் முன்பிருந்த அரசையும், இப்போதுள்ள அரசையும் ஒப்பிட்டுக்காட்ட விரும்பவில்லை. ஆனால் கட்டிடத் தொழிலாளர்களுக்கு – கட்டிடத் தொழிலாளர் நலவாரியத்திலே உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கு – இந்த உவமை புரியும் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

கடந்த கால அரசை உதாரணம் காட்டலாமா என்றால், ஒரு கட்டிடத்தைக் கட்டும்போது, இதை ஏன் புதிதாகக் கட்டுகிறீர்கள் என்று கேட்டால், பழைய கட்டிடம் இப்படி இருந்தது, அதனால் பழைய கட்டிடத்தைச் சீர்செய்து, இந்தப் புதிய கட்டிடத்தை எழுப்புகிறோம் என்று சொல்வதைப் போலத்தான் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் நலத் திட்ட உதவிகள் வழங்கிய ஒப்பீடு என்று பார்த்தால், 2001 முதல் 2006 வரை ஐந்தாண்டு கால ஆட்சியில் – ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் – அ.தி.மு.க. ஆட்சியில் 66 ஆயிரத்து 323 பேருக்கு, 22 கோடியே 94 இலட்சத்து 33 ஆயிரத்து 224 ரூபாய் வாரியத்தின் சார்பாக நிதி உதவி செய்யப்பட்டது. ஆனால் கடந்த 15 மாத தி.மு.கழக ஆட்சியில் – 60 ஆயிரத்து 525 பேருக்கு, 18 கோடியே 90 இலட்சத்து 5 ஆயிரத்து 21 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டிடத்தையும் பாருங்கள், புதிதாக எழுப்பப்பட்டுள்ள இந்தக் கட்டிடத்தையும் பாருங்கள் என்பதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். புதிய கட்டிடத்தைப் பற்றிப் பேச வேண்டுமா வேண்டாமா என்பதை நீங்களே சிந்தித்துப் பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றும் உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நண்பர் ராதாகிருஷ்ணன் அவர்கள் இங்கே பேசும்போது, ஒரு கட்டுனர் வல்லுநர் சங்கத்தின் விழாவாகக் கருதாமல், ஏதோ இலக்கிய விழா போல, ஒரு தமிழ்ச் சங்க விழா போல எனக்கு நடைபெறுகின்ற பாராட்டு விழா போல – எனக்கு ஏதோ பட்டமோ, விருதோ கொடுத்து இந்த விருதுக்கு இவன் தகுதியானவன்தானா என்பதற்காக அளிக்கின்ற சான்றுகளை அளிக்கின்ற விழா போல கருதிக் கொண்டு பேசினார். இவ்வளவும் வழங்கிவிட்டு, கோரிக்கை இல்லையென்று கருதாதே என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அதை பயமுறுத்தலாக நான் எடுத்துக் கொள்ளவில்லை, அச்சுறுத்தலாக எடுத்துக் கொள்ளவில்லை. கோரிக்கை வைப்பதால் நான் கோபப்படுகிறவனும் அல்ல, கோரிக்கை வைக்காவிட்டால்தான் வருத்தமாக இருக்கும். என்ன இவர்களுக்கு என் மீது ஏதோ காழ்ப்பு போல் இருக்கிறது, நம்பிக்கை இல்லை போல் இருக்கிறது, அதனால்தான் கோரிக்கை வைக்காமல் விட்டு விட்டார்கள் போலும் என்று நான் என்னைப் பற்றியே சந்தேகப்படுவேன். ஆனால் என்ன கோரிக்கை வைக்கப் போகிறார்கள் என்பதை தம்பி துரைமுருகன் என்னிடத்திலே சொன்னார்.

**மன்னன் கரிகாலன் பெயரில் விருது**

இங்கே நம்முடைய தொகுப்பாளர், நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் சொல்லும்போது, கட்டிடம் சம்மந்தப்பட்ட விழா என்பதால், இந்த மேடையையே ஒரு கட்டிடமாக ஆக்கிக் கொண்டு, வாசற்படி, முற்றம், அறை பிறகு நாம் போகத் தேவையில்லாத பள்ளியறை என்றெல்லாம் அவர் குறிப்பிட்டு, இன்னின்ன அறையிலே இன்னின்னது நடக்கும் என்று சொன்னார்கள். அதைப்போல என்ன கோரிக்கை என்பதை ரகசியமாக தம்பி துரைமுருகனும், ராதாகிருஷ்ணனும் பள்ளி அறையிலேதான் பேசியிருப்பார்கள் போல் இருக்கிறது. ஆண்டுதோறும் இவர்கள் இந்த அமைப்பின் சார்பாக கட்டிடக்கலை வித்தகர்களுக்கு, அதிலே சிறப்பு எய்தியவர்களுக்கு, வல்லுநர்களாக இருப்பவர்களுக்கு, புகழ் பெறுகிறவர்களுக்கு, பாராட்டப்பட வேண்டியவர்களுக்கு ஒரு பாராட்டு விருது வழங்க வேண்டும், அந்த விருதுக்குப் பெயர் – எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு கல்லணை கட்டினானே, அந்தத் தமிழ் விஞ்ஞானி, அந்தப் பொறியாளன், மன்னன் "கரிகாலன் விருது" என்று அதற்குப் பெயர் இருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, அதற்கு ஒரு காரணமும் சொன்னார்கள்.

"முதன்முதல் கருணாநிதி தன்னுடைய பெயருக்கு சிறப்புப் பெயர், புனைப் பெயராக வைத்துக்கொண்டது, "கரிகாலன்" என்றுதான் வைத்துக் கொண்டார், அதனால் இதற்கும் "கரிகாலன்" என்றே விருதுக்குப் பெயர் இருக்க வேண்டும் " என்று கேட்டார்கள், பரவாயில்லை, நான் கரிகாலன் என்ற புனைப் பெயரில்






பல நேரங்களில் பல கட்டுரைகளை, கவிதைகளை எழுதியிருந்தாலுங்கூட இன்றைக்கு தென்னக மையத்தின் கட்டுனர் வல்லுநர் சங்கத்திற்காக கரிகாலனை உங்களுக்கு தத்தம் செய்கிறேன் என்று குறிப்பிட்டு, அந்தப் பெயரிலே அந்த விருதுகள் வழங்கப்படலாம், அதற்கான உதவிகள், அதற்கான ஆதரவுகள், அரசின் சார்பில் எப்படி உங்களுக்கு வழங்க வேண்டுமோ, அவைகளை வழங்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் எடுத்துக் கூறிக் கொள்கிறேன்.

கட்டிடங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கின்ற புகழ், பெருமை, சிக்கல், நெருக்கடி இவைகள் மாறி மாறி தமிழகத்திலே மாத்திரமல்ல, நாட்டின் பல பகுதிகளிலே இருப்பதை நாம் காணுகிறோம். ஒரு நல்ல நகரத்தை உருவாக்கவேண்டுமென்று எண்ணினால், அதற்கு எவ்வளவு இடைஞ்சல்கள் வருவதை நீங்கள் காணுகிறீர்கள்.

**சென்னை பெரிய அளவிலே அமையவேண்டும்**

சென்னையையே நீங்கள் வானத்திலேயிருந்து பார்த்தால், புதிதாக வளர்ந்த சென்னை எப்படிப்பட்ட அமைப்பு ரீதியாக இருக்கிறது என்பதும், பழைய சென்னை, வடசென்னை போன்ற பகுதிகள் எந்த அமைப்பிலே இருக்கிறது என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவ்வளவு தூரம் போகத் தேவையில்லை. சென்னைக்கும் புதுச்சேரிக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தாலே, பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரர்கள் வந்த பிறகு, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அமைக்கப்பட்ட புதிய பட்டணம். அப்படி புதிதாக அமைக்கப்பட்ட காரணத்தால், நீங்கள் பாண்டிச்சேரியிலே எந்தத் தெருவிலே நடந்தாலும், ஓடினாலும், வாகனங்களிலே சென்றாலும், இந்தக் கோடியிலே இருந்து அந்தக் கோடி தெரிகின்ற வரையிலே ஒரு திருப்பத்தைக் காண முடியாது, நெடுஞ்சாலைகளைத் தான் காண முடியும். அவ்வளவு அழகான வடிவமைப்பு – பக்கத்திலே இருக்கின்ற பாண்டிச்சேரியிலேயே காண முடிகிறது. ஆனால் சென்னையிலே காண முடியாததற்குக் காரணம், இங்கே அவ்வப்போது வந்து குடியேறிய மக்கள், அவர்கள் இஷ்டத்திற்கு அங்கங்கே குடியேறிய காரணத்தால், அவர்கள் அங்கெங்கே வாழ நேரிட்டது. அதற்கு ஏற்றாற்போல் நகர அமைப்பையும் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனால் தான் நகர அமைப்பை நல்ல முறையிலே மாற்றி இதை ஒழுங்குபடுத்த வேண்டும், செம்மைப்படுத்த வேண்டும் என்று நாம் கருதுகிற நேரத்தில் அதற்கு எத்தனையோ இடையூறுகள். அந்த இடையூறுகள் வேண்டுமென்றே வருகின்ற இடையூறுகள் அல்ல. இருக்கின்றவர்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகள் – அந்த இடையூறுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் அரசாங்கத்தை நெருக்கடிக்கு

ஆளாக்குகிறார்கள். புதிதாக எதுவும் உருவாவதற்கு முடியாத ஒரு சூழ்நிலையிலே அவர்களும் புலம்பித் தவிக்கிறார்கள். அந்த ஏழைகளின் கஷ்டத்திற்கும் நாம் எழுப்ப வேண்டிய புதிய நகரத்தின் ஆவலுக்கும் இடையிலே இருக்கின்ற பரிணாமத்தை எண்ணிப் பார்த்து அவர்களும் ஒரு புதிய நகரம் வர வேண்டும் என்று எண்ணுவது – புதிய நகரம் வர வேண்டும் என்பதற்காக அல்ல, சென்னையிலே இருக்கின்ற போக்குவரத்து நெரிசல் குறைவதற்காகவாவது நம்முடைய சென்னை மாநகரம் இன்னும் பெரிய அளவிலே பரப்பளவு கொண்டதாக அமைய வேண்டும்.

சென்னை மாநகரத்திலே மாலையிலே நான் அண்ணா நகரிலிருந்து வீராசாமியை வரச்சொல்லி தொலைபேசியிலே அழைத்தால், அவர் புறப்பட்டு என் வீட்டுக்கு வந்து சேருகிற வரையில் நான்கு முறை நான் போன் செய்து எங்கே வருகிறீர்கள் என்று கேட்க வேண்டும். அந்த அளவிற்கு போக்குவரத்து நெரிசல் இப்போது இருக்க என்ன காரணம்? நகரம் சிறிதாக இருக்கிறது. மக்களின் வளர்ச்சி அதிகமாக இருக்கிறது. நாம் சொன்னதை மக்கள் கேட்கவில்லை. இப்போது மக்கள் சொல்வதை நம்மால் கேட்க முடியவில்லை. அப்போது குடும்பக் கட்டுப்பாடு எல்லாம் சொன்னோம். சிகப்பு முக்கோணம் எல்லாம் போட்டுக் காட்டினோம். அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்றெல்லாம் சொன்னோம். வளமோடு பெற்று அளவோடு வாழ்கிறார்கள் தலைகீழாக மாறிவிட்டது. அதுதான் இன்றைக்கு நிலைமை. ஆகவே வளமோடு நாம் வாழ வேண்டுமேயானால், அளவுக்கு மீறிப் பெற்றவர்களை ஒரு நிலைப்படுத்தி அவர்களும் சேர்ந்து வாழ, நகரங்களை அகலமாக ஆக்க வேண்டும். நகரங்களை பரவலாக ஆக்க வேண்டும். நகரங்கள் இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும், விரிவுபடுத்தப்பட வேண்டும். அப்படி விரிவுபடுத்தப்படும் போது – இதை நாம் சொல்லும்போது இவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும், இவர் சொல்வதைப் போல நடந்தால் இன்னும் அதிக கட்டிடங்கள் வரும், நமக்கும் தொழில் கிடைக்கும் என்று நம்முடைய ராதாகிருஷ்ணன் போன்றவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை, அவர்களுடைய மகிழ்ச்சி மாத்திரமல்ல, போக்குவரத்திலே இருக்கிற நெருக்கடி குறைந்தால் எத்தனையோ நன்மைகள். நான் சொல்லுகிறேன், நோய் நொடி கூடக் குறையும். போக்குவரத்திலே ஏற்படுகின்ற புழுக்கத்தால் நெருக்கத்தால் அதனால் ஏற்படுகின்ற தொத்து வியாதிகள், காய்ச்சல் போன்ற பல்வேறு விதமான பயங்கர வியாதிகள் எல்லாம்கூட வராது.

**"வளமோடு நாம் வாழ வேண்டுமேயானால், அளவுக்கு மீறிப் பெற்றவர்களை ஒரு நிலைப்படுத்தி அவர்களும் சேர்ந்து வாழ, நகரங்களை அகலமாக ஆக்க வேண்டும். நகரங்களை பரவலாக ஆக்க வேண்டும். நகரங்கள் இன்னும் விஸ்தரிக்கப்பட வேண்டும், விரிவுபடுத்தப்பட வேண்டும்".**

அப்படி நோய்நொடியின்றி தூய்மையாக வாழவும் இந்தப் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் இருந்தால்தான் முடியும். அது இல்லாமல் இருப்பதற்கு புதிய புதிய நகரங்கள் அமைந்தாக வேண்டும். நம்முடைய நகரங்கள் விரிவுப்படுத்தப்பட வேண்டும். அப்படி விரிவுப்படுத்தப்படுவதற்கு இந்தத் துறையிலே இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அவர்கள் கட்டுனர் வல்லுநர்களாக இருந்தாலும் சரி, அந்தக் கட்டிடத் தொழிலாளர்களாக இருந்தாலும் சரி அத்தனை பேரும் ஒத்துழைக்க வேண்டும், அவர்களுக்கு பொதுமக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இந்த இனிய விழா எல்லோருக்கும் ஒரு பாடமாக அமைய வேண்டும், எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும், போக்குவரத்து நெரிசலும் வாழ்வாதாரத்திலே ஏற்படக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பது எப்படி என்ற அந்தப் பாடத்தை நாம் கற்றாக வேண்டும் என்பதை எடுத்துக் கூறி, இந்த இனிய விழாவிலே என்னை நல்ல வார்த்தைகள் பல கூறி பாராட்டிய நம்முடைய ராதாகிருஷ்ணன் மற்றும் அவர்களுடைய அமைப்பைச் சேர்ந்த வல்லுநர் சங்கத்தைச் சேர்ந்த அருமை நண்பர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த விழாவிலே நானும், தம்பிகள் துரைமுருகனும், பரிதி இளம்வழுதியும் கலந்து கொண்டு உங்களை யெல்லாம் சந்திக்கின்ற ஒரு அருமையான வாய்ப்பு கிடைத்தமைக்காக என் சார்பிலும் அரசு சார்பிலும் உங்களுக்கு நன்றி கூறி, உங்களுடைய தேவைகளை, கோரிக்கைகளை தேவைப்படும் போதெல்லாம் சொல்லுங்கள், முடிந்த வரையில் அவைகளை நிறைவேற்றித் தருகிறோம் என்று குறிப்பிட்டு விடைபெறுகிறேன்.

* * *



# மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரில் உயர்கல்வி நிறுவனங்களைத் திறக்க வேண்டும்

மாண்புமிகு
**இந்தியப் பிரதமர்**
அவர்களுக்கு
மாண்புமிகு
**தமிழ்நாடு முதலமைச்சர்**
அவர்கள் கடிதம்





**மா**ண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 18.8.2007 அன்று எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது :–

60ஆவது ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி டெல்லி செங்கோட்டை கொத்தளத்திலிருந்து நாட்டுக்கு நீங்கள் நிகழ்த்திய உரையை, நான் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டு, கல்வி, மருத்துவம், விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளில் பொது செலவினம் குறித்து தாங்கள் வலியுறுத்தலைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

வேளாண் துறைக்கு 25,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும் தங்களது முடிவுக்காக உங்களை மனதாரப் பாராட்டுகிறேன். இது தற்போது மிகவும் தேவைப்படுவதாகும். இந்தத் துறைகள் எனது இதயத்திற்கும் மிக நெருக்கமானவை ஆகும். "இந்தியாவை நாம் கல்வி அறிவு பெற்றவர்கள், திறமை படைத்தவர்கள், படைப்பாற்றல் திறன் கொண்டவர்கள் கொண்ட தேசமாக மாற்றுவோம்'' என்று நீங்கள் கூறியதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்.

**பொருத்தமான அறிவிப்பு**

எப்போதுமே தமிழ்நாடு கல்விக்கு அதிலும் குறிப்பாக தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்விக்கு மிகவும் அழுத்தம் கொடுத்து வந்துள்ளதைத் தாங்கள் அறிவீர்கள். தற்போதைய தேவை நாட்டை பொருளாதாரத் துறையில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய சர்வதேசத் தரத்துடன் தகுதிவாய்ந்த பொறியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் நிருவாகிகளைப் பெரும் எண்ணிக்கையில் உருவாக்குவதாகும். இந்தப் பின்னணியில் புதிய இந்திய நிருவாகவியல் கழகங்கள், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய தகவல் தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல், கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகங்கள் ஆகியவற்றை அமைக்க உங்களது அறிவிப்பு மிகவும் பொருத்தமானது, சரியான தருணத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் ஆகியவை மக்களுக்கு கிடைத்திட மாநில அரசு இடையறாத முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. இப்படிப்பட்ட திறமையான மனித ஆற்றல் இருப்பதால் தமிழகம் தொழில் மற்றும் வர்த்த கத்தில் பெருமளவிலான முதலீடுகளைக் கவர முடிந்துள்ளது.

இந்த முயற்சிகள் தொடரவும், மேலும் வலுப்பெறவும், மதுரையில் இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி) ஒன்றையும், திருச்சியில் இந்திய அறிவியல், கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (ஐஐஎஸ்இஆர்) ஒன்றையும், கோவையில் இந்திய நிருவாகவியல் கழகம் (ஐஐஎம்) ஒன்றையும் திறக்க தங்களது தலையீட்டை வேண்டுகிறேன்.

அத்துடன் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் சேரும் மாவட்டங்களில் கல்லூரிகளை அமைக்கவும், ஒவ்வொரு வட்டாரத்திலும் புதிய உயர்தரப் பள்ளிகளையும், உகந்த எண்ணிக்கையில் தொழிற்பயிற்சி நிறுவனங்களை (ஐடிஐ), பாலிடெக்னிக்குகள், தொழிற் கல்விப் பள்ளிகள் மற்றும் திறன் வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றை அமைத்து மாநிலத்திலுள்ள பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சி கிடைப்பதை உறுதி செய்யவும் தங்களது அறிவிப்பையும் நாங்கள் வரவேற்போம்.

மேலே கோரியவாறு தமிழ்நாட்டில் புதிய ஐஐடி, ஐஐஎம் மற்றும் ஐஐஎஸ்இஆர் ஆகியவை அமைக்கப்பட நீங்கள் சாதகமாக முடிவை எடுப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது, தமிழ்நாடு பெருமளவிலான இளைஞர்களுக்கு தரமான உயர்கல்வி மற்றும் தொழிற் பயிற்சி வழங்க தமிழகத்தின் கனவை நனவாக்கி, அதன்மூலம் மனிதவள ஆற்றல் வளர்ச்சியை வேகப்படுத்தி தொழில் மயமாக்குதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் வேகத்தைத் தொடர்ந்து தக்க வைக்கவும் உதவும்.

## சமச்சீர் கல்வித் திட்டப் பரிந்துரைகளை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை

**த**மிழகத்தில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை அனைத்து மாணவர்களும் ஒரே தரத்திலான கல்வி பயில, சமச்சீர் கல்வித் திட்டப் பரிந்துரைகளை ஆய்வு செய்து நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் பள்ளிக் கல்வித் துறையில் தற்பொழுது மாநில வாரிய கல்வி முறை, மெட்ரிகுலேஷன் கல்வி முறை, ஆங்கிலோ இந்தியன் கல்வி முறை, ஓரியண்டல் கல்வி முறை என்று நான்கு விதமான கல்வி முறைகள் உள்ளன. இத்தகைய கல்வி முறைகளால் மாணவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான ஒரே தரத்திலான கல்வித் கற்க இயலாத நிலை உள்ளது. இக்குறைபாட்டைக் களைந்திட திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேயே தமிழகத்தில் சமச்சீரான கல்வி அனைவருக்கும் கிடைத்திட ஆவன செய்யப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் தி.மு.க. அரசு அமைந்தவுடன் சமச்சீர் கல்வித் திட்டம் கொள்கை முடிவாக சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்டது. இந்த அரசாணையின் படி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் ச.முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் 9 உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு விரிவான ஆய்வுகள், கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த ஆய்வறிக்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் 4.7.2007 அன்று அளிக்கப்பட்டது. வரும் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் இவ்வறிக்கை சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இக்குழுவின் பரிந்துரைகளை மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் நாகநாதன் மற்றும் கல்வித்துறை உயர் அலுவலர்கள் சார்ந்த குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவது பற்றிய சிறப்பம்சங்கள் குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாகத் தமிழகத்தில் 1 முதல் 12–ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களும் ஒரே விதமான, ஒரே தரத்திலான கல்வி முறையில் பயில்வதற்கேற்ப சமச்சீர் கல்வித் திட்டப் பரிந்துரைகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று ஆய்வு செய்ய அனைவருக்கும் கல்வி இயக்க மாநிலத் திட்ட இயக்குநர் திரு.எம்.வி.விஜயகுமார் அவர்களை நியமித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் டாக்டர் ச.முத்துக்குமரன் குழு அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வழிமுறைகளை வகுத்து மாநிலத் திட்டக்குழு மற்றும் தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) ஆகியவற்றை கலந்து ஆலோசித்து தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ※





# மொழி வளர்ந்தால் மக்கள் வளர்வார்கள் மக்கள் வளர்ந்தால் நாடு வளரும்

சென்னையில் 18.8.2007 அன்று நடைபெற்ற மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத் தொடக்க விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

Before I commence my speech in Tamil on this historic occasion, as a matter of brief introduction, I wish to say a few things.

Parithimar Kalaignar was the first Tamil Scholar, who demanded that Tamil should be declared as a Classical Language.





His commemorative Stamp was released only yesterday by the Union Government at Chennai.

Today we are conducting this Historic Function. This is a rare co-incidence.

I feel proud to say that Tamil is the first language, declared as a Classical Language.

This announcement fulfilled more than a Century-old dream of the Tamils. On behalf of the people of Tamil Nadu, and Tamils living across the World, I convey my gratitude to Hon'ble Prime Minister of India, Dr.Manmohan Singh and the UPA Chair-person, Tmt.Sonia Gandhi, for this spectacular achievement.

Tamils all over the world are equally grateful to Hon'ble Union HRD Minister, Thiru. Arjun singh, for this Central Institute of Classical Tamil at Chennai.

Right from the initial stage, when the Central Institute at Chennai was proposed, the amount of enthusiasm and effort shown by Thiru Arjun Singh Ji in getting the proposal materialised, is really unforgettable. I am personally thankful to him for this landmark achievement.

Tamils and Tamil History will always remember three names in this regard - Thirumathi Sonia Gandhi, Dr. Manmohan Singh and Thiru. Arjun Singh.

இப்போது நான் செம்மொழிக்கு வருகிறேன். பெரியோர்களே, உலகெங்கும் வாழ்கிற தமிழர்களின் உணர்வார்ந்த வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்தது, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய வா.செ. குழந்தைசாமி அவர்கள் குறிப் பிட்டதைப் போல், பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே. நான் அன்றிருந்த வாஜ்பாய் அரசிடம் இந்தக் கோரிக்கையை பலமுறை வைத்து கடிதங்கள் எழுதியும் கூட, கடிதங்கள் சேருகிற இடத்தில் போய்ச் சேர்ந்தனவே தவிர, அதனால் எந்தப் பலனும் கிட்டவில்லை என்பதை இங்கே உரையாற்றிய வர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்தப் பலன் கிட்டியது என்கிற பரவசம் பல கண்டங்களில் வாழ்கிற தமிழர்களுடைய உள்ளத்தையெல்லாம் துள்ளாட்டம் போடச் செய்ததை நீங்கள் அறிவீர்கள். நீங்களும் அந்த குதியாட்டத்தில் சேர்ந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தீர்கள். இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு இன்றைக்கு ஒரு வலுவான அடிப்படை, செம்மொழியாக உயர்வு பெற்ற தமிழ் மொழிக்கு அமைக்கப்படுகிறது. இந்த அடிப்படை ஏன் எதற்காக என்பதையெல்லாம் விளக்கத் தேவையில்லை, நம்முடைய பெருமதிப்புக்குரிய வா.செ. குழந்தைசாமி அவர்கள் இங்கே விளக்கியிருக்கிறார்கள்.

இதற்காக அரும்பாடுபட்டவர்கள், இந்த முயற்சி பலிக்க வேண்டும் என்பதற்காக என்னோடும், தமிழக அரசோடும் இணைந்து வாதிட்டவர்கள், பரிந்துரை செய்தவர்கள் எல்லாம் இந்த நேரத்தில் நன்றி உணர்ச்சியோடு பாராட்டப்பட வேண்டியவர்கள். வாழ்த்தப்பட வேண்டியவர்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

மைசூரிலே உள்ள மத்திய மொழியியல் நிறுவனத்தின் நோக்கங்கள் செம்மொழி என்கிற அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலே அமைந்தது அல்ல, அதனுடைய நோக்கங்கள் வேறு, அது ஆற்ற வேண்டிய பணிகள் என்று வகுத்துக் கொண்டிருக்கின்ற விவரங்கள் வேறு. ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் தமிழ் செம்மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது, அந்த செம்மொழியின் ஆக்கமும் ஊக்கமும் மேலும் மேலும் பெருகிடவும், உலகம் முழுதுமுள்ள தமிழர்களுக்கு அது பயன்படவும், தமிழ் அல்லாதோருக்கும் அது ஒரு கருவியாக அமைந்திடவும் என்னென்ன செய்ய வேண்டும், எப்படி நம்முடைய தமிழுக்கு அந்த ஆக்கத்தை வழங்க வேண்டும் என்பதற்குத்தான், மைசூரிலே இந்த மையத்தைக் கட்டிப்போட்டுப் பயன் இல்லை, இது சென்னையிலேயே இருந்தாக வேண்டும் என்ற ஒரு கருத்தை நம்முடைய மத்திய அமைச்சர், மதிப்பிற்குரிய அர்ஜுன் சிங் அவர்களுக்கு நான் எழுதினேன். பொதுவாக அரசுக்கு எழுதுகிற கடிதங்கள் போய்ச் சேருவதற்கும் தாமதமாகும், பதில் கிடைப்பதற்கும் தாமதமாகும். ஆனால் அரசுக்கு ஒரு பிரஜை எழுதுகிற கடிதத்தின் கதி எதுவாக இருக்கும்? அரசுக்கு பிரஜை எழுதுகிற கடிதமே அதுவானால், அரசுக்கு இன்னொரு அரசு எழுதுகிற கடிதம் என்ன ஆகும் என்ற ஒரு கேள்விக்கான பதிலை நான் அனுபவ ரீதியாக உணர்ந்திருக்கிறேன். ஆனால் என்ன ஆகும்? விரைவிலே பதில் கிடைக்கும் என்ற ஒரு பதிலை எனக்குத் தந்த அந்தத் தகுதி வாய்ந்த நண்பர் நம்முடைய அர்ஜுன் சிங் என்று சொன்னால் அது மிகையாகாது.

நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். எங்களுக்கு இந்த மையத்தை, மைசூரிலே இருக்கின்ற மையத்தை தமிழகத்திற்குத் தந்தாக வேண்டும், சென்னையே இந்த மையத்தின் தலைநகரமாக இருக்க வேண்டும் என்று கேட்டு நான் மாண்புமிகு அர்ஜுன் சிங் அவர்களுக்கு 28.11.2006 அன்று கடிதம் எழுதினேன். அந்தக் கடிதம் அதே நாளில் அவருக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அவரிடமிருந்து எனக்குப் பதில் உடனடியாகக் கிடைத்தது. நான் அவருக்கு எழுதிய கடிதத்தில்,

"உலகெங்கும் வாழும் தமிழர்களின், தமிழறிஞர்களின் உணர்வார்ந்த வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு தமிழ் மொழியைச் செம்மொழி என அறிவித்தது. எனினும் செம்மொழித் தமிழின் வளர்ச்சி, தமிழ் மொழியில் ஆய்வு மேற்கொள்ளல் முதலிய பணிகள் மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. மைசூரிலுள்ள மத்திய மொழிகள் நிறுவனத்தின் நோக்கங்கள் செம்மொழி என்னும் கண்ணோட்டத்தில் அமைந்ததல்ல. இந்தியாவின் அனைத்து மொழிகளின் மூலமும் அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் ஒருமைப்பாடு உணர்வு ஆகியவற்றை வளர்த்திடும் நோக்கத்துடன் அந்நிறுவனம் செயல்படுகிறது. எனவே, தமிழ் மொழியின் சிறப்புகளை மேம்படுத்துவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு "மத்திய அரசின் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம்" சென்னையில் அமைக்கப்பட வேண்டும்" என்று மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களுக்கு 28.11.2006 அன்று தமிழக அரசின் சார்பாக நான் கடிதம் எழுதினேன்.

என்ன வேடிக்கை பாருங்கள்? அதற்கு 29.11.2006 அன்றே எனக்குப் பதில் கிடைத்தது. தமிழ் செம்மொழி ஆவதில் நான் காட்டிய

ஆர்வத்தைவிட, நான் காட்டிய வேகத்தை விட, நாமே வெட்கப்படக்கூடிய அளவிற்கு அவர் இதிலே வேகம் காட்டினார். புராணத்திலே தான் சொல்வார்கள், அர்ஜுனனின் அம்பு அவ்வளவு வேகத்தில் சென்றது என்று – இந்த அர்ஜுனனின் அம்பு அதைவிட வேகமாக வந்து, என்னுடைய இதயத்தில் காயத்தை ஏற்படுத்தவில்லை, காதலை ஏற்படுத்தியது.

**29.11.2006** அன்று அவர் எழுதிய கடிதத்தில்

"Dear Shri Karunanidhi Ji,

Kindly recall our discussions on your proposal for establishing a separate Central Institute at Chennai exclusively for the cause of classical Tamil language. I have given deep thought to the suggestion and I agree with you that there is need for special focus on the classical languages. Accordingly, I am asking the Ministry to include a suitable proposal for an Institute for classical Tamil in the Ministry's XIth Plan proposals".

With regards,

Yours sincerely,

Sd/-

**(ARJUN SINGH)**



11ஆவது திட்டத்திலேயே இதனைச் சேர்க்கும்படி என்னுடைய அமைச்சகத்திற்குத் தெரிவித்திருக்கிறேன் என்று எழுதிய கடிதம் எனக்குக் கிடைத்தது. அதற்கு நான் நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினேன்.

இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், நாம் எடுக்கின்ற எந்த முயற்சியானாலும் அந்த முயற்சிகள் நம்முடைய மொழியின் அடிப்படையில், மொழி பேசுகின்ற மக்களின் அடிப்படையில், அந்த மக்கள் வாழ்கின்ற மாநிலத்தின் அடிப்படையில் அதனுடைய வளர்ச்சிக்காக எடுக்கின்ற முயற்சிகள் என்று அவரும் நம்முடைய தூய்மையை உணர்ந்த காரணத்தால், அதற்கு உடனடியாகப் பதில் தர கடமைப்பட்டவர் என்ற முறையிலே அந்தப் பதில்கள் வெளிவந்தன. நமக்கு அனுப்பப்பட்டன.

### மொழி வளர்ந்தால் நாடு வளரும்

இரு சார்பிலும் கொண்டிருந்த எண்ணம் ஏதோ விளம்பரத்திற்காக அல்ல, ஒரு மொழியைப் பற்றிக்கொண்டு, ஒரு மொழியை விளம்பரப்படுத்திக்கொண்டு வளர வேண்டுமென்பதற்காக அல்ல, வளர வேண்டும், யார்? நானோ அவரோ அல்ல. வளரவேண்டும், யார்? மொழி பேசுகின்ற மக்கள், அந்த மொழி வளர்ந்தால் மொழி பேசுகின்ற மக்கள் வளர்வார்கள். அந்த மக்கள் வளர்ந்தால் நாடு வளரும், நாடு வளர்ந்தால் நானிலம் செழிக்கும். இப்படிச் சிந்திக்கின்ற அந்தத் தன்மை எல்லோருக்கும் வேண்டும். அது நானறிந்த



வரையில் டெல்லிப் பட்டணத்திலே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களிடத்திலே நிரம்ப இருப்பதை என்னால் காண முடிந்தது. இல்லாவிட்டால் நான் எழுதிய கடிதங்கள், அவருடைய கைக்குச் சேர்ந்தாலும், அவர் படித்துப் பார்த்தாலும், குறுக்கே இருப்பவர்கள், அதை உடனடியாக கருணாநிதிக்குப் பதில் அனுப்ப வேண்டுமே என்று சொல்கிறவர்களாக இருந்தால் தான் கருணாநிதிக்கு அந்தப் பதில் வந்து சேர்ந்திருக்க முடியும். அப்படிச் சேர்ந்த காரணத்தால்தான் இன்று உங்களையெல்லாம் நான் சந்திக்க முடிந்தது. இவ்வளவு மகிழ்ச்சியோடு சந்திக்க முடிந்தது.

ஆனால் நாம் பெற்ற மகிழ்ச்சியை இன்றைக்கு முழுமையாக வெளியிட என்னால் இயலவில்லை. காரணம், இரண்டு மூன்று நாட்களாக உடல் நிலை சரியில்லை, உடல்நிலை சரியில்லை என்று கேள்விப்பட்டால், ஒருவேளை அர்ஜுன் சிங் அவர்கள் பயணத்தை ஒத்திவைத்துவிடுவாரோ என்ற பயத்தில் இதை வெளிப்படுத்தாமலே இருந்தேன். வெளிப்படுத்தினால் பத்திரிகைகள் இருக்கவே இருக்கின்றன. எந்தப் பத்திரிக்கையில் என்ன போடுவார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அவரே பயந்து போய் வராமல் இருந்துவிட்டால் என்ன செய்வதென்று சொல்லாமல் இருந்தேன். நல்லவேளையாக, நான் சொல்லாமல் இருந்ததைப் போலவே என்னுடைய நண்பர்களும் இப்படியொரு விழா நடப்பதை மற்றவர்களிடத்திலே சொல்ல மறந்துவிட்டார்கள், சொல்லாமல் இருந்து விட்டார்கள். இருந்தாலும் தமிழ் உங்களையெல்லாம் இங்கே அழைத்து வந்திருக்கிறது.

### தமிழ்த்தாயின் அழைப்பு

நாங்கள் யாரும் உங்களை இங்கே அழைத்து வரவில்லை. நாங்கள் ஒன்றும் அகலமான "போஸ்டர்"களையொட்டி, வாருங்கள், வாருங்கள் கலைவாணர் அரங்கத்திற்கு, பெரிய விழா நடத்துகிறோம், தமிழுக்காக நடத்துகிறோம், தமிழ் செம்மொழியாக ஆகிவிட்டதே, தெரியுமா உங்களுக்கு, அந்தச் செம்மொழியைச் சரியான முறையிலே நாம் வளர்க்க, வலுப்படுத்த ஒரு மைய அமைப்பை இங்கே உருவாக்குகிறோம், அதற்கு மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் வருகிறார், வாருங்கள் வாருங்கள் என்று உங்களையெல்லாம் அழைக்கின்ற அவ்வளவு ஆர்வம் படைத்தவர்கள் நாங்கள் அல்ல. ஏனென்றால் ஆர்வம் தமிழுக்காகப் போராடும் போது இருந்தது, எந்தப் போராட்டத்திலும் வெற்றி கிடைத்து விட்டால் ஏற்படக்கூடிய ஒரு சோம்பல், ஒரு அலுப்பு அந்த வெற்றிக்காகப் பாடுபட்டதிலே ஏற்பட்ட களைப்பு இருந்துதான் தீரும் – இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகு ஏற்பட்டதைப் போல – சுதந்திரப் போராட்டத்திற்குப் பிறகு ஏற்பட்டதைப்போல – ஒரு அலுப்பு – வாளாவிருப்போம் என்ற தன்மை, வாளாய் இருப்போம் போரின்போது – இப்போது வாளாயிருப்போம் – என்கின்ற அந்தத் தன்மை இந்த நிலையினால் – நீங்கள் இவ்வளவு பேர் வருவீர்களோ என்ற சந்தேகத்தோடுதான் நானும் பேராசிரியரும் இங்கே வந்தோம்.

அப்படியிருந்தும், எங்களை யார் அழைத்தால் என்ன, யார் அழைக்காவிட்டால் என்ன, எங்கள் தமிழ்த்தாய் அழைக்கிறாள், வந்தோம் என்று வந்திருக்கிறீர்கள். எனவே வந்த உங்களையெல்லாம் இருகரம் கூப்பி வரவேற்கிறேன். நம்முடைய அர்ஜுன் சிங் அவர்கள் இந்த விழாவினைத் தொடங்கி வைத்து, இந்த மையத்தையும் தொடங்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். *



# குடும்ப அட்டை வைத்துள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு

**சே**ப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 28.8.2007 அன்று 85 மற்றும் 86 ஆவது வட்டங்களில் பயனாளிகளுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கிப் பேசியதாவது:– "முதல்வர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளையும், திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள். எத்தனையோ கட்சிகள் தேர்தலுக்காக வாக்குறுதிகளை அளிப்பார்கள். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தினைப் பொறுத்தவரை சென்ற ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாளில் பேரறிஞர் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் உள்ள கரசங்கால் கிராமத்தில், தந்தை பெரியார் நினைவு சமத்துவபுர பயனாளிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

முதல் கட்டமாக ரூபாய் 9 கோடி செலவில் தமிழகம் முழுவதும் 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. இதில் சென்னை மாநகரில் மட்டும் 3 ஆயிரத்து 472 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக ரூபாய் 685 கோடி செலவில் 25 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தை 15.2.2007 அன்று, திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இரண்டாம் கட்டமாக 31 ஆயிரத்து 646 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் சென்னை மாநகரில் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் 2 ஆயிரத்து 850 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் 2ஆயிரத்து 200 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டன.



அதனைத் தொடர்ந்து இராயபுரத்தில் 3 ஆயிரத்து 300ம், துறைமுகத்தில் 2 ஆயிரத்து 966ம், பெரம்பூரில் 5 ஆயிரத்து 800ம், புரசைவாக்கத்தில் 2 ஆயிரத்து 905ம், அண்ணா நகரில் 3 ஆயிரத்து 152ம், திருவல்லிக்கேணியில் ஆயிரத்து 822ம், எழும்பூரில் ஆயிரத்து 852ம், தியாகராய நகரில் 800ம், சைதாப்பேட்டையில் 7 ஆயிரத்து 970ம், மைலாப்பூரில் 3 ஆயிரத்து 400ம் என சென்னை மாநகரில் உள்ள மக்களுக்கு கடந்த நான்கு நாட்களில் மட்டும் 38 ஆயிரத்து 952 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மத்திய அமைச்சர், மாநில அமைச்சர்கள், மேயர், சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது இன்று சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 3 ஆயிரத்து 148 வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இன்று பூங்காநகர் சட்டமன்றத் தொகுதியில் ஆயிரத்து 450 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்படுகின்றன.

### முதல்வர் தொகுதியில் எண்ணற்ற பணிகள்

மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ரேஷன் கார்டு வைத்திருந்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். தேவைப்பட்டால் நான்காவது கட்டமாகவும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும். முதல்வர் அவர்களின் தொகுதியில் எண்ணற்ற பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நான் சென்னை மேயராக இருந்தபொழுது மூன்று மண்டலங்களில் தனியார் மூலம் குப்பைகள் அள்ளும் பணி ஒப்படைக்கப்பட்டது. தற்போது அந்நிறுவனத்தின் ஒப்பந்த காலம் முடிவடைந்து இந்த மாதம் 26 ஆம் தேதி முதல் புதிய நிறுவனமான நீல் மெட்டல் பனால்கா ஒப்பந்தம் மூலம் தேர்வு செய்யப்பட்டு குப்பைகள் அகற்றும் பணியை மேற்கொள்கிறது.

பத்திரிகையில் குப்பைகள் பற்றி செய்திகள் பெரிதுபடுத்தி வெளியிடப்படுகிறது. அந்தப் புதிய நிறுவனம் சிறிய, பெரிய லாரிகள் கொண்டு குப்பைகள் அகற்றும் பணியினைத் தொடங்கி உள்ளது. குப்பைகளை காலை, மதியம், மாலை என அகற்றப்பட்ட இடத்திலேயே குப்பைகள் தொடர்ந்து கொட்டப்படுவதால் தேக்கம் ஏற்பட்டுள்ளது. தற்போது அதை அகற்றவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. மேலும் அந்தப் புதிய நிறுவனம் 2,500 தொட்டிகள் குப்பைகளை அகற்றுவதற்காக சின்டெக்ஸ் நிறுவனத்திடம் கோரி உள்ளது. சிறிய தீ விபத்தின் காரணமாக அந்நிறுவனத்திற்கு சின்டெக்ஸ் தொட்டிகள் வழங்குவதில் சற்று தாமதம் ஏற்பட்டு உள்ளது. இவை அனைத்தும் களையப்பட்டு 10 நாட்களுக்குள் குப்பைகள் இல்லாத நிலை உருவாகும், இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது, "சேப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மாநகராட்சி மூலம் எண்ணற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 9 பணிகள் ரூபாய் 36.10 இலட்சத்திலும், 6 மழைநீர் வடிகால்வாய் பணிகள் ரூபாய் 48 இலட்சத்திலும், 3 கட்டடப் பணிகள் ரூபாய் 28 இலட்சத்திலும், 2 மின்சாரத்துறை பணிகள் ரூபாய் 12 இலட்சத்திலும் என இருபது பணிகள், முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் ஒரு கோடியே 24 இலட்சத்து 10 ஆயிரம் செலவில் மேற்கொள்ளப் படுகிறது" என்று குறிப்பிட்டார்.

# மக்கள் கூடும் இடங்களில் அரசுச் செய்தி சுவரொட்டிகளை ஒட்டும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்

## அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களின் உரை

**மா**ண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்களின் தலைமையில், அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்களின் (செய்தி மற்றும் விளம்பரம்) ஆய்வுக் கூட்டம் 27.8.07 மற்றும் 28.8.07 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை, இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது இந்த ஆய்வுக் கூட்டத்தில் செய்தித் துறையின் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர். இக்கூட்டத்தின் சிறப்பம்சமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்கள் பற்றி விளம்பரப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சிறப்பு நலத்திட்டங்கள், அவை செயல்படும் விதம், அவை குறித்த விழிப்புணர்ச்சி, பொதுமக்கள் அவற்றால் பெறும் பயன்கள், பயனாளிகள் பயன் அடைந்த மற்றும் அடையும் நிலை குறித்து விளம்பர நோக்கில் அனைத்து மாவட்டங்களிலுள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணி மேற்கொள்வது பற்றியும், திட்டங்கள் பயனாளிகளுக்குச் சென்றடைய நடைமுறையில் தடையாக உள்ள தடைக்கற்கள் மற்றும் பலன்களை முழுமையாகவும், எளிதாகவும் அடைவதற்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களிடம் கேட்டறிந்தார். இக்கூட்டத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் செய்தி வெளியீட்டுப் பிரிவு மற்றும் புகைப்படப் பிரிவிற்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள் மடிகணினியினை வழங்கினார். அதன்பின் ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் பேசியதாவது:



"நாம் செய்து முடித்த பணியை எடை போட்டுப் பார்க்கும் நிகழ்ச்சி இது. அரசின் செயல்பாடுகளையும், நலத்திட்டங்கள் பற்றிய தகவல்களையும் மக்களிடம் சேர்த்ததோடு விழிப்புணர்வுப் பணியையும்–செய்தித் துறை ஆற்றி வந்துள்ளது.

நவீன தொழில்நுட்ப வேகத்திற்கு ஏற்ப, இந்தத் துறை ஈடுகொடுத்து வருகிறது. இன்னும் அதிக அளவில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அரசின் திட்டங்கள் பற்றிய விவரங்களையும், செய்திகளையும் மக்களிடம் விரைவாக கொண்டுபோய் சேர்க்க வேண்டும். துறையில் வழங்கப்பட்டுள்ள கணினிகளுக்கு இணையதள வசதி தேசிய தகவல் மையம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. கணினி வழி பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும். ஒவ்வொரு அலுவலகத்திலும் புள்ளி விவரங்களைச் சேகரித்து வைக்க வேண்டும். அரசின் இணையதளத்தில் செய்திகளையும், புகைப்படங்களையும் உடனுக்குடன் இடம் பெறச் செய்ய வேண்டும். மக்கள் கூடும் இடங்களில் 'அரசுச்செய்தி' சுவரொட்டிகளை ஒட்டும் பணியை தீவிரப்படுத்த வேண்டும்" என்று கூறினார்.

28.8.07 அன்று நடைபெற்ற இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தமது உரையில், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் மக்களின் பசிப்பிணியைப் போக்கி, வயிறார உணவு உண்ண ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. மேலும், இளம் சிறார்களுக்கு சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் மகத்தான திட்டம், உழைத்துக் களைத்த மக்கள் தங்கள் மாலைப் பொழுதை இனிமையாகக் கழிக்க உதவும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள். வண்ணத் தொலைக்காட்சி மூலம் கிராம மக்கள் உலகப் பொது நிகழ்வுகளை அறிந்து கொள்ளும் வசதி. படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6,000 நிதியுதவி வழங்கும் திட்டம் உள்ளிட்ட அரசின் திட்டங்கள் பற்றி விவரித்தார். பின்னர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் கலந்துரையாடினார்.

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலர் திரு.து.இராசேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் விளக்கவுரை ஆற்றினார், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநர் முனைவர் ஆ.சி.மோகன்தாஸ் இ.ஆ.ப.,அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

# சென்னையில் வெளியுறவு அமைச்சகத்தின் கிளை அலுவலகம் திறப்பு காலத்தில் மேற்கொள்ளப்படும் பயன்தரும் பணி

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் உரை




**இ**ந்திய வெளியுறவுத் துறையின் கிளைச் செயலகத்தைத் தொடங்கி வைப்பதற்காக இங்கு வருகைபுரிந்துள்ள மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளியுறவுத் துறை இணை அமைச்சர் அகமத் ஆகியோருடன் இவ்விழாவில் கலந்துகொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். வெளியுறவுத் துறை அமைச்சகம் கொல்கத்தா, ஐதராபாத் ஆகிய இடங்களை அடுத்து மூன்றாவதாகத் தமிழகத்தில் இந்த அலுவலகம் தொடங்கி வைக்கப்படுவது எனக்கு மேலும் மகிழ்ச்சி அளிக்கிறது.

சென்னையில் கிளை அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்ற எங்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டமைக்காகவும், நேரில் வருகை புரிந்து இந்தக் கிளை அலுவலகத்தைத் திறந்து வைத்திட முடிவு செய்தமைக்காகவும் பிரணாப் முகர்ஜி அவர்களுக்கு நான் பெரிதும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அலுவலகத்தின் பயன்பாடுகளைப் பொறுத்தவரை தமிழகம் மற்றும் தென்னிந்தியா முழுவதற்கும் இது ஒரு மிக முக்கியமான நிகழ்வாகும்.

### சென்னையின் முக்கியத்துவம்

ஐந்தாவது முறையாக நான் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றபின் 2006 நவம்பரில் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதி சென்னையில் கிளைச் செயலகத்தைத் தொடங்க வேண்டியதன்

தேவை குறித்து வலியுறுத்தினேன். அந்நிய நேரடி முதலீடுகள் அதிகரித்து வருவதன் காரணமாகவும், சென்னையில் பல வெளிநாட்டுத் தூதரங்கள் தங்கள் அலுவலகங்களை அமைத்துள்ளதன் காரணமாகவும், பன்னாட்டு நிறுவனங்கள் பல தேர்வு செய்து, விரும்பக்கூடிய இடமாகச் சென்னையின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதன் காரணமாகவும், இந்த அலுவலகத்தின் தேவை மிகவும் அவசரமானதும் அவசியமானதும் ஆகும்.

இந்த கிளைச் செயலகத்தை நிறுவுவதற்கு உடனடியாக ஒப்புதல் அளித்தமைக்காக நமது பிரதமர் அவர்களுக்கும், வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னை கிளைச் செயலகம் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், பிற தென் மாநிலங்களின் மக்களுடைய தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் சாளரமாகச் செயல்படும். இந்த முக்கியத்துவத்தின் பங்கினை இச்செயலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்; அத்துடன் மாநில அரசின் தொழில் மேம்பாடு, முதலீடுகளைக் கவர்தல், மாநிலத்தின் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றம் ஆகியவை தொடர்பான மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணையாகவும் செயல்படுதல் வேண்டும்.

## தொழிற்சாலைகள்

நாங்கள் பொறுப்பேற்றபின் இதுவரை **11** ஆயிரத்து **83** கோடி ரூபாய் முதலீடுகளைக் கொண்ட **11** புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பம் இடப்பட்டுள்ளன. நாட்டின் பலவகைத் தொழில்களில் கணிசமான பங்கினை முதலீடுகளாகப் பெற்றுத் திகழ்கிறது தமிழகம்.

புதுடெல்லி, மும்பை ஆகிய நகரங்களை அடுத்து சென்னையில்தான் அதிக எண்ணிக்கையிலான தூதரக அலுவலகங்கள் அமைந்துள்ளன. **10** நாடுகளின் நிரந்தர தூதரகங்கள், **27** நாடுகளின் துணைத் தூதரக அலுவலகங்கள் ஆகியவற்றுடன் இரண்டு துணை நிலை ஆணையர் அலுவகங்களும் அமைந்துள்ளன.

இக்கிளைச் செயலகம் இந்தத் தூதரக அலுவலகங்களுடன் தொடர்புகள் கொள்வதற்கு உதவியாக அமையும். வரியில்லாத சுங்கவரி விலக்கு, (Duty free customs exemption) வாகனங்களைப் பதிவு செய்தல். உரிமங்கள் வழங்குதல் போன்ற பிற பணிகளையும் இவ்வலுவலகம் மேற்கொள்ளும்.

சில முகமைகளின் நியாயமற்ற நடவடிக்கைகளால் அயல்நாடுகளில் குடியேறிய நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் சொல்லொணாத் தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இப்படிப் பாதிக்கப்படுபவர்களின் உறவினர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் உடனடி உதவிகளுக்கான அடிக்கடி அரசினை நாடுகின்றனர். இந்தக் கிளை அலுவலகம் நம்முடைய தூதரக நடவடிக்கைகள் மூலம் வெளிநாடுகளில் உள்ளவர்களோடு எளிதாகத் தொடர்பு கொள்ளும் வசதிகளை அளித்திட முடியும் என்றும், அதன் மூலம் பாதிக்கப்பட்டவர் களுக்குத் தேவைப்படும் உடனடி வசதிகளை அளித்திடக் கூடும் என்றும் உறுதியாக நம்புகிறேன்.

## தமிழக அரசு உதவும்

சென்னையில் குடியுரிமை பெறும் இடங்களில் (Immigration counters) வருவோர் மற்றும் பயணம் செல்வோர் எண்ணிக்கையின் அளவு அதிகரித்துக் கொண்டுள்ளது. இது கடந்த **5** ஆண்டுகளில் **54** சதவிகிதம் அதிகரித்துள்ளதாகப் பதிவுகள் மூலம் தெரிய வருகிறது. இந்த **5** ஆண்டுகளில் பாஸ்போர்ட் வழங்கப்படுவதும் **76** சதவிகிதம் அதிகரித்துள்ளது. இத் தருணத்தில் வெளியுறவு அமைச்சகத்தின் கிளை அலுவலகம் இங்கு திறக்கப்படுவது முற்றிலும் பொருத்தமானதும், காலத்தில் மேற்கொள்ளப்படும் பயன் தரும் பணியுமாகும்.

வெற்றி என்பது நாம் சேரும் இடம் மட்டுமல்ல. அது ஒரு நெடிய பயணமுமாகும். இன்று கிளை அலுவலகம் நிறுவிடும் வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் பணி மகத்தான வெற்றி பெற வாழ்த்துகிறேன். தமிழக அரசு தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கும். இங்கு வருகைபுரிந்து இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டுள்ள பிரணாப் முகர்ஜி அவர்களுக்கும், அகமத் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*25.8.2007 அன்று*
*சென்னையில் நடைபெற்ற*
*வெளியுறவுத் துறை அமைச்சகத்தின்*
*கிளை செயலகத் திறப்பு விழாவில்*
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
*அவர்கள் ஆற்றிய உரை.*



# பதிவு மூப்பு அடிப்படையில் முதன்முதலாக 5,098 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



தமிழகத்தில் இந்த அரசு **13.5.2006** அன்று அமைந்த பிறகு, பள்ளிகளில் தரமான கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இனி ஒப்பந்த முறை ஆசிரியர் நியமனங்கள் இல்லை என அரசு மேற்கொண்ட முடிவின் படி, **1.6.2006** முதல் **46** ஆயிரத்து **605** ஒப்பந்த முறை ஆசிரியர் களுக்கு ஒரே ஆணையின் மூலம் உரிய காலமுறை ஊதியங்கள் அளிக்கப்பட்டு, நிரந்தரப் பணியிடங்களில் அவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது.

**2006–2007** ஆம் கல்வி ஆண்டில் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும், ஊராட்சி ஒன்றிய தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும், நகராட்சி, மாநகராட்சி நிருவாகப் பள்ளிகளிலும், **8,314** இடைநிலை ஆசிரியர்கள், **473** சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோர் வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையிலும், **12** ஆயிரத்து **504** பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் **2,342** முதுநிலை ஆசிரியர்கள் ஆகியோர் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலமாகவும், தொடக்கப் பள்ளிகளில் புதிதாக உருவாக்கப்பட்ட **1,009** தலைமையாசிரியர் பணியிடங்களில் பதவி உயர்வு மூலமாகவும், மொத்தம் **24, 642** ஆசிரியர்கள் காலமுறை ஊதியத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர்.

பட்டதாரி ஆசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் இதுவரை தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி, குறைபாடுகளைத் தவிர்த்திடும் பொருட்டு இனி வேலைவாய்ப்புப் பதிவு மூப்பின் அடிப்படையில், **1:1** என்ற விகிதத்தின்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பணி நாடுநர் பட்டியல் பெறப்பட்டு, பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என இந்த அரசு கொள்கை முடிவு மேற்கொண்டது.

அக்கொள்கை முடிவின்படி, அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் **6, 7, 8**ஆம் வகுப்புகளுக்காக இந்த அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள **7,979** பட்டதாரி ஆசிரியப் பணியிடங்களுக்கு வேலைவாய்ப்புப் பதிவு மூப்பு அடிப்படையில் முதன் முறையாகத் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள **5,098** பட்டதாரி ஆசிரியர்களின் தேர்வுப் பட்டியலை வெளியிட்டு அடையாளமாக **19** ஆசிரியர்களுக்கு உரிய நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர்

அவர்கள் 2.9.2007 அன்று வழங்கி வாழ்த்துக்கள் கூறினார்.



1973 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏறத்தாழ 34 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும் இதுவரை வேலை கிடைக்காமல் பணி நியமனத்திற்காகக் காத்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களாகப் பணி நியமனங்களை வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நியமன ஆணைகளைப் பெற்ற ஆசிரியர்கள், பல ஆண்டுகளாகப் பதிவு செய்தும் வேலை கிடைக்குமா என்ற கவலையுடன் இருந்த தங்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற இந்த அரசின் அறிவிப்பும், அதன்படி நியமன ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் பெறக்கூடிய அருமையான வாய்ப்பும் கிடைத்ததை எண்ணி நாங்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறோம் என்று கூறி தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள 5,098 பட்டதாரி ஆசிரியர்களில் 3,700 பேர். அதாவது 73 விழுக்காடு ஆசிரியர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் திரு.குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் திரு.இராம மோகன்ராவ், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. இரா.கண்ணன், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் உறுப்பினர் செயலர் திருமதி. எம்.இலட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.



# உள்ளாட்சி மன்றங்கள் மின்வாரியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அனைத்து அபராத வரி தள்ளுபடி

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்*

***கலைஞர்** அவர்கள் அறிவிப்பு*

உள்ளாட்சி மன்றங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணத் தொகையைக் குறைத்துச் சலுகை வழங்கியதன் காரணமாக, மின்சார வாரியத்திற்கு 50 கோடி ரூபாய் மானியமாக வழங்கிட முடிவெடுத்து ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக, உள்ளாட்சி மன்றங்கள் மின்வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தின் மீது விதிக்கப்படும் அனைத்து அபராத வரி மொத்தம் 31 கோடியே 41 இலட்சம் ரூபாயைத் தள்ளுபடி செய்ய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்.





மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர்** அவர்களின்

## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

செப்டம்பர் திங்கள் 5ஆம் நாள் ஆசிரியர் நாள்! ஆசிரியராகப் பணி தொடங்கி, நமது நாட்டின் குடியரசுத் தலைவராக உயர்ந்து புகழுடன் திகழ்ந்த பெருந்தகை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த திருநாள்! அறப்பணியாக ஆசிரியப் பணிபுரிந்திடும் நல்லாரைத் தேர்வு செய்து, 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது' வழங்கிச் சிறப்பித்திடும் நன்னாள் இந்நாள்!

அறியாமை இருளகற்றி, அறிவொளி பாய்ச்சி, எல்லோரும் எல்லாமும் பெற வழிகாட்டி உதவிடும் ஆசிரியர்கள், நாட்டு முன்னேற்றத்தின் ஆணிவேர்கள். இந்த அடிப்படையில் ஆசிரியர் நலன்களைக் காப்பதில் இந்த அரசு கொண்டுள்ள ஈடுபாடு மகத்தானது. டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதுத் தொகை 1,000 ரூபாய் என்பதை 1997 இல் 2,000 ரூபாய் என உயர்த்தி, 2006–இல் அதனை 5,000 ரூபாய் என மேலும் உயர்த்தி, ஆசிரியர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. அத்துடன், முந்தைய ஆட்சிக் காலத்தில் பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்கி ஆசிரியர்களுக்கு அரணாக அமைந்து, அவர்களை அரவணைத்துச் செல்கிறது இந்த அரசு.

ஆசிரியர் பயிற்சி முடித்துக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் தொடர்ந்து புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு வருகிறார்கள்.

இதுவரை எழுத்துத் தேர்வு மற்றும் நேர்காணல் மூலமே பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த நடைமுறையை மாற்றி இனி பதிவு மூப்பு அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என இந்த அரசு அறிவித்ததற்கேற்ப, முதன்முதலாக 5,098 பட்டதாரி ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு மூப்பு அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் 1973ஆம் ஆண்டு முதல் இதுவரை ஏறத்தாழ 34 ஆண்டுகளாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும் வேலை கிடைக்காமல் காத்திருந்த ஆயிரக்கணக்கான பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமனம் பெறும் வாய்ப்பு தமிழகத்தில் மலர்ந்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் கொண்டாடப்படும் ஆசிரியர் தினவிழா தமிழகம் முழுவதும் எழுச்சியுடன் நிகழ, தமிழக ஆசிரியப் பெருமக்கள் அனைவர் வாழ்விலும் மகிழ்ச்சி நிலவ என் உளமார்ந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துகளையும், மத்திய, மாநில விருதுகள் பெறும் ஆசிரியர்களுக்கு மனங்கனிந்த பாராட்டுகளையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

## நியாயவிலைக் கடைகளில் பருப்புகள் விநியோகம் 2008 ஜனவரி வரை நீட்டிப்பு

### தமிழக அமைச்சரவை முடிவு

1. தமிழக அரசு சார்பில் கேபிள் டி.வி இணைப்புகள் வழங்குவதற்கென தனியே ஒரு நிறுவனத்தை அமைத்து, அந்த நிறுவனத்தின் மூலம் கேபிள் தொலைக்காட்சியில் கட்டண அலைவரிசைகளைப் பார்க்கும் ஏற்பாட்டு முறை (Conditional Access System) நடைமுறையில் உள்ள சென்னைப் பெருநகரப் பகுதியில் பன்முக ஏற்பாட்டு முறை ஆபரேட்டராகவும் (Multi System Operator); தமிழகத்தின் பிற பகுதிகளில் கம்பிவடத் தொலைக்காட்சி ஆபரேட்டராகவும் செயல்படுவதென்றும்; இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

2. வெளிச்சந்தையில் பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களான துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, பாமாயில், ரவை, மைதா ஆகியவற்றின் விலை உயர்ந்து வருவதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இப்பொருள்களை அரசே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்து, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்ய முடிவு செய்து, 14.4.2007 முதல் சென்னை மாநகரத்திலும், 1.5.2007 முதல் ஏனைய மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இது தற்காலிக சிறப்புத் திட்டம் எனினும், இத்திட்டத்திற்கு நுகர்வோரிடையே உள்ள வரவேற்பினைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை 2008 ஜனவரி மாதம் வரை நீட்டிப்பதென்றும்; ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் பொருள்களுடன் "ஆட்டா" வையும் வழங்குவதென்றும்; துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு போன்றவற்றை கால் கிலோ, அரை கிலோ என்று தேவைக்கேற்ப வழங்குவதென்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

– தமிழக அமைச்சரவைக் கூட்ட முடிவு
11.8.2007

## பழைய மாமல்லபுரம் சாலைக்கு "ராஜீவ்காந்தி சாலை" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது

### மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

இந்தியப் பிரதமராகப் புகழுடன் விளங்கிய பாரத ரத்னா ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்தநாள் விழா 20.8.2007 அன்று சென்னை சத்தியமூர்த்தி பவனில் நடைபெற்றபொழுது, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.எம். கிருஷ்ணசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று பழைய மாமல்லபுரம் சாலைக்கு 'ராஜீவ்காந்தி சாலை' எனப் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பின்படி, சென்னை கிண்டியில் உள்ள மத்திய கைலாஷ் என்னும் இடத்தில் இருந்து தொடங்கும் பழைய மாமல்லபுரம் சாலைக்கு, "ராஜீவ்காந்தி சாலை" என்று தமிழக அரசு பெயர் சூட்டியுள்ளது என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 24.8.2007 அன்று அறிவித்தார்.





## தொல்காப்பியர் விருது - குறள்பீட விருதுகளின் தொகை ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்வு

### மாண்புமிகு மத்திய அமைச்சர் அர்ஜூன்சிங் அவர்கள் அறிவிப்பு

இந்தியாவின் தொன்மையான பாரம்பரியங்களைப் பற்றிய ஆய்வுகளில் புதிய முயற்சியைத் துவக்கும் இந்த வரலாற்றுப் புகழ்பெற்ற விழாவில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களும், அவரது சகாக்களும் கூறிய அன்பான வார்த்தைகளுக்காகவும், இந்த தருணத்தில் இப்படி சிறப்பான விழாவினை ஏற்பாடு செய்தமைக்காகவும் நான் மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

மத்தியிலுள்ள எங்களது அரசுக்கு தமிழக மக்கள் தொடர்ந்து அன்புகாட்டி வருவதற்கும், அவர்களுடைய நல்வாழ்த்துக்களுக்காகவும் நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

தமிழ் பலவழிகளில் சிறப்பானதொரு மொழியாகும். ஆனால் அதன் மிகப் பெரிய வலிமை அது ஒரு 'வாழும்' செம்மொழி ஆகும். இந்திய கலாச்சார பாரம்பரியங்களின் வரலாற்றில் தமிழுக்கு ஒரு மிகச் சிறப்பான இடம் உள்ளது என்பதில் ஐயமில்லை. அதன் உள்ளார்ந்த வலிமையும், ஆழமான வேர்களும் தமிழ்மொழி, இலக்கியம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை பல நூற்றாண்டுகளாக உயிரோட்டத்துடன் வைத்திருக்கின்றன.

காந்தி, நேரு, ஆசாத், நேதாஜி, ராஜாஜி, அண்ணா போன்ற தேசியத் தலைவர்களால் அடித்தளம் அமைக்கப்பட்ட நமது கூட்டு கலாச்சாரத்தை புரிந்து கொள்ள திராவிட மற்றும் இந்திய–ஆரிய குழுக்களின் மொழியியல், இலக்கிய மற்றும் கலாச்சார பாரம்பரியங்களை நாம் ஆய்வு செய்வது முக்கியமானதாக உள்ளது.

நமது வரலாறு மற்றும் கலாச்சாரம் பற்றிய விசாலமான புரிதல் நமக்கு இருக்க வேண்டும்; இதற்கு ஆரிய, திராவிட பாரம்பரியங்கள் இரண்டையும் பற்றிய முறையான ஆய்வும் பகுப்பாய்வும் முக்கியமானதாகும்.

இன்றைய நமது தத்துவார்ந்த, இலக்கிய மற்றும் ஆன்மீகப் பாரம்பரியம், சமஸ்கிருதம் மற்றும் தமிழ் என்ற

இரண்டு தொன்மையான மொழிகள் பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு பெரிய நீரோட்டங்களின் சங்கமத்திலிருந்து உருவானவை ஆகும்.

கடந்த இரண்டு நூற்றாண்டுகளில், கிழக்கு மற்றும் மேற்கு வரலாற்று ஆசிரியர்கள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், கல்வெட்டு ஆய்வாளர்கள், மொழி ஆராய்ச்சியாளர்கள் காட்டிய ஆர்வத்தினால் சமஸ்கிருதத்தின் பங்களிப்பு மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டு இந்திய கலாச்சாரம் உருவானதில் அதே அளவிற்கு பங்காற்றியதும் 20க்கும் மேற்பட்ட திராவிட மொழிகளுக்கு ஊற்றுக்கண்ணாகவும் விளங்கும் தமிழ் மொழி அத்தகைய கவனத்திற்குத் தகுதியானது.

மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் போன்ற சிறந்த நிறுவனங்கள் அமைத்தல் முழுவதும், அதை மத்திய, மாநில அரசுகள் கூட்டாக சொந்தமாக்கி நிருவகிப்பதும் இந்த நீண்ட காலத் தேவையை நிறைவேற்றும்.

### இலக்கியப் பாரம்பரியம்

இதர பல நவீன இந்திய மொழிகளின் இலக்கியங்களைவிட ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான மிகமுந்தைய இலக்கியங்கள் தமிழில் உள்ளது என்பதையும், இந்திய மொழிகளில் சமஸ்கிருதத்திலிருந்து உருவாகாத இலக்கியப் பாரம்பரியம் கொண்ட ஒரேமொழி என்பதையும் நாம் அறிவோம். தவிரவும், தொன்மையான தமிழ் இலக்கியத்தின் தரம் கிரேக்கம், லத்தீன், சீனம் அராபிய மற்றும் பாரசீக மொழிகளின் இயற்றப்பட்ட மாபெரும் தொன்மை இலக்கியங்களின் தரங்களுக்கு இணையானதாகும்.

மத்திய அரசு, தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்த பின்னர், செம்மொழித் தமிழுக்கு மத்திய திட்டத்தை அமல்படுத்தும் பொறுப்பு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் மைசூரிலுள்ள மத்திய இந்திய மொழிகளின் மத்திய கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மத்திய நிறுவனத்தின் நடவடிக்கைகள் அனைத்திலும் வழிகாட்டுவதற்கு நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த செம்மொழித் தமிழின் சிறந்த அறிஞர்களைக் கொண்ட தமிழ்மொழி மேம்பாட்டுக் கழகம் உருவாக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் பெரும் பகுதியாக, இந்திய மொழிகளின் மத்திய கழகத்திற்குள் செம்மொழி தமிழுக்கான சிறப்பு மையம் ஒன்று 2006–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உருவாக்கப்பட்டது.

அதற்குத் தேவையான கல்வி, தொழில்நுட்ப நிருவாகப் பணியாளர்களும் அமர்த்தப்பட்டனர். மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் கல்வி உதவிகள் மற்றும் இணைப்பு உதவிகளையும் ஏற்பாடு செய்துள்ளது; பெருமைக்குரிய தேசிய மற்றும் சர்வதேசிய விருதுகளையும், தமிழ் செம்மொழியில் இளம் அறிஞர்களுக்கு கௌரவிக்க ஏற்பாடு செய்துள்ளது.

அனைத்து பெரிய திட்டங்களிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அவை ஒவ்வொன்றையும் பொறுத்த மட்டில் மத்திய அரசு தமிழ்வளர்ச்சிக் கழகம் மற்றும் அதன் சம்மந்தப்பட்ட திட்ட ஆலோசனைக் குழுக்கள் ஆகியவற்றின் வழிகாட்டுதலின்படி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து வருகிறது.

செம்மொழி தமிழ் மீது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் நடவடிக்கைகள் பற்றியும், அனைத்து துறைகளிலும் செய்யப்பட்டுள்ள பணிகள் பற்றியுமான விரிவான விவரங்கள் 'செம்மொழி' என்ற செய்திக் கடிதத்திலும் இந்திய மொழிகளுக்கான மத்திய கழகத்தின் செம்மொழி தமிழ் வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

தொன்மையான தமிழ் கட்டுரைகளின் விமர்சனப் பதிப்புகளின் தொகுப்புக்கு கோவையிலுள்ள இந்திய அரசு அச்சகத்தில் அச்சிடப்படுவதற்காக இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது. தொன்மையான தமிழ்மொழி பற்றிய தகவல்களை வழங்கும் தொலைக்காட்சி படங்கள் பல இந்த ஆண்டு இறுதிக்குள் தயாரிக்கப்பட்டுவிடும்.

கலைஞர் அவர்களே, அடுத்த ஆண்டு (2008) ஜனவரி மாதம் 14ந் தேதி திருவள்ளுவர் பிறந்த நாளன்று அவற்றை வெளியிடுவதற்காக நாங்கள் மீண்டும் உங்களை அணுகவேண்டியிருக்கும்.

தொல்காப்பியர் விருது என்ற தேசிய விருது மற்றும் குறள்பீட விருது என்ற சர்வதேச விருதுகள் ஆகியவற்றின் தொகைகளை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்ற தமிழக முதல்வரின் ஆலோசனையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோலவே, ஐந்து இளம் அறிஞர்களை தலா ஒரு இலட்சம் ரூபாய் விருதுக்காகத் தேர்ந்தெடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இறுதித் தேர்வுக்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

செம்மொழி ஆராய்ச்சியை மேம்படுத்த நீண்ட காலமாகும் என்பதில் ஐயமில்லை. ஆனால் முதல் உறுதியான நடவடிக்கை சரியான திசை வழியில் எடுக்கப்பட்டுள்ளது. சென்னையில் கூட்டு முயற்சியாக தேசிய அளவிலான–நிறுவனத்திற்கான கட்டடத்திற்கான உறுதியான அடித்தளம் பரஸ்பர நம்பிக்கை மற்றும் ஒருங்கிணைப்பில் இடப்பட்டுள்ளது.



11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் போது, சென்னையில் மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் அமைக்கப்பட தமிழக மக்களின் விருப்பம் தற்போது நிறைவேற்றப்படும். இந்த நிறுவனத்திற்காக 29 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி மாநில அரசு ஏற்கெனவே முதல் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த நிறுவனம் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதுடன் செம்மொழி தமிழில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கு மாணவர்கள் கிடைக்கும் வகையில் கல்வி கற்பிக்கும் பணியையும் மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனை கூறப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள மாணவர்கள் புதிய மிகவும் உயர்தரமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளும் நிறுவனத்தில் சேரும் வகையில், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டப் படிப்புகளில் தமிழக அரசு செம்மொழித் தமிழ்ப் பாடத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம்.

கூட்டு நிருவாகம் மற்றும் பொறுப்புகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்த தேசிய அளவிலான செம்மொழித்தமிழ் ஆய்வு நிறுவனம் மிகச் சிறந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு இந்த பல்துறை ஆராய்ச்சிப் பணிக்கு மிகவும் தேவையான மனித சக்தியை உருவாக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தத் திட்டத்திற்கான விவரங்களை நாங்கள் உருவாக்கி வருகிறோம், இதற்கு உங்களது தொடர்ந்த பங்களிப்பை நாடுகிறோம்.

இன்றைய நிகழ்ச்சிகளுக்காக நான் மீண்டும் தமிழக முதல்வருக்கும் , அவரது குழுவினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– 18.08.2007 அன்று மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தை தொடங்கி வைத்து மாண்புமிகு மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **அர்ஜுன்சிங்** அவர்கள் ஆற்றிய உரை.

★

---

## தமிழில் பெயர் கொண்ட திரைப்படங்களுக்கான கேளிக்கை வரிவிலக்கிற்குத் தகுதியான படங்களைப் பரிந்துரை செய்திட குழு அமைப்பு

**த**மிழில் பெயர் கொண்ட புதிய மற்றும் பழைய திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியில் இருந்து முழுமையான வரிவிலக்கு அளிக்கும் திட்டம் தமிழக அரசினால் 2006 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது திரையிடப்படும் பல திரைப்படங்களின் தலைப்பு தமிழ்ப் பண்பாட்டிற்கும் கண்ணியத்திற்கும் குந்தகம் விளைவிப்பதாக உள்ளது என்றும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தரத்திற்கும் உகந்ததாக இல்லை என்றும், அரசு வழங்கியுள்ள கேளிக்கை வரிச் சலுகையின் நோக்கத்திற்கு முரணாக உள்ளது என்றும் தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, இனித் திரையிடப்படும் பழைய மற்றும் புதிய தமிழ்த் திரைப்படங்களின் தமிழ்ப் பெயர்கள் தமிழ்ப் பண்பாட்டிற்கு உகந்ததாகவும், கண்ணியமானதாகவும் உள்ளதா என்பதை ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்திட வணிகவரி மற்றும் பதிவுத்துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகவும், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறைச் செயலாளர், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழு ஒன்றினை அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 22.8.2007 அன்று அறிவித்துள்ளார்.

★

# அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் கணினி

## முதற்கட்டமாக 375 கணினிகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்



**த**மிழக சட்டமன்றக் கூட்டத் தொடரில் **11.4.2007** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் "பேரூராட்சிகளில் கணினி மயமாக்குதலை வலுப்படுத்தவும், கணினி சேவைகளை வழங்குவதிலான தரம் மற்றும் தகவல் மேலாண்மைச் சேவையை மேம்படுத்திடவும் **561** பேரூராட்சிகளுக்கும் தேவையான கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள், அகல வரிசை (Broad Band) வசதி மற்றும் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சியும் வழங்கப்படும்." என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய அரசின் தகவலியல் தொழில்நுட்பத் துறையின் வாயிலாக தமிழகத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் மின்னணுசேவை வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், **561** பேரூராட்சிகளுக்கும் தலா ஒரு கணினியும், பேரூராட்சி மண்டல அலுவலகங்கள் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் அலுவலகத்திற்கு மொத்தம் **582** கணினிகள் ரூபாய் **4** கோடி மதிப்பீட்டில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டத்தினால் பொதுமக்கள் பேரூராட்சி பற்றிய சேவைத் தகவல்களை எளிதாகப் பெறுவதற்கு வழிவகுப்பதுடன் பேரூராட்சிகளில் நடைபெறும் பணிகளை கண்காணித்து விரைவுபடுத்திடவும், பொதுமக்கள் சேவையை முழுமையாகச் செய்திடவும், ஒப்பந்தப்புள்ளி கோருதல், தகவல் வலையத்தில் செய்திகள் சேர்ப்பித்தல், நேரடி தகவல் பரிமாற்றம் போன்ற பணிகள் சிறப்பாகச் செயல்படுத்த வழிவகை செய்கிறது. கணினி வழங்குவதற்கான ஏற்பாடுகளை பேரூராட்சிகள் நிருவாகம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் தேசிய தகவலியல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து **17.8.2007** அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கணினி வழங்குதல் நிகழ்ச்சியில் செய்து வருகிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் வழங்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டது. காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கணினிகளை நேரில் வந்து பெற்றுக்கொண்டனர். இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலர் கே.தீனபந்து, இ.ஆ.ப, தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் டாக்டர் சி.சந்திரமௌலி, இ.ஆ.ப, பேரூராட்சிகள் இயக்குநர் டாக்டர் கே.கோபால், இ.ஆ.ப, மின்னணு நிருவாகத் துறை இயக்குநர் திரு. சுனில் பாலிவால், இ.ஆ.ப, ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.89.14 கோடி மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகள்

## மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்



திரு. **த. மருதபிள்ளை**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்.

**பெ**ரம்பலூரில் **12.8.2007** அன்று நடைபெற்ற அரசு விழாவில் புதிய திட்டப்பணிகளை தொடங்கி வைத்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:– "தமிழகத்தில் வளர்ந்து வரும் மாவட்டங்களில் முதலிடத்தை நோக்கி வளர்ச்சித் திட்டப்பணிகளை, அதிக அளவு செயல்படுத்தி வருகின்ற பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. **89** கோடியே **14** இலட்சம் மதிப்பிலான திட்டப் பணிகளை தொடங்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். இந்தப் பணிகளின் மூலம் மாவட்ட மக்கள் தொடர்ந்து பல அடிப்படை வசதிகளை பெற இருக்கிறார்கள்.

நான் கடந்த ஆண்டு இதே இடத்தில் நடைபெற்ற விழாவில் பெரம்பலூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கனவான அரசுக் கல்லூரி தொடங்க வேண்டும் என்கிற கோரிக்கை ஏற்கப்பட்டு, பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரியைத் தொடங்கி வைத்தேன். தொடங்கிய முதல் வருடத்திலேயே அந்தக் கல்லூரியில் இப்பகுதியைச் சேர்ந்த **474** மாணவ, மாணவியர்கள் சேர்ந்துள்ளனர்.

இந்த ஆண்டும் இதுவரையில் **600** மாணவ, மாணவியர்கள் சேர்க்கப் பெற்றுள்ளனர் என்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இந்தக் கல்லூரி இதுவரை தற்காலிகக் கட்டடத்திலேயே செயல்பட்டு வருகின்றது. கல்லூரிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.**2.54** கோடி மதிப்பில் முதல்கட்டமாக அரசு ஒதுக்கீடு செய்து இன்று புதிய கட்டங்கள் கட்ட அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

இதுபோல் இம்மாவட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்காக தமிழகத்தில் எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில், ஒரே ஆண்டில் பெரம்பலூர் மற்றும் ஆண்டிமடத்தில் என இரண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்க அரசு ஆணை வழங்கியதுடன் நில்லாமல், இன்று முதல் இரண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும் தொடங்கப்பட்டுள்ளன. இவை இந்த ஆண்டு தற்காலிக கட்டடத்தில் தொடங்கப்படுகிறது. ஓராண்டிற்குள் சொந்த கட்டடங்களில் இயங்குவதற்காக ரூ.6 கோடியே 37 இலட்சம் அரசு உடனடியாக நிதி ஒதுக்கீடும் வழங்கியுள்ளது. புதிய கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் இன்றே அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.



பெரம்பலூர் மாவட்டத்தின் 60 சதவீதம் பகுதிகளுக்கு ஏற்கெனவே பல்வேறு திட்டங்களில் கொள்ளிடத்தி லிருந்து காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பாட்டில் உள்ளது. விடுபட்ட பெரம்பலூர், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள 306 குடியிருப்புகளுக்கு, ரூ.61 கோடியே 11 இலட்சம் மதிப்பீட்டில் பாதுகாக்கப்பட்ட காவிரி குடிநீர் வழங்கவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. வரும் நிதி நிலை அறிக்கையில் ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்கும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. இதன் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 322 கிராம ஊராட்சிகளிலும், 6 பேரூராட்சிகளிலும், 3 நகராட்சி களிலும் முழுமையாக காவிரி குடிநீர் பெறும் முதல் மாவட்டமாகவுள்ளது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித்துறை மூலம் ரூ.5 கோடியே 30 இலட்சம் மதிப்பில் 393 வளர்ச்சித் திட்டப்பணிகளை மேற்கொள்ளவும் இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழகத்தில் 12,618 கிராமங்கள் உள்ளன. இவற்றில் கடந்த ஆண்டு 2,540 கிராமத்தில் அனைத்து, கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் ரூ.508 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு ஆண்டு 2,534 கிராம ஊராட்சிகளில் அனைத்துக் கிராம, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ரூ.507 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் 2007–08 ஆம் ஆண்டில் 65 ஊராட்சிகள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 13 கோடி மதிப்பில் 1,135 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இதேபோல் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் மாநிலத்தில் உள்ள 561 பேரூராட்சிகளுக்கும் தலா ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் இம்மாவட்டத்தில் உள்ள குரும்பலூர் மற்றும் அரும்பாவூர் பேரூராட்சி களுக்கு இந்த ஆண்டு பணிகளை செயல்படுத்திட தேர்வு செய்யப்பட்டு, ரூ.1 கோடி மதிப்பிலான பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு வழங்கப் பட்டுள்ளது.

கடந்த 2006–07 ஆம் ஆண்டிலும் 65 ஊராட்சிகள் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு தேர்வு செய்யப்பட்டு ரூ. 13 கோடி மதிப்பில் 1,809 பணிகள் தொடங்கப்பட்டு, இதுவரை 1,341 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் இன்றைய விழாவில் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தில் ரூ.3 கோடியே 86 இலட்சம் மதிப்பில் 343 பணிகளை செயல்படுத்தவும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 1 கோடியே 33 இலட்சம் மதிப்பில் 46 பணிகளை செயல்படுத்தவும் அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது. இதுபோன்ற வளர்ச்சித் திட்டப்பணிகளை இந்த அரசு அனைத்துக் கிராமங்களும் 100 சதவீதம் அடிப்படை வசதிகளை பெறும் வரை செய்து கொண்டே இருக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.



இன்றைய விழாவில் கிராம மக்களின் தரமான மருத்துவ வசதிக்காக பூலாம்பாடி, அம்மாபாளையம், திருமானூர், கடுகூர் ஆகிய 4 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 30 படுக்கை வசதியுடன் கூடிய புதிய கட்டடம் கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய தலைநகரான கங்கைகொண்டசோழபுரத்தில் சுற்றுலாப்பயணிகள் வசதிக்காக சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் செய்திட ரூ.50 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. கங்கைகொண்டசோழபுரத்தில் சோழர்கால சிறப்பை விளக்கும் அருங்காட்சியகம் அமைக்கவும், வணிக வளாகம் கட்டவும், சுற்றுலா பயணிகளுக்கான ஓய்வு இல்லம் கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

டாஸ்மாக் மாவட்ட மேலாளர் அலுவலகம் மற்றும் டாஸ்மாக் கிடங்கு கட்டடங்கள் ரூ.1 கோடியே 25 இலட்சம் மதிப்பில் கட்டவும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மாவட்ட தலைநகரான பெரம்பலூர் நகரின் அடிப்படை வசதிகளைப் பெருக்கவும், நகரைச் சுகாதாரமாகவும், தூய்மையாகவும் பராமரித்திட நகராட்சிகள் நிருவாகத்துறை மூலம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நவீன எரிவாயு தகன மேடை அமைத்திட ரூ.40 இலட்சம் மதிப்பிலும், நவீன இறைச்சிக்கூடம் ரூ.20 இலட்சம் மதிப்பிலும் கட்ட அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது.

இன்றைய தினம் கிராமப்புற பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி வசதிக்காக பள்ளிக் கல்வித்துறை மூலம் அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் ரூ.3 கோடியே 12 இலட்சம் மதிப்பில் 60 பள்ளிகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மிகவும் பின்தங்கிய கிராமப்பகுதிகளிலிருந்து அரசுப் பள்ளிகளில் தங்கிப் பயிலும் ஏழை மாணவ, மாணவியர்களின் வசதிக்காக பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் ரூ.2 கோடியே 25 இலட்சம் மதிப்பில் 7 விடுதிக் கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

வி.களத்தூர், பேரளி, குவாகம் ஆகிய 3 இடங்களில் கால்நடை பராமரிப்புத்துறை மூலம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டி திறக்கப்பட்டுள்ளன.இதன் மூலம் விவசாயிகளும், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களும் தங்களது கால்நடைகளுக்கு தேவையான சிகிச்சைகளை இலவசமாக குறித்த நேரங்களில் பெற்றுக்கொள்ள வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**“மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த வழி காட்டுதலில் நாங்கள் சிறப்பாக வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றோம். இந்த அரசு பதவி ஏற்றவுடன் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இதுவரை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. விவசாயிகளின் அனைத்து கூட்டுறவு கடன்களையும் ரத்து செய்துள்ளது.”**

மேலும், இன்று பல்வேறு அரசுத் துறைகள் மூலம் 6,507 பயனாளிகளுக்கு, ரூ. 3 கோடியே 14 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. இதில் 331 மகளிர் சுயஉதவி குழுக்களைச் சேர்ந்த 700 மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களும் பயன்பெறுகின்றனர். அரசின் நலத்திட்டங்களை பெறுபவர்கள் அனைவரும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டு பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்பதே இந்த மக்கள் நல அரசின் திட்டமாகும்.

இதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறந்த வழி காட்டுதலில் நாங்கள் சிறப்பாக வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்தி வருகின்றோம். இந்த அரசு பதவி ஏற்றவுடன் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி இதுவரை சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது. விவசாயிகளின் அனைத்து கூட்டுறவு கடன்களையும் ரத்து செய்துள்ளது. பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு சத்துணவுடன் வாரம் 3 முட்டைகள் குறைபாடு இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து மகளிர் சுயஉதவி குழுக்களின் மேம்பாட்டிற்காக சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவி வழங்கப்படுகிறது. உலக அளவில் தமிழகத்தில் சுயஉதவிக் குழுக்கள் சிறப்பாகச் செயல்படுவதால் உலக வங்கி நடத்தவுள்ள சுயஉதவிக் குழு மாநாட்டிற்கு தமிழகத்தில் சிறப்பான திட்டத்திற்காக என்னை உலக வங்கி அழைத்துள்ளது . பொதுமக்கள் அனைவரும் செல்லும் இடங்களில் எல்லாம் இலவச

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி எங்களுக்கு எப்பொழுது கிடைக்கும் என்று கேட்கிறார்கள். இலவச வண்ண தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்பது கலைஞரின் உறுதிமொழி.




ஆகவே, குடும்ப அட்டை உள்ள அனைத்துக் குடும்பத்திற்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படும் . முதல் கட்டமாக 30 இலட்சமும், இரண்டாம் கட்டமாக 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதற்கான பணிகள் தொடங்கப் பட்டுள்ளன. தேவைப்பட்டால் நான்காவது கட்டத்தின் மூலம் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டியில்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் வழங்கப்படும்.

இந்த மாவட்டத்தில் தொடங்கப்படவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலம், ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி அனல்மின் திட்டப்பணிகளின் மூலம் இங்கு தொழிற் கல்வி பயிலும் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளும் கிடைக்கவுள்ளது. இதுபோல இன்னும் பல திட்டப்பணிகள் வரும் ஆண்டுகளில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று மாண்புமிகு அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

விழாவில் மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ. இராசா அவர்கள் தலைமை வகித்துப் பேசினார். விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள். விழாவில் அரசு நலத்திட்ட விளக்க மக்கள் சாசனம் கையேடு மற்றும் அனைத்து அரசுத் துறைகளின் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொகுப்பு மலரை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு 6,507 நபர்களுக்கு ரூ.3 கோடியே 14 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேசன்

## - தமிழக அரசு ஆணை



தமிழக அரசு கம்பிவடத் தொலைக்காட்சி (Cable TV) சேவையைத் தொடங்குவது சம்பந்தமாக 11.8.2007 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்த முடிவின் அடிப்படையில், "அரசு கேபிள் டி.வி.கார்ப்பரேசன்'' என்ற புதிய அரசுப் பொதுத்துறை நிறுவனம் தொடங்கப்படும் என்றும், இந்த நிறுவனத்தில் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநருடன் நிதித்துறைச் செயலர், தகவல் தொழில்நுட்பத்துறைச் செயலர், நிருவாக இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்வாரியத்தின் தலைவர் ஆகியோர் இயக்குநர்களாகப் பணிபுரிவார்கள் என்றும், இந்தப் புதிய அரசுப் பொதுத்துறை நிறுவனம் தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.



# தஞ்சை நகராட்சியில் ரூ.70 கோடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்

தஞ்சை நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.70 கோடி செலவில் மேற்கொள்ள அரசு ஒப்புதல் அளித்தது. இதையடுத்து மத்திய சுற்றுப்புறச் சூழல் வனத்துறை அமைச்சகம் ரூ.77 கோடி மதிப்பில் பணிகள் தொடங்க ஒப்புதல் அளித்தது. இதன்படி தொடங்கப்பட்ட பாதாளச் சாக்கடைப் பணி நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்திற்கான மத்திய அரசின் பங்கு ரூ.30 கோடியாகவும், மாநில அரசின் பங்கு ரூ.23 கோடியாகவும், நகராட்சி மற்றும் பொதுமக்களின் பங்கு ரூ.17 கோடியாகவும் உள்ளன. இதுவரை ரூ.61 கோடியே 10 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், தஞ்சை நகரில் கழிவுநீர்க் குழாய்கள் 259.78 கிலோ மீட்டர் நீளத்திற்குப் பதிக்கப்பட்டுள்ளது.

மேலும் 10 ஆயிரத்து 59 ஆள்நுழைவு தொட்டிகளும், 30 ஆயிரம் வீட்டு இணைப்புகளும், 9.03 கிலோ மீட்டர் பிரதான குழாய் பதிக்கும் பணிகளும் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய பணிகளும் நிறைவடைந்துள்ளன. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், வடக்குவாசல் அகழியில் கட்டப்பட்டுள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் நடைபெற்றுவரும் சோதனை ஓட்டப் பணிகளை 19.8.2007 அன்று காலை நேரில் சென்று பார்வையிட்டார். பின்பு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது, தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

அதன்படி நகராட்சிகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தஞ்சையில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணி 98 சதவீதம் முடிவடைந்துள்ளது. நீதிமன்றத்தில் தடை வழங்கப்பட்டது பணிகள்



தாமதத்திற்கு காரணமாகும். தமிழகத்தில் 21 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகள் உள்ளன. அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு அடிப்படைப் பணிகளை நிவர்த்தி செய்ய, ஒவ்வொரு கிராமத்திற்கும் ரூ.20 இலட்சம் வரை ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதுமட்டுமின்றி பல்வேறு துறைகள் மூலம் ஒதுக்கப்படும் நிதியையும் சேர்த்தால் ரூ.90 இலட்சம் அல்லது ரூ.1 கோடி வரை நிதிவரக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2006 – 2007ஆம் ஆண்டிற்கு 2,500 கிராமங்களும், 2007–2008ஆம் ஆண்டிற்கு மேலும் 2,500 கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

5 ஆண்டுகளுக்குள் அனைத்து கிராமங்களிலும் எல்லாப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுவிடும். அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டு ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை பேரூராட்சி வரலாற்றிலேயே இவ்வளவு நிதி ஒதுக்கியது கிடையாது.

4 ஆண்டுகளில் எல்லாப் பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் நிதி வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிக்கப்படும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரம் வழங்க வேண்டும் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அந்த கொள்கையின் அடிப்படையில் நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சித் தலைவர்களை அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அந்தக் கருத்தரங்குகளில் நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சித் தலைவர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டன. அதைப்போல் ஊராட்சி மன்றத் தலைவர்களைச் சந்தித்து பேச வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு 4 மண்டலமாகப் பிரிக்கப்பட்டது. 3 மண்டலங்களில் ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கான கருத்தரங்கம் முடிந்துவிட்டது.

திரு.**கே.குமாரவேலு,**
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர் மாவட்டம்.

# மதுரை - அரசு இராசாசி மருத்துவமனைக்கு ரூ.22 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் புதிய கட்டடம்

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை


திரு. **சிவ.சு. சரவணன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மதுரை.


மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகே அரசு இராசாசி மருத்துவமனைக்கு ரூ.22 கோடி மதிப்பீட்டில் நவீன மருத்துவ தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டப்படவுள்ள புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டியும், புதிய திட்டப் பணிகளைத் திறந்து வைத்தும் மற்றும் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.8.2007 அன்று உரையாற்றினார்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, "இங்கு சிறப்போடு நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற இவ்விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கின்ற திட்டப் பணிகளின் மதிப்பீடு ரூ.42.75 கோடிகள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், பொதுப்பணித்துறை, நபார்டு, தாட்கோ, குடிநீர் வடிகால் வாரியம், தொழில்நுட்பக் கல்வி இயக்கம் ஆகிய துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்டு முடிக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பீடு ரூ.8 கோடியாகும். மேலும் நெடுஞ்சாலைத்துறை மூலம் கட்டி முடிக்கப்பட்டு மதுரை மேற்கு சட்டமன்ற இடைத்தேர்தல் காரணமாக திறப்புவிழா ரத்து செய்யப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவிடப்பட்ட கூடல்நகர் மேம்பாலம் மதிப்பீடு ரூ.6 கோடியாகும். கூடல்நகர் ரயில்வே மேம்பாலம் மூலம் கூடல்நகர், விளாங்குடி, ஆணையூர் பகுதி மக்கள் சிறப்பான முறையில் பயன் பெறக் கூடியதாக அமைந்து உள்ளது", என்றார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, "மாவட்ட நிருவாகத்தின் மூலம் இங்கு 17 துறைகள் 47 திட்டங்கள் மூலம் 25.551 பயனாளிகளுக்கு ரூ.14.40 கோடி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது. இராசாசி மருத்துவமனை என்பது சென்னையில் உள்ள பொதுமருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு ஈடாகத் திகழ்கிறது. இம்மருத்துவமனை ஒரு பழமையான வரலாற்றுப் பெருமையாகத் திகழ்ந்து கொண்டு இருக்கிறது. மதுரை மக்கள் மட்டும் அல்லாது தென் மாவட்ட மக்களும் இலவச மருத்துவ வசதி பெறுவதற்கும் மதுரை மற்றும் தென் மாவட்டங்களில் மருத்துவக்கல்வி பயிலும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.22 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை விரிவாக்கத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் விபத்துகாய சிகிச்சை, எலும்பு முறிவு, நரம்பியியல் அறுவைப் சிகிச்சை, நுண்கதிர் நோய் கண்டறிதல், மயக்கவியல், தலைக்காய சிகிச்சை தனிப்பிரிவு, நெஞ்சக சிகிச்சை போன்ற பல்வேறு அறுவை சிகிச்சைப் பிரிவுகள் புதிதாகக் கட்டப்படவுள்ள மருத்துவமனையில் உருவாக்கப்பட்டுள்ளது.





கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் வகையில் 100 படுக்கைகள் கொண்ட பிரிவு உருவாக்கப்படவுள்ளது".

மதுரையில் புறவழிச்சாலை ஏற்படுத்தப்பட்டு மாட்டுத் தாவணியில் மிகப்பெரிய பேருந்து நிலையம் அமைக்கப் பட்டது. மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தை குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால், 2 லட்சம் பயணிகள் பயன்படுத்தி வருகின்றனர். அப்படி பயன்படுத்தக்கூடிய பேருந்து நிலையத்தை தரமான நிருவாக அமைப்புச் சான்றிதழ் ISO 9001-2000 என்று வழங்கப்பட்டு இருக்கிறது. சர்வதேச அமைப்பு இந்த சான்றிதழை வழங்கி இருக்கின்றது. இந்தியாவிலேயே உள்ளாட்சி அமைப்பால் நிருவாகிக்கப்படும் ஒரு பேருந்து நிலையத்திற்கு இப்படி ஒரு சான்றிதழ் முதல்முறை இந்த பேருந்து நிலையத்திற்கு கிடைத்து உள்ளது.

மேலும் தேசிய நதிநீர் திட்டத்தின் கீழ் மதுரை மாநகரில் இருக்கக்கூடிய கழிவுநீர் வைகை நதியில் கலக்காமல் அந்த கழிவுநீரை சுத்திகரிப்பதற்காக பாதாளச் சாக்கடை திட்டம், மத்திய அரசின் வனம், சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிதி உதவியோடு ரூ.165 கோடி மதிப்பில் திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதுபோல் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் நிறைவு பெற்றவுடன் மதுரை மாநகரில் இருக்கக்கூடிய 80 சதவிகிதம் பகுதிகள் இந்த வசதியைப் பெறுகிறது. மீதம் இருக்கின்ற 20 சதவிகிதம் பகுதிக்கான அந்தப் பணிகள் ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் 231 கோடி மதிப்பீட்டில் அந்த பாதாளச் சாக்கடைப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

அரசு நலத்திட்ட உதவிகளாய் குறிப்பிட விரும்புவது ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு மானியத்துடன் கூடிய சுழல் நிதி ரூ.66.40 லட்சம் வழங்கப்பட இருக்கிறது. மதுரை மாநகராட்சி மூலமாக 500 மகளிர்க்கு திருமணத்திற்கான நிதியுதவி, சமூகநலத்துறை மூலமாக தலா 15,000 வீதம் 1 கோடியே 53 இலட்சத்து 15 ஆயிரம் திருமண நிதி வழங்கப்பட இருக்கிறது. 1,884 பயனாளிகள் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 5 கோடியே 72 இலட்சத்து 73 ஆயிரம் மதிப்பில் நிதி உதவி வழங்கிட இருக்கிறது. மகளிர் திட்டம், ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, தாட்கோ, சுகாதார மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளின் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட இருக்கிறது.

ஜவகர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டம் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை என 3 மாநகராட்சிகளில் இத்திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றோம். மத்திய அரசின் மூலமாக இத்திட்டத்தைப் பெற்று அத்திட்டத்தின் மூலமாக பலகோடி ரூபாயை பெற்று இதன் மூலமாக இத்திட்டத்தை நிறைவேற்ற இருக்கின்றோம். அண்மையில் தில்லி மாநகருக்குச் சென்று இருக்கும்போது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் கலந்து கொண்ட நிகழ்ச்சியில் நமது பாரதப் பிரதமர், நிதியமைச்சர், சோனியா அம்மையாரை சந்திக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டபோது இத்திட்டத்தை குறிப்பிட்டுச் சொன்னேன். தமிழ்நாட்டில் 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. 3 மாநகராட்சிகளில் மட்டும்தான் இந்தத் திட்டம் வந்து சேருகிறது. மீதமுள்ள சேலம், திருநெல்வேலி, திருச்சி ஆகிய 3 மாநகராட்சிகளையும் இத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துவிட்டு வந்துள்ளேன். இத்திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லவேண்டும் என்று சொன்னால் இந்தியாவில் இருக்கக்கூடிய முக்கியமான மாநகராட்சிகளில் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்து உள்ளது. 63 நகரங்களை மத்திய அரசு தேர்ந்து எடுத்திருக்கிறது. அப்படி தேர்ந்தெடுத்து இருக்கின்ற மாநகராட்சிகளில் தமிழ்நாட்டில் 3 மாநகராட்சிகளில் ஒன்று நமது மதுரை மாநகராட்சி. உள் கட்டமைப்பை மாற்றுவதற்கும் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் மதுரை மாநகராட்சிக்கு பல வளர்ச்சித் திட்டங்களை கொண்டு வருவதற்கு இத்திட்டத்தை பயன்படுத்த இருக்கிறோம். இத்திட்டத்திற்கு முதல் கட்டமாக ரூ.2,361 கோடி மதிப்பீட்டில் திட்டங்களைத் தீட்டி அதற்கான ஒப்புதலை நாம் பெற்று இருக்கிறோம். விரைவில் அந்தப் பணிகள் எல்லாம் தொடங்க இருக்கிறது. 2 அல்லது 3 ஆண்டுகளில் மதுரை நகரமே சிங்கப்பூர் அளவுக்கு வரக்கூடிய சூழ்நிலை உள்ளது என்று மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ரூ.256.87 கோடியில் 11 கால்வாய்களை சீரமைக்கின்ற பணி. ரூ.59.12 கோடியில் வைகை அணையில் இருந்து 600 மி.க. அடி நீரைச் சுத்திகரித்து இந்த மாநகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம். மதுரை மாநகரில் இருக்கக்கூடிய 79 குடிசைப் பகுதிகளில் 12,078 குடிசை வீடுகளை கான்கீரிட் வீடுகளாக ரூ.130.42 கோடி செலவில் மாற்றக்கூடிய திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே இருக்கக்கூடிய மேலக்கால், கோச்சடை, மணலூர் ஆகிய இடங்களில் ரூ.5 கோடி மதிப்பிலே தடுப்பணை அமைத்தல். திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை ரூ.74.29 கோடியில் அந்த பணிகளை மேற்கொள்ளுதல். ரூ.26.26 கோடி செலவில் மதுரை மாநகராட்சியில் முந்தைய பாதாளச் சாக்கடை திட்டத்தில் சேர்க்கப்படாத பகுதிகளை அந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறச் செய்வது, மாநகரின் பழமையான பாரம்பரியமிக்க இடங்களை ரூ.117 கோடி செலவில் மேம்படுத்துதல், ரூ.65.65 கோடி செலவிலே காய்கறிச் சந்தையை அமைத்தல். அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைத்தல் ஆகிய பணிகள் எல்லாம் மேற்கொள்ளபட இருக்கிறது. நமது அரசால் பல திட்டங்கள் மதுரையில் மட்டுமில்லாமல் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

மேலும் பெண்கள் புதிய சக்தியுடன் வளர்ச்சி பெறவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பலதுறைகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளித்து எண்ணற்ற திட்டங்களை பெண்களுக்காகச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் ஒதுக்கீடு அடிப்படையில் தமிழகத்தில் உள்ள 6 மாநகராட்சிகளில் 2 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 3 பேர் பெண்கள். நகராட்சிகளில் 152 பேரில் 51 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 60 பேர் பெண்கள். மாவட்ட ஊராட்சிகளில் 29 பேரில் 10 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 11 பேர் பெண்கள். 561 பேரூராட்சிகளில் 187 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 212 பேர் பெண்கள். 385 ஊராட்சி ஒன்றியங்களில் 140 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 173 பேர் பெண்கள். 12,618 கிராமப் பஞ்சாயத்துகளில் 4.275 பேர் பெண்கள் இருக்கவேண்டும் ஆனால் 4.968 பேர் பெண்கள் என மகளிர் வளர்ச்சியடைய வேண்டும் என்று சட்டமன்ற. நாடாளுமன்றத்திலும் முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

ரூ.10.50 கோடி மதிப்பீட்டில தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஹார்விப்பட்டியிலும். ரூ.8.60 கோடி மதிப்பீட்டில் ஆனையூரிலும் புதிய திட்டப்பணிகளும். 165.00 லட்சம் மதிப்பீட்டில் கள்ளந்திரி, அலங்காநல்லூர் மற்றும் சமயநல்லூர் ஆகிய மூன்று சுகாதார நிலையத்தினையும் மேம்படுத்தப்பட்ட 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்துதல் என மொத்தம் ரூ.42.75 கோடிகள் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளும்.தமிழ்நாடு விளையாட்டு மேம்பாடு ஆணையம் மூலம் மாவட்ட விளையாட்டு அரங்கில் ரூ.4.07 கோடி




மதிப்பீட்டில் 400 மீட்டர் சிந்தடிக் ஓடுதள பாதை, சிந்தடிக் கூடைப்பந்து மைதானம். சிந்தடிக் டென்னிஸ் மைதானம். செயற்கை புல் கால்பந்து மைதானம், மைதானத்தைச் சுற்றி இரும்பு தடுப்பு வேலி. ஜிம்னாஸியம் ஆகியவைகளும். ரூ.157.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிகள். திருமங்கலம். வீரப்பெருமாள்புரம், கருப்பாயூரணி. பேரையூர் ஆகிய கட்டடங்களும், தொழில் நுட்பக்கல்வி கோட்டத்தின் மூலம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அரசு மகளிர் பல்தொழில் நுட்பக்கல்லூரியில் கட்டி முடிக்கப்பட்ட வகுப்பறைகள். வரைவு அரங்கம் மற்றும் தளவாடச்சாமான்கள் ஆகியனவாகும். ரூ.65.80 லட்சம் மதிப்பீட்டில் மண்டல நோய் கண்டறிய ஆய்வுக்கூடம். மதுரை. வெள்ளதூர். அவனியாபுரம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தாட்கோ மூலம் ரூ.44.70 லட்சம் மதிப்பில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி கூடுதல் பள்ளிக் கட்டடம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.22.95 லட்சம் மதிப்பீட்டில் மேலூர், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் திட்டப்பணிகள் ஆக மொத்தம் ரூ.7.98 கோடியில் நிறைவுபெற்ற திட்டங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன எனவே இந்த அரசு செயல்படுத்தி வரும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவு தாருங்கள்," என்று கேட்டுக் கொண்டார்.

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் சிறப்புரையாற்றும்போது, இங்கு கலந்துகொண்ட நாடாளுமன்ற. சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழக அரசின் செயல்பாடுகளுக்கு மனப்பூர்வமாக பாராட்டுக்களை தெரிவித்தனர். ஒரு தாய் தந்தை எப்படி தனது குழந்தையின் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறார்களோ அதுபோல தமிழச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு. முன்னேற்றத்திற்கு தாயாக தந்தையாக இருந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதிகாலை 5.00 மணிக்கு தொலைபேசி அழைப்பு வந்தால் அது மாண்புமிகு முதல்வர் அவர்களாகத்தான் இருக்கும். இரவு 11.00 மணிக்கு தொலைபேசி அழைப்பு வந்தால் அது மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களாகத்தான் இருக்கும். இன்றைக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நல்ல தலைவர்கள் கிடைத்துள்ளார்கள். அதனால்தான்





# தமிழ்நாடு வீட்டுப் பணியாளர் நலவாரியத்தின் தலைவர் உறுப்பினர்கள் நியமனம்

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*

***கலைஞர் அவர்கள் அறிவிப்பு***

தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் வேலை மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ், அமைப்புச் சாரா தொழிலாளர்கள் நலத் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு தொழிலாளர் நல வாரியங்களைத் தமிழக அரசு அமைத்து வருகிறது. அதன்படி, தமிழ்நாடு வீட்டுப்பணியாளர் நல வாரியம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாரியத்தின் தலைவராக, தமிழக அரசின் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அரசுப் பிரதிநிதிகளாக, தொழிலாளர் நல ஆணையர், நிதித் துறைச் செயலாளர், சட்டத்துறைச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர் ஆகியோரையும்; வேலையளிப்போர் பிரதிநிதிகளாக, உத்திரமேரூர் திருமதி. க.சு.வசந்தராணி, திருச்செங்கோடு, திருமதி.பி.பாப்பாத்தி, தண்டையார்பேட்டை, திருமதி. வண்ணைதேவகி, சீர்காழி திருமதி. ஏ. இறை எழில், சேலம் திருமதி. ஆர். கோவிந்தம்மாள், சென்னை திரு.நாராயணசாமி தொழிலாளர் பிரதிநிதிகளாக, விழுப்புரம் திருமதி. மெரினா இராமலிங்கம், சென்னை திருமதி. டி.ஏ.லதா, டி.இராஜேஸ்வரி, பொள்ளாச்சி திருமதி. கே.சுவர்ணம், தேனி திருமதி. கலைமதி குணசேகரன் ஆகியோரையும் நியமனம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இன்றைக்கு திட்டங்கள் எல்லாம் தமிழ்நாட்டை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. நமக்கு நல்ல முதல்வர் கிடைத்திருக்கின்றார். இந்த அரசு எதைச் செய்தாலும் அதை மக்களுக்காகச் செய்கின்ற அரசாக உள்ளது. தில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை மதுரைக்கு கொண்டு வருவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார். மத்திய அரசின் நிதி ரூ.100 கோடியும், மாநில அரசின் நிதி ரூ.30 கோடியும் மொத்தம் ரூ.130 கோடியில் எய்ம்ஸ் மருத்துவமனை மதுரையில் அமைய உள்ளது. இந்தப் பணி ஒரு வருடத்தில் நிறைவடையும். இங்கே ரூ.22 கோடியில் புதிய மருத்துவமனைக் கட்டடம் கட்டப்படவுள்ளது. இதற்கு நவீன உபகரணங்கள் வாங்க ரூ.10 கோடியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கி இருக்கிறார். எனவே இந்த அரசுக்கு அனைவரும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.எஸ்.ஜவஹர்.இ.ஆ.ப., தலைமையுரையாற்றினார். இவ்விழாவில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.டி.பி.எம்.மைதீன்கான், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் துறைமுக துறை அமைச்சர் வெள்ளக்கோவில் திரு.மு.பெ.சாமிநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.ஆ.தமிழரசி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

* * *

## ஆதிதிராவிட மாணவர்கள் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி படிக்க ரூ.25,000 நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டம் பயின்ற ஆதிதிராவிட மாணவியர் சட்டத் தொழில் தொடங்க, அதாவது கட்டிட வாடகை செலுத்தி, புத்தகங்கள் மற்றும் மரச்சாமான்கள் வாங்க ரூ.5,000 மானியமாக வழங்கும் திட்டத்தினை 1996 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தினார். அத்திட்டம் கடந்த கால ஆட்சியாளர்களால் நிறுத்தப்பட்டது. பின்னர், 5ஆவது முறையாக பதவியேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் மீண்டும் சட்டம் பயின்ற பட்டதாரிகளுக்கு தொழில் தொடங்கிட மானியம் ரூ.5 ஆயிரத்திலிருந்து ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்க ஆணையிட்டு, முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாண்டு முதல் இந்திய ஆட்சிப் பணி மற்றும் இந்திய காவல் பணி ஆகிய தேர்வுகளில் முதல் நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட மாணவ மாணவியர் அத்தேர்வில் வெற்றி பெற ஏதுவாக அவர்கள் புத்தகங்கள் வாங்கிடவும், மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.25,000 வீதம் 100 மாணவர்களுக்கு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். ஏழை எளிய மக்களின் பாதுகாவலராக விளங்கக் கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் இப்புதிய திட்டத்தின் மூலம் ஏழை ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள் உயர் பதவிகளைப் பெற்றிட அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. ★

# தமிழக அரசு

## மக்களுடைய எண்ணங்களையும் தேவைகளையும் உணர்ந்து செயலாற்றி வருகிறது

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உரை




திரு. **கே. கண்ணதாசன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல் மாவட்டம்.


**நா**மக்கல் அரசு மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் விழாவில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், மற்றும் எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கியும் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்தும்–அடிக்கல் நாட்டியும், பல்வேறு துறைகளின் சார்பில் ஏராளமான பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கியும் உரையாற்றினார். நாமக்கல் அரசு மேல் நிலைப்பள்ளி (தெற்கு) மைதானத்தில் 30.8.2007 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், எரிவாயு இணைப்புகளுடன் இலவச எரிவாயு அடுப்பு வழங்கும் விழா, புதிய கட்டடங்கள் திறப்பு விழா, புதிய கட்டடங்கள் மற்றும் மாவட்ட விளையாட்டு அரங்கம் அடிக்கல் நாட்டு விழா, கமலாலயக் குளப்பூங்கா, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி பொருளாதார கடன் வழங்கும் விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோ.சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பேருரையாற்றினார். அவர் பேசியதாவது:–

நாமக்கல் தமிழ்நாட்டிலேயே இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவதில் முதல் மாவட்டமாக விளங்குகிறது என பத்திரிகையில் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன் . இதுபோன்று அனைத்து மாவட்டங்களும் அரசின் திட்டங்கள்ள விரைந்து மக்களுக்குக் கொண்டு செல்வதில் முனைப்புடன் செயலாற்றிட வேண்டும். நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவிக்கப்படுகின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும் அத்திட்டங்களை பொதுமக்களுக்குக் கொண்டு செல்வதில் தீவிரம் காட்டி வருவது பாராட்டுக்குரியதாகும். இச்செயல் குறித்து மாவட்ட



ஆட்சியரை மிகவும் பாராட்டுகிறேன் . இவ்விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தாலும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம்தான் ஒரு சீரிய திட்டமாகும்.

### தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றம்

முதல்வர் கலைஞர் அவர்கள் கடலூரில் நடைபெறும் விழாவில் கலந்துகொண்டு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்குகிறார். இதுபோன்ற விழா இன்றைய தினம் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது. எத்தனையோ கட்சிகள் தேர்தலில் பல வாக்குறுதிகளை தேர்தல் நேரத்தில் அறிவித்து ஆட்சி பீடத்திற்கு வந்த பிறகு அதனை மறந்து விடுகிறார்கள். ஆனால் நமது முதல்வர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை ஆட்சி அமைத்த உடனேயே ஆளுநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்த அதே விழா மேடையிலேயே தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதியான ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கான திட்ட கோப்பில் கையெழுத்திட்டார். தொடர்ந்து ஏழை விவசாயிகளின் கடன் ரூபாய் 7 ஆயிரம் கோடியினை தள்ளுபடி செய்யும் கோப்பில் கையெழுத்திட்டார். தேர்தல் வாக்குறுதியில் கூறியதையும் நிறைவேற்றினார். தேர்தல் வாக்குறுதியில் சொல்லாததையும் நிறைவேற்றியுள்ளார் நமது முதல்வர் கலைஞர் அவர்கள். சத்துணவில் வாரம் 2 முட்டை என்பதை மேலும் விரிவுபடுத்தி பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாளாக" அறிவித்து அந்நாளில் மேலும் 1 முட்டை என விரிவுபடுத்தி வாரம் 3 முட்டைகள் சத்துணவில் வழங்கினார்கள். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் 2006 – 2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில்; "வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஒவ்வொருவருக்கும் செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல் படுத்தப்படும்" என அறிவிக்கப்பட்டது.

### அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

அதன்படி தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 15.9.2006 அன்று அண்ணா பிறந்த நாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்திலுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் முதல் கட்டமாக 30 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கி தொடங்கி வைத்தார். மறுநாள் 16.9.2006 அன்று அமைச்சர் பெருமக்கள் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து சமத்துவபுரம் குடியிருப்புகளுக்கும் நீலகிரி மாவட்ட மக்களுக்கும், சென்னை மாநகரில் இரண்டு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார். மேலும் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் மிகப் பெரிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதில் குறிப்பாக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தான் மிகப் பெரிய திட்டமாகும். 5 ஆண்டுகளில் படிப்படியாக



மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

இதனால் கிராம ஊராட்சியை சேர்ந்த மக்கள் அனைத்து அடிப்படை வசதிகளும் பெறுவார்கள். மேலும் பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் 2008ல் அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மாநிலத்தில் 561 பேரூராட்சிகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. முதற்கட்டமாக 140 பேரூராட்சிகளில் தலா



ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் பணி நடைபெற உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சிகளில் முதல் 4 பேரூராட்சிகளான ஆர்.புதுப்பட்டிபட்டணம், காளப்பநாய்க்கன்பட்டி, சீராப்பள்ளி ஆகிய பேரூராட்சிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. தொடர்ந்து இந்த அரசு பொறுப்பேற்றபின் நகராட்சிகளின் கடன்களை ரத்து செய்துள்ளது. மாநிலம் முழுவதும் ரூபாய் 760 கோடியும், நாமக்கல் மாவட்டத்தில் 4 நகராட்சிகளில் ரூ.37 கோடி கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 25 இலட்சம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 19.8.2007 வரை 17 இலட்சத்து 67 ஆயிரத்து 489 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு, இதுவரை 15 இலட்சத்து 32 ஆயிரத்து 370 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டதில் இதுவரை 6 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 126 கிராம ஊராட்சிகளில் 56,820 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதேபோல, ஏழை, எளிய தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம் 14.1.2007 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னையில் ஆயிரம் விளக்குப் பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டு, அதே நாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்டு இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கினார்கள்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்**

20.8.2007 வரை தமிழகம் முழுவதும் 2 இலட்சத்து 94 ஆயிரத்து 690 எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 6,709 பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் நவம்பர் 2007 வரை 11,903 பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட உள்ளது. இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கடலூரில் 30.8.2007 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு அடுப்புகளையும் ஏழை, எளிய தாய்மார்களுக்கு வழங்கும் விழா நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து இன்று இவ்விழாவில் 4,832 பயனாளிகளுக்கு ரூ.169.12 இலட்சம் மதிப்பில் இலவச வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டியும், 2,976 ஏழை, எளிய தாய்மார்களுக்கு ரூ.59.52 இலட்சம் மதிப்பில் எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளும் வழங்கப்படுகிறது. இதனைத் தவிர, வருவாய் துறை சார்பில் 1,000 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்களும், ரூ.29.60 இலட்சம் மதிப்பில் 823 பயனாளிகளுக்கு விவசாயத் தொழிலாளர் நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது.

**நலத்திட்ட உதவிகள்**

ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 2,346 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.175.73 இலட்சம் மதிப்பில் சுழல்நிதி மற்றும் பொருளாதார கடன்களும், மகளிர் திட்டம் சார்பில் 4,195 பயனாளிகளுக்கு ரூ.116.66



இலட்சம் மதிப்பில் சுய உதவிக் குழு சுழல்நிதி எழுத்தறிவுத் திட்டம் மற்றும் தொழிற்பயிற்சியும் வழங்கப்படுகிறது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 7 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு திட்டத்தின் முதல் தவணைத் தொகையாக ரூ.24.41 இலட்சம் வழங்கப்படுகிறது.



மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 11,790 மாணவர்களுக்கு ரூ.207.47 இலட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகையும், 22 பயனாளிகளுக்கு ரூ.42,000 மதிப்பில் இலவச சலவைப் பெட்டிகளும், 5 நபர்களுக்கு ரூ.10 ஆயிரம் மதிப்பில் இலவச தையல் இயந்திரமும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 2,709 மாணவர்களுக்கு ரூ.32.17 இலட்சம் மதிப்பில் கல்வி உதவித்தொகையும், 156 பயனாளிகளுக்கு ரூ.11.90 இலட்சம் மதிப்பில் இலவச வீட்டுமனைப் பட்டாவும் வழங்கப்படுகிறது. சமூகநலத்துறையின் சார்பில் ரூ.43.07 இலட்சம் மதிப்பில் 250 பயனாளிகளுக்கு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவியும், 25 பயனாளிகளுக்கு கலப்புத் திருமண நிதி உதவியும், 5 பயனாளிகளுக்கு விதவைத் திருமண நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

சுகாதாரத்துறை சார்பில் 1,503 நபர்களுக்கு ரூ.90.18 இலட்சம் மதிப்பில் டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறை, மாவட்டத் தொழில் மையம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை சார்பில் 517 பயனாளிகளுக்கு ரூ.28.50 இலட்சம் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. மேலும், இன்றைய விழாவில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் ரூ.653.114 இலட்சம் மதிப்பிலான 2,243 முடிக்கப்பட்ட பணிகள் துவக்கி வைக்கப்படுகிறது. கல்வித்துறையின் சார்பில் ரூ.691.68 இலட்சம் மதிப்பில் நபார்டு திட்டத்தின் மூலம் 9 பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள 163 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், 8 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 39 கழிப்பறைக் கட்டடங்களும், அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் ரூ.83.75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 39 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும் துவக்கி வைக்கப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் ரூ.126 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 மாணவர் விடுதிக் கட்டடங்கள்; கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் ரூ.78.80 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள 4 புதிய கால்நடை மருந்தகக் கட்டடங்கள் துவக்கி வைக்கப்படுகிறது.

மேலும் ரூ.36.17 இலட்சம் மதிப்பில் நாமக்கல் நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள கமலாலய குளம் பூங்கா மற்றும் ரூ.8 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக பூங்காக்கள் இன்று துவக்கி வைக்கப்படுகின்றன. இவை தவிர ரூ.1 கோடி மதிப்பில் நாமக்கல் மாவட்ட விளையாட்டு அரங்கம், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் ரூ.45 இலட்சம் மதிப்பில் 3 கே.வி.பி.வி. கட்டடங்கள் மற்றும் ரூ.51.60 இலட்சம் மதிப்பில் 3 கூட்டுறவு வங்கி நவீன அலுவலகக் கட்டடங்களும் இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது. இவ்வாறு தமிழக அரசு மக்களுடைய எண்ணங்களையும், தேவைகளையும் மிக விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு செயலாற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள். இதற்கு எடுத்துக்காட்டாக இந்த விழாவில் பல்வேறு துறையின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள ரூ.1677.514 இலட்சம் மதிப்புள்ள 2,502 பணிகள் என்னால் துவக்கி வைக்கப்பட்டும், ரூ.196.60 இலட்சம் மதிப்பிலான 7 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், பல்வேறு திட்டங்களின் கீழ் 35,145 பயனாளிகளுக்கு ரூ.12.63 கோடி ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகள் வழங்குவதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் நாமக்கல் மாவட்ட மக்களுக்கு ரூ.31.37 கோடி மதிப்பிலான நலத்திட்டங்களும் பயன்களும் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் அடிப்படையில் நாமக்கல் மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் அனைத்தும் சிறந்த முறையில் மக்களைச் சென்றடைந்துள்ளதுஎன்பதில் மகிழ்ச்சியடைகிறேன்".

விழாவில் 35 ஆயிரத்து 145 பயனாளிகளுக்கு ரூ.12.63 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கு.கோவிந்தராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.



## நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசுதான் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கப்பட்ட விழாவில்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை (3.9.2007)

**கா**ஞ்சிபுரம் மாவட்டத்தில் மாமல்லபுரத்திலே ஒரு சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினுடைய துவக்க விழா, மாமல்லபுரம் பேரூராட்சியிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தினுடைய அடிக்கல் நாட்டுவிழா, அதேபோல் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே சுனாமி திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட இருக்கக்கூடிய சிற்பப் பூங்கா அடிக்கல் நாட்டுவிழா. இந்த மூன்று விழாக்களை இணைத்து அத்துடன் பல்வேறு துறைகளின் சார்பில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய விழாக்களையும் இணைத்து இந்த எழுச்சி மிகுந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விழா சிறப்போடு நடைபெற வேண்டுமென்று இந்தத் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுத் துறை அலுவலர்கள் இதனை சிறப்பாக தங்களுடைய பணியை நிறைவேற்றித் தந்து அதிலே வெற்றி கண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என்பதை நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன்.



இந்த விழாவைப் பொறுத்தவரையிலே ஒரு மாற்றத்தை நீங்கள் கண்டிட முடியும். அண்மையிலே நடைபெற்றிருக்கக்கூடிய அரசு விழாக்கள், ஏன் நாம் ஆட்சிப் பொறுப்பேற்று இந்த ஒன்றரை ஆண்டு காலத்திற்குள் எத்தனையோ நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கிறோம், எத்தனையோ தொடக்க விழாக்கள், அடிக்கல் நாட்டுவிழாக்களை நடத்தியிருக்கிறோம். ஆனால் அப்படி நடத்தப்படக்கூடிய நேரத்தில் ஜனநாயக முறையோடு அந்தந்த மாவட்டத்திலே, பகுதியிலே, தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கக்கூடிய பிரதிநிதிகள் அது யாராக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி அல்லது உள்ளாட்சி அமைப்பின் பொறுப்பிலே இருக்கின்ற யாராக இருந்தாலும் அவர்களுடைய பெயர்கள் எல்லாம் உரிய முறையிலே உரிய வகையிலே விளம்பரப்படுத்தப்பட்டு அந்த அழைப்பிதழிலே அச்சடிக்கப்பட்டு, அந்த வகையிலேதான் தொடர்ந்து நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து தொடர்ந்து நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் அப்படி நடத்தப்படுகின்ற நேரத்தில் இன்றைக்கு பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்ற அ.தி.மு.க. இதுவரையிலே நான் பங்கேற்றிருக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையிலே அந்தக் கட்சியைச் சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு, கருத்தரங்கிற்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இதுபோன்ற அடிக்கல் நாட்டுவிழாவிற்கு, தொடக்கவிழாவிற்கு, ஒரு திறப்பு விழா நிகழ்ச்சிக்கு இதுவரையில் வந்திருக்கிறார்களா என்றால், வந்திடவில்லை.

ஆனால் மாமல்லபுரத்திலே அந்த வரலாறு இன்றைக்கு மாற்றப்பட்டு, இந்த நிகழ்ச்சியிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய அ.தி.மு.க.வைச் சார்ந்த பேரூராட்சியினுடைய தலைவர் அவர்கள் இங்கே வந்திருக்கிறார் என்று சொன்னால், நான் அதற்காக இந்தத் துறையின் சார்பிலே அந்தப் பேரூராட்சித் தலைவருக்கு என்னுடைய நன்றியை செலுத்த விரும்புகின்றேன் .

இங்கே வந்திருப்பது மட்டுமல்ல, இன்னொன்றையும் நான் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும். இந்த நிகழ்ச்சி எப்படி நடைபெறுகின்றது என்று பார்வையிட, ஆய்வு நடத்த, அதிகாரிகளோடு கலந்து பேச ஏறக்குறைய மூன்று, நான்கு முறை இந்தப் பகுதிக்கு நான் வந்தேன். அப்படி வருகிறபோதெல்லாம் நம்முடைய பேரூராட்சியினுடைய தலைவர் அவர்கள், ஒவ்வொரு முறையும் தவறாமல் அந்த ஆய்வுப் பணியை நாங்கள் மேற்கொள்கிற நேரத்திலே வந்திருந்து, அதுமட்டுமல்ல இந்த நிகழ்ச்சி சிறப்போடு அமைவதற்கு காரணமாக அமைந்திருக்கக் கூடியவர்களில் அவரும் ஒருவராக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதற்காக நான் இந்த விழாக் குழுவின் சார்பிலே, இந்தத் துறையின் சார்பிலே என்னுடைய நன்றியை முதலில் நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

### பேருந்து நிலையம்

இன்றைக்கு இந்த விழா சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அம்மையார் யசோதா அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள், நம்முடைய பேரூராட்சியின் தலைவர் அவர்கள் கூட இங்கே பேசுகிற போது ஒரு கோரிக்கையை குறிப்பிட்டு சொன்னார். இந்தப் பேரூராட்சியிலே பல மாநிலங்களிலிருந்து, பல நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் எந்த அளவிற்கு இங்கு வந்துகொண்டிருக்கிறார்கள், அப்படி வருகிற சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக நவீன முறையிலே ஒரு பேரூராட்சியின் பேருந்து நிலையம் உருவாக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை இங்கே எடுத்து வைத்தார். இங்கே நான் வெளிப்படையாக ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், அந்தப் பேரூராட்சியின் பேருந்து நிலையத்தின் அடிக்கல் நாட்டுவிழாவைக் கூட இந்த விழாவோடு சேர்த்து நடத்த நாங்கள் திட்டமிட்டிருந்தோம். ஆனால், அதை தற்காலிகமாக ஒத்தி வைத்திருக்கிறோம். என்ன காரணம் என்று கேட்டால், ஏற்கெனவே பேருந்து நிலையம் இந்த நகரத்திலே இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கிறது. மக்கள் நெருக்கடியாக இருக்கக்கூடிய இந்தப் பகுதியிலே பேருந்து நிலையம் இருப்பது என்பது உங்களுக்குத் தெரியும். அந்தப் பேருந்து நிலையத்தை விட்டு, வேறு இடத்திற்கு மாற்றிடக் கூடாது என்று சில கட்சிகளை சார்ந்திருக்கக்கூடியவர்கள், சில வணிகப் பெருமக்கள், குறிப்பிட்ட ஒரு சிலர் அந்தப் பிரச்சினையை எடுத்து வைத்தார்கள்.

அதற்குப் பிறகு நாங்கள் அதிகாரிகளை அழைத்துப் பேசினோம். இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய எல்லா கட்சி உறுப்பினர்கள், தலைவர்களை அழைத்து கலந்து பேசி, இன்னும் ஒரு சுமுகமான முடிவுக்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த நிகழ்ச்சியோடு இணைத்து வைக்காமல் அதை தள்ளி வைத்துவிட்டு, ஆனால் நிச்சயமாக உறுதியாக விரைவில் எல்லோருடைய முழு அனுமதியை, ஒத்துழைப்பைப் பெற்று மிக விரைவிலே மத்திய அரசு மூலமாக சுற்றுலாத் துறை மூலமாக பேருந்து நிலையத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிதியான



இரண்டரை கோடி ரூபாயில் நிச்சயமாக அந்தப் பேருந்து நிலையம் விரைவிலே கட்டப்படும் என்பதை நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாக தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் ரயில் பாதையைப் பற்றி இங்கே குறிப்பிட்டு சொன்னார். அவர் ஏற்கெனவே இந்தத் துறையினுடைய அமைச்சர் பொறுப்பிலே இருந்ததையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் இன்றைக்கு அவர் வகித்தப் பொறுப்பு யாரிடத்தில் இருக்கிறது என்று கேட்டால், அவர் கட்சியைச் சார்ந்த இரயில்வே துறை இணை அமைச்சராக இருக்கக்கூடிய வேலுவிடத்திலே தான் இருக்கிறது என்பதையும் நம்முடைய மூர்த்தி அவர்கள் மறந்துவிடக்கூடாது.

**உறுதிமொழிகள் காப்பாற்றப்படுகின்றன**

எது எப்படியிருந்தாலும் நியாயமான கோரிக்கைகள் எதுவாக இருந்தாலும், அது எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசுதான் தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய அரசு என்பதை நான் இங்கே அழுத்தந்திருத்தமாக தெரிவிக்க விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் அறிவித்த திட்டங்கள், நாங்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால் என்னென்ன வாக்குறுதிகளை நிறைவேற்றப்போகிறோம் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கக்கூடிய அந்த உறுதிமொழிகள் எல்லாம் இன்றைக்கு எந்த அளவிற்கு காப்பாற்றப்படுகின்றது என்பதை நீங்கள் உணர்ந்திட வேண்டும். ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடிமக்கள் கூட்டுறவு வங்கியில் வாங்கியிருக்கக் கூடிய 7,000 கோடி ரூபாய் கடனை அறவே ரத்து செய்யப்படும் என்று அறிவித்த அறிவிப்பாக இருந்தாலும், சத்துணவிலே வாரத்திற்கு மூன்று முறை முட்டை. ஏற்கெனவே அறிவித்தது இரண்டு முறை தான். ஆனால் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடிட வேண்டுமென்று நம்முடைய அரசு ஆணையிட்டு, அதனுடைய அடிப்படையிலேதான் இன்று வாரத்திற்கு மூன்று முறை முட்டை வழங்கக்கூடிய அந்த திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திருமணத்திற்கு உதவித் தொகையாக 15 ஆயிரம் ரூபாய். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச் சத்துக்காக உதவித் தொகையாக 6 ஆயிரம் ரூபாய். இலவச எரிவாயு அடுப்பு ஏழை எளிய மக்களுக்கு வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், பட்டா வழங்கக்கூடிய பணியாக இருந்தாலும், படித்து பட்டம் பெற்று வேலைவாய்ப்பில்லாமல் இருக்கக்கூடிய பட்டதாரி களுக்கு வேலை கிடைக்கிற வரையிலே உதவித் தொகை வழங்கக்கூடிய திட்டமாக இருந்தாலும், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் யார் யாருக்கு இல்லையோ அவர்கள் ரேஷன் கார்டு வைத்திருந்தால் போதும். அத்தனை பேருக்கும் வழங்குவோம் என்று தந்த அந்த உறுதிமொழியாக இருந்தாலும், இன்றைக்கு எந்த அளவிற்கு அவைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகிறது என்பதை நீங்கள் எல்லாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**மிகப் பெரிய திட்டம்**

அந்த அடிப்படையிலேதான், நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற வுடனே முதலில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பிலே ஒரு பெரிய திட்டத்தை அறிவித்தோம். இன்றைக்கு மத்திய அரசின் மூலமாக, மாநில அரசின் மூலமாக எத்தனையோ திட்டங்கள் நமக்குக் கிடைக்கலாம். அப்படி கிடைக்கக்கூடிய திட்டங்களுக்கெல்லாம் பல்வேறு வகையிலே, பல்வேறு தலைப்புக்களில் இன்றைக்கு நிதிகள் வந்து சேர்ந்து கொண்டிருக்கலாம். ஆனால், அது எந்த திட்டமாக இருந்தாலும், அனைத்துத் திட்டங்களையும் வெல்லக்கூடிய வகையிலே, ஒரு மிகப் பெரிய திட்டமாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கக் கூடிய திட்டம்தான் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நாம் ஆட்சிக்கு வந்தவுடனே முதல் நிதிநிலை அறிக்கையிலே அந்தத் திட்டத்தை அறிவித்தோம்.



இன்றைக்கு தமிழகத்திலே 12,618 கிராம ஊராட்சிகள் இருக்கிறது என்று சொன்னால், அதற்காக 2,536 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்த ஐந்து ஆண்டுகளில் 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே, அந்த திட்டத்தை நாம் அறிவித்தோம். அந்த திட்டத்தை கடந்த ஆண்டு நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் வேலூர் மாவட்டத்திற்கே சென்று, நெமிலி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருமாகளம்பாக்கம் என்ற அந்த கிராமத்திலேதான் இந்தத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். 2006–2007ஆம் ஆண்டிலே கடந்த ஆண்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2,500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த திட்டம் நடந்திருக்கிறது.

அதேபோல, இந்த ஆண்டு 2007–2008ஆம் ஆண்டு மீண்டும் 2,534 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்காக 507 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்பு நம்முடைய முதல்வர் அவர்கள் அருகில் இருக்கக்கூடிய குன்னப்பட்டு என்ற கிராம ஊராட்சிக்குச் சென்று, அங்கே அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் சார்பிலே நிறைவேற்றப்பட்டிருக்கிற அந்தப் பணிகளை எல்லாம் நேரடியாகப் பார்த்தார்கள். அங்கே குளம் எழுப்பப்பட்டிருக்கிறது, பள்ளிக் கட்டடங்கள் சீரமைக்கப்பட்டிருக்கிறது, புதிதாக விளையாட்டுத் திடல் உருவாக்கப்பட்டிருக்கிறது, நூல் நிலையம் அமைக்கப் பட்டிருக்கிறது, சிமெண்ட் சாலைகள் போடப்பட்டிருக்கிறது, தெரு விளக்குகள் அங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன, ஏன் கடைசியாக மனிதன் போய் சேருகிறானே சுடுகாடு, அந்தச் சுடுகாட்டைக்கூட இன்றைக்கு சீர்படுத்தி அமைக்கப்பட்டிருக்கிற அந்த இடத்தைக்கூட நம்முடைய முதல்வர் அவர்கள் பார்த்து விட்டுத்தான் இந்த மேடைக்கு வந்திருக்கிறார்கள்.

**ரூ.250 கோடி நிதிஒதுக்கீடு**

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் இப்படி பல பணிகளை நாம் இந்த இரண்டு ஆண்டு காலமாக தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் , இன்றைக்கு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். இதை இந்த ஆண்டு அறிவித்தோம். அறிவித்த இந்தத் திட்டத்தை நான்கு ஆண்டு காலத்திற்குள்ளாக நிறைவேற்றி முடிக்க வேண்டுமென்று சொல்லி, அந்தப் பணியை இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த வரலாற்று சிறப்புக்குரிய இந்த மாமல்லபுரத்திலே அதை தொடங்கி வைக்க வருகை தந்திருக்கிறார்கள்.

**“2006–2007ஆம் ஆண்டிலே கடந்த ஆண்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் 2,500 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக 508 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தத் திட்டம் நடந்திருக்கிறது.**

**அதேபோல, இந்த ஆண்டு 2007–2008ஆம் ஆண்டு மீண்டும் 2,534 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்காக 507 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம்.”**

தமிழகத்திலே எத்தனை பேரூராட்சிகள் இருக்கிறது. 561 பேரூராட்சிகள். இந்த 561 பேரூராட்சிகளுக்கு நான்கு ஆண்டு காலத்திலே எல்லாப் பணிகளை நிறைவேற்றி முடிக்க, அதற்காக 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்திற்காக 140 பேரூராட்சிகளைத் தேர்ந்தெடுத்து அதற்காக 70 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இந்த காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நான்கு பேரூராட்சிகள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அம்மையார் யசோதா அவர்கள் அவருடைய தொகுதியிலே இரண்டு பேரூராட்சிகள் தேர்வாகியிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். ஆம் உண்மைதான். இன்றைக்கு உத்திரமேரூர் பேரூராட்சி, கருங்குழி பேரூராட்சி, குன்றத்தூர் பேரூராட்சி, இடைக்கழிநாடு பேரூராட்சி, மாங்காடு பேரூராட்சி, மாமல்லபுரம் பேரூராட்சி ஆக இந்த 6 பேரூராட்சிகள் இன்றைக்குத் தேர்வு செய்யப்பட்டு ஒவ்வொரு பேரூராட்சிக்கும் 50 இலட்சம் ரூபாய் நிதியை இந்தத் துறையின் சார்பிலே ஒதுக்குகிறோம்.

நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன். இதுவரையிலே தமிழக வரலாற்றிலே இல்லாத அளவிற்கு ஒரு பேரூராட்சிக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி வருகிறது

என்று சொன்னால், இதுதான் முதல் முறை, இந்த ஆட்சியில்தான் அது நடந்திருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு குறிப்பிட்டுக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த மாமல்லபுரம் பேரூராட்சியைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு நிறைவேற்றப்பட இருக்கக்கூடிய பணிகள் என்ன. ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டு திட்டத்திற்காக 2 கோடியே 56 இலட்சம். சொர்ண ஜெயந்தி ரோஜ்கார் ரோஜனா திட்டட்தின் கீழ் 3 இலட்சம், அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் 61 இலட்சம், பாதாளச் சாக்கடை திட்டத்திற்காக 6 கோடியே 8 இலட்சம், சுனாமி அவசர கால உதவி திட்டத்தின் அடிப்படையிலே 3 கோடியே 60 இலட்சம், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 6 இலட்சம், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 இலட்சம், பொதுநிதியிலிருந்து 3 இலட்சம், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்திலிருந்து 25 இலட்சம், தனியார் பங்கு மூலமாக 16 இலட்சம் ஆக 13 கோடியே 43 இலட்சம்.

அதேபோல பிறதுறைகள், பொதுப்பணித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம், நெடுஞ்சாலைத் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இந்தத் துறைகளின் சார்பிலே 18 கோடியே 12 இலட்சம். ஆக ஒட்டுமொத்தமாக இந்தப் பேரூராட்சியை பொறுத்தவரையிலே நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன் . 31 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதியைப் பெற்று இந்தப் பேரூராட்சியில் பல பணிகள் நிறைவேற்றப்பட இருக்கிறது. அதைத்தான் இன்றைக்கு நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கிவைக்க வருகை தந்திருக்கிறார்கள்.

இந்த மாமல்லபுரத்தைப் பற்றி பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார்கள். மாமல்லபுரம் என்பது வரலாற்றுக்குரிய சிறப்புமிக்க ஊராக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதில் யாருக்கும் மாறுபாடு, வேறுபாடு இருக்க வாய்ப்பில்லை. பல்லவர்களுடைய கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை இன்றைக்கும் உலகிற்கு எடுத்துக்காட்டக்கூடிய வகையிலே ஒரு சரித்திரச் சான்றாக இந்த மாமல்லபுரம் விளங்கிக் கொண்டிருக்கிறது. மாமல்லபுரத்திலே பல்லவர்கள் குகைக் கோயில்களை அன்றைக்கு அமைத்திருக்கிறார்கள். மகாபலிபுரம் என்ற பெயரை மாமல்லபுரம் என் று அன்றைக்கு மாற்றி சூட்டியவர் முதலாம் நரசிம்மவர்மன் தான். அன்றைக்கு இந்தப் பெயரையே சூட்டி மகிழ்ந்திருக்கிறான். இந்த ஊரைப் பற்றி இன்னொரு பெருமை என்னவென்றால், இங்கு இருக்கக்கூடிய சிலைகளையெல்லாம் பார்க்கிறோமே செங்கல், சுண்ணாம்பு, மரம், இரும்பு இவைகள் இல்லாமலேயே வெறும் கற்கோயில்களை அமைத்த பெருமை இந்த மாமல்லபுரத்திற்கு உண்டு. அதை அமைத்துத் தந்த பெருமை யாருக்கு என்று கேட்டால் முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் நரசிம்மனையே சாரும். அந்த நல்லாட்சியை தொடரவிடாமல், அன்றைக்கும் பல இடையூறுகள் இருந்திருக்கிறது. வரலாறுகள் சொல்கிறது. அந்த நல்லாட்சியை தொடரவிடாமல் சாளுக்கியர்கள் எதற்கெடுத்தாலும் போர் தொடுத்திருக்கிறார்கள். எதற்கெடுத்தாலும் ஆக்கிரமித்து பணிகளை எல்லாம் நடக்கவிடாமல் தடுத்த முயற்சிகள் எல்லாம், இடையூறு செய்த அந்தக் கொடுமைகள் எல்லாம் அன்றைக்கும் இருந்திருக்கிறது. அன்றைக்கு இந்தக் கொடுமைகள் இருந்த காரணத்தினால்தான் எப்படியாவது பல்லவர்களுடைய தலைநகரமாக இருக்கக்கூடிய இந்த காஞ்சிபுரத்தை எப்படியாவது பிடிக்க அந்த சாளுக்கியர்கள் முயற்சித்தார்கள். ஆனால் இறுதியிலே என்ன நடந்தது. மகேந்திரவர்மன் சாளுக்கியர்களை விரட்டியடித்து தன்னுடைய தலைநகரமாக இருக்கக்கூடிய காஞ்சிபுரத்தை தக்க வைத்துக்கொண்டான் என்பதுதான் வரலாறு. எனவே பல்லவர்கள் ஆட்சி அமைதியாக நடப்பதற்கு சாளுக்கியர்கள் தொல்லைகள் தராமல் இருந்திருந்தால் பல்லவர்கள் ஆட்சி மேலும் பல சாதனைகளைப் படைத்திருக்க முடியும் என்று தென்னிந்திய வரலாறு நூலிலே ஆசிரியரான நீலகண்ட சாஸ்திரி அவர்கள் இந்த குறிப்பை வெளியிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதேபோலதான் இன்றைக்கு தமிழகத்திலே நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் எந்தத் திட்டங்களைத் தீட்டினாலும், எந்தப் பணிகளை நிறைவேற்றினாலும், அதற்கு வரக்கூடிய இடையூறுகள் எல்லாம் இன்றைக்கு வந்து கொண்டிருந்தாலும், அந்த இடையூறுகளை எல்லாம் தகர்த்தெறிந்து தமிழ்நாட்டு மக்களுக்காக சாதனை புரிந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு முதல்வராக இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் அறிவித்ததை சொன்னதை செய்வோம், செய்வதை சொல்வோம் என்ற அந்த தாரக மந்திரமல்ல. இன்றைக்கு சொல்லாததையும் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறப்பான ஆட்சி தமிழ்நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது. அதை எடுத்துக்காட்டக்கூடிய வகையிலேதான் இந்த அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தொடங்கி அந்தப் பணியை மக்களுக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதனுடைய தொடக்க விழா நிகழ்ச்சிக்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் இங்கே வருகை தந்திருக்கிறார்கள். அதற்காக என்னுடைய துறையின் சார்பிலே நன்றியை, வணக்கத்தை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன் . ✶



# பார்வையற்ற 38 பேருக்கு அரசுப்பணி

## மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. **பரிதி இளம்வழுதி** அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்



**சென்னை அரசு மைய அச்சகத்தில் கண் பார்வையற்ற 9 பேருக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் வழங்கினார்.**

**தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையில், எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையில் 769 காலிப் பணியிடங்களை நிரப்ப அனுமதி வழங்கப்பட்டது. அதில் 320 இளநிலை புத்தகம் கட்டுநர் பணியிடங்கள் அடங்கும். அவற்றில் 38 பணியிடங்களைக் கண்பார்வையற்றவர்களைக் கொண்டு நிரப்ப அரசு ஆணையிட்டது. அதனடிப்படையில் அரசு, தொழில்நுட்ப தகுதிகளைத் தளர்த்தி ஆணையிட்ட பின்பு நிலைத் தேர்வுக்குழு 8.8.2007 அன்று கூடி, தகுதி வாய்ந்த 38 நபர்களைத் தேர்ந்தெடுத்தது.**

**இவர்களில் சென்னை மாநகரில் வசிக்கும் ஒன்பது கண்பார்வையற்ற நபர்களுக்கு அரசு மைய அச்சகத்தில் இளநிலை நூல்கட்டுநர் பணிக்கான பணியமர்வு ஆணைகளை தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களால் நேரடியாக வழங்கப்பட்டது.**

**தேர்வு செய்யப்பட்ட எஞ்சிய 29 நபர்களுக்கு ஆணைகள் தனியே அஞ்சல் வழி அனுப்பப்பட்டுள்ளன.**

**இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. து. இராசேந்திரன், இ.ஆ.ப., மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.**



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில், 20.8.2007 அன்று, தலைமைச் செயலகத்தில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களின் பிறந்தநாளையொட்டி நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றனர்.




17.8.2007 அன்று, சென்னையில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சென்னையில், வள்ளலார், பரிதிமாற் கலைஞர், மறைமலை அடிகளார் நினைவு அஞ்சல் தலைகளை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார். உடன் மாண்புமிகு மத்திய தொலைதொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆ.ராசா, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் திரு.தேவ ஜோதி ஜெகராஜன்,இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு.து.இராசேந்திரன்,இ.ஆ.ப., முதன்மைத் தலைமை அஞ்சல்துறைத் தலைவர் திருமதி.இந்திரா கிருஷ்ணகுமார் மற்றும் முனைவர் திருமதி.சாரதா நம்பி ஆரூரன் ஆகியோர் உள்ளனர்.



# அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி சென்னைப் பெருநகர்ப்பகுதி இரண்டாம் முழுமைத் திட்டம் அமையும்

**மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர்**

**திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் உரை**



**செ**ன்னைப் பெருநகர்ப் பகுதிக்கான வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் 29.8.07 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதிஇளம்வழுதி அவர்கள் ஆற்றிய உரை:–

மனித நாகரிக வளர்ச்சியின் அடையாள மாகத் தான் நகரங்கள் விளங்கி வருகின்றன. மனிதச் சிந்தனையால் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக மனிதன் தனது ஆதி தொழிலான வேளாண்மை யிலிருந்து மெல்ல மெல்ல வளர்ந்து பல்வேறு தொழில்களை உருவாக்கினான். தொழில்கள் நவீன வடிவம் பெற்றவுடனேயே வாழ்க்கை முறையும் வெகுவாக மாற்றமடைந்தது. இந்தத் தவிர்க்க இயலாத மாற்றத்தின் காரணமாக தனது வாழ்விடங்கள் குறித்தும் மனிதன் சிந்தித்தான். அதற்கேற்ப திட்டமிட்டான். வாழ்விடங்கள் குறித்த திட்டமிடுதல் மிகவும் முதன்மையானதாகும். ஏனென்றால் இதற்கேற்பத்தான் நாளைய தலைமுறை வளர்ச்சியடைந்த சமூகமாக உருவாக முடியும்.

அத்தகைய வளர்ச்சியையும், நமது சந்ததியின் வெற்றியையும், குறித்து மிகுந்த அக்கறையோடு இங்கே வருகை தந்து அரசின் இந்த சீரிய முயற்சிக்கு உங்களது பங்களிப்பையும் மேலான ஆலோசனைகளையும் வழங்க வந்துள்ள உங்கள் அனைவருடைய ஆர்வத்திற்கும், கடமையுணர் விற்கும் எனது பாராட்டை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிகழ்காலப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது மட்டுமே ஒரு அரசின் பணியாக இருக்க முடியாது. எந்த ஒரு அரசிற்கும் தொலைநோக்குப் பார்வை என்பது மிகவும் முதன்மையானதாகும். எதிர்காலம் குறித்த திட்டமிடுதலை திறம்படச் செய்து முடித்து வெற்றி கண்ட அரசு தலைவர் கலைஞரின் அரசு என்று கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையால் நமது சென்னைக்கு ஏற்பட்ட பல நன்மைகளில் ஒரு சிலவற்றை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்றைக்கு நமது சென்னையின் மத்தியில் அமைந்துள்ள அண்ணா மேம்பாலத்தைப் பார்க்கின்றோம். சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் அந்தப் பாலம் உருவாக்கப்பட்டது என்பதை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.



அன்றைய போக்குவரத்தை மட்டும் கருதியிருந்தால் அந்தப் பாலம் உருவாகியிருக்க முடியாது. இன்றைய தினம் பெருகிவிட்ட வாகனங்களுக்கும் போக்குவரத்து நெரிசல்களுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் அண்ணா மேம்பாலத்தை அன்றே கழக அரசு உருவாக்கியுள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதேபோல அண்ணா நகரும் அதே காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

1901–ஆம் ஆண்டு சென்னையின் பரப்பளவு 68 சதுர கிலோ மீட்டர், 1981–ஆம் ஆண்டில் இது 176 சதுர கிலோ மீட்டராக வளர்ந்தது. இந்தக் கணக்கெடுப்புக்குப் பின்னர் கால் நூற்றாண்டைக் கடந்து இன்றைக்கு நாம் அடுத்தகட்ட வளர்ச்சியைப் பற்றி இங்கே சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். இதே போல மக்கள்தொகை வளர்ச்சி குறித்தும் எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்த 2001–ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரின் மக்கள்தொகை 43.44 இலட்சம். இதற்கு 95 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது, 1905–ஆம் ஆண்டு சென்னையின் மக்கள்தொகை 5 இலட்சத்து 40 ஆயிரம் பேர்கள்தான். இப்படி பலமடங்கு மக்கள் தொகை வளர்ச்சியால் சென்னையின் பரப்பளவு விரிவடைந்து வருவதுடன், நகரின் உள்கட்டமைப்பு களிலும் மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

எப்போதுமே சென்னை மாநகரின் வளர்ச்சியைப் பற்றிய தணியாத ஆர்வமும், மேலான அக்கறையும் கொண்ட நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், முதன்முதலில் 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊரமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1974–ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தைத் தோற்றுவித்தார்கள். 1975–ஆம் ஆண்டு சென்னை மாநகருக்கான முதலாவது முழுமைத் திட்டத்தை உருவாக்கினார். இன்றைக்கு அதே முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரசுதான் சென்னை மாநகருக்கான இரண்டாவது முழுமைத் திட்டத்தைத் தயாரித்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதிலே முனைப்புடன் செயலாற்றிக் கொண்டுள்ளது.

மாநகரின் வளர்ச்சிக்கேற்ப பத்தாண்டுகளுக்கு ஒரு முறை திட்டத்தை மறு ஆய்வு செய்து மாற்றி அமைக்கலாம் என்று சட்டவிதிகளும் பொதுவான நியதிகளும் இடங்கொடுத்தாலும் இடைப்பட்ட காலத்தில் பல்வேறு காரணங்களால் அது மேற்கொள்ளப்படாமல் போயுள்ளது.

வளர்ச்சியை நோக்கிய பயணத்தில் வரக்கூடிய இடையூறுகளையெல்லாம் களைந்து, தடைக்கற்கள் உண்டென்றாலும் அதனைத் தகர்த்தெரியக் கூடிய திடத்தோள்கள் உண்டு என்கிற வகையில் நமது அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.





மாற்றுக் கருத்துகளை ஒரு போதும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அரசு புறந்தள்ளியதில்லை. கருத்து வேறுபாடு என்பது தவிர்க்க இயலாததுதான். அத்தகைய மாற்றுக் கருத்துகள் யாருக்கேனும் இருக்குமாயின் தயங்காமல் அரசுக்கு கூறலாம் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டுள்ளேன். மக்களின் நல்வாழ்வும் மாநகரத்தின் வளர்ச்சியும் தான் அரசின் குறிக்கோள் ஆகும். இந்த நோக்கத்தின் அடிப்படையில் எல்லோருடைய கருத்துகளையும் கேட்டு நல்ல முடிவையெடுத்து நமது மாநகரின் வளர்ச்சியை எட்ட அரசு உறுதியுடன் உள்ளது என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய கால கட்டம் மிகவும் இன்றியமையான சூழலில் சென்று கொண்டிருக்கிறது. உலகமயமாக்கல் பற்றி பேசப்படும் நிலையில் சென்னை மாநகரம் ஒரு பன்னாட்டு நகரமாக உருவெடுத்துவிட்டது. தகவல் தொழில்நுட்பத் தொழில்களுக்கு இந்தியாவிலேயே மிக உகந்த இடமாக சென்னை வளர்ந்து வருவதால் பன்னாட்டு நிறுவனங்கள் பல இங்கே வந்துள்ளன. மேலும் பல நிறுவனங்கள் வரவுள்ளன. மோட்டார் வாகனத் தொழில் உள்ளிட்ட பல்வேறு நவீன தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன. உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களும், வெளிநாட்டினர் இங்கே வந்து சிகிச்சை எடுத்துக்கொள்ளும் வகையில் செயல்படும் தலைசிறந்த மருத்துவமனைகளும் சென்னையில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆட்சி கடந்த ஆண்டு அமைந்த பின்பு, அயல்நாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவு சென்னையை நோக்கி வந்துள்ளார்கள். ஏனென்றால் பண்பாட்டுச் சுற்றுலா, இயற்கைச் சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா என சுற்றுலாத்துறை பல புதிய உத்திகளைக் கையாண்டு பன்னாட்டு மக்களையும் சென்னைக்கு வரவழைத்துக் கொண்டுள்ளது. இப்படி பல முனைகளிலும் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் நாம் சென்னை மாநகரின் ஆதீத வளர்ச்சியைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில்தான் நகரத்திட்டமிடுதலை நாம் மேற்கொள்ள வேண்டும். எனவே அடுத்த 25 ஆண்டுகளுக்குத் தேவையான எதிர்பார்ப்பு, வளர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கி சென்னை மாநகரைப் பொலிவு பெறச்செய்யும் கடமையும் பொறுப்புணர்ச்சியும் அரசுக்கும் அதே நேரத்தில் பொதுமக்களுக்கும் உள்ளது என்பதை நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். நகரை அழகுபடுத்துவது, உயர் தொழில்நுட்பப் பிரிவுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதோடு அரசின் பணி முழுமை அடையாது. கூடவே நகர்ப்புறங்களில் வாழும் நடுத்தர மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள மக்களையும் நடைபாதைவாசிகளையும் உள்ளடக்கி அவர்களுக்கும் அனைத்து வாழ்விட வசதிகளையும் ஏற்படுத்தித் தரும் பணிகளையும் அரசு கருத்தில் கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவிலேயே முதல்முறையாக குடிசைமாற்று வாரியத்தை ஏற்படுத்திய அரசு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அரசுதான் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். எனவே எல்லாத் தரப்பு மக்களின் பங்களிப்பையும் ஒருங்கிணைத்து ஒரு முழுமையான திட்டமாக அனைத்து அம்சங்களையும் ஒருங்கே கொண்ட ஒரு விரிவான திட்டமாக இந்த இரண்டாம் முழுமைத் திட்டம் அமையும் வகையில் உங்களது மேலான ஆலோசனைகளையும், கருத்துகளையும் தெரிவிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். ★

# 2005 மற்றும் 2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு வழங்கும் திரைப்பட விருதுகள்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்படி, சிறந்த முழுநீள தமிழ்த் திரைப்படங்களுக்கும், நடிகர், நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு பரிசுகளும்; தமிழ்த் திரையுலகில் சாதனை புரிந்தவர்களுக்கு கலைத்துறை வித்தகர் விருதுகளும்; திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு விருதுகளும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

2005 மற்றும் 2006 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கான தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள் மற்றும் 2004–2005, 2005–2006 ஆகிய இரண்டு கல்வி ஆண்டுகளுக்குரிய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குரிய விருதுகள் ஆகியவற்றைத் தேர்வு செய்து பரிந்துரைகள் வழங்கிட நீதியரசர் ச.மோகன் அவர்களைத் தலைவராகவும், இயக்குநர் எஸ்.பி. முத்துராமன், நடிகர் சிவகுமார், நடிகர் சாருஹாசன், இயக்குநர் பி.அமிர்தம், பாடலாசிரியர் கவிஞர் மு. மேத்தா, சென்னைத் தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர் நடராஜன், இசையமைப்பாளர் தேவா, நடிகர் ஒய்.ஜி. மகேந்திரா, நடிகை திருமதி. ஸ்ரீபிரியா, நடிகர் தியாகு, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் முதல்வர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு அமைக்கப்பட்டது.

தேர்வுக் குழுவினர் 2005ஆம் ஆண்டிற்குரிய 48 திரைப்படங்களையும், 2006ஆம் ஆண்டிற்குரிய 44 திரைப்படங்களையும் பார்வையிட்டு, அரசுக்குப் பரிந்துரைகள் வழங்கியுள்ளனர்.

தேர்வுக்குழு செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2005ஆம் ஆண்டிற்கு அனுமதித்துள்ள பரிசுகளும் விருதுகளும் பின்வருமாறு :–



1. சிறந்த படம் – முதல் பரிசு : சந்திரமுகி, கஜினி ஆகிய இரண்டு படங்கள்
2. சிறந்த படம் – இரண்டாம் பரிசு : அந்நியன்
3. சிறந்த படம் – மூன்றாம் பரிசு : தவமாய் தவமிருந்து
4. சிறந்த படம் – சிறப்புப் பரிசு : பிரியசகி
5. பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படம் – சிறப்புப் பரிசு : கஸ்தூரிமான்
6. சிறந்த நடிகர் : ரஜினிகாந்த் (சந்திரமுகி)
7. சிறந்த நடிகை : ஜோதிகா (சந்திரமுகி)
8. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு) : விஜய் (திருப்பாச்சி) சூர்யா (கஜினி)
9. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு) : மீரா ஜாஸ்மின் (கஸ்தூரிமான்)
10. சிறந்த குணச்சித்திர நடிகர் : ராஜ்கிரண் (சண்டக் கோழி)
11. சிறந்த குணச்சித்திர நடிகை : கலைராணி (கோடம்பாக்கம்)
12. சிறந்த வில்லன் நடிகர் : பிரகாஷ்ராஜ்
13. சிறந்த நகைச்சுவை நடிகர் : விவேக்
14. சிறந்த இயக்குநர் : சங்கர் (அந்நியன் )
15. சிறந்த கதையாசிரியர்: கரு. பழனியப்பன் (சதுரங்கம்)
16. சிறந்த உரையாடல் ஆசிரியர் : கே.கண்ணன் (அமிர்தம்)
17. சிறந்த இசையமைப்பாளர் : ஹாரிஸ் ஜெயராஜ் (அந்நியன், கஜினி)
18. சிறந்த பாடலாசிரியர் : நா. முத்துக்குமார்
19. சிறந்த பின்னணிப் பாடகர் : ஸ்ரீராம் பார்த்தசாரதி
20. சிறந்த பின்னணிப் பாடகி : மும்பை ஜெயஸ்ரீ
21. சிறந்த ஒளிப்பதிவாளர் : ஆர்.டி. ராஜசேகர்
22. சிறந்த ஒலிப்பதிவாளர் : லஷ்மி நாராயணன்
23. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் :அந்தோணி
24. சிறந்த கலை இயக்குநர் : தோட்டாதரணி (சந்திரமுகி, சிருங்காரம்)
25. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : கனல் கண்ணன் (சண்டக்கோழி)
26. சிறந்த நடன ஆசிரியர் : கலா (சந்திரமுகி)
27. சிறந்த ஒப்பனைக் கலைஞர் : சுந்தரமூர்த்தி
28. சிறந்த தையற் கலைஞர் : ருக்மணி கிருஷ்ணன் : (சிருங்காரம்)
29. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்): எஸ்.என். சுரேந்தர்
30. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) : சவிதா

2004–2005ஆம் ஆண்டிற்கு, எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள விருதுகள் பின்வருமாறு :

1. சிறந்த இயக்குநர் : என். பார்த்தசாரதி
2. சிறந்த ஒளிப்பதிவாளர் : பி. பிரசாத்
3. சிறந்த ஒலிப்பதிவாளர் : ஜே. பிரின்ஸ் டேவிட்
4. சிறந்த படத்தொகுப்பாளர் : எஸ். சண்முகநாதன்
5. சிறந்த படம் பதனிடுபவர் : ஆர்.அன்பு சத்தியன்.

### 2006ஆம் ஆண்டுக்கான விருதுகள்

தேர்வுக்குழு செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2006ஆம் ஆண்டிற்கு அனுமதித்துள்ள பரிசுகளும் விருதுகளும் பின்வருமாறு :–

1. சிறந்த படம் – முதல் பரிசு : வெயில்
2. சிறந்த படம் – இரண்டாம் பரிசு : பருத்திவீரன்
3. சிறந்த படம் – மூன்றாம் பரிசு : திருட்டு பயலே
4. சிறந்த படம் – சிறப்புப் பரிசு : இலக்கணம்
5. பெண்களைப் பற்றி உயர்வாக சித்தரிக்கும் படம்– சிறப்புப்பரிசு : காதலே என் காதலே
6. சிறந்த நடிகர் : கமல்ஹாசன் (வேட்டையாடு விளையாடு)
7. சிறந்த நடிகை : ப்ரியாமணி (பருத்திவீரன் )
8. சிறந்த நடிகர் – சிறப்புப் பரிசு : கார்த்தி (பருத்திவீரன் ) பக்ரு (டிஷ்யூம்)
9. சிறந்த நடிகை சிறப்புப் பரிசு : சந்தியா (டிஷ்யூம்)
10. சிறந்த குணச்சித்திர நடிகர் : நாசர் (எம் மகன் )
11. சிறந்த குணச்சித்திர நடிகை : சரண்யா (எம்மகன் )
12. சிறந்த வில்லன் நடிகர் : பசுபதி (ஈ)
13. சிறந்த நகைச்சுவை நடிகர் : வடிவேலு (இம்சை அரசன் 23ஆம் புலிகேசி)
14. சிறந்த இயக்குநர் : திருமுருகன் (எம் மகன் )
15. சிறந்த கதையாசிரியர் : பேரரசு (திருப்பதி)
16. சிறந்த உரையாடல் ஆசிரியர் : சீமான் (தம்பி)
17. சிறந்த இசையமைப்பாளர் : யுவன் சங்கர் ராஜா
18. சிறந்த பின்னணிப் பாடகர் : மது பாலகிருஷ்ணன்
19. சிறந்த பின்னணிப் பாடகி : ஷ்ரேயா கோஷல்
20. சிறந்த ஒளிப்பதிவாளர் : ரவிவர்மன் (வேட்டையாடு விளையாடு)
21. சிறந்த ஒலிப்பதிவாளர் : யு.கே.ஐ. ஐயப்பன் (திருப்பதி)
22. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் : சுரேஷ் அர்ஸ்
23. சிறந்த கலை இயக்குநர் : பி.கிருஷ்ணமூர்த்தி (இம்சை அரசன் 23ஆம் புலிகேசி)
24. சிறந்த சண்டைப் பயிற்சியாளர் : சூப்பர் சுப்பராயன்
25. சிறந்த நடன ஆசிரியர் : சிவசங்கர்
26. சிறந்த ஒப்பனைக் கலைஞர் : ரவி (இம்சை அரசன் 23ஆம் புலிகேசி)
27. சிறந்த தையற் கலைஞர் : சாய் (அரண்)
28. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) : கதிர்
29. சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) : ஜெயகீதா.

2005–2006ஆம் ஆண்டிற்கு, எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள விருதுகள் பின்வருமாறு :

1. சிறந்த இயக்குநர் : எஸ்.முரளிமனோகர்
2. சிறந்த ஒளிப்பதிவாளர் : ஜீ.சிவராமன்
3. சிறந்த ஒலிப்பதிவாளர் : வி.ஹேமநாதன்
4. சிறந்த படத் தொகுப்பாளர் : என்.ஜான் பால்
5. சிறந்த படம் பதனிடுபவர் : எல்.கே.தீர்த்திபாசு.

### கலைத்துறை வித்தகர் விருதுகள்

மேலும் 2006ஆம் ஆண்டுக்குப் பின் வருமாறு கலைத்துறை வித்தகர் விருதுகள் தமிழக அரசு சார்பில் வழங்குவதென முடிவெடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார் :–

1. அறிஞர் அண்ணா விருது : இயக்குநர் இராமநாராயணன்
2. கலைவாணர் விருது : நகைச்சுவை நடிகர் விவேக்
3. ராஜா சாண்டோ விருது : இயக்குநர் தங்கர்பச்சான்
4. பாவேந்தர் பாரதிதாசன் விருது : கவிஞர் தாமரை
5. எம்.ஜி.ஆர். விருது : நடிகர் அஜீத் குமார்
6. கவிஞர் கண்ணதாசன் விருது : கவிஞர் பா.விஜய்
7. நடிகர் திலகம் சிவாஜிகணேசன் விருது : நடிகர் விக்ரம்
8. தியாகராஜ பாகவதர் விருது : பின்னணிப் பாடகர் டி.எம்.சௌந்தரராஜன்.

தமிழக அரசு சார்பில் விரைவில் சென்னையில் நடைபெறவுள்ள விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பரிசுகளையும், விருதுகளையும் வழங்கி சிறப்பு செய்வார்.

# தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு சிறப்பு வைரப்பரிசு



தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு பண்பாடு மற்றும் கலை நயத்திற்கான சிறப்பு வைரப் பரிசு மாண்புமிகு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி. அம்பிகா சோனி அவர்களால் வழங்கப்பட்டது.

புதுடெல்லியில் இருந்து வெளிவரும் பிரபல சுற்றுலா இதழான 'இன்றைய பயணிகள்' (Today's Traveller) எனும் ஆங்கில இதழ் இந்தியாவில் உள்ள பிற மாநிலங்களின் சுற்றுலா சேவையைப் பாராட்டும் வகையில் பரிசு வழங்கி வருகிறது.

அந்த வகையில் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறைக்கு பண்பாடு மற்றும் கலைநயச் சிறப்பிற்கான இந்த இதழின் சிறப்பு வைரப்பரிசினை மாண்புமிகு மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திருமதி அம்பிகா சோனி அவர்கள் 21.8.2007 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் சார்பில் அதன் இயக்குநர் மற்றும் நிருவாக இயக்குநர் டாக்டர் எம். இராசாராம், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார்.






## கோ-ஆப்டெக்ஸ் ரகங்களின் புதுமை... காலத்திற்கேற்ற ரசனை !

புதுமைகளாய் புதியனவாய் காலத்திற்கேற்ற ரசனையுடன் பட்டு மற்றும் பருத்திப் புடவைகள், படுக்கை விரிப்புகள், வேட்டி, வாசல் திரைகள், சர்ட்டிங் போன்றவை பலப்பல ரகங்களில்... வழங்குகிறது கோ-ஆப்டெக்ஸ். குளுகுளு வண்ணங்கள், கண்கவரும் டிசைன்கள், உன்னத தரம், நியாயமான விலை.



- உறையூர் சேலை
- தோப்பூர் சேலை
- காஞ்சி காட்டன் சேலை
- வனவாசி சேலை
- மதுரை சேலை
- அருப்புக்கோட்டை சேலை
- பரமகுடி சேலை
- நெகமம் சேலை
- சிறுமுகை சேலை



**ரூ.160/- முதல்**
**ரூ.1,500/- வரை**

கோ-ஆப்டெக்ஸ்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

